


பொன் மாலை
மயக்கம்
காஞ்சனா ஜெயதிலகர்
பொன் மாலை மயக்கம் ★ காஞ்சனா ஜெயதிலகர்
பொன் மாலை
மயக்கம்
காஞ்சனா ஜெயதிலகர்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : பொன் மாலை மயக்கம் |
| ஆசிரியர் | : காஞ்சனா ஜெயதிலகர் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : டிசம்பர், 2003 |
| இரண்டாம் பதிப்பு | : பிப்ரவரி, 2006 |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 232 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை-14. |

**விலை ரூ. 60.00**

| | |
|---|---|
| கணிப்பொறி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |

# பொன்மாலை மயக்கம்



# பொன் மாலை மயக்கம்



1

அந்தி நேரம்...

ஆளை எரிக்கும் வெயிலுக்கும் கண்ணைக் கட்டும் இருளுக்கும் இடைப்பட்ட சௌந்தர்ய வேளை.

சூரியன் சொகுசாய் சாய்ந்திருக்க, காற்று குளிர்ந்திருந்தது.

சாகரி ஜன்னல் கம்பிகளைப் பற்றியபடி வெளியே பார்த்திருந்தாள். சென்னையின் அவசரத்தில் அந்திப் பொழுதை இத்தனை விலாவாரியாக ரசிக்க முடியாது. பட்டணத்தின் பெரும்பாலானோர் பள்ளி, கல்லூரி, அலுவலகங்களில் களைத்து வீடு திரும்ப, மீதியுள்ளவர்கள் வருவோரை எதிர்பார்த்து வீட்டில் டிபன் தயாரிக்கும் வேளை இது. சதா ஏதேனும் ஒரு மும்முரத்தில் இருப்பவர்களுக்கு ரசிக்க ஏது பொழுது?

ரசனை உணர்வுள்ள சாகரி கூட இயற்கையின் இந்த மாய மாற்றத்தை அடிக்கடி அனுபவித்துப் பார்த்ததில்லை.

இலக்கிய ரசிகையான அவள் அந்தி பற்றிய வைரமுத்துவின் கவிதையை அனுபவித்ததோடு சரி.

'கதிரவன் மரணம் கூட

கண்ணுக்கு அழகுதான் - ஓ

செத்தாலும் மேன்மக்கள்

மேன்மக்களே...'

தற்போது இந்த அறையில் படிக்கப் பத்திரிகையோ, பார்க்க டி.வி.யோ இல்லாததால் உலகத்தைப் பார்த்தபடி நின்றாள்.

அது தேக்கடியில் உள்ள ஒரு பழைய ஹோட்டல். அதன் புராதனத் தன்மையைப் பாதுகாக்கக் கருதி, தொலைக்காட்சிப் பெட்டிகளை அறைகளில் அனுமதிக்காதிருந்தனர்.

இது கேரள எல்லை என்பதால் பெட்டிக் கடைகளில் மலையாளப் பத்திரிகைகளே தொங்கின.

தேக்கடியின் அழகை இரு நாட்களாய்ச் சுற்றிப் பார்த்தாயிற்று.

'உனக்கு மாற்றம் தேவை, சாகரி. எங்கூடக் கிளம்பு, சொல்றேன்.' தேக்கடியில் எஸ்டேட் உரிமையாளர்கள், நிர்வாகிகளின் கருத்தரங்கிற்குப் போவதாய் முடிவெடுத்த அப்பா அவளையும் கிளப்பினார்.

''இல்லைப்பா... நாலைஞ்சு நாள் நான் அங்கே என்ன பண்றது?''

''போட்டிங் போ. காட்டு மிருகங்களைப் பாரு. தேயிலைத் தோட்டங்களை காலார நட...''



''இப்படி ரெண்டு நாளைக் கழிக்கலாம். சரி - சொச்ச நாளை...?''

''அங்கே வசுந்தரா இருக்காளேம்மா.''

சாகரி கண்களை உருட்டினாள்.

''யாருப்பா அது? உங்க சிநேகிதர்களை எனக்கு அதிகம் தெரியாதே...!''

''நான் உன் ஃப்ரெண்ட்ஸ் வந்தால் பேசிப் பழகிக்கலை.'' கேட்டார் அப்பா பதிலுக்கு.

அது நிஜம்தான்.

இவளைத் தேடி யார் வந்தாலும் அப்பா புன்னகையோடு வந்து எட்டிப் பார்ப்பார். பிரியமாய் விசாரிப்பார்.

'சாப்பிட அவங்களுக்கு என்னம்மா தரப் போறே? கோக் எடுத்துட்டு வரவா?' என்ற உபசரிப்பும் உண்டு.

அன்பான அப்பா - அனுசரணையான குணம்.

அவர் மட்டும் இல்லாவிட்டால் இந்தப் பத்து மாதங்களைக் கடந்திருக்க முடியுமா?

அழுதே கரைந்திருப்பாள்.

நேர்ந்தது லேசான இழப்பில்லை... சாதாரணத் துக்கமில்லை.

''சாப்பிடும்மா, சாகரி - உனக்குப் பிடிச்ச அன்னாசி ரசம் செய்யச் சொன்னேன்.''

''வாயேன், ஷாப்பிங் போலாம் - உனக்கொரு சேலை - எனக்கொரு டி-ஷர்ட் - என்ன?''

"உன்னி கிருஷ்ணன் கச்சேரி இருக்கு - போலாமாடா, சாகரி?"

சினிமாவிற்குக் கூப்பிட மாட்டார்.

இங்கிதம் தெரிந்தவர் - காதலும் ஊடலுமின்றி எந்தத் திரைப்படம் உருவாகின்றது? காதலின் கிளுகிளுப்பையும், பிரிவின் கசப்பையும் மூன்று மணி நேரம் அமர்ந்து பார்க்க முடியாது அவளுக்கு என்பது புரிந்தவர் அப்பா.

காதல் என்ற வார்த்தையில் அடிநாக்கு வரை கசக்கின்றது.

காதலித்தவன் முகம் முள்ளாய்க் காயப்படுத்துகிறது.

சந்துரு... சந்திரன்... சந்திரகாந்தன்.

அவன் பேர் கூட இம்சிக்கிறது.

அந்தி மயங்கியதும் எழும் சந்திரன் போலத் தன் இளமை மயக்கத்தில் சந்துருவைப் பற்றிக் கொண்டது முட்டாள்தனம்.

பீச், சுண்டல், நடவல், சிணுங்கல் என்று பழகும் ஜோடிகள், வீட்டில் பார்க்கும் வரனைத் திருமணம் செய்து அவரவர் வழியே போவதை அருவருப்புடன் கவனித்திருக்கிறாள்.

"ச்சே... காதலை ஏனிப்படிக் கொச்சைப்படுத்தறாங்க?"

"பழகறாங்க, பிரியறாங்க - அவ்வளவுதான்!" - சிநேகிதிகள் அலட்சியமாய்த் தோள் குலுக்குவார்கள். "இத்தனை நெருங்கிப் பழகக் கூடாது. பழகினா அவரையே கல்யாணம் செய்துக்கணும்..."

"நீ செய்துக்கடி, கற்புக்கரசி!"

சிரிப்பார்கள்.



அதைத்தானே செய்தாள். இருப்பினும் வாழ்க்கை சிரிப்பாய்ச் சிரித்து விட்டதே!

"ஏடோ, அதாரு கௌசல்யையோ?"

"எதாரு - யாரு கௌசல்யா?"

"அதான்டே... வயசான ஒரு ஆசாமியோட நாலு நாளாய்க்க நம்ப ஹோட்டல்ல தங்கியிருக்கற குட்டி."

வெங்காயத்தை வதக்கியபடி விசாரித்தான் நாயர். மலைப் பிரதேசம் என்பதையும் மீறி அச்சமையலறையில் வெப்பம் இருந்தது.

"குட்டிகாதீங்க, நாயரே... அது நல்ல குடும்பத்துப் பொண்ணு."

"எல்லாக் குட்டிகளும் இப்போள் ஸினிமா ஃபீல்டுக்குள் ளார வந்திருதுங்க. முதல்ல இப்படி ப்ரொட்யூஸர் இல்லங்கில் டைரக்டரோட தனிச்சு இப்படி வர வேண்டியது - பின்னே வெள்ளித் திரையில் அரங்கேற்றம்!"

வியர்வை ஊறி நாறிய, கழுத்துத் துண்டால் கழுத்தைத் துடைத்தபடி பேசினான் நாயர்.

"அப்பாவும் பொண்ணுமா வந்தாக்கூட உங்களுக்குத் தப்பாத்தான் படுது - இல்லையா நாயர்? நீங்க பாக்கற படமெல்லாம் அப்படி."

"ஓ...?" பல்லைக் காட்டினான் நாயர்.

தேக்கடியை விட்டு உள் நகர்ந்த இடத்திலிருந்த ஹோட்டெலில் இருபது வருடங்களாய்ச் சமையல் அவன் தான். டூரிங் டாக்கீஸில் மூன்று நாட்களுக்கு ஒரு தரம் மாறும் அத்தனை அபத்தமான படங்களையும் பார்த்துவிடுவதுதான் அவனுக்கான ஒரே பொழுதுபோக்கு.

கண்டு களித்திருந்த ஆபாசப் படங்கள் புத்தியைக் களிம்பேறச் செய்திருந்தன.

''இப்போன் லவ்வரை 'அப்பா'ன்னு விளிக்கறது பாஷன்னாறுடா அம்பி - 'என்னப்பா, சரிப்பா, வாப்பா!' - இப்படி...'' - கொஞ்சிக் காட்டினான்.

''அதெல்லாம் சரி - ஆனா இவங்க அப்பாவும் மகளும், அவரு எஸ்டேட்காரரு - கான்பரன்சுக்காய் வந்திருக்கார்.''

''ஓ...? பெரியார் ஹோல்ல நடக்குன்னுதுக்கா?''

''ம்ம்... இன்னையோட முடியுது - நாளை கிளம்பிடு வாங்க.''

''ஆ... பொண்ணோட முகத்துல ஏதோ சரியில்லா... அதுதான் சம்சயம்... அதாவது சந்தேகம்...''

இதற்கு அம்பிப் பையன் ஆமோதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ''ஆமா, கண்ணுல வருத்தம் தெரியுது, நாயரே - பேசறதில்லை... அவசியத்துக்கு மட்டும் ஒன்றிரண்டு வார்த்தைங்க - அறை நான் சுத்தம் பண்ணுனதும் 'டான்னு' கையில பத்து ரூபாவ வச்சிருவாங்க... சின்னதாய் ஒரு சிரிப்பு... நல்ல மாதிரின்னு தெரியுது - ஆனா, 'ஏம்மா, என்ன கவலை உங்களுக்கு?'ன்னு நாம கேட்டுற முடியாதே!''

''ஆக ஏதோ விஷயமுண்டு, அம்பி.''

தலையை ஆட்டியபடி தாளித்ததில் அரிந்த மிளகாயைச் சேர்த்தான் நாயர்.

''இருக்கட்டும்... நமக்கென்ன? நாளைக்குக் கிளம்பப் போறவங்ககிட்ட எதுக்கு வேண்டாத ஆராய்ச்சி - ஆம்லெட் ஆயாச்சன்னா தாங்க.''



''ஓம்லெட் அந்த சோகச் சுந்தரிக்கோ?''

''ம்ம்... இதுதான் அவங்க டின்னர் - அப்பாவை இன்னும் காணலியேன்னு வருத்தப்பட்டாங்க. மதியமும் சரியாச் சாப்பிடலை... அதான் கேட்டேன்... இதச் சாப்பிட்டாச்சன்னா ஒரு புஸ்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பிச்சிருவாங்க - கனம் கனமாய் அத்தனையும் பாடப் புஸ்தகம்மாம்.''

''ஆ... இப்ப விஷயங் கிட்டி!''

பொன்னிறத்தில் பதமாய்ப் பொங்கியிருந்த முட்டை அடையைக் கண்ணாடித் தட்டிலிட்ட நாயர் குதூகலித்தான்.

மறுதட்டில் டோஸ்ட், வெண்ணெயை அடுக்கிய அம்பியின் புருவம் உயர்ந்தது.

''கல்யாணம் கழிய வேண்டிய ப்ராயத்திலே படிப்பும் பரீட்சையும் கன்னிப் பெண்ணுக்குத் துக்கந்தன்னே? காதலன் வேணுமடா.''

''நீங்க மட்டமான படங்களைப் பாக்கறதை நிறுத்தணும், நாயர் - நல்லதாய் நாலு புஸ்தகம் வாங்கி வாசிங்க...'' தலையிலடித்தபடி உணவு ட்ரேயுடன் வெளியேறினான் அம்பி. மாடிப்படியில் ஏறக் கால் வைத்த போதுதான் அப்புதியவனைப் பார்த்தான். நெடிய உருவம் - ஆளுமையும் அம்சமுமாய்.

''ரூம் நம்பர் பத்து எங்கே?''

''மேலதான், சார்...''

அவசரமாய் மேலேறியவனைத் தடுத்தான். பசித்த மிருகத்தின் வேகத்தோடு இருந்தவனைப் பார்க்கவே சற்று அம்சமாயிருந்தது.

"சார்... சார், நீங்க போக முடியாது - யாரு, என்ன விவரம்னு முதல்ல சொல்லுங்க... இதை அவங்க அறைக்குத்தான் எடுத்துட்டுப் போறேன் - சொல்லிடறேன். வரச் சொன்னாங் கன்னா போங்க..."

புதியவன் விவரம் சொல்ல, அம்பி முயலாய்ப் படிகள் தாவி ஏறினான்!

அந்தியைப் பற்றிய நினைப்பில் அப்பழைய பாட்டு வாயில் வந்திருந்தது போலும்.

'அந்தி மயங்குதடி

ஆசை பெருகுதடி

கண்ணன் வரக் காணேனே...'

சாகரி பத்து வயதாயிருக்கையில் பரதம் கற்றுத் தந்த ஆசிரியை பாடியது. அதற்கான அபிநயம் பிடித்திருந்தாலும் பாடல் புத்தியில் நன்கு பதிந்திருந்தது...

பாடிய போதே அதன் அர்த்தம் அவளைக் கிள்ளியது... வாயை மூடிக் கொண்டாள்.

ஆசை பெருகிய பல அந்திகளில் அவளது கண்ணன் வரவேயில்லை. ஆனால்... அதற்கு முன் அவன் தன்னோடு கழித்த மாலைகளையும் மறக்க முடியாதே... எப்பேர்ப்பட்ட பொழுதுகள்!

அன்பும் ஆசையுமாய்க் கரைந்து காணாமற் போன சுக வேளைகள்.

அவனது அருகில், அணைப்பில் தான் பாகாய் உருகிக் கிடந்ததும், தன்னை அவன் பருகிக் களைத்ததும்...



பெருமூச்செறிந்தாள் - உடல் கொதித்தது.

இதென்ன... அப்பா இன்னும் வராத அச்சம் மறந்து, மறந்த அவனைப் பற்றிய நினைவுகள்... அவசியமில்லையே.

அப்பா இங்கு வந்தது தன் நண்பருக்காகத்தான். 'உங்க ஆலோசனை எனக்கு உதவியாயிருக்கும் மிஸ்டர்-ராஜாங்கம். தவிர அதும் பக்கத்திலேயே வேற ரெண்டு எஸ்டேட்டுங்க சகாய விலைக்கு வருது - நீங்க வாங்கிப் போடலாமே!'

"நோ நோ - இருக்கறதைப் பராமரிக்கறதே கஷ்டம்ன்ற போது எதுக்கு வாங்கிப் போடறது? தெரிஞ்ச பழைய முகங்களைப் பார்க்கலாம் - உங்களுக்கு உதவலாம்னுதான் வரேன். நத்திங் மோர்."

ஒரு வேளை அந்த எஸ்டேட் விஷயமாய் தாமத மாகிறதோ?

தொலைபேசி மூலம் தனக்குத் தகவல் தந்திருக்கலாமே!

அப்படிச் செய்பவர்தான் அப்பா... இன்று என்னாயிற்று? கதவு தட்டப்பட ஓடிப்போய்த் திறந்தாள்.

மறுநொடி முகம் சாம்பியது.

"ஓ - அம்பியா?"

அம்பி சொன்ன விவரத்தைக் கேட்டவள் முகம் அறைபட்டது போல விக்கியது.

"யார் வந்திருக்கான்னே?"

"சந்திரகாந்தனாம்மா... உங்க புருஷன்னாரு..."

திகைப்பு அவளைக் கட்டி நிறுத்தியது.



## 2

வந்தவனுக்கு ஆயுசு நூறு!

இவள் நினைப்பு புரிந்தாற் போல வந்திருக்கிறானே...

இவனை நினைக்காத நாளோ... நேரமோ ஏது?

'கண்ணனை நினைக்காத நாளில்லையே

காதலில் துடிக்காத நாளில்லையே...'

சுசீலாவின் தேன் குரல் உள்ளே இழைந்தது.

இவளது கண்ணன் காதலில் மட்டுமல்ல... வெறுப்பு, வேதனையிலுமாயும் துடிக்க வைத்து விட்டான்.

'சந்திரகாந்தனாம்மா... உங்க புருஷன்னாரு!' என்று அறிவித்த ரூம்பாய் அம்பியிடம்,

'வரச் சொல்லு,' என்று விட்டாலும், வந்தவனுக்கு ஆயுசு நூறு என்று சிந்தித்தாலும், சந்துருவை எதிர்நோக்கும் துணிவு தனக்கிருப்பதாய்த் தோன்றவில்லை. அறையை விட்டு ஓடி விடலாமா என்ற பதட்டம்.

ஆனால் கால்கள் தூணாட்டம் கனத்தன. அவனை நின்று எதிர்நோக்கும் தெம்பு அவற்றுக்கு இல்லை என்பது புரிந்து நாற்காலியில் சரிந்தாள். திறந்திருந்த வாசலில் அவன் எந்தக் கணமும் வந்து நிற்பான் என்பதில் நெஞ்சு [illegible].



அவன் கோபித்துக் கொண்டு போனதிலிருந்து, வாசலை ஏக்கமாய்ப் பார்த்த விழிகள், கணவன் வரவிற்காய் அன்பிற்காய் தவித்த பார்வை, இப்போது கசந்து மூடின.

"என்ன சாகரி, என்னைப் பார்க்கப் பிடிக்கலை... இல்லியா?"

மிக அருகே கேட்டது அவன் குரல்.

உச்சந்தலையில் தணல் பட்டது போலச் சுட்டது!

மெள்ள விழி திறந்தாள்...

இத்தனை அமைதியாக எப்படி உள்ளே வந்தான்?

எழுந்தவளது உடல் தடுமாறியது.

தன்னைப் பிடிக்க எத்தனித்த கரங்களை அவன் சிரமத்துடன் அடக்கிக் கொள்வதைக் கவனித்தாள்.

"வாங்க... உ.... உக்காருங்க."

"பரவாயில்ல... சம்பிரமமான வரவேற்பு தர்றே..."

"எதிர்பார்க்கலை..."

"ம்ம்? சாப்பிடேன், சாகரி - வெறும் வயிற்றோட கிளம்ப வேணாம்."

குழப்பமாய் ஏறிட்டாள்.

ஏறக்குறைய ஒரு வருஷத்துக்குப் பின் முழுதாய்ப் பார்க்கும் புருஷனின் முகம்...! தொண்டையை அடைத்தது.

"எங்கே போகணும்?"

"முதல்ல சாப்பிடு, நீ."

"இல்ல... அப்பா... அப்பா வரட்டும்."

''அப்பாவைப் பார்க்கத்தான் போறோம்.''

கைபட்ட நத்தை போல ஒடுங்கினாள்.

''என்ன சொல்றீங்க?''

''பயப்பட எதுவுமில்லை. சரிவிலே நடக்கும்போது அவர் கால் வழுக்கிடுச்சு...''

''உடனே...!''

இப்போது அவள் மொத்த உடம்பும் நடுங்கியது.

நாற்காலியில் சரிந்தாள்.

''எக்ஸ்-ரே எடுத்தாச்சு. ஸ்ப்ரெய்ன்தான் - எலும்பு முறிவில்லை - ஆனால் டென்டான் சேதமாயிடுச்சு... நிறையச் சிராய்ப்பு. சில நாட்கள் படுக்கையிலே இருக்கணும். மருந்து தடவி ஆன்ட்டி - பயாடிக்ஸ் முழுங்கணும்.''

அவள் கண்கள் ஈரமாயின.

புத்தி 'அப்பா... அப்பா' என்று அரற்றியதில் நேரம் போனது தெரியவில்லை. கதவு தட்டப்பட்ட ஒலியில் விழித்தாள்.

அம்பி காபி கோப்பைகளுடன் நின்றான்.

''சான்ட்விச் சாப்பிடறியா, சசி?''

''வேணாம்.''

''அப்ப அதை 'பாக்' செஞ்சிடு, தம்பி - வழியிலே பசிச்சா சாப்பிடட்டும். பத்து நிமிஷம் கழிச்சு வா. பெட்டிகளைக் காரிலே ஏத்தணும். அப்படியே ரிசப்ஷனிலே 'பில்'லை முடிக்கச் சொல்லிடு - நாங்க கிளம்பறோம்...''

''எங்கே?'' - சசி கேட்டாள்.



காபியை எடுத்து நீட்டினான்.

''இங்கே ஆஸ்பத்திரி கிடையாது. வசதிகளோட இருக்கற ஒன்னு மட்டும் இங்கேருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவிலே உண்டு. இடை வழியிலே விபத்து நேர்ந்ததால் சீக்கிரமே மாமாவை டாக்டர்ட்ட அழைச்சப் போயிட்டேன்... காபி குடி.''

மறுப்பின்றிக் குடித்தாள்.

இரண்டு மிடறுகள் உள்ளிறங்கிய பின்புதான் புத்தி சற்று அசைந்து கொடுத்தது.

''நீங்க எங்கே இப்படி?''

''எனக்கும் இங்கே தோட்டம் உண்டு. அப்பா சொல்லலியா?''

மெள்ளத் தோள் குலுக்கினான்... சொன்னா நீ வர மறுத்திடுவேங்கறது தெரிஞ்சு மாமா சொல்லலை போல...''

''சொல்ல நினைச்சிருப்பார்... ஆனா...''

''ஆனா?'' அவன் பார்வை கூர்மையானது.

''நீங்க ஏன் இத்தனை தூரம்... வரணும்?''

''நான் வந்து சொல்லி உன்னை அழைச்சுட்டுப் போனா பரவாயில்லைன்னு தோணுச்சு - ஆனா இப்போ யோசிச்சா, இது உனக்கு இரட்டை அதிர்ச்சி... இல்லையா?''

காபியை முடித்தவன் எழுந்து அவள் பெட்டியைத் திறந்து அதில் அவளது பொருட்களைப் போட்டு நிரப்ப ஆரம்பித்தான்.

"அப்பாவுக்கு வலி தாங்காது."

"அதுக்குத் தேவையான மருந்து கொடுத்திருக்குது. உனக்கும் கூட ஒரு காம்போஸ் மாத்திரை வாங்கிட்டு வந்தேன் - விழுங்கினால் உன் பதட்டம் குறையும்."

அதையும் பிரித்து நீட்டினான்.

"இந்த அறையைக் காலி பண்ணினா... அங்கே எங்க தங்கறது?"

"அங்கேயும் விடுதி இருக்குது. இத்தனை வசதியாய் கூட இருக்காது - ஆனா எஸ்டேட் ரோடிலே தினம் இருபது கிலோ மீட்டர் போய் வர்றது சுலபமில்லை. அசந்திடுவே... ஆக அங்கேயே தங்கிக்கலாம்..."

"தாங்க்ஸ்..."

"நன்றிக்கு அவசியமில்லை. இது என் கடமைதான்."

பெட்டிகளை மூடினான்.

நன்றியால் பொங்கிய அவள் மனம் பொசுக்கென அடங்கியது.

ஆஹா... என்ன மாய்மாலம்! கட்டினவளை விட்டு விட்டு ஒரு வருஷமாய் எங்கிருக்கிறேன் என்பதைக்கூடத் தெரியாமல் இருந்தவன் கடமையைப் பற்றிப் பேசுவது..!

ஆனால் இதைக் கூட அவனிடம் கேட்பதற்குள் அம்பி அழைத்துவிட சந்துரு வெளியேறினான். அம்பியிடம் விவரம் சொல்லி, பெட்டிகளுடன் கீழே வருவதற்குள் இவளது பில்லுக்கு உரிய கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. மறுபடி நாக்கு நுனி வரை வந்த 'நன்றி'யை உள்ளே தள்ளினாள்.



கடமை அல்லது உரிமை என்பான்.

ஏதோ... அப்பா குணமாகிச் சீக்கிரம் வீடு போய்ச் சேர்ந்தால் சரி.

தேயிலைச் சரிவுகளின் ஊடாக ஓட ஆரம்பித்தது, ஜீப். இருமருங்கும் பச்சைப் பாய் விரித்திருக்க நடுவே எறும்பாய் முன்னேறியது - நவீனரக வாகனம்தான் என்றாலும் மோசமான சாலை என்பதால் தூக்கியடித்தது.

பசித்த வயிற்றில் பருகிய காபி குமட்டியது.

ஆனாலும் கண்கள் செருகின - அவன் தந்த மாத்திரையினாலோ? அத்தனை அவசரத்திலும் இவளை நினைத்து கரிசனையாய் மருந்து கொண்டு வந்திருந்த இந்தப் பண்பு...

இந்த உதவும் குணம்தானே இவளைச் சந்துருவிடம் ஈர்த்தது.

அவனை முதன் முதல் சந்தித்து இன்றுதான் நடந்த சம்பவமாய் மனதில் பசுமையாய்ப் பதிந்திருந்தது.

அன்று கல்லூரி மாணவி சாகரிக்குப் பரீட்சை.

காலை ஏழரை வரை புத்தகத்தோடு திரிந்தவளை அப்பா அதட்டினார்.

"சாகரி! இது அநாவசியம். இந்த செமஸ்டரிலே ஆறு மாசமாய்ப் படிச்சதிலேதான் பரீட்சை - கடைசி நிமிஷத்துல என்னத்தைக் கரைச்சுக் குடிச்சுட முடியும்?"

"சரித்திரப் பின்னணி பற்றிய பாடம்ப்பா இது - வருஷம், பெயர்களை எல்லாம் தனியே எழுதி வச்சிருக்கேன் - குழப்பம் வராதபடி கடைசியாய் ஒரு பார்வை."

"போதும். குளிச்சுட்டு வா, சாப்பிடலாம். அப்புறம் நேரம் போதாமல் உன் ஸ்கூட்டியிலே பறப்பே. சென்னையிலே அது ரொம்ப ஆபத்தான விஷயம்."

அப்பாவிற்கு மனமில்லாமல்தான் மகளுக்கு அந்த இரண்டு சக்கர வாகனத்தை வாங்கித் தந்திருந்தார்.

"மாருதி வாங்கலாமேம்மா?"

"பார்க்கிங் சிரமம்ப்பா. ஸ்கூட்டி போதும்."

"நான் போய் இறக்கி விடறேன். இல்லைன்னா ஒரு டிரைவர் போடுவோம்."

"இப்ப ஓட்டப் பழகலைன்னா பிறகு வராதுப்பா - இத்தனை நெரிசல்ல எப்படி நீந்திக் கரையேறுறதுன்ற மலைப்பு வந்திடும்."

"ஜாக்ரதையாய்ப் போகணும்மா - வேகமே கூடாது."

"சரிப்பா - யாரு இந்த நத்தைன்னு எல்லாரும் பார்க்கற அளவு ஊர்ந்தே போறேன்."

"நாட்டி கேல்."

மென்மையாய்ச் சிரிக்கும் அப்பா... கேம்ப்ரிட்ஜில் படித்தவர் ராஜாங்கம். படித்த கையோடு தாய்நாடு திரும்பி அம்மா பார்த்து வைத்திருந்த பெண்ணையும் அப்பாவின் தொழிலையும் ஏற்றுக் கொண்டவர். கிழக்கு, மேற்கு இரண்டிலும் உள்ள நல்லவற்றை அன்னப்பட்சி போலப் பிரித்து உறிஞ்சிக் கொண்ட புத்திமான்.

மூட நம்பிக்கைகள், அர்த்தம் தராத சம்பிரதாயங்கள், சமூகத்திற்கு மட்டுமே அஞ்சிப் போட்டுக் கொண்ட போலிக் கட்டுப்பாடுகள் அவரிடம் கிடையாது.



அவரது ஆரோக்கியமான அன்பைப் பதினைந்து வருடங்கள் அனுபவித்த அவர் மனைவி கனகா, 'நிறைஞ்சு போச்சு - இது போதும்!' என்பது போல் கண்களை நிரந்தரமாய் மூடிய போது தம்பதியின் ஒரே மகளான சாகரிக்குப் பதினான்கு வயது.

தாயின் இழப்பு வெகுவாய்ப் பாதிக்காத அளவு அன்பு காட்டினார் ராஜாங்கம். ஆனால் அது லேசில் இட்டு நிரப்ப முடியாத ஸ்தானம் அல்லவோ? - அதுவும் பருவ காலத்தில் நுழையவிருக்கும் பெண் குழந்தைக்கு.

நல்ல பெற்றோர்களின் அருமைப் பெண் சாகரி.

ஆக, தன் ஏக்கத்தை மறந்து, தந்தைக்குத் துணை நிற்க முயன்றாள்.

வீட்டு நிர்வாகத்தைச் சீக்கிரமே கற்று விட்டாள். தானே சமைத்து, சின்னஞ்சிறு செப்பு வீட்டைப் பராமரிப்பது ஒரு விதம் என்றால், சில வேலையாட்கள் புழங்கும் பெரிய வீட்டை நிர்வகிப்பது வேறு விதக் கலை.

வீட்டில் எந்நேரம் விருந்தினர் வந்தாலும் பரிமாற நல்ல பதார்த்தம் இருக்கும்.

எந்த ரக மனிதர்கள் படியேறினாலும், 'அடடே.... என்ன நேர்த்தியான வீடு - ராஜாங்கம் செயலான மனுஷர்தாம் போல!' என்று பிரமிப்பு ஏற்படும்.

இவள் வீட்டு வேலையாட்கள், 'இன்னா பொழப்பும்மா இது!' என்று அலுத்து வேறு வேலை தேடி ஓடியதில்லை. அதே போல, 'கொண்டவன் இல்லாத காடுதானே!' என்ற அலட்சியத்தில் காலாட்டிக் கை நீட்டி விடவும் முடியாது.

அன்பும் அனுசரணையுமான வாழ்வு.

பரீட்சை அவசரத்தில் ஏனோதானோ என்று கூப்பிட்டுக் கிளம்பிய சாகரியிடம், 'நல்லா எழுதிட்டு வாம்மா!' என்று பரீட்சைக்கான வாழ்த்தைச் சொன்ன ராஜாங்கம் வாசலில் நின்று கையசைத்தார்.

மனதில் படிப்பு பற்றிய குறிப்புகள் ஓட, அன்று வழக்கத்தைவிட மெதுவாக வாகனத்தை ஓட்டினாள். கதீட்ரல் சாலையைப் பிடிக்கும் திருப்பத்தில் திரும்பிய போதுதான் அது நடந்தது...

கழுத்தில் 'சரக்'கென்ற வலிய இழுப்பு...

வண்டி தடுமாறியது. நல்ல வேளையாக, சாலையின் இடது பக்க ஓரமாகவே திரும்பியதால் வாகனப் பெருக்கத்திலிருந்து 'சட்'டென ஒதுங்க முடிந்தது. ஆனாலும் தடுமாறிச் சாய்ந்தவள், சுதாரித்து எழுந்து வாகனத்தை நிமிர்த்தும் போதுதான் உணர்ந்தாள். அவளது சல்வாரின் துப்பட்டா ஸ்கூட்டியின் பின் சக்கரத்தில் சிக்கியிருந்தது. வழக்கமாய் அப்பா இவள் மேலாடையின் இரு முனைகளையும் முடிச்சிடுவார் - இன்று மறந்து விட்டார் போலும்.

சாலையிலிருந்து மேலும் ஒதுங்கித் துணியை இழுத்துப் பார்த்தாள் - பயனில்லை. நூற்றுக் கணக்கில் இவளைக் கடந்து பாய்ந்த வாகனங்களில் இருந்த எவரும் இவள் பக்கம் திரும்பக்கூட இல்லை.

சற்றுப் பயம் வந்தது.

இன்னும் அரை மணி நேரத்திற்குள்ளாகப் பரீட்சை ஹாலில் இருக்க வேண்டும். சற்று ஆத்திரத்துடன் துணியை இழுத்தாள். கிழியும் சத்தம் கேட்டதே ஒழிய அது சக்கரத்தை விட்டு மீளவில்லை.



திருவிழாவில் தொலைந்த குழந்தை போல அவள் அக்கம் பக்கம் அலமலந்து பார்த்த போதுதான் எதிரே வந்து நின்றான் அவன்...

'நான் உதவட்டுமா?' என்று கேட்டபடி.




'ஆபத்பாந்தவா! அநாதரட்சகா!' என்று கரம் தூக்கி வந்தவனைத் தொழுது கொண்டாடத் தயாராயிருந்தாள் சாகரி. சென்னையின் பிரதான சாலையில் நின்றும் உதவி கிடைக்காது என்று பயந்த நேரத்தில் நீண்ட உதவிக் கரத்தைப் பயபக்தியாய்ப் பார்த்தாள்.

குனிந்து ஸ்கூட்டரை ஆராய்ந்தவன் சற்று நேர முயற்சிக்குப் பின் கேட்டான் - ''துணி கிழிஞ்சாப் பரவாயில்லையா?''

''ஏற்கெனவே கிழிஞ்சிடுச்சு... எனக்கு.. இ.. இன்னைக்கு பரீட்சை...''

''ஓ... எந்த காலெஜ்?''

சொன்னாள்.

''பக்கந்தான் - ஆட்டோவிலே போனா அஞ்சு நிமிஷங் கூட ஆகாது...''

''ம்ம்... ஆனா ஸ்கூட்டரை ரோட்டிலே இப்படி விட்டுட்டுப் போக முடியாதே...''

தன் பாக்கெட்டிலிருந்து சின்னக் கத்தியை எடுத்து அவன் துணியை வெட்டி எடுத்த பிறகும் சக்கரம் சுழல மாட்டேன் என்றது அடமாய்.

"அப்பாக்கு ஃபோன் பண்ணலாம்... ஆனா அவர் வெளியே கிளம்பியிருப்பார்..."

"செல் ஃபோன் வச்சுக்கலையா?"

"அத்தனைக்கு பிஸியான ஆளில்லை... தொந்தரவுன்னு பயந்தார்... இப்படி ஒரு நிலைமைக்கு வசதின்னு நினைக்கலை..."

கங்கு மேல் நிற்பவளைப் போலக் காலை மாற்றி மாற்றி வைத்துப் பரிதவித்தாள்.

"உங்க பேர்? என்ன டிபார்ட்மென்ட்?"

"சாகரி - சோஷியாலஜி - கடைசி வருஷம்."

சொல்லுகையில் குரல் கம்மியது.

"நீங்க கிளம்புங்க. நான் மெக்கானிக்கைக் கூட்டிட்டு வந்து ஸ்கூட்டியைச் சரி செய்து உங்க காலேஜிலே சேர்த்துடறேன்."

"ஐயோ.. தாங்க்ஸ் - ஆனா உங்களுக்குச் சிரமமாச்சே."

"எம்பேர் சந்திரகாந்தன் - என் கார் அதோ ஐஸ்க்ரீம் பார்லர் எதிரே நிக்கிற மாட்டிஸ்." கையிலிருந்த தோல் பையிலிருந்து ஒரு அட்டையை எடுத்து நீட்டினான் - "இது என் ட்ரைவிங் லைசென்ஸ் - உங்ககிட்ட இருக்கட்டும். ஸ்கூட்டி சாவியை உங்ககிட்ட கொடுத்துட்டு இதை நான் வாங்கிக்கறேன் - ரைட்?"



என்ன செய்கிறோம் என்பதை முழுதும் உணராமலேயே அவன் நீட்டியதை வாங்கிக் கொண்டாள். அவன் கைதட்டி அழைக்க, ஆட்டோ ஒன்று ஆட்டுக்குட்டி போலப் பவ்யமாய் ஒதுங்கி நின்றது.

"ஏறுங்க. கையில காசிருக்குதா?"

"இருக்கு... இருக்குதுன்னு நினைக்கிறேன்."

"பாருங்க."

தோள் பையிலிருந்த குட்டி பர்ஸைப் பிரித்து நோட்டமிட்டாள்.

"போதும்."

"ரைட்."

ஆட்டோ குலுங்கலுடன் கிளம்ப, அவள் குழப்பமாய் உட்கார்ந்திருந்தாள். காலையில் மீண்டும் படித்து மனதில் மெருகேறியிருந்த தேதிகளும் புள்ளி விபரங்களும் மழை பட்ட மாக்கோலம் போலக் கரைந்து காணாமற் போய்விட்ட பிரமை!

ஆனால் கான்ட்டீனில் ஒரு காபி பருகிப் பரீட்சை எழுத உட்கார்ந்தவளுக்கு மற்ற அனைத்தும் மங்கி, தேவையான சரித்திரத் தகவல்கள் எல்லாம் விரல் நுனிக்கு வந்து விட்டன.

திருப்தியாய்த் தேர்வினை முடித்தாள்.

நிச்சயம் கல்லூரி அளவிலாவது முதல் மதிப்பெண் பெற்று விட முடியும் என்ற நிம்மதி.

எழுதியவற்றை ஒரு முறை புரட்டிப் பார்த்த நேரம் கல்லூரிக் காவலாளி நுழைந்து மேற்பார்வையாளரிடம் ஏதோ பேசினார்.

"சாகரி?"

"எஸ் மேம்." எழுந்து நின்றாள்.

"உன் ஸ்கூட்டி சாவிம்மா..."

"தாங்க்ஸ்."

வந்து காவலாளி நீட்டியதைப் பெற்றுக் கொண்டாள்.

"அந்தப் பையன் லைசென்ஸ் உங்ககிட்ட இருக்கா மேம்மா?"

"ஆமா... இதோ... நன்றின்னு சொல்லிடுங்க வாட்ச்மேன்." சொல்லும்போதுதான் உறைத்தது. அவனது விலாசத்தைக் கவனிக்கவோ, குறித்துக் கொள்ளவோ இல்லை.

வாகனத்தைப் பழுது பார்க்க எவ்வளவு செலவழித்திருப்பார்? பத்து நிமிடங்கள் காத்திருக்கச் சொல்லி, நேரே பார்த்து நன்றி தெரிவித்திருக்கலாம். அப்பாவுடன் அப்புதியவனின் வீடு தேடிப் போய், தனக்காய் அவர் செலவழித்த காசைத் திருப்பியிருக்கலாம்.

அலைமோதும் எண்ணங்களோடு சாகரி வெளியே ஓடிவந்த போது அவன் அங்கில்லை. இவளது நீல வண்ண ஸ்கூட்டி மட்டும் சார்ந்தாய் நின்றது.

விடுதித் தோழி ஒருத்தியிடமிருந்து இரவல் வாங்கியிருந்த துப்பட்டாவைக் கவனமாய் முடிச்சிட்டவள் வாகனத்தைக் கிளப்பினாள்.

வீடு போய் அப்பாவிடம் விவரங்களைச் சொல்ல, அவரும் அதையேதான் சொன்னார்.



'என்னம்மா... நன்றி சொல்லத்தான் விட்டுட்டே... லைசென்ஸிலே இருந்த விலாசத்தையாவது குறிச்சு வச்சிருந்திருக்கலாம்.. இனி அவரை எப்படிப் பாக்கறது.. சரி.. நல்லவங்க, உதவிக்கு ஒரு வார்த்தை நன்றி கூட எதிர்பார்க்காதவங்க இன்னும் உலகத்திலே இருக்காங்கன்ற திருப்தியோட இருப்போம்."

அந்தத் திருப்தி அவளுக்குப் போதுமானதாய் இல்லை! சந்திரகாந்தனின் முகம் அடிக்கடி மனதுக்குள் வந்தது. ஆயிரக் கணக்கான சென்னை வாசிகள் தங்கள் கருமமே கண்ணாயிருக்க, தன் உதவிக்கு விரைந்த அவனது நீண்ட கால்கள்.

'உதவட்டுமா?' என விசாரித்த அந்த ஆண்மையான குரல், சொல்லோடு நிற்காமல் செயல்பட்ட அந்தக் கரங்களின் வேகம், புத்தியின் சுறுசுறுப்பு... அத்தனைக்கும் மேலாக அவன் கண்கள்... பெயருக்கு ஏற்றாற்போல் சந்திரனின் குளிர்ச்சியையும், காந்தத்தின் ஈர்ப்பையும் ஒருங்கே கொண்ட அந்த ஜோடிக் கண்கள்...

அத்தனையையும் மறுபடி மொத்தமாய்க் காணும் ஏக்கம் பெருகியது. எங்காவது சந்துரு, சந்திரன் என்ற பெயர் அழைக்கப்பட்டால் பரபரப்பாய்த் தேடினாள் - உயரமான ஆண்களை ஊன்றிக் கவனித்தாள். கல்லூரியின் சாதனை மதிப்பெண்களைப் பெற்றதற்காய்த் தான் பாராட்டப்பட, அவனுக்கும் அதில் பங்கிருப்பதாக மகிழ்ந்தாள்!

என்.எஸ்.எஸ்.ஸிலும் இருந்தவள் அது சம்பந்தமாக ஆண்கள் கல்லூரி ஒன்றின் மாணவர் தலைவனைப் பார்த்துப் பேச, வேறொரு கல்லூரிக்குப் போன போதுதான் மறு சந்திப்பு நேர்ந்தது!

கல்லூரி அலுவலகத்தில் அவனைப் பார்த்தவள் மூச்சிரைக்க ஓடினாள்.

"மிஸ்டர்... சந்திர காந்தன்..."

அவசரமின்றித் திரும்பினான்.

நெற்றி சற்றே சுருங்கியது.

"நீங்க... ஆ... ஸ்கூட்டர்... சோஷியாலஜி ஸ்டூடண்ட்...?"

அவன் நினைவடுக்கைத் தேடி தயங்கிச் சொன்னது இவளுக்கு வலித்தது! அவன் தன்னைப் போலக் கடந்த இரண்டு மாதங்களாய்த் தன்னையே அடிக்கடி நினைத்து மருகவில்லை என்ற ஏமாற்றம்!

"நான் சாகரி. அன்னைக்கு உங்களுக்கு முறையாய் நன்றி கூடச் சொல்லலை... மன்னிக்கணும். உங்க உதவிக்கு ரொம்ப நன்றி. ஸார். என்ன செய்றோம்னு உணராமலேயே உங்க ட்ராயிங் கைசெயினை வாங்கிட்டேன்... யோசிக்கப் பார்த்தா..."

"நம்பிக்கை - நான் யோசிக்கத்தான் உங்களுக்கு அதைத் தந்தேன். ஊரிலே நூறு விதமான திருட்டு, பித்தலாட்டங்கள் நடக்குது."

"அதேபோலப் பரவலான அடுத்த வியாதி - அலட்சியம். பாருக்கு என்ன ஆனா நமக்கென்னங்கற மனோபாவம்."

"அவசர உலகத்துக்கான விலை அது."

"அதிலே நீங்க உதவ வந்தது... மீண்டும் நன்றி."

"பரவாயில்லை - என்னை, என் பெயரை ஞாபகம் வச்சுகிட்டு... ஓடிவந்து பேசினதே பெரிசு... உங்க நன்றி மதிப்ப



அதிலேயே தெரிஞ்சிடுச்சு. அன்னைக்குப் பரீட்சை நல்லா எழுதினீங்களா?"

"ரொம்ப - கல்லூரியிலே இதுவரைக்கும் அந்தப் பாடத்திலே 78 தான் முதல் மார்க். நான் கூட மூணு மார்க் வாங்கிட்டேன்."

"சந்தோஷம் - வாழ்த்துக்கள்."

வியப்பும், மகிழ்வுமாய் அவன் முகம் மலர, அதன் அழகில் சொக்கிப் போனாள்.

"நீங்க.. நீங்க... இந்தக் காலேஜிலேதான் படிக்கறீங்களா?"

"நோ நோ - நான் கல்லூரிப் படிப்பை முடிச்சு ஆறு வருஷமாச்சு. எனிவே, உங்க பாராட்டுக்கு நன்றி."

"என்ன பாராட்டினேன்?"

"கல்லூரி மாணவனாட்டம் தெரியறேங்கறது பெரிய பாராட்டாச்சே."

"கையில பணத்தோட ஆபீஸிலே நின்னீங்க."

"அது வேற ஒருத்தருக்காக."

அதற்குள் பணம் செலுத்தி விட்டு இவர்கள் பக்கமாய் வந்த இளைஞன் பவ்யமாய் -

"கட்டிட்டேன் சார் - நன்றி. வரட்டுமா?" என்றான்.

"வாப்பா - நல்லாப் படிக்கணும்."

ஏதோ ஒரு உத்வேகத்தில் சாகரி இளைஞனிடம் கேட்டு விட்டாள்.

"எதுக்கு இவருக்கு நன்றி சொல்றீங்க?"

இளைஞன் ஒரு கணம் விழித்தான் - 'யாரிவள்? எதற்காகத் தன்னிடம் கேள்வி கேட்கிறாள்?' என்பது போல.

''இல்ல... நானும் ஸாருக்கு நன்றி சொல்ல வந்தேன். நீங்களும் நன்றின்னதும் காரணம் என்னன்னு அறிய ஒரு குறுகுறுப்பு... அதான்...''

சற்று அசடு வழிந்தாள்.

''ஸார்தான் என்னைப் படிக்க வைக்கறார். எங்கப்பா அவர் எஸ்டேட்டில் கூலி...'' சொல்ல ஆரம்பித்த இளைஞனின் கண்கள் துளி கலங்கின. நன்றியின் பெருக்கு!

''பல வருஷங்களாய் உண்மையாய் உழைக்கற அவனுக்கு என்னால் முடிஞ்ச ஒரு சின்னப் பிரதியுபகாரம் - அவ்வளவுதான். சிப்பா வேஹு - அடுத்த மாசம் பார்க்கலாம்.''

மேலே இளைஞனைப் பேச விடாமல் தடுத்து வழியனுப்பினான். ''உதவி செய்துட்டு அதைத் தம்பட்டம் அடிக்காம இருக்கறவங்க சொற்பம். அதிலும் அது தானாய் வெளிப்பட்டா இப்படிக் கூச்சப்படறவங்க.... நீங்க அபூர்வமான மனுஷர் மிஸ்டர் - சந்துரு!''

''தன்னலமாய் மட்டும் இல்லாம தன்னைச் சுற்றிய உலகத்தையும் கொஞ்சம் கவனிக்கிறவன் - அவ்வளவுதான்.''

''இது தன்னடக்கம்.''

''ரொம்பப் புகழாதீங்க. புகழ்ப் போதை பொல்லாதது.''

''சரி. உங்களுக்கு உரிய காசையாவது தந்துடறேன் - கடன் படறதும் நல்லதில்லையே...'' - என்றாள் சாகரி - தன் கைப்பையைத் திறந்தபடி.



''உண்மையிலேயே நீங்க என்னைப் பார்க்கணும்னு முழு மூச்சாய் நினைச்சிருக்கணும்.''

''ஆமா... ரொம்ப.''

வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

''நான் சென்னை வர்றதே மாசத்துக்கு ஒரு தரம்தான் - அதுவும் ரெண்டு மூணு நாட்களுக்கு... அதிலே நாம மறுபடி சந்திச்சது ஆச்சரியம்.''

''ஆபத்தில் சிக்கினவங்களுக்கு உதவவே தேவதை போல அப்பப்ப பட்டணப் பிரவேசம் செய்வீங்க போல.''

சிரிப்பு விரிய, தன் தோள்ப்பட்டைகளைத் தடவி எதையோ தேடினான்.

''என்ன...?''

''என் தேவதை இறக்கைங்க உங்க கண்ணுக்கு மட்டும் எப்படித் தெரிஞ்சதுன்னு பாக்கறேன்!''

''போதுமே கேலி... அன்னிக்கு என் ஸ்கூட்டியைச் சரி பண்ண எவ்வளவாச்சுன்னு சொன்னீங்கன்னா...?''

கண்ணை மூடி யோசித்தான்.

''ஐம்பது ரூபான்னு நினைப்பு - அது போக முழுசாய் ஒன்றரை மணி நேரத்தையும் செலவழிச்சேன்.''

''ரெண்டையும் திருப்பித் தந்துடறேன்.''

''எப்படி?'' - புருவம் உயர்த்தினான்.

''பார்த்தியன் மால்ல இயற்கை ஐஸ்க்ரீம் பார்லர் ஒன்று ஆரம்பிச்சிருக்காங்க. மாம்பழம், காரட், அன்னாசின்னு, நாம

கேட்கற பழத்தோட பால். இனிப்பு கலந்து நம்ப எதிர்க்கவே 'குளுகுளு'ன்னு ஐஸ்கீரீமாய்த் தயாரிக்கறாங்க... சாப்பிடுவோம். அது தவிர அங்கே போக, திரும்பன்னு எல்லாமாய் ஒன்னரை மணி நேரமாயிடும். உங்களுக்கு நேரமிருந்தால் போலாம்..."

"ரைட், லேடி!" என்றான் பிரகாசமாய்.

அப்படியெல்லாம் வலுவில் போய் அவன் காலடியில் விழவும்தான் தன்னை மதிக்காமல் தள்ளி விட்டான். கணவனாகி இவளிடம் கோபித்துக் கொண்டு போன பிறகும், ஒரு மாதமாய் ஒரு ஃபோன் கூடப் பேசாமல் அவன் முறுக்கி நிற்க, மனம் தாங்காமல் அவனுக்குக் கடிதம் எழுதியதும் இவள்தானே!

அக்கடிதம் கைக்குக் கிடைத்திருக்குமா?

கிடைத்துமா இத்தனை வீம்பு?

கருமமே கண்ணாய் ஜீப்பைச் செலுத்திக் கொண்டிருந்தவனைப் பார்த்தாள் - மெள்ளக் கேட்டாள்.

"நா... நான் எழுதின கடிதம் கிடைச்சதா?"

"ம்.ம்..." என்றான் அலட்சியமாய்.

இருதயத்தில் கிள்ளி விட்டாற் போல வலித்தது...



4

தேக்கடியின் மலைப் பாதையின் இரு மருங்கும் காவலாளிகளின் கம்பீரத்துடன் நின்றன தேக்கு மரங்கள். பெரிய பளபளப்பான இலைகளோடு நிமிர்ந்த வலிமையான



விருட்சங்கள். அவற்றில் சுற்றிய மிளகுக் கொடிகள் காற்றை வாசனையாக்கி வீசின.

காரைச் செலுத்திய புருஷனது கரங்களை ஓரக்கண்களால் கவனித்தாள் சாகரி. தேக்கு போன்ற வலிய கரங்கள். தன்னைத் தழுவும் கரங்கள் ஆயுளுக்கும் அவையாக இருக்கக் கூடாதா என்ற ஏக்கம் நிறைவேறியது கொடுப்பினைதான்... ஆனால் அதன் பிறகு நேர்ந்த பிரிவு?

"என்ன தூங்கி முழிச்சாச்சா?"

"தூக்கமில்லை... நீங்க தந்த மாத்திரையில் கண்ணு செருகுது. மயக்கம் போல..."

"பதட்டம் வேண்டாமேன்னு தந்தேன். இன்னும் அஞ்சு நிமிஷத்துல அப்பாவைப் பார்த்துடலாம்."

சந்துரு அவளுடைய தந்தையைப் பெரும்பாலும் அப்பா என்றே குறிப்பிடுவான். சில சமயங்களில் மாமா.

அவர்களது இரண்டாம் சந்திப்பின் போது இருவருமாய் ஐஸ்கிரீமைச் சுவைத்த வேளையில் சாகரி அதிகம் பேசியது தன் தகப்பனைப் பற்றித்தான்.

சந்துரு பேசியது தன் வேலையைப் பற்றி.

"சில எஸ்டேட்டுகள் இருக்குது எனக்கு."

"அடடே... அப்பாவுக்குக் கூடத் தொழில் அதுதான்."

ஆர்வமானான். "ஓஹோ! அதான் நீங்க சென்னையில தனியாய் இருக்கீங்களா, சாகரி?"

"அம்மா இல்லை... இறந்துட்டாங்க. அதனால அப்பா தோட்டங்களை விலிற்கு விட்டுட்டு என் படிப்புக்காக இங்க தங்கிட்டாங்க."

"அப்படியா? நாணயமான ஆட்கள் கிடைச்சால் குத்தகைக்கு விடறது தப்பில்லை."

"அவங்க நாணயத்தின் மேல அப்பாக்கு ரொம்ப உயர்வான அபிப்ராயமில்லை. ஆனால் வேற வழியுமில்லையே. தவிர முன்னயே சென்னையில நல்ல வீடாய் வாங்கிப் போட்டிருந்தோம். அப்பாக்கும் கிளப், நண்பர்கள், நான்னு பொழுது போயிடும்."

"வர்ற பணம் போதும்னு விட்டுட்டீங்க?"

"ம்ம்... ஒரு நாள் வீட்டுக்கு வாணும் நீங்க.. அப்பாட்ட உங்களைப் பத்திச் சொன்னதும், நன்றி கூடத் தெரிவியாமல் விட்டுட்டேமேன்னு வருத்தப்பட்டார்."

"விலாசம் தாங்க - அடுத்த முறை வரேன். ஃபோன் செய்துட்டு."

அவன் மறு மாதம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது பேசியவர் ராஜாங்கம்.

"நான் சந்திரகாந்தன் பேசறேன், ஸார்!" என்றதுமே கண்டு கொண்டார்.

"சாகரி மொபட்டைச் சரி செய்து உதவின தம்பிதானா?"

மறு நிமிடமே சந்துருவை வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தார்.

"நீங்களும் எஸ்டேட் ஓனராமே, தம்பி? எனக்குத் தெரிஞ்ச ரெண்டு குடும்பங்க இன்னைக்குச் சாயங்காலம் வீட்டுக்கு



வர்றாங்க... தொழில் முறை நண்பர்கள் - நீங்களும் வந்து சாப்பிட்டுட்டுப் போகணும், தம்பி..."

அன்று மாலை சிறு மாம்பழக் கூடையோடு அவர்கள் வீட்டுப் படியேறினான் சந்துரு.

சாகரியின் அலங்காரம் மிகக் கவனமாய்ச் செய்யப் பட்டிருந்தது என்பதை அந்தத் தகப்பன் கவனிக்கத் தவறவில்லை.

வழக்கமாக, 'இதுதாம்பா வசதி!' என்றபடி ஜீன்ஸ் அல்லது மிடியில் வளைய வருபவள், தலைக்குக் குளித்து, வெளிர்ப் பச்சை நிறப் புது சல்வாரில் அப்போதுதான் தலை நீட்டிய தளிர் போல மின்னினாள். ஏற்கெனவே சுத்தமாயிருந்த வீட்டை வேலைக்காரர்களைக் கொண்டு மேலும் பளபளப்பாக் கியிருந்தாள். விருந்தில் மேலும் நான்கு பதார்த்தங்கள்,

சி.டி.பிளேயரில் 'கஸல்' கசிந்தது.

சந்தன ஊதுபத்தியின் மணம் வேறு.

ராஜாங்கம் சென்னையிலேயே இருந்த தன் ஒன்றுவிட்ட அக்காவையும் வரச் சொல்லி விட்டார். வந்தவளிடம் தனியாகப் பத்து நிமிடம் பேசினார்.

அவர் சொன்னதைக் கேட்ட ரத்தினம் பொருமினாள்.

"நீதான் ஏற்கெனவே பொண்ணைக் கெடுத்து வச்சிருக்கியே."

"எம் மருமகளைப் போல யாருண்டுன்னு பாராட்டு வியேக்கா?"

"சரிதான். ஆனா 'உம்மகளுக்குப் பிடிச்சவனையே வாழ்க்கை முழுக்குமாய்த் தேர்ந்தெடுத்துக்கோம்மா'ன்னு நீதான் அவளுக்கு முன்னமே உத்தரவு தந்துட்டியே..."

"தப்பாக்கா அது?"

"நம்ப வழக்கமில்லையேடா அது? பெரியவங்க பத்துப் பொருத்தம் பாக்கறது போல வருமா?" சற்று சந்தேகத்துடன் தொடர்ந்தாள் - "சாகரி பிறந்தப்போ ஜாதகம் கூட கணிக்கலை நீ. ஆனாலும் குடும்பம், வசதி, செல்வாக்குன்னு நம்பளவில பொருத்தம் பாப்பமே?"

"எல்லாத்துக்கும் மேல மனசும் அதன் ரசனைகளும் ஒத்துப் போகணுங்க்கா.. அதுதான் முக்கியம்."

"அதெல்லாம் இருவது வயசுல பொண்ணுக்கு என்னடா தெரியும்? இன்னைக்கு ஒத்துப் போக்கம்பா. நாலு நாள் கழிச்சு பிய்ச்சுடுச்சேன்னு புலம்புவா..."

"அந்த ஆசை வெறுமே மேம்போக்கான கவர்ச்சியில கிளம்பறது. சாகரி சொல்றதிலிருந்து பையன் நல்லவன், பொறுப்பானவன்னு தோணுது. நம்மதை ஒத்த பிஸினஸ்.. ஆனா பெத்தவங்க இல்லையே..."

"பெண்டாட்டி இருக்கப் போறா!"

"நாளைக்கா உங்க மனைவியையும் அழைச்சுட்டு வாறேன்னு சொல்லி, அவன் கல்யாணமாகாத பையங்கறதை அவன் வாயிலிருந்தே வரவழைச்சுட்டேன். என் எஸ்டேட்டையும் அவனே கவனிச்சுக்கலாம்..."

"முதல்ல பையனைப் பாரப்பா, ராஜாங்கம்..."

"சாகரி மூலமாப் நான் பார்த்துட்டேன்னு வையேன்."

"ஒரு பொண்ணுக்கு உதவின்னா, பயலுங்க மூஞ்சி வெள்ளம் பள்ளம் ஒத்தான் வருவாங்க."



"இந்தத் தம்பி தன் வேலையாள் மகளையும் படிக்க வச்சதை மறந்துட்டேக்கா..."

"பார்ப்போம்டா - பொறு."

"அதுக்குத்தான் உன்னை வரச் சொன்னேன் - ஒருத்தருக்கு ரெண்டு பேராப் பார்ப்போம் - உனக்கு... அதாவது ஒரு பொம்பளை பார்வையிலே ஏதோ நெருடலாய்ப் பட்டாலும் வேணாம் - விட்டுறலாம், என்ன?"

சந்துரு வந்ததும் பழத்தை அத்தையிடம் தந்தது, பெரியவர்களைக் கைகூப்பி வணங்கியது, சாகரிக்குச் சின்னப் புன்னகையுடன் 'ஹலோ' சொன்னது, வந்திருந்த மற்ற விருந்தினர்களிடம் சுலபமாய் இனிமையாய் உரையாடியது, ரசித்து ஆனால் அளவோடு உண்டது என்று அனைத்திலும் பெரியவர்களுக்கு முழுத் திருப்தி.

வீட்டிற்குக் கிளம்பும் முன் தம்பியை இழுத்து வைத்துக் கிசுகிசுத்தாள் ரத்தினம்.

"முடிச்சிருடா - நாமளா தேடினாக்கூட இப்படி அமையாது. பார்க்கவும் பையன் ராஜாவாட்டம் இருக்கறான் - சாகரி அதிர்ஷ்டக்காரி."

சந்துருவிடம் துருவித் துருவிப் பேச்சுக் கொடுத்ததில் இரு குடும்பங்களுக்கும் பொதுவாகச் சில உறவுகளைக் கண்டு பிடித்து விட்டதில் அத்தைக்கு வெகு நிம்மதி - பையனின் குலம் கோத்திரமும் தங்களுக்கு ஏற்றது என்பதாய்!

மறுமுறை சந்திரகாந்தன், சாகரியின் வீட்டிற்கு அழைக்கப் பட்டபோது ஒரு கொத்து மலர்களுடன் போனான். அதில்

ஆடம்பரமான ரோஜாக்கள் இல்லை. ஒயிலான கிளாடியோலாஸ்... இளநீல நிறத்தில்.

அவன் நீட்டியதைச் சாகரி ஆவலாய்ப் பெற்றுக் கொண்டாள்.

''ரொம்ப அழகாயிருக்குது... தாங்க்ஸ்... எங்க வரவேற்பறைக்குப் பொருத்தமான நிறம்.''

''அதனாலதான் இதைத் தேர்ந்தெடுத்தேன்.''

கருநீல கார்ட்ராய் பாண்டிற்குள் செருகப்பட்டிருந்த துளிக் கசங்கல் இல்லாத சட்டையும் கூட அறையின் அதே நீலத்தில், அவனது நுட்பமான கவனிப்பை, ரசனையை உணர்ந்த ராஜாங்கம் பூரித்துப் போனார்.

அவனைப் பற்றி விசாரித்துக் கிடைத்த தகவல்களிலும் அவருக்குப் பூரணத் திருப்தி. சந்துருவோடு தனியே அமர்ந்து பேசியவர் சின்னப் பீடிகைக்குப் பின் சாகரியைத் திருமணம் செய்ய அவனது சம்மதம் பற்றிக் கேட்டபோது அவன் சற்றும் தயங்காமல் சம்மதித்தான்!

'இப்படிச் செருப்பு தேயாம, பேரம் பேசாம, பிகு இல்லாம அழகாப் ஒரு கல்யாணம் நிச்சயமாகி நான் பார்த்ததே யில்லைப்பா!' என்று ராஜாங்கத்தோடு சேர்ந்து அவர் அக்காவும் ஒத்து ஊதினாள்.

''பையனுக்கு இன்னும் மேலே வரணுங்கற ஆர்வமும் அதுக்கேத்த உழைப்பும் இருக்குதுக்கா. எஸ்டேட் பத்தின விபரங்க எல்லாம் அத்துப்படி. இதுல உள்ள பெரிய ஆட்களைத் தெரிஞ்சிருக்குது. நம்ப நிலம் பத்தியும் கேட்டுக்கிட்டான்.''



''ஒரு வருஷமாய் உன் வேலையில் ஒத்தாசையாய் ஓடியாட ஒரு பையனை வேலைக்கு வச்சிருந்தியே - அவம் பேரென்ன?''

சந்துரு வருகையின் நிமித்தம் புழங்க எடுத்த வெள்ளிப் பாத்திரங்களையும் கண்ணாடித் தட்டுக்களையும் துடைத்து மறுபடி அலமாரியுள் அடுக்கியபடி கேட்டாள் அத்தை.

''விக்ரமா? அவனும் நல்ல பையன்தான். ஒண்ணு தெரியுமாக்கா? அவனுக்கேகூடச் சாகரியைக் கொடுத்திட லாமான்னு சில நேரம் யோசிச்சதுண்டு.''

குரலைத் தணித்து விட்டார் என்றாலும் சந்துரு பற்றி பெரியவர்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் ஆவலாயிருந்த சாகரியின் காதை அது எட்டியது!

''நல்லா யோசிச்சே போ... சாகரி அதைவிடப் பேஷான வரனாய்க் கொண்டு வந்து நிறுத்திட்டாளே... அந்தப் பையனுக்குச் சொத்து ஏது? தவிர இத்தனை உயரமும் எடுப்புமாய் ஆளும் இல்லையே...''

''நம்ப வீட்டோட தங்கிப் பெண்ணோட நம்ப சொத்தையும் நல்ல முறையிலே காபந்து பண்ணக் கூடும்ங்கற எண்ணந் தான்க்கா.''

இப்போது சாகரியின் மகிழ்ச்சியின் மாற்றுக் குறைந்தது.

அன்று அவள் ஆரஞ்சு வர்ணப் பட்டு உடுத்தியிருந்தாள். வழக்கமாய்த் தூக்கி கிளிப்பில் மாட்டும் கூந்தல், வகிடு எடுக்கப்பட்டுப் பின்னலாகியிருந்தது. அதில் மணமாய் ஜாதி மல்லிகை. அங்கங்கு தங்கத்தில் கட்டிய பவள நகைகள்.

கல்யாணக் கனவில் கன்னங்களும் பவளமாய்க் கனிந்திருந்தன. அதிலும் விடைபெறும் முன் அவளிடம் சற்று நேரம் பேசிய சந்துரு. "நம்ப உறவுமுறை ரொம்ப ஸ்பெஷலாய் மாறிடுச்சு இல்லியா, சாகரி. நாளைக்கு வரேன் - பீச்சுக்குப் போய்ச் சாவகாசமாய்ப் பேசுவோம். இப்ப இதை எதிர்பார்க்கலைங்கறதால வேற ஒரு வேலைக்கான அப்பாயின்ட்மென்டைக் குறிச்சிருந்தேன். நாளை பார்ப்போம். ம்...ம்?"

என்ற சின்னக் கண் சிமிட்டலோடு விடைபெற்றபோது மயங்கியவள்தான். அப்பா பேச்சில் மயக்கம் சற்றுக் கலைந்து, தன்னுடைய தன்னலம் உறைத்தது!

பட்டப்படிப்பைச் சிறப்பாக விருது பெற்று முடித்தவளுக்கு இதுவரை மேற்படிப்பே லட்சியம் என்றிருந்தது மாறிக் கல்யாண ஆசை முகிழ்த்து விட்டது - தப்பில்லைதான்.

ஆனால் அப்பாவை, அம்மா இல்லாத குறையை உணராத அளவிற்குச் சீராட்டியவரை விட்டுவிட்டுப் போக நேரும் என்ற சிந்தனை கூட இல்லாமல் உல்லாசக் கனவுகள் காணுவது சரியில்லையே!

எப்படி இப்படிக் காதல் வசப்பட்டேன்...?

அப்பாவின் பேச்சு தொடர்ந்தது. இப்போது ஆரவாரமாய்.

"சாகரி தொடர்ந்து படிக்கட்டும். உங்ககூடச் சென்னையிலேயே இருக்கட்டுங்கறார் மாப்பிள்ளை."

சற்றுத் திகைத்த புத்தி, கற்றாழையின் ஊடே விரியும் பூக்கள் போல மலர்ந்தது.

"அதென்னடா, சாகரி இங்கயே இருக்கட்டுங்கறது? நாங்க இருக்கறோம்னா அது சந்தோஷம்."



"அவர் வேலை என்னாகிறதுக்கா? மூணு வாரம் அங்கே ஒரு வாரம் இங்கே தங்கறேன்றார். விற்பனை, உரம், மருந்துன்னு டவுன் வேலையும் இருக்குமே. அப்ப இங்கே நம்மோடு இருக்கட்டும்."

"கேட்கறதுக்கு சௌகர்யந்தான். ஆனா சரியான்னு யோசி. சாகரி மாப்பிள்ளையோட மூணு வாரம் எஸ்டேட்டில் இருக்கட்டும். ஒரு வாரம் தம்பதியாய் இங்கே வந்து தங்கட்டும். மாப்பிள்ளை வேலை முடிஞ்சதும் சேர்ந்தே கிளம்பட்டும்... மசக்கை, பிரசவம்னா சாகரி இங்கதான் இருக்கப் போறா. நாமும் அவளைத் தங்கத் தட்டுல தாங்கலாம்."

"சொன்னேனேக்கா - அவரு, சாகரிக்கு எஸ்டேட்டில் பொழுது நகரக்கூடச் செய்யாது. உடனே உங்களை விட்டு அவளைப் பிரிக்கவும் நான் விரும்பலை - அவ தன் படிப்பைத் தொடரணுங்கறாரே!"

"என்னவோ - இதுக்கு மேலே அவங்க பாடு - இனி அந்த விக்ரமை நீ வேலைக்கு வச்சுக்கணுமா என்ன?"

"அவனுக்கு இது பகுதி நேர வேலைதானே? கம்ப்யூட்டரிலே ஏதோ புது கோர்ஸ் படிக்க மும்பை போயிருக்கான் - இங்கே எஸ்டேட்டை அப்பப்ப மேற்பார்வையிடறதும், வரவு செலவு பார்க்கறதும்தானே. அவனுக்கு நோக்கமெல்லாம் கம்ப்யூட்டரிலேதான். மும்பையிலேயே வேலை கிடைச்சால் பிடிச்சுப்பான்..."

விக்ரமைப் பற்றிய பேச்சில் சாகரிக்கு அவனது தங்கை வேணியின் நினைப்பு எழுந்தது.

'விக்ரமுக்கும் இந்த விஷயத்தைச் சொல்லிடுங்கப்பா.. அப்படின்னா வேற வேலையை அமைச்சுக்குவார்... வேணிக்கும் எழுதப் போறேன்.''

''என்ன, எங்களுக்கு நிரந்தரமாய் ஒரு மானேஜர் கிடைச்சாச்சன்னா?'' கண் சிமிட்டினார் ராஜாங்கம்.

''போங்கப்பா... நானும் வேணியும் ஸ்கூல் முழுக்க சேர்ந்தே படிச்சவங்களாச்சே.''

''அப்புறம் அவ ஆடை அமைப்பு படிக்கப் போயாச்சு இல்லை?''

''நல்ல ஞாபகம்ப்பா உங்களுக்கு.''

''வேறென்னம்மா வேலை - உன் சம்பந்தப்பட்ட விஷயங்களை நினைவு வச்சுக்கறதைத் தவிர?''

அப்பாவின் தோளைக் கட்டிக் கொண்டாள்.

இதே அளவிற்குக் கரிசனையாய் ஒரு கணவனும் கிடைக்கப் போகும் கர்வம் உள்ளே சிறகு விரித்தது.

அந்த வாரத்திலேயே வேணிக்குத் தன் திருமணத்தைப் பற்றியும் எழுதினாள்.

அழைப்பிதழ்கள், விருந்து, மண்டபம், புடைவை, நகைகள் என்று எல்லாமும் இரண்டே வாரங்களில் தயார்!

ஆடி மாதத்தில் ராஜாங்கம் கல்யாணத்தை வைத்ததுதான் காரணம்! திருமணப் பேச்சைக் கூட யாரும் எடுக்காத மாதம் என்பதால் அத்தனையும் எளிதாய் அமைந்தன.

அத்தையும் கூட இந்த 'ஆடிக் கல்யாணத்திற்கு' அதிகம் எதிர்ப்புத் தெரிவிக்காததில் சாகரிக்கு ஆச்சரியம்!





'அப்பா வெளிநாட்டில் படிச்சவர். ராகுகாலம் யமகண்டம் எந்தெந்த நேரம்னு கூடத் தெரிஞ்சுக்காமலேயே வளந்தாச்சு, வாழ்ந்தாச்சு. நீங்க.. எப்படித்தை?''

''ஏன்டா சாகரி, உனக்கேதும் கலக்கமாய் இருக்குதா?''

''இல்லத்தை. இத்தனை காலமாய் நானும் அப்பா மாதிரியேதானே இருந்திருக்கேன்.''

''நானும் பலதைப் பார்த்துட்டேன்டி. எங்க கல்யாணங்கூட சுபயோக முகூர்த்தத்துல நடந்ததுதான்... ஜாதகப் பொருத்தம் அமோகம்னாங்க... மூணு வருஷங்கூட நாங்க முழுசாய் வாழலையே!... அவர் போயிட்டார். எம் பையன் பிறந்தது ராஜ யோகத்திலேயாம் - கைக்கும் வாயுக்குமாய் யுத்தம் பண்ணிட்டு தாம்பரம் தாண்டி இருக்கான் - அங்க வீட்டு வாடகை கம்மின்னுட்டு. தாயை வந்து அடிக்கடி பார்க்கக் கூட முடியாத யோகந்தான் போ! நல்ல மனசோட உழைச்சு, கடவுளை நம்பிட்டு இருந்தாப் போதும் - நாளென்ன கோளென்ன? நான் அடிக்கடி இப்படி யோசிக்கறதுண்டு - இப்ப தம்பி துணிஞ்சு செய்றான் - நாலு பேருக்கு வழி காட்டியாய் இருக்கட்டும்.''

''தம்பதிகளைக் கூடப் பிரிச்சு... ஆடி மாசத்துல... வந்து...''

''சித்திரையில குழந்தை பிறந்தா வெயிலு தாய்க்கும் குழந்தைக்கும் சேராதேங்கற எண்ணம். ஜாக்ரதையாய் இருந்துக்கோங்கன்னுட்டாப் போதாது?''

**மி**க விரைவில் கச்சிதமாய் நடந்து முடிந்தது. சந்துரு - சாகரியின் திருமணம். ராஜாங்கத்தின் காரியதரிசியாய் ஒத்தாசைக்கு நிற்கும் விக்ரம் மும்பையிலிருந்து

வராவிட்டாலும் கூட மாப்பிள்ளைக் கெடுபிடிகள் இல்லாததால் அவர் அழகாகவே சமாளித்து விட்டார். வேணியும் கல்யாணத்திற்கு வரவில்லை.

திருமணத்தின் மறுநாள்தான் அவள் கண்களுக்குச் சிநேகிதி சாகரியின் கடிதமும் அழைப்பும் கிடைத்தன.

வெளியூர் போய்த் திரும்பிய வேணி தன் தபால் பெட்டியை அடைத்திருந்த தபால்களை விடுவித்தவள் முதலில் பிரித்தது சாகரியின் கையெழுத்துடனிருந்த கவரைத்தான்.

படித்த அவள் முகம் சஞ்சலத்தில் சிறுத்தது. உதடுகள்... 'ஐயையோ...' என்று அரற்றின.



5

'இப்படி விரல் சொடுக்கற நேரத்துல அழகாய்க் கல்யாணத்தை நடத்திட்டாரே ராஜாங்கம்!'

கல்யாணத்திற்கு வந்திருந்த பலர் பாராட்டினார்கள்.

''பையன் நல்லவன் - பரம்பரம் பிடிச்சம் போச்சு - பிறகென்ன?''

''கச்சிதமான ஜோடிப் பொருத்தம் - ஆனா ஏன் ஆடி மாசத்துல?''

''எல்லாரையும் கண்ணை மூடிட்டுத் தொடரும ஆட்டுப் புத்தி ராஜாங்கத்துக்குக் கிடையாது. கல்யாணச் செலவும் கம்மியாப் ஆச்சன்னா!''



சந்துருவின் பெற்றவர்கள் உயிருடன் இல்லையென்றாலும் அவன் மாமா குடும்பம் உட்படப் பல உறவுகள் வந்து வாழ்த்தினர். அனைவருக்கும் சாகரியிடம் முழுத் திருப்தி.

''கண்ணுக்குக் குளுமையாய்த்தான் பொண்ணைப் பிடிச்சிருப்பேன்னு தெரியுமடா. நல்ல குடும்பம், பண்பாய்ப் பழகறா, படிச்சவ... முக்கியமாய் உன்னைப் பார்க்கற அவ கண்ணுல காதல் டன்டன்னாய் வழியுது.''

மாமா உற்சாகமாய்ப் பேசினார்.

''நான் படிப்பை முடிக்கிறவரை எஸ்டேட்டை கவனிச்சுக் கிட்டது மாமாதான். ஒவ்வொரு விடுமுறையும் அவரோடதான் - அப்ப தொழிலையும் கற்றுக் கொடுத்தார்.''

நன்றியுடன் ராஜாங்கத்திடம் தன் மாமாவைப் பற்றிச் சொன்னான். ''தண்ணியிலே இந்த மீன் குஞ்சை விட்டேன்... அமோகமாய் நீந்த ஆரம்பிச்சுட்டான். ஆனா ஒண்ணும்மா, சாகரி, மீனைத் தண்ணியை விட்டு வெளியே எடுக்க முடியாது...''

உதடு பிதுக்கினார் மாமா.

''அவளைப் பயங்காட்டாதீங்க, மாமா.''

''பின்னே உனக்குத் தெரிஞ்சதெல்லாம் எஸ்டேட் வேலையும், அந்தத் தொழிலாளர்களோட தேவையும்தானே! சாகரிக்கு...''

''சாகரி சென்னையிலேயே இருந்து படிப்பைத் தொடருவா. நான் எஸ்டேட்டில் மூணு வாரம் இங்கே ஒரு வாரம்னு...''

''டேய் டேய்... அதெல்லாம் போதும். கல்யாணமாகி இனியேனும் ஒழுங்காய் இருக்கற வழியைப் பாரு.''

*

குரலைத் தாழ்த்தி எச்சரித்தார் மாமா.

எல்லாரும் சிரிக்க, சாகரியும் வெட்கத்துடன் புன்னகைத்தாள்.

"சரி மாமா. இன்னும் 10 நாளேனும் சாகரியோடதான். முதல்ல கோவளம் போறோம். ஒரு வாரம் ஹனிமூன்."

"வாரமென்னடா... வாழ்நாள் முழுக்கச் சாகரியோடதான் - ஹனிமூன்தான் - என்ன?"

செல்லமாய் மிரட்டினார்.

இப்பொழுது யோசிக்க, சந்துருவின் மாமாவிற்கும் அவனது தப்பான வழக்கங்கள் பற்றித் தெரிந்திருக்கும் என்பது புரிகிறது - இருந்தும் மணப் பெண்ணிற்குப் பட்டுச்சேலை, மரகதக் கல் வளையல் என்று பரிசளித்து வாழ்த்தினார்களே இனியேனும் நம்ப வீட்டுப் பயல் ஒழுங்காய் இருந்துவிடமாட்டானா என்ற நப்பாசைதான்...

ஆனாலும் அதற்குப் பலியானது தன் வாழ்வல்லவா?

மூடியிருந்த கண்களுக்குள் சூடாய்க் கொப்பளித்தது.

கண்ணீரை விழுங்கினாள்.

ஜீப் காடு முரடான சாலையில் முடிந்தளவு வேகமாய் முன்னேற, சாகரியின் நினைவு பின்னோக்கியது.

சந்துருவுடனான சந்திப்பு, திருமணம் என்று தடவி மகிழ்ந்த மனதில் இப்போது தேனிலவு...!

தேனாய்த் தித்தித்து நிலவாய்க் குளிர்வித்த நாட்கள்!

காற்று உக்கிரமாய் வீசி அம்மியையும் பந்தாடும் ஆடி மாதம் என்பதால் கோவளத்தில் உல்லாசப் பயணிகள் இல்லை.



சீசன் சமயம் இல்லாததினால் நட்சத்திர ஹோட்டெலின் அறைகள் பாதி வாடகைக்கே கிடைத்தன.

சாகரி செல்வத்தில் புழங்கியவள் என்றாலும் நட்சத்திர ஹோட்டெலின் தேனிலவு அறையைக் கண்டு அயர்ந்து போனாள்.

மங்கிய நீல வெளிச்சத்தில் அந்த நீள ஸாடின் விரிப்பில் பளபளத்த வட்டப் படுக்கை, சுற்றிலும் காமசூத்திர ஓவியங்கள், மணம் வீசி மயக்கிய மலர்க்கொத்துக்கள், பழவகைகள் என்று எல்லாம் பக்கா!

ஆனால் புது மாப்பிள்ளை எதையும் கவனித்ததாய்க் கூடத் தெரியவில்லை! அவன் கருத்து முழுக்கச் சாகரியின் மீதுதான்-

அதைக் கண்டும் காணாதது போல அறையைச் சுற்றி வந்தாள்!

"பிரமாதமாயிருக்கு... இல்ல, சந்துரு?"

"எல்லாரும் அப்படித்தான் சொன்னாங்க."

"எல்லாருமா... எப்படி?"

"கல்யாணத்தப்ப உன்னைப் பார்த்தாங்களே... நூறு அதிர்ஷ்ட மச்சமாவது இருக்கணும்பா உனக்குன்னு கொஞ்சம் புகைச்சலோடதான் பாராட்டினாங்க."

"நீங்க என்னை விட அழகு, சந்துரு... அப்ப எனக்கு இருநூறு மச்சம் இருக்கணும்!"

"சரியாய் எண்ணிப் பார்த்துருவோமே!"

வெட்கத்தில் முகம் திரும்பியவளைப் பின்னாலிருந்து கட்டி அவன் தோளில் முகம் பதித்தான்.

"அறை நல்லாயிருக்குன்னேன்..."

"இதெல்லாம் ஜுஜுபி கண்ணு..." சென்னை பாஷையில் கொஞ்சினான். "எத்தனை கன்னியமாய் கம்பீரமாய்த் தெரிஞ்சீங்க முதல் தரம் பார்க்கும்போது... இதென்ன பாஷை?"

"பின்ன ரோட்டுல உதவிக்காய்ப் பரிதாபமாய் நிக்கற பொண்ணுட்ட இப்படி எல்லாம் பேசிப் பயங்காட்ட முடியுமா? பெண்டாட்டிட்ட மட்டும்தான்."

அவன் கைகள் சுதந்திரமாயின.

"ஐயோ... என்ன இது?"

அவளது மென்மையான தள்ளல் எல்லாம் அவனிடம் வெற்றிகரமாய்த் தோற்றுப் போயின.

மாலை வேளைகளில் இருவருமாய்க் கடற்கரையில் அமர்ந்திருந்த பொழுதுகளும் வெகு ரம்மியமானவை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித - ஏன், நாய்ச் சஞ்சாரம் கூட இல்லாத தனிமை.

பிய்த்தடிக்கும் காற்றும், 'ஏய், என்ன சேதி?' என்பதாய்ப் பொங்கிக் குதிக்கும் அலைகளும்தான் சுற்றி வர.

ஒருவர் மடியில் மற்றவர் படுத்தபடி கதை பேசினார்கள் - கேட்டார்கள்.

"அடடே... உங்க அப்பா, அம்மா கூட காதல் கல்யாணம் தான் செஞ்சுகிட்டாங்களா, சத்ரு?" ஆர்வமானாள்.



"நம்மை மாதிரி, பரஸ்பரம் பிடிக்கப் போக, பெற்றவங்க பேசி முடிச்சாங்களாம். அப்பா என்னை மாதிரி, சாகரி."

"இவ்வளவு மோசமா?"

கிள்ளினான்.

"ஆ...!" அலறித் துள்ளினாலும் மறுபடி அவன் மடியிலேயே தஞ்சமானாள்.

"ஒரு இடத்துல தங்காம சுத்தறவர். எஸ்டேட் மேனேஜராய்ப் பதவி உயர்ந்ததுன்னாலும் அவர் ஆசையெல்லாம் ஒரு எஸ்டேட்டை வாங்கி அதன் முதலாளி ஆயிடணும்னு. ஒரு வெள்ளைக்காரர் தன் ஏலத் தோட்டத்தை விற்பதாய்க் கேள்விப்பட்டதும் போய்ப் பேசித் தன் முதல் சொத்தை வாங்கிவிட்டார். நாலைஞ்சு வருஷத்துல அதை ஒட்டியிருந்த அடுத்த தோட்டத்தையும் வாங்கறபோது கூடவே வாங்கின குதிரையால வந்தது வினை..."

அவன் மடியில் கிடந்தபடி அண்ணாந்து கணவன் முகம் பார்த்திருந்த சாகரி மெள்ள எழுந்தாள்.

"கேள்விப்பட்டேன்... உங்க அத்தை சொன்னாங்க. மாமா... அதாவது உங்கப்பா குதிரையிலேருந்து விழுந்து..."

"எஸ். அதிலேயே தோட்டம் முழுக்கச் சுற்றி வருவார். சின்ன வயசிலே வெள்ளைக்காரப் பெண்கள் குதிரையிலே சவாரி பண்றதைப் பிரமிப்போட பார்த்தாராம் அப்பா - தேயிலைக் குத்துச் செடிகளின் மத்தியிலே பனி ஊடாக அவங்க மிடுக்காப் போறது தேவதைங்க போலிருக்கும்னு... ஆசை சரி. ஆனா வயசான குதிரை... அது கால் பிசகி விழ, அப்பாவுக்குத் தலையிலே அடிபட்டுக் கடைசி வரை கோமா நிலைதான்.

அம்மா அவரை அப்படிக் கவனிச்சுகிட்டாங்க. ஒரு அசைவும் இல்லாதவரை தினம் துடைக்க, விதவிதமாய் உடுத்தி, ஊட்டி, ஏதாவது பேச்சுக் கொடுத்தபடி பக்கத்திலேயே இருந்தாங்க... ஆனா ஒரு வருஷத்துல அப்பா இறந்த வுடனேயே அம்மா... அம்மாவும் போயாச்சு.''

''உடனேன்னா... அப்ப?''

பறந்த அவன் தலைமுடியைக் கோதியபடி கேட்டாள்.

''ஆமாம், சாகி. தற்கொலை செய்துகிட்டாங்க. தனக்கு டாக்டர் அப்பப்ப தந்த தூக்க மாத்திரைங்களைப் பயன் படுத்தாம சேர்த்து வச்சிருக்காங்க. அப்பா இல்லாத உலகத்துல வாழப் பிடிக்கலை... என்னைக் கூட மறந்தாச்சு...''

எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''அதுவும் நீங்க ஒரே பிள்ளை... பாவம்பா.''

''எனக்குப் பிறகு பிறந்த ஒரு பெண்ணும் ஒன்னரை வயசிலேயே மூளைக் காய்ச்சல்ல... இறந்திடுச்சு.''

''உங்கம்மாவும், பாவம்... கஷ்டப்பட்டிருக்காங்க.''

''ரொம்ப அன்பு வைக்கிறது நல்லதில்லை, சாகி - கஷ்டத்தைத்தான் கொண்டு வரும். நீயில்லைன்னா நானில்லைங்கற அளவு நாம யாரையும் சார்ந்து இருக்கறது புத்திசாலித்தனமில்லை.''

''பாசமும் புத்தியும் வெவ்வேறாப்பா?''

அவளை உற்றுப் பார்த்தவன் குனிந்து அவள் நெற்றியில் முட்டினான்.

''தெரிய்தே. என் புத்தி விழிப்பாய் இருந்தால் ஏன் உங்கிட்ட இப்படி நான் கவிழணும்? உங்கப்பா கல்யாணப் பேச்சை



எடுத்ததும், 'பூம்பூம்' மாடு மாதிரித் தலையாட்டணும்? காதல் கண்ணைக் கட்டிடுதும்மா!''

''ஏய்... அப்ப அது பொய்யா?''

பதிலுக்கு அவனைச் சற்றுப் பலக்கவே முட்டினாள்.

''ஸ்ஸ்... எது?''

''நேத்து ராத்திரி உலக அழகியெல்லாம் எம் முன்னால ஒன்னுமே இல்லைங்கல?''

''அவங்க எல்லாம் ஏன் உம்முன்னால வரணும், டார்லிங்? அவங்கெல்லாம் எட்டாத உயரத்துல ரதியாய் ரம்பையாய் உலா வர்றவங்க...''

நீளப் பெருமூச்சு விட்டவனை, மணலில் மல்லாக்கத் தள்ளினாள்.

அவன் அவளையும் இழுத்துக் கொண்டு சரிந்தான்!

சில பொழுதுகள் மிக அமைதியாய்க் கழிந்தன. மனம் முழுக்கக் காதலும் கனிவும் ததும்பிய நேரங்கள் அவை.

காலுக்கடியில் நுரையை முத்துப் பாய் போல விரித்த அலைகளை ரசித்தபடி நடந்தனர். அல்லது ஒருவர் மீது மற்றவர் சாய்ந்தபடி, சுருண்டு சீறிச் சிதறும் அலைகளைப் பார்த்தபடி இருந்தனர்.

''எப்படி வெடிச்சுச் சிதறுது பாருங்க... பாப் கார்ன் போல இல்லை?''

''ம்ம்...''

"யப்பா...! எத்தனை பெரிய அலை வருது. பாருங்க சந்துரு - ராட்சச அலை. எழுந்திரிங்க - கொஞ்சம் பின்னாடி போய் உக்காருவோம்... அது நிச்சயம் நம்மைத் தூக்கிடும்."

"வராது."

"வரும்."

அவளை எழ விடாமல் நண்டுப் பிடி போடுவான்.

"பயம்மா இருக்குப்பா."

"கரையைத் தொட்டுட்டு திரும்பும் இந்த அலைங்க. அதுக்கு அணை போட்டுடும் பார்..."

அவன் சொன்னபடியேதான் ஆனது.

கரையில் நுரையாய்ப் படர்ந்து பின் உள்வாங்கிச் சுருண்ட அலைகள் மதில் சுவராய்ப் பெருத்துப் பொங்கிய அப்பெரிய அலையை அடக்கிச் சிரித்தன.

அதுவும் சுருங்கித் தம்பதியின் கால் விரல்களை மட்டும் நக்கி விட்டுத் திரும்பியது.

'யப்பா, அலைகள்தான் எத்தனை திஜுக... நான் முழுக்க உட்கார்ந்து பார்த்தாலும் அலுக்காத மாதிரி..."

"நானெல்லாம் அலுக்காமச் செய்ய வேற முக்கியமான வேலையெல்லாம் இருக்கும்மா - கிளம்பு..."

அவளை அள்ளியபடி நடந்தான்.

இந்த அலைகளைப் போலவே தங்கள் வாழ்வும் அலுப்பின்றி, ஒய்ச்சலின்றி ஆரவாரிக்கும் என்று நினைத்திருந்தாள் அன்று...



மறுவாரம் அவனது எஸ்டேட்டிற்குப் போய்ப் புதுத் தம்பதியாய்த் தங்கின நாட்களும் அற்புதமானவை. அங்கு சமுத்திரத்தின் இரைச்சலில்லை. சில்வண்டுகளின் இசையும் செடி கொடிகளின் பசிய மணமுமாய் சிருஷ்டிக்கப்பட்ட அம்மாய லோகம் தம்பதியைத் தாலாட்டியது. சற்றிவர மனிதர்கள் இல்லாத சூழல் கொடுமையாயிருக்கும் என்று அவன் எச்சரித்திருந்தாலும் இருவருக்கும் அதுவே மிகத் தித்தித்தது!

தொழிலாளர்களுக்கு இரண்டு மாதப் போனஸ் கிடைத்திருப்பதாகக் கேள்விப்பட்டாள் - அனைவரும் காசு போட்டு அழகிய பட்டு ரஜாயை வாங்கிப் பரிசாய்க் கொண்டு வந்திருந்தனர்.

மாலையிட்டுச் செவிப்பறை கிழிந்து விடும்போல மேளம் கொட்டினர். சென்னையின் பிரபல கேட்டரர்ஸை அழைத்து வந்து, அவர்களுக்குத் தேவையான சமையல் கொட்டகையும் அமைத்திருந்தான்.

பதார்த்தங்களை ருசித்தவள் அயர்ந்து போனாள்.

இவர்களது திருமணத்தில் பரிமாறப்பட்ட அதே விருந்து... அதே தரத்தில்!

அவனிடம் அதைக் குறிப்பிட,

"ஆமா - சாகரி, உன் அப்பா நம்ப தொழிலாளிகளையும் அழைக்கத்தான் சொன்னாங்க. ஆனா அங்கே இவங்க இத்தனை குஷியாய் ஆட முடியாது. பல வருஷங்களுக்குப் பிறகு நாம பார்க்கற நம்ப உறவு, நண்பர் கூட்டத்திடையே நாமும் இவங்களை இப்படித் திருப்தியாய்க் கவனிக்க முடியாது

போனாலாப் தந்த பணம் சென்னைக்கு வந்து போகும் பயணத்திலேயே செலவாயிருக்கும்..."

விளக்கினான்.

மாப்பிள்ளையின் பந்தி விசாரிப்பில் வயிறோடு நெஞ்சும் விம்மச் சாப்பிட்டனர் அனைவரும்!

சாகரி கையால் அனைவருக்கும் வேட்டி - புடவை பரிசளிக்கப்பட வாங்கின மனங்களைப் போலவே இவளுக்கும் நெக்குருகியது.

சென்னையில் வைபவங்களை முடிந்தளவு ஆடம்பரமின்றிச் செய்யச் சொன்னவன் இங்கே காசு பாராமல் செய்ததில் பெருமையாயிருந்தது.

வசதியானவர்களுக்கு இவர்களது திருமணம் நூற்றில் ஒன்று.

இந்த எளியவர்களுக்கோ என்றும் மறக்காது... இவர்களது வாழ்த்தும் வாடாது.

அன்றிரவு காட்டு ரோஜாக்களால் அலங்கரிக்கப்பட்ட தேக்குக் கட்டிலில் தம்பதி அணைத்துப் படுத்தபோது அவர்களது காதலில் ஒரு புதுப்பரிமாணம் சேர்ந்திருந்தது.

நேசமும் மதிப்புமாய்ச் சாகரி கணவனிடம் குழைந்து கலந்தாள். மனம் நிறைந்த மோகத்துடன் அவன் ஏற்றுக் களித்தான். பல எளிய நெஞ்சங்களின் ஆசியால் வாய்த்த இன்பம் அது என்று எண்ணியபடி சுகமாய்க் கண்ணயர்ந்தது நினைப்பிருக்கிறது... ஆனால் அந்த ஆசிகளின் ஆயுள் மிகக் குறுகியதுதானா...?

ஜீப்பிலிருந்து இறங்கும்போது அவள் கால்கள் தடுமாறின.



"இரு - வரேன்..." - விரைந்து வந்து கைகொடுத்தான்.

ஏனோ அவளுக்கு அது எரிச்சலாயிருந்தது.

"எல்லாம் உங்க மாத்திரையால்... வேற எனக்கொரு கேடுமில்லை..."

சிடுசிடுத்தாள்.

"ஒரு மணி நேரம் உட்கார்ந்து அசையாம வந்ததில் கால் மரத்திருக்கும் - நடந்தால் சரியாயிடும்..."

"தெரியும்."

காலை எட்டிப் போட்டுமே அவனைப் பின் தொடரச் சற்று ஓடத்தான் நேர்ந்தது.

மனதுள் அப்பாவைப் பற்றிய பதட்டம் வேறு.

பெரிய மரங்களின் அரவணைப்பில் சின்னக் குடில்களின் அமைப்பில் மருத்துவமனை மிரட்டாமல் காட்சி தந்தது.

சந்துரு நுழைந்த அறைக்குள் நுழைந்தவளை உதட்டில் விரல் வைத்து எச்சரித்தான்.

அப்பா கட்டிலில் படுத்து விழி மூடியிருந்தார்.

தூக்கம் தந்த தற்காலிக அமைதியில் முகம் தளர்ந்து குழந்தை போலிருந்தார். அவரைத் தொடப் பரபரத்த விரல்களைக் கட்டுப்படுத்தினாள்.

அவரது இடது கால் கட்டுக்குள் கிடந்தது.

மார்பு வரை போர்த்தி யிருந்ததால் மற்றச் சேதம் புலப்படவில்லை. அப்பா இங்கு தன் ஆசை மருமகனுடன்

இருந்த காரணமும் புரியவில்லை. மகளிடம் மறைத்து மருமகனுடன் இழைந்திருக்கிறார்... சந்துரு இங்கு இருப்பது அறிந்துதான் தன்னைத் தேக்கடி அழைத்து வந்தாரோ...?

அப்படியானால் தன்னிடம் அது குறித்துப் பேச்சே எடுக்காதது ஏன்?

ஆழ்ந்த உறக்கத்தில் எம்பித் தாழும் தகப்பனின் மார்பில் பாய்ந்து அத்தனை கேள்விகளையும் கேட்டு உலுக்க ஆத்திரம் பெருகியது.

அறையில் நின்ற மற்றவர்களை மறந்து, அங்கிருந்து 'சட்'டென வெளியேறினாள் சாகரி.




டிபன் காரியரில் உணவு வைத்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தார் பாலன் - அவள் முகம் சரியில்லை!

கை வேலையில் மும்முரமாயிருந்தாலும் அவள் வாய் சதா ஏதேனும் ஒரு பாடலை முணுமுணுக்கும் -

இன்று முணுமுணுப்பு மிஸ்ஸிங்!

"வெறும் இடியாப்பம் மட்டுந்தான் வச்சிருக்கே, வசு... அந்தப் பெண்... சாகரிக்கு என்ன பிடிக்குமோ...? ரெண்டு தோசையும் வார்த்து..."

"இது போதும்!"



என்ற வசுந்தராவின் குரலும் சரியில்லை!

''பாவம்... வந்த இடத்துல அப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னு பதறிப் போயிருக்கும், அந்தப் பொண்ணு...''

''அவ பதறின மாதிரி தோணுச்சா உங்களுக்கு?''

பாலன் சற்றுத் திகைத்து யோசித்து... பின் தடுமாறினார்.

''சினிமாவிலே வர்றாப்பல 'அப்பா'ன்னு அலறி மேல விழுந்து ஆர்ப்பாட்டம் பண்ணினாதானா, வசு?''

''சரி - வேணாம். உணர்ச்சிகளை அப்படியே கொட்டறது அநாகரீகம்ங்கற மாதிரி நாம மாறியாச்சு. ஆனா புது ஆட்கள் அந்த அறையிலே இருந்தோம் - மரியாதைக்கு ஒரு பார்வை கூட இல்லை... அப்பாவை வெறுப்பும் சலிப்புமாய்ப் பார்த்துட்டு வெளியேறிட்டா...''

''அந்தப் பொண்ணு... அதான் சாகரி... யாருன்னு தெரிஞ்சதும் உனக்கு அவ மேல நல்ல அபிப்பிராயம் இல்ல...''

உண்மைதான் என்பதுபோல டிபன் காரியரை இழுத்து 'டப்'பெனக் கொக்கியிட்டாள் வசுந்தரா.

''புருஷன் பொண்டாட்டிக்கு இடையே நூறு சண்டை வரும் - அதுக்கு இருநூறு காரணமிருக்கும்மா...''

''அதாவது ஒரு சண்டைக்கு ரெண்டு காரணம்ங்கறீங்க...?''

அப்படியேதும் புத்திசாலித்தனமாய் யோசித்தே இராத பாலன் விழித்தார்!

''நாணயத்துக்கு ரெண்டு பக்கம்தான் - ஒத்துக்கறேன் எனக்குச் சந்துருவைத்தான், அதுவும் கொஞ்ச நாளாய்த் தெரியும்...''

"அவன் நம்ப பக்கம் எஸ்டேட் வாங்கி ஒரு வருஷங்கூட ஆகலியே..."

"அவன் தன் வீட்டுக்காரியைப் பற்றித் தப்பாய்... ஏன், அப்படி ஒருத்தி இருக்கறதைப் பற்றியே வாய் திறந்ததில்லை, ஆனா முகம் காட்டிக் கொடுத்திருங்களே.. ஒரு மனுஷன் திருப்தியாய் அப்பப்ப தித்திப்பாய் வாழறதை அவன் சிரிப்பு சொல்லிடுமே..."

"இதுதான் வசு.. உங்கிட்ட கோளாறு. இஷ்டத்துக்கு யூகம் பண்ணுவ..."

"இது யூகமா? சரி. சந்துரு அடிபட்டுச் சாகக் கிடந்தானே... படுக்கையிலே ரெண்டு மாசம் திரும்பிப் படுக்கக் கூட பிறர் தயவு வேண்டி முனகிட்டுக் கிடந்தானே... அந்நேரத்துல புருஷனைப் பிள்ளையாய்க் கவனிக்கக்கறது. மனைவியோட கடமை. அப்பக்கூட இந்தப் பொண்ணைக் காணலியே."

"அவங்க இடையிலே ஏதோ மனஸ்தாபம்."

"பிள்ளைங்க குறும்பு செஞ்சா அடிக்கிறோம்தான் - அதே சமயம் காயம் பட்டுட்டு வந்தால் துடைக்கக் கட்டறதில்லை? மனஸ்தாபம் சகஜம் - பேசித் தீக்கணும். இதுவே அவளுக்கு... அதான் அந்த சாகரிப் பொண்ணுக்கு ஒரு ஆபத்து நேர்ந்திருந்தால் சந்துரு இங்கே கையைக் கட்டிட்டு உக்காந்திருப்பானா? ஓடிப்போயிருப்பான்ல?"

பாலன் இதற்கு ஆமோதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

"ம்ம்... பெரியவர் ராஜாங்கம் தவறி விழுந்ததும் தவிச்சுட்டான். நான் அவங்க பெரியவர் ரெண்டு பேரையும் கருத்துச் சொல்லச் சொல்லி இங்கு அழைச்சது தெய்வ



சங்கல்பம்தான், வசு... ரொம்ப ஆச்சரிமாய்ப் போச்சு... சந்துரு பெரியவருடைய மருமகன்னு தெரிஞ்சப்போ..."

"நான் வேணும்னா டிரைவரோட போய்ச் சாகரியைக் கூட்டிட்டு வர்றேன்னு சொன்னதைக் காதிலேயே வாங்கிக்காம தானே பொறுப்பாய்க் கிளம்பினானே..."

"எங்கே தன் பொண்டாட்டியைக் கரிச்சுக் கொட்டி இழுத்துட்டு வருவியோங்கற பயம் அவனுக்கு..."

"கரிச்சுக் கொட்டறவதான் இப்படி இடியாப்பமும் சொதியும் செய்து கேரியர் நிரம்ப அடைச்சுத் தரேன்!"

வசுந்தரா யாரையும் தூக்கி எறிந்து பேசும் பழக்கமில்லாதவள் - அனைவரிலும் சில நல்ல குணங்களையேனும் பார்க்கக் கற்றுக் கொண்ட கெட்டிக்காரி. அப்படிப்பட்டவளின் காட்டம் புரியாமல் கேரியருடன் அமைதியாய்க் கிளம்பினார் பாலன்.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வதும், ஏற்கத் தயாராய் இருப்பதும் லேசான காரியமில்லையே!

பாலன் தம்பதியின் இரு மகன்களும் வெளியூர்ப் பள்ளி விடுதிகளில் - இவர்கள் வேலை நிமித்தம் எஸ்டேட் வாழ்க்கையைப் பழகிக் கொண்டவர்கள்.

அண்டை, அயலார் வாய்க்க வழியில்லாவிட்டாலும், ஐந்து, பத்து மைல்கள் இடைவெளி விட்டு அமையும் வீடுகளில் உள்ளவர்களோடு அனைவரும் சிநேகமாய்ப் பழகுவார்கள்.

சேர்ந்து சிரிக்கவோ, சிரம காலத்தில் உதவவோ இந்தச் சிநேகிதர்கள்தான் என்பதால் இடையே தூரம் அதிகமென்றாலும் நட்பு இறுக்கமாகவே இருக்கும்.

சமீபமாய் வாங்கிய இந்த எஸ்டேட்டில்தான் விபத்து நேர்ந்தது என்பதால் புதும் சிநேகிதர்கள் சந்துருவை மாறி மாறிக் கவனித்துக் கொண்டனர். பெற்றோர் இல்லை என்பதைச் சொன்னவன், தான் கல்யாணமானவன் என்பதை ஏன் இத்தனை ரகசியமாய் வைத்திருந்தான்?

பழைய எஸ்டேட் தொழிலாளிகளிடம் தகவல் சொல்ல விடாமல் பாலனைத் தடுத்து விட்டான் -

"ஏன் எல்லாரையும் களேபரப்படுத்தணும் - அவங்க ஒழுங்காய் அந்த எஸ்டேட் வேலையைக் கவனிச்சாலே போதும் ஸார்" - என்று.

பாலனுக்கு என்னவோ சாகரியைப் பார்த்தால் பாவமாய்த் தோன்றியது. தன் சோகத்தைத் தனக்குள்ளாகவே அமுக்கி இறக்கியது போன்ற தோற்றம். மெலிந்து, முகக் களையில்லாமல் தெரிகிறாள் வேறு... இந்தச் சந்துரு பயலும்தான் சற்று விட்டுக் கொடுத்துப் போனால் என்ன?

அந்த மருத்துவ மனை சின்னது.

இருபது படுக்கைகள் மட்டுமே இருந்தாலும், அறுவைச் சிகிச்சைக்கான வசதிகளும் திறமையான இரு மருத்துவர்களும் இருப்பதால் அப்பகுதியில் பிரபலமானது.

நீலநிற உடையில் இருந்த தொழிலாளிகள் டெட்டால் நீரால் தரையைத் துடைத்துக் கொண்டிருந்தனர். சிப்பந்திகளும் நர்சுகளும் அங்குமிங்கும் பறந்து திரிந்தனர்.

நான்காம் எண் அறையின் வாசலில் நின்ற சாகரியின் முகம் அன்று சற்றுத் தெளிவாயிருந்தது.

உணவுடன் நுழைந்த பாலனைப் புன்னகையுடன் வரவேற்றாள்.



"குட்மார்னிங் ஸர்."

"மார்னிங்ம்மா... அப்பாவுக்குத்தேவலையா?"

"ஆமா..."

"உம்முகத்திலேயே தெரியுதே... பசியோட இருப்பீங்க - வாம்மா, சாப்பிடலாம்."

"அப்பாவுக்கு ஜூஸ் பிழிஞ்சு தந்தேன் - பக்கத்திலேயே ஒரு மெஸ் நடத்தறாங்களாம். போய் விசாரிக்கணும் - சாப்பாட்டுக்கு அங்கேயே ஏற்பாடு செய்யலாம்னு."

"அவசியமென்னம்மா - நாங்க இல்லை?"

"மூணு வேளையும் இப்படிச் சாப்பாட்டு கேரியரோட அலையறது சிரமம், ஸர்."

"இந்தப் பேச்சே வேணாம்மா - உள்ளே வா. அப்பாவைப் பார்ப்போம்."

மழிக்கப்படாவிட்டாலும் ராஜாங்கத்தின் முகம் பொலிவாய்த் தோன்றியது.

"வாப்பா, பாலன் - உங்களையெல்லாம் பதற வச்சது போதாதுன்னு இப்ப அலையவும் விடறேன்."

"பொண்ணுதான் தெரியாம பேசறான்னா... நீங்களுமா ஸர்? என் வேலையாய்த்தானே நீங்க இந்தப் பக்கம் வந்தீங்க. 'கான்ஃபரன்ஸிலே ரெண்டு நாள் தலையைக் காட்டிட்டு ஓடியிருக்க வேண்டியவர் முழுசாய் அந்த நாளிலிருந்து நான் காட்டின எஸ்டேட் அத்தனையையும் சுற்றிப் பார்த்து..."

"நாம நாலாவதாய்ப் பார்த்த தோட்டத்தை முடிச்சிடு, பாலன். நல்ல தரமான செடிங்க, சகாய விலை."

''சரிங்க, ஸார் - இப்ப உட்கார வைக்கட்டுமா? சாப்பிட்டுறலாம்.''

எத்தனையோ வற்புறுத்தியும் தகப்பன் சாப்பிட்ட பின், அவரது வாய், கைகளைக் கழுவித் துடைத்த பின்னரே சாகரி தட்டுடன் உட்கார்ந்தாள்.

'என்னம்மா, போட்டுக்கிட்டதே ரெண்டு இடியாப்பம் - அதையும் அளையறே... வயிறாரச் சாப்பிடணும் - இடியாப்பம் பிடிக்காதோ?''

வருந்தினார், பாலன்.

''பிடிக்கும். அருமையாய்ச் செய்திருக்காங்க... ஆனா பசியில்லை.''

ராஜாங்கம் ஏதும் பேசவில்லை என்றாலும் அவர் முகத்தில் வருத்தத்தின் சாயல் இருந்ததாய்ப் பட்டது.

சற்று நேரம் பேசிவிட்டுக் கிளம்பியபோது உணவுக் கூடையுடன் சாகரி தன்னைப் பின் தொடருவதைப் பாலன் தடுக்கவில்லை.

"மெலிஞ்சு தெரியறேம்மா... வேண்டியது சாப்பிடணும்."

வறட்சியாய்ப் புன்னகைத்தாள்.

''அப்பாவைப் பத்து நாளிலே டிஸ்சார்ஜ் பண்ணிட லாம்னார், டாக்டர்.''

"பத்து நாளாகுமா? வெறுமே ஸ்ப்ரெய்ன்னதுனால ரெண்டு நாளிலே ஸார் திரும்பலாம்னு நினைச்சேன். எதனாலே அத்தனை நாள்... வேறேதும்?"



''ஓய்வுக்குத்தாம்மா. காலை ஊனி நடக்க முடியாது. உடம்பு தேறிடுச்சன்னா ஒரு வாரத்துல கூட வீடு திரும்பிடலாம். இடுப்பு, முழங்கையெல்லாம் சிராய்ப்பு., ஊமைக்காய மிருக்கில்லையா? தவிர விழுந்ததுலே பின்னந்தலையிலே அடி... பெருசாய் ஏதும் நேராதது கடவுள் புண்ணியந்தான்...''

பதில் வராததால் திரும்பிப் பார்த்தவர் திடுக்கிட்டார்.

''ஏம்மா அழறே? நிஜமாகவே ஆபத்தில்லை...''

''வந்து அப்பா இத்தனை பெரிய ஆபத்திலிருந்து தப்பிச்சிருக்கார். அப்படியிருக்க நான் அவரை வந்ததுமே கோவிச்சுகிட்டேன் ஸார்... விபத்துன்னு கேட்டதிலிருந்து எனக்குள்ள பதட்டம்... வேற யார்கிட்ட அதை வடிய விடறது? எங்க அப்பாவை விட்டால் எனக்கு யாருமில்லை... அவரையும் இழந்திடுவோமோன்ற பயத்தில் அவரையே திட்டிட்டேன்.''

''ஜாக்ரதையாத்தான் நடந்தாரும்மா - வயசாயிடுச்சில்லையா... அதான்...''

''அதில்லை... வந்து...''

உதட்டைக் கடித்துத் தயங்கினாள்.

"சொல்லும்மா. - இனி - வருத்தமோ ஆத்திரமோ - என்னை ரெண்டு திட்டுத் திட்டித் தீர்த்துக்கோ - என்னை உன் சித்தப்பான்னே வையேன்..."

நன்றியுடன் நிமிர்ந்தாள்.

''தாங்க்ஸ், சித்தப்பா.''

நெகிழ்வுடன் புன்னகைத்தவர் கேட்டார்.

"இப்ப சொல்லு... என்ன கோபம், கவலை உனக்கு?"

"இல்லை... இங்கே... அவரை... அதான் சந்துருவைப் பார்த்தேன் - அவரும் இங்கே இருப்பார்னு எதிர்பார்க்கலை. அவர் எஸ்டேட் வண்டிப் பெரியாரைத் தாண்டியில்லையா?"

"இங்கேருந்து ஒன்னரை மணி நேரப் பயணந்தானம்மா அது. ஒன்னரை வருஷத்துக்கு முன்னே சந்துரு இதை விலை பேசினான். எட்டு பத்து மாசமாய் இங்கயே இருந்து விருத்தி பண்ணினான்..."

"எனக்கு எதுவும் தெரியாது. அவரோ அப்பாவோ சொன்னாத்தானே தெரியும்."

அவளது குரல் படபடத்தது... "இவர் அப்பாகூட இருந்திருக்கார் - அப்பா அதுபற்றி ஒரு வார்த்தை எங்கிட்ட சொல்லலியே... அதான் வேதனையாயிடுச்சு."

பாலனுக்குப் புரிந்தது.

தன்னால் ஏற்பட்ட ஒரு உறவில் தன்னை விட்டு விட்டு மாமனும் மருமகனுமாய் இழைகின்றனரே என்று ஆதங்கப்படுகிறது இந்தப் பெண்!

இத்தனை ஆற்றாமைப்படுகிறவள் ஏன் சந்துருவைப் பிரிந்து இருக்கிறாள்?

"சந்துரு கான்ஃபரன்ஸுக்கு வரலைம்மா - நான்தான் அவனை நேத்து எஸ்டேட்டைப் பார்த்துக் கருத்துச் சொல்லுப்பான்னு வரவழைச்சேன் - அவனுடையதை ஒட்டின நிலம் அது..."

"ஓ? அப்பன்னா அப்பா சொன்னது நிஜந்தானா?"



அவள் குரலின் சுருதி மிக இறங்கியிருந்தது.

"அப்பா படுத்துட்டாரேன்னதும் உனக்குக் குழப்பம்... அப்ப படுத்தவருடைய குழப்பம் எப்படியிருக்கும்?"

"என்ன சொல்றீங்க ஸர்... சித்தப்பா?"

"மனுஷனுக்கு நோயோ வேதனையோ வர, மனதும் வாடிரும்மா. அந்நேரம் மத்தவங்க புரிஞ்சு பதனமாய்ப் பேசிப் பழகணும்..."

"உண்மைதான்."

"சந்துரு தங்கமானவன்... ஆனா ரெண்டு மாசம் படுக்கையிலே கிடந்தப்போ சட்டுன்னு கோபப்படும்... ஆகாரமே இறங்காது."

கவலை கூடிப் பதறினாள்.

"என்ன சொல்றீங்க... எப்ப இது?"

"ம்ம்... ஏழெட்டு மாசமாயிருக்கும்மா... உனக்குத் தெரியாதா?"

மெள்ளத் தலையசைத்தாள்.

"ஓ... ஸாரிம்மா.."

"நீங்க யாராச்சும் சொல்லியிருக்கலாமே, சித்தப்பா?"

பழைய எஸ்டேட் ஆளுகளுக்கே தெரியப்படுத்த அதை விரும்பலை, சந்துரு."

"என்ன... எப்படியாச்சு?"

"ஒரு தொழிலாளியுடைய குழந்தை தவறி மலைச்சரிவிலே விழுந்திருந்தது. அதைப் பிடிக்கக் காப்பாற்றப் போன சந்துரு

உருண்டுட்டான் - நல்ல வேளை இடையே இருந்த ஒரு மரக்கிளை அவனைத் தாங்கிடுச்சு. அதுவும் முறிஞ்சிருந்தால் இன்னைக்கு அவனில்லம்மா... உடனே குழந்தையோட தாய் சுத்திச் சுதி ஆட்களைக் கூட்டி, கயிறு போட்டுச் சந்துருவை மேலே தூக்கிட்டாங்க."

மீன் போல ஓசையின்றி வாயை மட்டும் திறந்து மூடினாள் சாகரி.

அதிர்ச்சி அவள் வார்த்தைகளை அழித்திருந்தது.

"முதுகிலே ஒரு காய்ந்த மரத்துண்டு குத்திக் கிழிச்சதுல ஆழமான காயம் - விலாவிலே பதினைஞ்சு தையல் வரை போட்டாங்க..."

"கடவுளே! எனக்கு எதுவும் தெரியாதே... அப்பாவுக்குக் கூட..."

"இப்படி மனைவியும் மாமனாரும் இருப்பதை அவன் சொன்னாத்தானேம்மா எங்களுக்குத் தெரியும்? இப்ப உங்களைப் பார்க்கவும்தானே நீங்கல்லாம் இருக்கறது புரியுது. இது தெரிஞ்ச என் வீட்டுக்காரிக்குக் கோபம் இன்னும் ஆறலை... சந்துருவை அந்த நிலைமையிலே வந்து நீ கவனிக்கக்கலையேன்ற ஆற்றாமை..."

"ரெண்டு மாசமாவா முடியாம இருந்தார்?"

அவளது உதடுகள் வேதனையில் கோணின. அவளது சீரான பாசம் அக்கோணலில் தெரிந்தது!

"[illegible] மிஷன் ஆஸ்பத்திரியிலே முதல் ரெண்டு வாரம் இருந்தாம்மா.



"பிறகு இங்கே வீட்டுக்கு வந்தாச்சு... காயம் முதுகுப் பக்கம்ங்கறதால தானே சுத்தம் செய்துக்க, மருந்து தடவ முடியலை... இவனும் ரொம்பக் கண்டுக்காததிலே அது சீழ் வச்சு செப்டிக் ஆயிடுச்சு..."

அதிர்ச்சி கூடியதில் அவளது திறந்த வாய் மூடியது - கண்கள் தடையின்றி வழிந்தன.

"காய்ச்சல் விடாமல் அவதிப்பட்டான்... அப்ப இந்த ஆஸ்பத்திரியிலே வச்சுப் பார்த்தோம். புண் ஆறினதும், வசு... அதான் என் மனைவி... எங்க வீட்டுக்கு அழைச்சுப் போய்ப் பார்த்துக்கிட்டா.. அதிக நாள் ஆஸ்பத்திரியிலே இருக்க வேண்டாமேன்னு... தாய் தகப்பனில்லாதவன்னு தெரியும்... இப்படி இங்கே ஒருத்தருக் கொருத்தர்தான் ஆதரவு... அப்பதான் எங்களுக்கிடையே நெருக்கமுமாச்சு..."

கண்கள் வழியே அத்தனை நீரும் இறங்கி விட்டதாலோ என்னவோ சாகரியின் உள்ளம் வரண்டு கொதிக்க ஆரம்பித்திருந்தது.

ஆக கணவனின் உயிர் போய் மீண்டிருக்கிறது.

தான் சாவித்திரி போல யமனுடன் தாலிக்காக மல்லுக்கு நிற்கவில்லை என்றாலும், வேண்டிய சிசுருஷைகளைக்கூட செய்ய அனுமதிக்கப்படவில்லை. தன் பலவீனத்தைக் கூட மனைவிக்குத் தெரியப்படுத்த விரும்பாத புருஷன். அத்தனை அலட்சியம்... வெறுப்பு!

அந்நேரம் சந்துருவின் நீல ஜீப் வந்து மரத்தடியே நின்றது.

அதிலிருந்து இறங்கியவனைப் பார்த்தாள்.

வழியில் எதிர்ப்பட்ட சிலரோடு சிநேகமாய்ச் சிரித்துப் பேசியபடி இவர்களை நோக்கி நடந்தவனை வெறித்தாள்.

எல்லாம் பிறருக்குத்தான்... தாலி கட்டியவளிடமில்லை. தன்னை ஏன் அத்தனை குரோதத்துடன் வெறிக்கிறாள் சாகரி என்ற குழப்பத்துடன் அருகே வந்து நின்றான் அவன்!



# 7

சற்றுக் குழப்பத்துடன் மனைவியின் முறைப்பைப் பார்த்தவனது முகத்தில் மறுநொடி சிரிப்புப் படர்ந்தது - சற்று ஏளனமான நகைப்பு. இரு கைகளையும் பாண்ட் பாக்கெட்டினுள் நுழைத்தவன் தலையை ஒரு புறமாய்ச் சரித்தான்.

"இங்கிருக்கிற பெண்கள் எல்லாம் ரொம்ப அழகு இல்லியா? கேரள நிறம், வாளிப்பு... ம்ம்...?"

தோள்களைக் குலுக்கினாள்.

'இவனுக்கென்ன வந்தது?' என்பது போலப் பாலன் நினைக்க, சாகரியின் முகத்தில் ஒரு கை கடுகை வீசியிருந்தால் வெடித்துச் சிதறுமளவிற்குச் சூடு!

"அழகோடு இனிமையாய்ப் பேசிப் பழகுவாங்க... உடனே உனக்குள்ளே சந்தேகம் வந்திடுமே? ஆனா உருள இப்போ என் தலை தயாரில்லை, சாகரி!" என்றவன், அவள் பதிலை எதிர்பார்க்காமல் தொடர்ந்து நடந்தான்!

தக்காளியாட்டம் சிவந்திருந்த சாகரியின் முகத்தைப் பாதி பயமாகவும் மீதி பரிதாபமாயும் பார்த்தார் பாலன்.



"சாயங்காலம் எங்க வீட்டுக்கு வாயேம்மா - கொஞ்ச நேரம் வசந்தரா கூடப் பேசிட்டு இருந்தால் மனசுக்கொரு மாற்றம்..."

"தாங்க்ஸ், சித்தப்பா... இன்னும் ரெண்டு நாளாகட்டும்."

கூடையைப் பாலனின் காரில் வைத்து வழியனுப்பினாள்.

திரும்பி நடந்தவளுக்குள் ஆத்திரம் முண்டியது.

என்ன எக்களிப்பு... ஏளனம்!

திருமணமான புதிதில் பாகாய்க் குழைந்து இனித்த அதே சந்துருவா இது?

இவள் கொஞ்சலும் கெஞ்சலுமாய் வேண்டியிருக்கிறாள்.

"நான் உங்ககூடவே வந்திடறேன், சந்துரு - ஒவ்வொரு தடவை என்னைப் பிரிஞ்சு நீங்க கிளம்பற போதும் ரொம்ப கஷ்டமாயிருக்குது."

பிதுங்கும் அவள் உதடுகளை நிமிண்டியபடி சீண்டுவான் -

"காத்திரு, காரிகையே... நாயகன் மீண்டும் வரும் நாளுக்காய் வழி மீது விழி வைத்துக் காத்திரு."

இவள் அவனது உதடுகளைப் பலக்கச் சுண்டுவாள்!

"ஸ்ஸ் ஆ! நான்தான் முன்னேயே சொன்னேனேடா, சாகரி. எனக்குள்ளே ஒரு தினுசான நாடோடி ரத்தம் ஓடுதுன்னு. அதனாலேயே நான் கல்யாணம் பத்தி யோசிக்கலை... அதாவது உன்னைப் பாக்கறவரை..."

"போய்."

"எது போய்?"

அவளை இழுத்து அணைப்பான்.

"நான்தான உங்களைப் பார்த்ததும் உருகிப் பின்னாடியே வந்தேன்?"

"அது என்னைப் பார்க்கற எல்லாப் பெண்களும் செய்றதுதானே?"

அலுப்பாய்த் தோள் குலுக்கினான்.

"அடடே... பார்த்து தலைவா... தலைக் கனம் தாங்காம அது வெடிச்சடப் போகுது. ஆக நீங்க என்னை எஸ்டேட்டுக்கு அழைச்சிட்டுப் போய்க் குடித்தனம் வைக்கப் போறதில்லை?"

"உன் படிப்பு என்னாகிறது - புத்திசாலி மாணவி நீ."

"தபால் மூலம் தொடரும்."

"அப்போ அப்பா? உனக்காய் எஸ்டேட்டை வந்த தொகைக்குக் குத்தகை விட்டுட்டு சென்னையில இருக்கறவரை 'அம்போ'ன்னு விட்டுடறதா? நம்ம கூட வந்து இருக்கலாம்னா பொழுது போகாது... மருத்துவ வசதியும் போதாது... இங்கே பக்கத்துல அடுக்கு மாடி ஒன்னு எழும்புதே... அதிலே வேணும்னா ஒரு ஃப்ளாட் வாங்கிடலாமா?"

"நம்ப மாடியிலேயே அப்பா இன்னொரு பெரிய அறை கட்ட ஆரம்பிச்சாச்சு. வெளியே தனியாய் மாடிப்படி வேற... நமக்கான ப்ரைவஸி ஏற்பாடு."

"க்ரேட்! இனி நான் வர்ற ஒவ்வொரு வாரமும் நாம மேலே போயிடுவோம்." கண்ணைச் சுழட்டிச் சொக்குவதாய் நடித்தான்.

"போதுமே... அப்ப இனி நம்ப வாழ்க்கை இப்படித்தானா?"

ஆதங்கமாய்க் கேட்டவளை மார்பில் சாய்த்துத் தலை கோதினான்.



"இப்பதைக்கு இப்படி! படிப்பை முடி - பிறகு குழந்தைங்க பிறக்கும் - அப்போதும் சென்னைதான் வசதி... நான் இங்கே அதிக நாள் இருக்க முயற்சி பண்ணுவேன். இது உழைக்கற வயசு... இப்ப நம்மை உயர்த்திக்கறது அவசியம் - தவிர நம்ப ரெண்டு பேருக்குமான நெருங்கின சொந்தம் அப்பாதான்... அவரை வயசான பருவத்தில் தனியே விட வேண்டாமே!"

தான், தன் பெண்டாட்டி என்று முறுக்கிக் கொள்ளும் பல ஆண்களில் தன் புருஷன் வித்தியாசமானவன், விசேஷமானவன் என்று அன்று பூரித்தது நினைவிருக்கிறது.

குழந்தைகள், பந்தம் என்று நாளடைவில் அவன் தன்னிடம் சரணடைவான் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.

இன்று அதில் ஏதும் மிச்சமில்லை.

**க**ல்யாணமான சில நாட்களிலேயே வேணி புயலாய் வந்து இறங்கினாள். அவள் முகத்தில் புதுப் பெண்ணான சிநேகிதியைக் காணும் களிப்போ குறும்போ இல்லை... கவலையும் பதட்டமுமாய்த் தெரிந்தாள்.

"ஆக நீ என்னை உன் தோழியாய் நினைக்கவேயில்லை - இல்லை, சாகரி?"

"முதல் முதலாய் என் கல்யாணத்தைப் பற்றி எழுதினதே உனக்குத்தானடி!" என்று ஆரம்பித்து சாகரி செய்த சமாதானம் ஏதும் செல்லுபடியாகவில்லை.

"அண்ணனை இங்கே... உங்கப்பாட்டயே வேலைக்கு நான் சேர்த்து விட்டதும் கூட அதுக்குத்தான்."

"எதுக்குத்தான்?"

"நம்ப நட்பு தொடரணும்னு. நாம அடிக்கடி வந்து போய் இருக்கலாமேன்ற எண்ணம்."

"இருப்போமே... யார் வேணாம்னா? முதல்ல என்ன குடிக்கறே? சொல்லு."

"ம்ப்ச்... இப்படி அவசரப்பட்டுட்டியே - என்ன காதலா?"

வேணி அழகியில்லை. ஆனால் தன்னை அழகாய்க் காட்டிக் கொள்ளும் வித்தையைக் கற்றிருந்தாள். 'பேஷன் டிசைனிங்' கற்றவள் என்பதால் அவள் உடைகள் நறுவிசுடனிருந்தன.

"ஒரு மாதிரிப் பிரியம் - மற்றப்படி அவரை அப்பாவுக்கும் பிடிச்சிருந்தது."

"பிடிக்கட்டும்... அதுக்காக இப்படியா மறுமாசமே கல்யாணத்தை முடிப்பாங்க?"

தோழியின் கோபம் தன் சந்தோஷத்தில் கரைந்து விடும் என்று எண்ணிய சாகரிக்கு, வேணி விடாப்பிடியாய்க் குதர்க்கம் பேசியதில் வருத்தம்தான்.

"அதுவும் ஆடி மாசத்துல! அப்படியென்ன... ஏதேனும் ஏடாகூடமாய் நடந்துருச்சா?"

"வேணி!"

தோழியின் கோபத்தைக் கண்ட வேணி தட்டைத் திருப்பிப் போட்டாள்.

"இல்ல வந்து... நீ அப்படிப்பட்ட பெண்ணில்லை... ஆனா சந்துருவைப் பற்றித் தெரிஞ்சதால அப்படியொரு சந்தேகம்..."

"உனக்கு... அவரைத் தெரியுமா?"

சந்திரகாந்தன் என்ற கணவனின் பெயரை மகா உரிமையுடன் சுருக்கியவளைக் குழப்பத்துடன் கேட்டாள் சாகரி.



"நறுமணம் எஸ்டேட்ஸ்'ன்னு கல்யாணப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருந்ததே. அதனால் நிச்சயமாய்ச் சந்துருதான்னு தெரிஞ்சிடுச்சு..."

"உனக்கு எப்படி... அவரை?"

"விக்ரமோட ஒரே காலேஜுல படிச்சவராச்சே - ஒரு வருஷம் தனக்கு சீனியர்னு சொல்வான் - மற்ற விஷயங்கள்ல படா சீனியர்."

புருவங்களை உயர்த்தி உதடு சுழித்தாள்.

முகம் மட்டும் சூடாக, கை கால்கள் குளிர்ந்தன, சாகரிக்கு.

சோபாவில் சரிந்தவளின் கையைப் பற்றினாள், வேணி.

"ஸாரி... ஸாரிடா, சாகரி. கையெல்லாம் இப்படி ஜில்லுன்னு போச்சே. விடு - எனக்குச் சந்துருவைத் தெரியுங்கற உரிமையிலே சொல்லிட்டேன். இள வயசிலே, காளைப் பருவத்துல சில ஆண்கள் அப்படி இப்படி இருக்கறதுதான்... எல்லாருமா என் அண்ணா விக்ரமைப் போல சாது சாமியாராய் இருப்பாங்க?"

"நான் சந்துருவின் குணத்தைப் பார்த்துத்தான்..."

மென்று முழுங்கினாள்.

"பணம் இருக்குதுன்னு வாரி இறைப்பார். அதைச் சொல்றியா? எனக்கே எத்தனை பர்கர், ஐஸ்க்ரீம் கிடைச்சிருக்குது அவர் காசிலே. பெண்கள் சிரிச்சுப் பேசினால் எது வேணுமானாலும் கிடைக்கும். ஆண்கள்ட்டேயும் தாராளம்தான். ஒரு மாதிரி பாரி வள்ளல் குணம் - என்னவோ சொல்வாரே..." புருவம் சுருக்கி யோசித்தாள்.

"ஆங்... விளக்கை ஏற்றுவது விளக்குக்கு ஒளி தருவதற்கில்லை - அதே மாதிரி நம்ப காகம் பிறருக்கு உதவத்தாம்பா! - விவேகானந்தர் மாதிரி ஸ்டைலிலே..."

சாகரியின் கைகள் மேலும் ஜில்லிட்டன.

வேணி பொய் சொல்லவில்லை. ஏனெனில் சந்துரு இப்படிச் சொல்லித் தானே கேட்டதுண்டு. 'வயல்காட்டில் பூச்சாண்டிப் பொம்மைக்கு உயிரில்லைன்னாலும் உபயோகமாய் நிற்குதே. நாம் அதிலும் மட்டமா?' என்றிருந்தான், மறுமுறை. புரிப்பாய்க் கேட்ட அவ்வசனங்கள் இப்போது நமுத்திருந்தன.

ஆனாலும் தன் புருஷனைப் பற்றி வேணி விமர்சிப்பதாவது என்று மன மூலையில் நமைச்சலெடுத்தது.

"நீ எங்கிட்ட அவரைப் பற்றி இப்படிப் பேச வேண்டாம், வேணி... எனக்குப் பிடிக்கலை..."

"எனக்குந்தான் பிடிக்கலை... நீ யாரையும் கேட்காம, விசாரிக்காமல் இப்படி அவசரமாய்த் தாலி கட்டிக்கிட்டது... ஆனாலும் உனக்குப் பரிசு கொண்டு வந்திருக்கேன் பாரு."

தோழி நீட்டிய பரிசுப் பொருளை விரல் நடுங்க வாங்கியவள் அதைப் பிரிக்காமலேயே சோபாவில் வைத்தாள்.

"இரு - ஜூஸ் கொண்டு வரேன்."

"சாப்பாடும் இங்கேதான்டி. உன் கல்யாண விருந்து சாப்பிட எனக்குக் கொடுத்து வைக்கலையே!"

சமையல்கார அம்மாளிடம் ஒரு இனிப்பும் பச்சடியும் சேர்த்துச் சமைக்கச் சொன்னவள், பழரசத்தையும் அவர்களிடமே கொடுத்து அனுப்பினாள் - கண்ணாடி டம்ளரைச் சுமக்கும் தெம்பு கூடத் தனக்கிருப்பதாய்த் தோன்றவில்லை அப்பொழுது.



இதுவரை கணவனைப் பற்றி அனைவரும் உயர்வாகவே சொல்லக் கேட்டிருந்தவளுக்கு இது பெரும் அதிர்ச்சி.

சந்துருவைச் சபலக் காளை போல அல்லவா சித்தரித்து விட்டாள் வேணி!

விக்ரமின் உடன் படித்தவனாமே!

விக்ரம் இங்கு இல்லாததை நிம்மதியாய் நினைத்தாள் சாகரி - அமைதியானவன்தான் என்றாலும் அவன் பார்வை ஏனோ சங்கடப்படுத்தும். ஓரக்கண்ணால் தன்னை நோட்டமிடுவதும் பவ்யமாய்ப் பேசுவது போல ரெட்டை அர்த்தம் தொனிக்கப் பேசுவதும் அவள் அறியாததல்ல.

அவனை... அதாவது தன் அண்ணனையே சாது சாமியார் எனும் வேணி சந்துருவை மட்டப்படுத்துவதென்றால்... தன்னையே உலுக்கிக் கொண்டாள் சாகரி.

தப்பு - இப்படிக் கணவனைச் சந்தேகிப்பது ரொம்பத் தப்பு.

தான் அறிந்த வரையில் சந்துரு நல்லவன் - பிறரின் தேவைகளை யாரும் சிந்திக்காத இந்த அவசர யுகத்தில் தேவையறிந்து உதவுபவனும் கூட.

அவனே சொன்னதுண்டே -

"உன்னைப் பார்க்கும்வரை எனக்குக் கல்யாண நினைப்பே இல்லை, சாகரி!" என்று திருமணத் தேதி குறித்த பிறகும் கூடக் கண்ணியமாய்ப் பழகியவன் - மனைவியான பின் இவனே வியந்து.

"யப்பா, இத்தனை வேகத்தை, மோகத்தை இத்தனை நாளாய் எப்படி அடக்கி வச்சிருந்தீங்க..." சிணுங்கியதுண்டே!

கல்லூரி நாட்களின் வேடிக்கைப் பேச்சும் விளையாட்டு மாய்ச் சந்துரு இருக்க, அதை வேணி இப்படி விவரிக்கக் கூடும்... இப்படி மனதைத் தெளிவாக்கி, திடப்படுத்தியவள் மறுபடி சிநேகிதியின் முன் போனாள்.

"இத்தனை வாரங்களாய் விற்பனை, சேலைக் கண்காட்சின்னு சுத்தினியே... எப்படியிருந்தது விற்பனை? விவரமாய்ச் சொல்லு கேட்போம்..."

பேச்சின் திசை திருப்பினாள்.

"கல்யாணம் செய்துகிட்ட நீ, என் பிசாத்து விற்பனையைப் பத்திக் கேட்கறியா? உன் அனுபவத்தைச் சொல்லும்மா, புதுப் பொண்ணு."

"சந்தோஷமாய் இருக்கோம், வேணி. விக்ரமுடைய கம்ப்யூட்டர் கோர்ஸ் முடிஞ்சிருக்கணுமே!"

"ம்ம். ஆனா இனி இங்க வருவான்னு தோணலை - உங்க எஸ்டேட்டை இனி சந்துருவே பார்த்துப்பார். புனாவிலேயே வேலை தேடறான் - இங்கே இனி வேலையும் இல்லை... நீயும் இல்லியே."

சாகரிக்கு இது அடுத்த அதிர்ச்சி!

ஆனாலும் கவனிக்காதவள் போல எழுந்து புத்தக அலமாரிப் பக்கமாய் நின்றாள்.

"எங்க கல்யாண ஆல்பத்தைப் பார்க்கறியா, வேணி?"

"வீடியோ எடுத்திருப்பீங்களே?"

"ம்ம்... வீடியோ ப்ளேயர் அத்தனை தெளிவாயில்லை. சுத்தம் செய்யணும்னா நேரமாகும்... தவிர இன்னைக்கு அப்பாவோட வெளியே போறதாய் இருக்குது..."



"என்னடா இது? கல்யாணமாகியும் இன்னும் அப்பா துணைதானா?"

"சந்துருவுக்கு வேலையிருக்குதே - நானும் அவருமாய் எஸ்டேட்ல ஒரு வாரம் தங்கிட்டு ரிஸப்ஷனும் முடிச்சு இப்பதான் திரும்பினோம்."

"அப்ப உன் படிப்பு தொடருதா?"

கண்ணை இடுக்கியபடி கேட்டாள்.

"ம்ம்... படிப்பை விடாதேங்கறார்."

"அப்ப அவர் பேச்சுலர் வாழ்க்கையும் தொடருது.. ம்ம்...? கெட்டிக்காரர்தான். சொத்தோட மனைவி வந்தாச்சு... பிரம்மசாரி வாழ்வுக்கும் பங்கமில்லை."

சாகரிக்கு வெறுத்துப் போனது.

பள்ளி நாட்களில் தன்னுடன் படித்த, பழகிய வேணி இப்படியிருக்கவில்லை. இதமாய்ப் பேசி இங்கிதமாய்ப் பழகியவள். அதனால்தான் மூன்றாண்டு இடைவெளி நேர்ந்த பிறகும் கூட அவளுக்குத் தன் திருமணத்தைத் தெரிவித்துக் கடிதம் எழுதினாள்... இதென்ன இப்படியொரு மாற்றம்?

விஷம் தடவிய பேச்சு!

சாகரியின் எண்ணங்கள் புரிந்தது போல அவள் கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் அழுத்தினாள் வேணி.

"இதப் பாருடி... உன் சிநேகிதி நான்... உன் நல்லதுக்காய்த்தான் சொல்றேன். ஒண்ணு நீ எஸ்டேட்டில போய்க் குடித்தனம் பண்ணு... இல்லை, சந்துருவை இங்க இழுத்து முடிஞ்சுக்கோ. இப்படி ஏமாளியாய் நிக்காதே. யோசிச்சுப் பார்த்தால் சந்துரு உன்னைக் கட்டிக்கிட்டது உன்

சொத்துக்காகன்னு தோணுது... இல்லைன்னா அவர் கல்யாணம் செய்யற ஐடியபே இல்லை..."

சாகிக்கு நெஞ்சடைத்தது.

"அத்தனைக்கும் நீதான் வாரிசு - உன் மூலமாய் அவர் சொத்து ரெண்டு மடங்காயிடுச்சு. இனி ராஜ்ய பரிபாலனம் பண்ணலாம்... கூடவே தன் அந்தப்புர வாழ்க்கையையும் தொடரலாம்னு..."

"வேணி...!"

"குழந்தையாவது சீக்கிரம் பெத்துக்கோடி... தாய் தந்தைன்னு எந்தப் பிடிப்பும் இல்லாதவர் சந்துரு. ஆக அவரையும் குற்றம் சொல்ல முடியாது - தன் குடும்பம், குழந்தைங்கற பிடிப்பை ஏற்படுத்தணும் நீ... நல்ல தகப்பனாயாக்கம் இருக்கணும்னு அவருக்காய்த் தோணணும்..."

"வேணி... ஏனிப்படியெல்லாம் பேசறேன்னு தெரியலை..."

"ஏன்னா, நான் உன் சிநேகிதி..."

என்ற வேணியின் குரல் கமறியது. மடியில் கிடந்த கல்யாண ஆல்பத்தை மூடி வைத்துவிட்டு எழுந்தவள், கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"ச்சே... நான் அவரை, சந்துருவை நம்பறேன்..."

இதையே தனக்குள்ளாக நூறு முறை சாகி சொல்லிக் கொண்டபோதும் வேணி ஏற்படுத்திய தீறல் கசியத்தான் செய்தது.

அன்று முழுக்க மனம் ஒரு நிலையிலில்லை.

இரவு வேணி தந்த பரிசினைப் பிரித்துப் பார்த்தவள் நெகிழ்ந்து விட்டாள்.



அது மிக நூதனமான பட்டுப் புடைவை.

முறுக்கு இழைகளால் நெய்யப்பட்ட மிருதுவான பட்டில் கையால் பூவேலை செய்யப்பட்டிருந்தது. வேணியே மெனக்கெட்டு... நாட்கணக்கில்... ம்ஹூம்... வாரக்கணக்கில் பிடரி நோக வேலை செய்திருக்கக்கூடும். விற்றால் குறைந்தது ஐயாயிரத்தைச் சம்பாதித்துத் தரக்கூடிய புடைவை. இத்தனை அரிய பரிசைத் தனக்காகத் தயாரித்து வந்து தந்தவளைச் சரியாய் உபசரித்து அனுப்பவில்லையோ என்ற குமைச்சலும் குற்ற உணர்வும் குத்த, மறுநாள் வேணியின் கடைக்கு ஃபோன் செய்தாள்.

அவளது அறையில் தொலைபேசித் தொடர்பு கிடையாது.

"அருமையான பரிசு உன்னது, வேணி... தாங்க்ஸ்."

"அந்த அரக்கு நிறம் உன்னை அப்படியே தூக்கிக் காட்டும், சாகி."

"எத்தனை நுணுக்கமான கைவேலை... நீயே செய்ததா?"

"நீ நல்லா வாழணும்னு நினைச்சுகிட்டே நெய்தேன்டி."

நெகிழ்ந்து போனாள் சாகி.

இந்த அன்பு மெய்யென்றால்... சந்துருவின் நேசம் பொய்யா?

தலை சுழன்டது!

"அடுத்த சேலைக் கண்காட்சி பெங்களூர்ல நடக்கப் போகுது. போய்க் கடை விரித்த ரெண்டாம் நாளே அத்தனையும் வித்துத் தீர்ந்திடும் - பிறகு ஆர்டர் குவியும். முதுகு ஒடிய வேலை பார்க்கணும் - நீயும் பெங்களூர் வாயேன், சாகி."

சேருங்கிடுச்சே... பாஸாகணும்.''

''பரீட்சையும் நெருங்கிடுச்சே... பாஸாகணும்.''

''எல்லாத்திலேயும் நீ பாஸாகணும்னு நான் கடவுளை வேண்டிக்கிறேன்.'' வேணியின் குரலில் வழிந்த பரிவும் பரிதாபமும் இவளை மிகவும் தாக்கின.

''ம்ம்... தாங்க்ஸ்... வச்சிரட்டுமா?''

கண்ணீர் வழிய ஃபோனை அதனிடத்தில் வைத்தாள், சாகரி.



8

**கா**லை ஏழரைக்கெல்லாம் டெட்டால் கலந்த வெந்நீர் பேசினும் டவலுமாய் அறைக்கு வந்து விட்டாள் நர்ஸ்.

''குட் - மோர்னிங்.''

''குட் - மார்னிங், சிஸ்டர்.''

பிழிந்த ஆரஞ்சுப் பழ ரசத்தைக் கண்ணாடி டம்ளரில் ஊற்றியபடி புன்னகைத்தாள் சாகரி.

''அக்சனை நல்லா கவனிக்கக்கற போலே...''

''இதைத் தவிர வேறென்ன வேலையிருக்கு, சிஸ்டர் - அத்தனையுந்தான் நீங்க செய்துடறீங்களே - வேளா வேளைக்கு மருந்து தர்றது உட்பட... எனக்கு இந்த ஜூஸ் பிழியற வேலை மட்டுந்தான்.''

''நீ எந்த வேலையும் பார்க்கண்டா... அக்சனோட சிரிக்கப் பேசினா மதி.''



''ஆமா சிஸ்டர்.. சிரிச்சுப் பேசினாலே போதுந்தான் - ஆனா சாகரிக்கு எம் மேல கோபம் - அந்த ஆத்திரத்தையெல்லாம் பிழியற ஆரஞ்சுல காமிக்கறா. அதன் ஒரே பழத்துல அரை லிட்டர் சாறு எடுத்துடறா...''

பரிகசித்தார் ராஜாங்கம்.

''பின்னே? அது அன்பு சாறே?''

''அன்புச் சாறா?''

தன்னையும் மறந்து அப்பாவின் சொல் சிலேடையில் சிரித்தாள் மகள். ''அப்பாடா... இனி மருந்து கூட வேணாம், சிஸ்டர்... எம்மக சிரிப்பிலே வலியெல்லாம் பறந்திடுச்சு...''

உற்சாகமாய் உடன் சிரித்தார், அந்தத் தகப்பன்.

''சேரி, இப்போள் உடம்பு துடைச்சு துணி மாற்றட்டே? டொக்டர் ரவுண்ட்ஸ் வரும் சமயமாச்சல்லோ?''

நோயாளியின் உடல்நிலையைப் பரிசோதித்து சார்ட்டில் நர்ஸ் எழுதியதும் சாகரி வெளியேறினாள்.

அப்போதுதான் துடைக்கப்பட்ட தாழ்வாரங்கள் பளபளத்தன. பிற மருத்துவ மனைகளைப் போலக் கடும் பினாயிலின் நெடியில்லாமல் சற்றே கற்பூர மணத்துடன் இதமான கிருமி நாசினியின் மணம் சுற்றிச் சுழன்றது.

எட்டு மணிக்கு வரும் டாக்டர்களை எதிர்நோக்கி மருத்துவமனையும் நோயாளிகளும் தயாராகி விடுவார்கள்.

சாகரியும் குளித்தாயிற்று.

தளிர்ப் பச்சை வாயில் புடவையில் நளைந்தவளை, துடைக்கும் வேலையை நிறுத்திவிட்டு வாய் பார்த்தாள் அந்த

இளம் பெண், அவனைக் கடக்கும்போது சாகரி சங்கோஜத்துடன் புன்னகைத்தாள்.

''சாருக்காய் காத்திருக்கீங்களா?''

''ம்ம்... நீ தமிழாம்மா?''

''ஆமாங்க - செங்கல்பட்டு. வேலை சேந்து மூணு மாசந்தான் ஆவுது.''

''டாக்டர் வர்ற நேரமாச்சே... அதான் தயாராகி நிற்கறேன்.''

அவசரமாய்த் தலையாட்டினாள்.

''இல்லீங்க... நான் சாரைச் சொல்றேன் - அழகா ஆக்டரு விக்ரம் கணக்கா இருப்பாரே... அவரை.''

தரை துடைக்கும் கம்பைத் திருகியபடி வெட்கப்பட்டாள்.

''யார்... யாரு? சந்துருவைச் சொல்றியா?''

''அவர் பேரு அதுவா?''

ஆர்வமாய் விழிகள் விரிந்தன.

''சந்திரகாந்தன்.''

''ம்ப்ச்... ஸ்டைலாத்தானிருக்கு... ஆளைப் போலவே!''

''உம் பேர் என்ன?''

''சங்கரி - யாருங்க நமக்கெல்லாம் ஸ்டைலாப் பேரு வக்கறது?'' அலுத்தாள்.

''அதுவும் அழகான பேருதான்.''

''அவரு... அவரு உங்க ஆட்டுக்காரங்களா? இங்க டைலருங்க பேசிக்கிட்டாங்க... நிசமா?''



உதட்டை அழுத்தியபடி, ''ம்ம்...'' என்றாள்.

''சாரு எம்புட்டு அழகில்ல! அந்த உயரமும் உடம்பும்! சின்னதுன்னாலும் மினுமினுங்கற கண்ணு... நீண்டு ஆளை மிரட்டுற மொக்கு நாடி...''

''நீ மிரண்ட மாதிரியில்லையே?''

''அக்காங்... அது செல்ல மிரட்டலுதானுங்களே!''

குழைந்தாள் சங்கரி.

கடவுளே - இதென்ன கொடுமை? கட்டியவளிடமே அவள் புருஷனின் அழகைப் பாராட்டி வழியும் பெண்கள் இருக்க, சந்துருவை எப்படிக் குறை சொல்வது?

தொடர்ந்து நடந்தவளைச் சிந்தனைகளும் உடன் தொடர்ந்தன.

சிநேகிதி வேணி வந்து சந்தேகத் திரியைப் பற்ற வைத்து விட்ட அந்த நாள் ஞாபகம்... சேற்றுக் குழிக்குள் சிக்கிய வண்டிச் சக்கரத்தைப் போலக் கடந்த காலத்துக்குள்ளேயே சுழன்றது.

மருகியபடி படுத்திருந்தவளை அப்பா வந்து எழுப்பினார்.

'''என்னம்மா நேத்திலேருந்து நீ சரியில்லையே... என்னாச்சு?''

சொல்லிப் பகிர வேறு யாருமில்லை. ஆனால் தந்தையின் மனதை ஏன் சலனப்படுத்த வேணும்?

''ஒண்ணுமில்லப்பா...''

''வேணி வந்திருந்ததாய்ச் சமையல்காரம்மா சொன்னது - அவ ஏதும் சொன்னாளா?''

சொல்லி விடுவது என்ற முடிவெடுத்து... கவிழ்த்துக் கொட்டி விட்டான்.

''இன்னும் உலகத்தை நீ முழுசாய்ப் புரிஞ்சுக்க வேண்டியதிருக்குடா, சாகரி...''

பொறுமையாய்க் கவனித்தவர் பெருமூச்சுடன் சொன்னார்.

''ஆம்பளைங்க இப்படி அப்படி யிருக்கறது சகஜங்கப் போறீங்களாப்பா?''

பொருமினான்.

''இல்லடா. அதாவது அப்படிச் சபலப்படற ஆண்கள் உண்டு. ஆனா நம்ப வச்சுக் கழுத்தறுக்கற சிநேகிதங்களும் உண்டு.''

சாய்ந்திருந்த தலையணையை உதறி விட்டு எழுந்து அமர்ந்தான்.

''வேணி சொன்னது பொய்தானப்பா?''

''எதையும் 'சட்'னு நம்ப வேண்டாங்கறேன். இத்தனை வருஷங்கள்ள எனக்கு உலகம் சொல்லித் தந்த பாடங்கள்ல இதுவும் ஒன்னு. அடுத்தது ஒரு மனுஷனைப் பார்த்ததும் ஓரளவு எடை போட்டுடற திறமை. எனக்குச் சந்துருவைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே உயர்ந்த அபிப்பிராயம் தோணுச்சும்மா. முதன் முறையாப் பார்த்ததும் பிடிச்சுப் போச்சு. ஆனா பார்வையை மட்டும் நம்பி நான் அவனை மருமகனாய் ஆக்கிக்கலை - விசாரிச்சேன். தெரிஞ்சவங்க ஒரு முகமாய் அற்புதமான பையன்னு சொன்னாங்க... வேணி மட்டும் எப்படி அற்பமானவன்னு சொன்னான்னு புரியலை.''



''விக்ரம், அதாவது வேணியுடைய அண்ணன், சந்துருவோட ஒரே காலெஜில படிச்சவராம்ப்பா...? சொன்னேனே...''

''ஆக, சந்துரு மேல பழி. போட அவங்களுக்கு ஏதோ காரணம் இருக்குது. நல்லவங்க, வல்லவங்களுக்கு நிச்சயம் எதிரிங்க இருப்பாங்கடா சாகரி. தன்னை மிஞ்சி, தான் எட்டவே முடியாத உயரத்துக்குப் போயிட்டானேங்கற ஆங்காரம்... அந்த வெறியிலே இல்லாததை இட்டுச் சொல்லுவாங்க...''

''ஆனா... வேணி...''

''பலருக்கு இந்தச் சுபாவம் உண்டு, சாகரி... அவளும் மனுஷிதானே - இதுவரை வேற ஒரு திட்டத்தோட உங்கிட்ட நயந்து நாகுக்காய்ப் பழகியிருக்கலாம். பரீட்சை சமயங்கள்ல அவளுக்காய் ஃபீஸ் கட்டியிருக்கறே. பண்டிகையின்போது புதுசு எடுத்துத் தந்திருக்கறே நீ - பெத்தவங்களை இழந்த பொண் அதுன்னு நானும் தடையே சொன்னதில்லை... இப்போ தேவைகள் இல்லைன்னதும் சுய ரூபத்தைக் காட்டிட்டா போல...''

வேணி தன் அண்ணனைப் பற்றிக் குறிப்பிடும்போது -

'இனி விக்ரம் இங்கே வர மாட்டான். வேலையுமில்லை. நீயுமில்லையே!' என்றது மனதுக்குள் மின்னலடித்தது.

தன் அண்ணனுக்குச் சொத்தோடு சாகரி கிடைக்கவில்லை என்ற வெறுப்பில் சந்துருவின் மீது சேறடிக்கிறாளா... இருக்குமோ அப்படி?

ஆனால் அவள் குரலில் ஆற்றாமை இருந்ததே...?

''சந்துருவுடைய மாமா அவனைப் பற்றி உசத்தியாய்ச் சொன்னார் பொறுப்புள்ள பிள்ளைன்னு - மாமியும்

அவங்கிட்ட பாசமாய்ப் பழகலை? அவனுடைய எஸ்டேட் தொழிலாளிங்க 'எஜமானே தெய்வங்கற' லெவல்ல கொண்டாடறாங்க... நீயே அதையெல்லாம் கண்ட காட்சி. கம்யூனிசம், சோஷலிசம்னு கஜேபரப்படற கேரள எல்லை யிலே இப்படிப்பட்ட விசுவாசத்தை ஒரு முதலாளி பெற்றிருப்பது சாதாரணமில்லை. உண்மையான நல்ல மனுஷனுக்குத்தான் அது சாத்தியம். நீர விசாரிச்ச பிறகுதாம்மா உன்னைச் சந்துரு கையிலே பிடிச்சுத் தந்தேன் - மகளைக் கைகழுவி விடற அவசரத்திலே இல்லடா..."

அப்பாவைக் கட்டிக் கொண்டாள்.

அவர் கை இவள் தலையைக் கோதி விட விட, சங்கடமும் பெரும்பாலான சந்தேகங்களும் கரைந்து வழிந்து விலகின.

அன்று சந்துருவின் மேல் சந்தேகம் என்றால் இன்று அப்பாவின் மீது ஆத்திரம்.

படுக்கையில் கிடந்தவரிடம் கொட்டித் தீர்த்தாள்.

"ஆக, உங்களுக்குச் சந்துரு இங்க இருக்கறது தெரியும். தெரிஞ்சும் எங்கிட்ட மூச்சு விடலை. இல்லியாப்பா?"

"பொறுமையா இரும்மா - ஏனிப்படி மேல்மூச்சு வாங்குது உனக்கு?"

"பொறுமையா இருந்தா எல்லாரும் தலையிலே மிளகாய் அரைக்கறாங்களே..."

"அப்பா கூடவா?"

"அதுதான் தாங்கலை..."

சொல்லும்போது குரல் உடைந்தது.



"இங்க பாருடா, சாகரி. சந்துரு இங்கேயும் ஒரு எஸ்டேட் வாங்கியிருப்பது தெரியும் - கல்யாணத்தப்பவே சொன்னான் - ஆனா அவன் கான்ஃபரன்ஸுக்கு வரலை... அவனைப் பற்றிப் பேச்செடுத்தாலே நீ முறுக்கிக்கறே... சரி, மாப்பிள்ளையை எங்கே பார்க்கப் போறோம்னு சொல்லாம விட்டுட்டேன்... பாலனுக்குச் சந்துரு வேண்டியவன்... இந்த சில மாசங்கள்ல பக்கத்துப் பக்கத்து எஸ்டேட்டுங்கறதுல பரிச்சயம்... அந்த முறையிலே பாலன் அழைச்சதை நான் தடுக்க முடியுமா?"

"பாலன் சாருக்கு உங்க உறவு முறை... அதாவது நீங்க சந்துருவுடைய மாமனாருங்கறது தெரியுமா?"

"இப்பத்தான் தெரிஞ்சுக்கிட்டார் - கூடவே உங்களுக் கிடையே ஏதோ கசமசான்னும் புரிஞ்சிடுச்சு... விஷயம் தெளிய இது ஒரு சந்தர்ப்பம் - அது அமையத் தான் காரணமாயிட்டோம்கிற நினைப்பு அந்த நல்ல மனுஷனுக்கு..."

"யார் என்ன நினைச்சு என்னப்பா? கட்டினவருக்குக் கரிசனை வேணும்... பாசம் வேணும்... அதில்லைங்கறப்போ... ம்ப்ச்..."

"பாசம் இல்லாமலாடா என்னை அப்படிப் பதறியடிச்சு இங்க தூக்கிட்டு வந்தான்? உன்னைத் தானே போய் அழைச்சு வந்தது கரிசனையில்லாமயா?"

"வெந்த புண்ணுல வேல் பாய்ச்சப்பா - 'பாரு, நானில் லைன்னா உனக்கும் உங்கப்பாவுக்கும் இந்தக் கதிதான்'ற கர்வம்."

"காமாலைக் கண்ணோட பார்க்கறடா... எல்லாம் மஞ்சளாய்த் தெரியுது."

''இப்பத்தான் உலகமே புரியுதோன்னு நினைக்கறேம்ப்பா.''

''நிதானமாப் யோசிச்சாதான் சரியாய்ப் புரியும். சந்துரு வுக்கும் உனக்கும் சளைக்காம பிடிவாதம் இருக்குது. கூடவே வேண்டாத கர்வம் - அதை நீங்க இரண்டு பேரும் சுய கௌரவம்னு நினைக்கறீங்க! இதுகளை மீறிய சந்துரு நல்ல பையன்தான்.

ஆனால் தந்தையின் சான்றிதழைப் பெறச் சாகரி அங்கில்லை.

மறுநாள் பாலன், சந்துருவிற்கு நேர்ந்த விபத்து பற்றி தெரிவித்ததும், அதை அப்பாவிடம் சொல்லச் சிறு பெண் போல ஓடினாள் சாகரி.

கோள் சொல்லும் தோரணையில் ஆரம்பித்தாள்.

''ஆறேழு மாசமாய் என்னை வந்து பார்க்காதவர்... இருந்தாலும் உங்களைப் பொறுத்தவரை 'நல்ல பையன்'... ம்ம்? நல்லவர் செய்யற காரியமாப்பா இது?''

''பொறுமையாய்ச் சொல்லும்மா... ஏன் இப்படிப் படபடக்கறே. உட்காரேன்.''

''ஊரெல்லாம் 'பாவம், சந்துரு! - இவம் பொண்டாட்டி பொல்லாதவ'ன்னு உருகணுங்கறது அவர் திட்டம். மாமனாரையே அப்படி நினைக்க வச்சாச்சு. ஊரை ஏமாத்தறது கஷ்டம்?''

''விவரத்தைச் சொல்லுடா...''

''எங்கிட்ட சண்டை போட்டுக் கிளம்பின மறுமாசமே பெரிய விபத்து நேர்ந்திருக்கப்பா... அவருக்கு...''

இதுவரை புன்னகையுடன் இருந்த ராஜாங்கத்தின் முகம் கூட மாறியது. ''ஒரு குழந்தையைக் காப்பாற்றுகிற முயற்சியிலே



இவர் மலையிலேருந்து விழுந்து.. ஒரு முற்றின மரக்கிளை முதுகைக் குத்திக் கிழிக்க.. தையல் போட்ட புண் ஆறாமல் புரையோடி -''

கண்ணீர் மல்க, ஆத்திரத்தில் மூக்கு நுனி சிவக்க, விபத்தின் முழு விபரங்களைத் தெரிந்த அளவில் சொல்லி முடித்தாள்.

தகப்பனது முகம் கவலை காட்டியது.

''இதென்ன விளையாட்டு விஷயமா? உயிர் மீண்ட விபரத்தை மறைச்சிருக்காளே... இது நல்லதுக்கில்லை. சந்துருவோட தாய் மாமனுக்கும் கூட இதெல்லாம் தெரியாது போலயேம்மா. போன மாசம் அவர் நம்ப வீட்டுக்கு வந்தப்ப கூட ஏதும் சொல்லலியே? 'இளம் பிள்ளைங்க விவரம் புரியாமல் வீம்பா இருக்கீங்க... அனுசரிச்சு வாழணும்!'னு உனக்கு நல்லது சொன்னதோடு சரி..''

''யாருமில்லாத அனாதை போல இங்கே கிடந்திருக் காருப்பா... அதான் அந்த அம்மா பார்வையே சரியில்லை...''

''யாரு?''

''பாலன் ஸார்... சித்தப்பாவின் மனைவியைச் சொல்றேன்.''

அப்பா அவளை விநோதமாய்ப் பார்த்தார்.

''அதென்னம்மா புது உறவு?''

''பாலன் ஸாரைப் பிடிச்சிருந்ததுப்பா... 'உங்கப்பா தம்பி போலேம்மா நான்!'ன்னார்... அதான்... சரிதானப்பா?''

''நல்லதும்மா... ஆனா சந்துரு பண்ணதுதான் சரியில்லை.. கேட்கறேன்...''

''அது சரி, இத்தனை நாளாய் அவர் வந்து கட்டினவளையே எட்டிப் பார்க்கலை... அதையே தட்டிக் கேட்காத நீங்க விபத்து விஷயத்தைக் கேட்கப் போறீங்களாக்கும்?''

''அது... அதும்மா... வந்து... சில விஷயங்கள் புருஷன் மனைவிக்குள்ளே அந்தரங்கமானவை. ரொம்ப நெருக்கமான உறவு பார்த்தியா... அதனால சில சமயம் சிக்கு விழுந்திடும் கூட... அதைத் தம்பதி ரெண்டு பேருமாய்த்தான் பிரிச்சு எடுக்கணும்... மேலும் நாலு கை சேர்ந்தா சிக்கு மோசமாயிடும்... பிரிக்கறேன் பேர்வழின்னு கெட்டி முடிச்சாக்கிடுவாங்க... பிறகு வெட்டித்தான் எடுக்கணும்.''

''அதனால எல்லாரும் வேடிக்கைதான் பார்க்கப் போறீங்க?''

''உன் தப்பை நீயா உணரணும்னு நினைக்கறாம்மா, சந்துரு...''

''ஆக அவர் தப்பே செய்யலைன்னு நீங்களும் நினைக்கறீங்க?''

''அப்படியில்லடா... ஆனா மனைவி முதல்ல கொஞ்சம் தழைஞ்சு போனா அஞ்சு, பத்து வருஷங்களுக்குப் பிறகு புருஷன்மார் கன்னுக்குட்டியாய்ப் பெண்டாட்டி இழுத்த இழுப்புக்கு வருவாங்க... அதுக்குள்ளே பரஸ்பரம் அன்பும், நம்பிக்கையும் கெட்டிப்பட்டிரும்...''

''எழுதினேம்ப்பா... சண்டை வந்த மறுமாசம் அவர் வழக்கம் போலச் சென்னைக்கு வரலைன்னதும் என் மனக்கசப்பு... வீம்பு எல்லாத்தையும் விட்டுட்டு அவருக்கு லெட்டர் எழுதினேனே...!''



''முன்னமே சொன்னேனம்மா... எஸ்டேட்டில் ஒழுங்காய்க் கைக்குக் கடிதம் போய்ச் சேருறது சிரமம்...''

''கிடைச்சதுன்னாரப்பா... அதுவும் ரொம்ப அலட்சியமாய்ச் சொன்னார்.''

ராஜாங்கத்தின் முகம் மேலும் கவலை காட்டியது.

அவரிடம் பிணக்கிற்கான காரணத்தைக் கோடி காட்டியிருந்தனர் பிள்ளைகள். அதிலும் சாகரி இல்லாத நேரமாக வந்து அவரைப் பார்த்துப் பேசியிருந்தான் மருமகன்.

''உங்க சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சேர்ந்திருக்கலாம், மாமா - ஆனால் சாகரிக்குச் சில விஷயங்கள் புரியணும்... தானாய்ப் புரிஞ்சு பக்குவப்படணும் அவ... அது வரைக்கும் காத்திருக்க எனக்கு உதவணும் நீங்க!'' என்றிருந்தான்.

பொறுமையாய் இருக்கச் சம்மதித்திருந்தார்... ஆனால் இனியும் பொறுமையாய்ப் போவது...?

''என்னப்பா... கால் வலிக்குதா?''

''இல்லம்மா... உன்னைப் பத்தின யோசனைதான்... சிக்கல் தானாய் நெகிழும்னு நான் நினைச்சது தப்புதான் போல... கடவுள்தான் துணை...''

கண்களை மூடிப் படுக்கையில் சாய்ந்தவரைக் கவலையாய்ப் பார்த்திருந்தாள் மகள். வயதான காலத்தில் அவரைத் தங்களுக்கிடையே பகடைக் காயாய் உருட்டுவது நல்லதல்ல என்பது புரிந்தது.

அதன் பிறகு அவள் அதிகம் பேசவில்லை.

''யக்கா... அதோ அவரு வர்றாரு... பாருங்க... ஷேவ் பண்ணாட்டியுங்கூட அவரு முகம் அம்சந்தான்... பாருங்களேன்.''

தரை துடைக்கும் சங்கரி உற்சாகமாக...., எரிச்சலாய்க் கணவன் வரும் திசையை முறைத்தாள்.

பெரிய கட்டம் போட்ட பருத்திச் சட்டை, ஜீன்ஸில் கச்சிதமாய் வந்து கொண்டிருந்த சந்துருவின் பார்வை மனைவியிடம் சற்று எரிச்சலாய்ப் படிந்து, பின் சங்கரியிடம் புன்னகையுடன் திரும்பியது!



**சா**ரைப் பாம்பின் கடிக்கு அமாவாசைக்கு அமாவாசை வீங்குவது போலச் சாகரிக்கு அந்திப் பொழுதுகளில் சந்துருவின் நினைப்பு வீங்கியது.

சதா புருஷனைப் பற்றிய நினைப்பு உள்ளோடினாலும் அவ்வப்போது வலிக்குமளவு அதிகமாகும்... ஒரு மாதிரியான உள்வீக்கம்.

அந்நேரம் மருத்துவ மனையின் செந்தூர மரத்தின் கீழிருக்கும் மரப் பெஞ்சில் அமர்ந்து பழம் நினைவுகளில் அமிழ்ந்து விடுவாள்.

அன்று என்னவோ அவர்களிடையே பிரிவு நேர்ந்த நாள்... அப்போதுதான் நிஷ்ந்தது போன்ற தெளிவுடன் உள்ளாடியது.

அன்றோடு ஒரு வருடம் ஆகியிருந்தது.

சந்துருவுடன் சந்திப்பு ஏற்பட்டு முழுசாய் 365 நாட்கள்!



நினைக்க நினைக்கச் சாகரிக்குத் தித்தித்தது... இது கடவுள் போட்ட முடிச்சு என்று நிச்சயமாய்ப் பட்டது. இல்லையெனில் இவள் ஆடை ஸ்கூட்டரில் சிக்கித் தடுமாறி நின்ற வேளையில், 'நான் உதவட்டுமா?' என்று வந்தவன் வாழ்க்கை முழுதிற்கும் துணையாக முடிந்திருக்குமா?

வேணி திருமணத்தின் ஆரம்ப நாட்களில் ஏற்படுத்திய சந்தேகச் சலசலப்பை அப்பாவின் பேச்சு அழித்து விட்டது.

அப்பா கவனமாய் மாப்பிள்ளையைப் பற்றி விசாரித்த போது வெளிவராத விவரங்களா வேணிக்குத் தெரியும்?

அதிலும் ஒரு மாதத்தில் பம்பாயில் படிப்பு முடிந்து சென்னை திரும்பியிருக்க வேண்டிய விக்ரம், வேலை நிமித்தமாகவேனும் ராஜாங்கத்தை வந்து பார்க்காததில் வேணி, விக்ரமின் நோக்கம் நேரானதல்ல என்றுதான் தோன்றுகிறது. அப்பாவின் யூகமும் அதுதானே?

அண்ணனும் தங்கையும் ஏதோ ஒரு திட்டத்துடன்தான் அத்தனை நெருங்கி, நயமாய்ப் பழகியிருக்கிறார்கள் - ஆக அத்தனையும் நடிப்பு..!

பசப்பித் தன்னை மணந்து, அதன் மூலம் தன் சொத்தைக் கைப்பற்ற நினைத்து மேற்கொண்ட முயற்சிகளோ?

பல வருடங்களாய்க் கவனமாய்க் கட்டிய கோட்டை, விழுந்து சிதறிய ஏமாற்றம் தாங்காமல்தான் கண்டதையும் பேசியிருக்கிறாள் வேணி.

இந்தத் தெளிவு வர, சந்துருவிடம் வேணி மூட்டிய புகையைப் பற்றியே பேச்செடுக்கவில்லை சாகரி.

வெறுமே, ''என் தோழி வேணி வந்திருந்தா... நம்ம கல்யாணத்தப்ப வெளியூரிலே இருந்தாளாம் - உங்களைத் தெரியும்னா... அவ அண்ணா விக்ரம் உங்களோட கல்லூரியிலே படிச்சவராம்...'' தெரிவித்தாள்.

ஒரு கணம் சத்துருவின் புருவங்கள் நெரிந்தன.

மறுகணம் சுதாரித்து விட்டான்.

''ம்.. தெரியும்... வேணி உங்கூடப் படிச்சாளா?''

''ஆமா. ஸ்கூல் மேட். கல்யாணப் பரிசாய்ப் பட்டுப் புடவை ஒன்று தந்தா. அவ இப்போ விதவிதமாய்ப் புடவை, உடைகள் டிஸைன் செய்யறா... விக்கறா!''

''நல்லது.''

சுத்தரித்தாற்போலப் பதில் சொன்னதோடு சம்பாஷணை சரி - தொடரவில்லை.

அதற்கப்புறம் ஆறேழு மாதங்கள் நிமிஷங்களைப் போலப் பறந்தன. மாதத்தில் ஒரு வாரம்தான் உன்னுடன் என்று சொன்னவன் இடையே இரண்டே நாட்கள் ஓய்வு கிடைத்தாலும் சென்னைக்கு ஓடி வந்தான்... மனைவி மடியே தஞ்சமெனக் கிடந்தான்.

''பயம்மா இருக்குது, சாகரி...''

அந்தி நேரம் இவள் மடியில் படுத்தவன் இருட்டிய பின்னும் எழாமல் முனகினான்.

''விளக்கை வேணும்னா போட்டுமா, பாப்பா?''

''கிண்டலா இருக்குதா?''



முகத்தை அவள் புறமாய்த் திருப்பிக் கிடந்தான்.

''ஸ்ஆ... நீங்க பண்ணாத கிண்டலா? கல்யாணமான மூணாவது நாள் என்னை எப்படிக் கலங்கடிச்சீங்க!''

''முதல் நாளே எல்லாம் ஆச்சே... பிறகென்ன அம்மணிக்குக் கலக்கம்?''

''ச்சு.. மூஞ்சியெல்லாம் பாவமாய் வச்சுட்டு எங்கிட்ட தயங்கித் தயங்கிச் சொல்லலை?''

''என்னன்னு?''

''சாகரி, மூணு நாளாய் உங்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு தெரியாம தவிக்கறேன்..., ஆனா இனிமேலும் உங்கிட்ட சொல்லாமல் மறைக்கறது சரியில்லை... அப்படி இப்படின்னு என்னை அரை மணி நேரம் வறுத்தெடுத்துட்டு கடைசியிலே என்ன சொன்னீங்க?''

''மூணு நாளாய் வயிறு சரியில்லைன்னேன். புதுப் புருஷனாச்சேன்ற கரிசனை கூட இல்லாம நீ, 'இவ்வளவு தானா... ச்சே'ன்னு எங்களைத்தைத் திருகினே.''

''அத்தோட விட்டேனே... மூணு வேளையும் வஞ்சகமில்லாம விழுங்கறதை வச்சே வயிறு சூப்பர் கண்டிஷன்ல இருக்கறது புரியாதா என்ன? சரி, இப்போ ஐயாவுக்கு ஏன் பயம்? அந்தக் கதைக்கு வருவோம்...''

கைகளைப் 'பரபர'வென்று தேய்த்துக் கொண்டான்.

''ம்ம்.. சீரியஸாய்ப் பேசவா இப்போ? இப்படி உன்னை அண்டிப் பூனைக் குட்டியாய் மாறிட்டேனோங்கற பயம்.''

''நாடோடிப் புலி வீட்டுப் பூனையானது... நல்லது தானப்பா?''

அவன் தலையை வருடியபடி கொஞ்சினாள்.

"ம்ம்... இப்படித் தடவித் தடவியே அடக்கிட்டே... நான் நானாய் இல்லைங்கறது பயந்தானே? எங்கப்பா அம்மாவும் கூட இப்படி ரொம்பப் பாசமாய் இருந்ததால்தான்..."

"ஒருத்தர் இழப்பை மற்றவரால் தாங்க முடியாமப் போச்சு... அதுக்காகத் தம்பதிங்க பிரிஞ்சு... இல்ல, ஒதுங்கித்தான் வாழணும்ங்கறது நியாயமாய்த் தோணுதாப்பா?".

"கலீல் கிப்ரானுடைய கவிதை இது. சாகரி. ஆங்கிலத்தில் வாசிச்சேன்... சொல்றேன், கேளு.

நீங்கள் இருவரும் சேர்ந்தே இருக்கலாம். ஆனால் உங்களிடையே இடைவெளிகள் இருக்கட்டும்.

ஒருவரை ஒருவர் காதலியுங்கள்.

ஆனால் அது உங்களைக் கட்டிவிட வேண்டாம்.

ஒருவர் மற்றவரது கோப்பையை நிரப்புங்கள்.

ஆனால் இருவரும் ஒரே கோப்பையிலிருந்து பருக வேண்டாம்.

இணைந்து நில்லுங்கள். ஆனால் மிக நெருக்கமாய் அல்ல.

கோவிலின் தூண்கள் எட்டித்தானே நிற்கின்றன!"

மௌனமாய் அவனையே பார்த்திருந்தாள் சாகரி.

"வித்தியாசமான சிந்தனைப்பா..." என்றாள் மெள்ள.

"ஆரோக்கியமானதுங்கூட இல்லையா?"

"நமக்குள்ளே இருக்கற இந்த ஈர்ப்பு இயல்பானது சந்துரு... அதை எதிர்த்து முறிக்க முயற்சி பண்ணாதீங்க. பிரியங்கர



நதியின் ஓட்டத்துலே நாம் இசைஞ்சு மிதக்கலாம்... ஏன் எதிர்த்துக் கஷ்டப்படணும்?"

"பின்னாலே கஷ்டப்படக்கூடாதேன்ற எச்சரிக்கை."

"ஷ்ஷ்..."

குழந்தையாய்த் தன் மடியில் கிடந்தவனை முத்தமிட்டு அடக்கினாள்.

ஆனால் ஏனோ இருவர் கண்களும் கசிந்திருந்தன.

அன்று காலையே தொலைபேசி மூலம் தம்பதி பேசியாயிற்று. பேசியதை விட அசட்டுத்தனமாய்ச் சிரித்ததுதான் அதிகம்.

"எங்கேருந்து பேசறீங்க... மறந்திருப்பீங்களோன்னு நினைச்சேன்.."

சிரித்தாள்.

"அப்படியெல்லாம் அசட்டுத்தனமாய் உன்னை நினைக்க விடக் கூடாதுன்னுதான் இத்தனை சீக்கிரம் ஃபோன் போட்டேன்... எழுந்ததுமே அசட்டுச் சிந்தனையா?"

சிரித்தார்கள்.

"சென்னைக்கு வந்தாச்சா? எதிர் பூத்திலேருந்துதான பேசறீங்க?"

"இல்லம்மா - ஆனா இன்னைக்குள்ளே சென்னை வந்திடுவேன். உன்னை முத முதலாய்ப் பார்த்து ஒரு வருஷமாயிருக்கன்னா... நம்பவே முடியலை, சாரு... உன்னைச்

சந்திச்சப்போ நீ நடுரோட்டில பாவமாய் முழிச்ச ஒரு பொண்ணு... இப்ப என்னன்னா நான் உன் பரிதாபமான புருஷன்!''

''போதுமே... இப்ப எங்கேருந்து பேசறீங்க?''

''ஸீ யூ டுநைட் பேபி.''

இணைப்பு துண்டிக்கப்பட, ஆர்வமாய்க் கணவனுக்காய்க் காத்திருக்க ஆரம்பித்தாள். சமையல்காரம்மாளின் ஒத்தாசையுடன் தானே ஏதேதோ சமைத்தாள். வீட்டோடு தன்னையும் பிரமாதமாய் அலங்கரித்தாயிற்று.

அத்தனையையும் ராஜாங்கம் ஒரு நமுட்டுச் சிரிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தார்.

மகளின் நோக்கமறிந்து தான் பிரமாதமான மாப்பிள்ளையைப் பிடித்து விட்ட பூரிப்பு அவருக்கு... சற்றுக் கர்வம் என்றுகூடச் சொல்லலாம்... அதற்குத்தான் அத்தனை பெரிய அடி விழுந்ததோ?

மாடியில் மகளின் குடித்தனத்திற்காய் மேலும் ஒரு அறையைச் சேர்த்த கையோடு மாடிக்குத் தனிப் படிக்கட்டுகளையும் வெளிப்புறமாகவே அமைத்திருந்தார்.

அதன் ஒரு சாவி சந்துருவிடம் என்பதால் பிரச்சினையில்லை.

சாகரி கல்லூரிக்குச் சென்றிருந்தாலும் சந்துரு வீடு நுழைந்து குளித்து, அங்கேயே வைத்திருந்த தன் உடைகளில் ஒன்றில் புகுந்து கீழே வந்து சாப்பிட்டுவிட்டு, தன் வேலைகளைக் கவனிக்கக் கிளம்புவான்.



சாயங்காலங்களில் ராஜாங்கத்துடன் அமர்ந்து சீட்டு விளையாடுவதும் உண்டு. வார்க் கதைகளை அலசியபடி மருமகனுடன் ஆடுவது அவருக்கு மிகப் பிடித்த பொழுது போக்கு. இருவரும் பேச்சும் சிரிப்புமாய்ச் சீட்டாடுவதைப் புத்தகம் படிக்கும் பாவனையில் உட்கார்ந்திருக்கும் சாகரி அடிக்கடி ஓரக்கண்ணால் கண்டு ரசிப்பாள். இறந்து விட்ட தன் தாய்க்காக அந்நேரங்களில் மனம் மிக ஏங்கும்.

'இதையெல்லாம் காணக் கொடுத்து வைக்கலியேம்மா உனக்கு...' என்று அரற்றும்.

ஒன்பதரை வரை சந்துரு வராததால் தகப்பனுடன் சேர்ந்து பேருக்குச் சாப்பிட்டவள், 'நேரங்கழிச்சு வருவாராயிருக்கும் ஆயா... இதை ஃப்ரிட்ஜுக்குள் வைக்கிறேன் - வந்ததும் எடுத்து மைக்ரோ வேவ் அவனிலே வச்சா ரெண்டாம் நிமிஷம் சுடச்சுட தந்துடலாம்!'' என்றபடி உணவுத் தட்டைப் பத்திரப் படுத்தி விட்டு மாடி ஏறினாள்.

பத்தரை வரை மேம்போக்காய் வாசித்தவள், படுக்கையில் மனம் ஏமாற்றத்தில் கனத்திருந்தது. ஆனாலும் இன்றோடு தாங்கள் சந்தித்து ஒரு வருடமானது என்பதைத் தன்னவர் மறக்கவில்லை என்ற ஆசுவாசமும்.

புரண்டு புரண்டு படுத்தும் தூக்கத்தின் சாயலே இல்லை. காதுகள் காரின் உறுமலுக்காய், படியேறும் அவன் காலடி ஒலிக்காய்த் தவமிருந்தன. தவம் தவிப்பாய் மாற, இனியும் வெறுமே படுத்திருக்க ஆகாது - டி.வி.யை உயிர்ப்பித்து வேறெதிலும் சிந்தையைச் செலுத்தலாம் என்று எழுந்து ஸ்விட்சைத் தட்டியவள் அலறி விட்டாள்.

நடு அறையில் நிற்கும் உருவம் யாருடையது?

மறுகணம் நிற்பது சந்துருதான் என்பது உறைக்க, கூவினாள்.

"ஹோ! எப்ப வந்தீங்க... நான் உடம்பெல்லாம் காதாய்க் காத்திருந்தேனே... ச்சே... மோசம்.. இப்படியா வந்து நின்னு பயங்காட்டறது?"

"அப்படியே துயிலும் அழகியை முத்தமிட்டு எழுப்பலாம்னு பார்த்தா அழகி தானாய் முழிச்சதும் இல்லாம திட்ட வேற செய்யறா!"

புன்னகைத்த அவன் முகம் பயணக் களைப்பையும் மீறி வசீகரித்தது.

"திட்டலைப்பா... நினைக்கட்டேன்... கதவைத் திறக்கற சத்தம் கூடக் கேட்கலியே!"

"காதல் திருடன் அப்படித்தான் நுழையணும்... இப்படி சத்தமில்லாமத்தானே போன வருஷம் இதே நாள் உம்மனசிலே புகுந்தேன்."

"நாங்க அலறிக்கிட்டே புகுந்தோமாக்கும் - சாப்பிட்டாச்சா?"

"அந்தப் பசியெல்லாம் இல்ல..." - கண் சிமிட்டினான்.

"நானே சமைச்சேம்பா, சந்துரு... மெக்ஸிகன் ரெசிப்பி பார்த்து வித விதமாய்..."

"ஐயோ அம்மா, அப்ப பசியே இல்லை.. விட்டுரு. உடம்பெல்லாம் கசகசங்குது முதல்ல குளியல்."

"காலையிலே ஐயா எங்கேருந்து பேசினீங்க? எங்கேருந்து வர்றீங்க?"



அதற்குள் அவன் குளியலறைக்குள் புகுந்திருந்தான்.

"சாகரி... டவல் ப்ளீஸ்..."

அவன் குரல் தர, எடுத்துக் கொண்டு ஓடினாள். வாங்கி இடுப்பில் சுற்றியபடி கேட்டான்.

"நேற்று உனக்குத் தும்மலும் விக்கலுமாய் மாறி மாறி வந்திருக்கணுமே?"

"அப்படிக்கு என்னையே நினைச்சீங்களாக்கும்?"

அவளது வெற்று மார்பை அணைந்தபடி கொஞ்சினாள்.

"ம்ம்... நம்ப தோட்டத்து ஏலக்காய்க்குப் பரிசு கிடைச்சது சாரு... பருமன், நிறம், மணம் எல்லாத்திலேயும் நம்ப உற்பத்தி செய்ற ஏலம்தான் சிறந்ததுன்னு அறிவிச்சப்ப... நான் போய்ப் பரிசை வாங்கினப்ப... நீ எம் பக்கத்திலே இல்லையேன்னு ரொம்ப ஏங்கினேன்மா... ஏனோ நீ எம்பக்கத்துல இல்லைன்னா நான் முழுமையாய் இல்லாதது மாதிரியான உணர்வு..."

"முதல்லயே சொல்லியிருந்தா நானும் வந்திருப்பேன்ல?"

"எனக்கே தெரியாதே... இந்த வருஷம் இப்படியொரு தேர்வு, பரிசு எல்லாம் நீ வந்த யோகம் போல!"

"இந்த மாதிரி சென்டிமென்ட்ஸ் எல்லாம் உங்களுக்கு உண்டா என்ன?"

'நானாக நானில்லை தாயே,

நல் வாழ்வு தந்தாயே நீயே.' அவன் பாட ஆரம்பிக்க ஃபோனும் உடன் சேர்ந்து கிணுகிணுத்தது!

"குளிங்க முதல்ல... அதுக்குள்ளே பாயசம் மட்டுமாவது சூடுபண்ணி எடுத்துட்டு வரேன்..."

ஓடிப்போய் ரிசீவரை எடுத்தாள்.

"ஹலோ... சாகரி?"

"அ.. ஆமா.. நான்தான்.. யார், வேணியா?"

"பரவாயில்லை. ஆளை மறந்துட்டாலும் குரலை இன்னும் நினைவு வச்சிருக்கே."

வேணி வந்து போன பிறகு சிநேகிதிகள் மறுபடி சந்திக்கவில்லை. பரிசுக்காய் ஃபோன் மூலம் நன்றி தெரிவித்ததோடு சரி... சாகரிக்குள் குற்ற உணர்வு குடைந்தது.

ஆனால் வேணி சந்துருவைப் பற்றி அத்தனை அபாண்டமும் அவதூறுமாய்ப் பேசிய பிறகு, அவளிடம் மறுபடி நெருங்க மனம் துணியவில்லை. அப்பா மட்டும் அந்நேரம் எடுத்துச் சொல்லிச் சமாதானப்படுத்தியிருக்கா விட்டால் இவர்களது தாம்பத்தியத்தில் பெரிய விரிசல் விட்டிருக்கும்.

"ஸாரி, வேணி... என்ன இந்த நேரத்துல...?"

"அவசியம் நேர்ந்தது. உடனே பேசிடணும்னு தோணுச்சு. அதான். நான் தந்த புடவையைக் கட்டினியா?"

"இன்னும் இல்லை..."

"மறுபடி எனக்கு ஃபோன் பண்ணக்கூடப் பயம்தான் இல்லியா, சாகரி? இவ மறுபடி ஏதேனும் குட்டையைக் குழப்புவாளோங்கற தயக்கம்... ம்ம்...?"

"படிப்பு... வீட்டு வேலைன்னு நாட்கள் ஓடுது... அதான். இத்தனை நேரங் கழிக்கக் கூப்பிடறியே... என்ன..' என்ன விஷயம்?"

"எல்லாம் உன் விஷயம்தான். திருவனந்தபுரத்திலே புடவை, உடை 'சேல்ஸ்' முடிஞ்சு இப்பத்தான் வீடு



திரும்பினேன்... இன்னைக்குக் காலைல உன சந்துருவைத் திருவனந்தபுரம் ஏர்போர்ட்டுல பார்த்தேன், சாகரி."

"ஓ?"

"சந்துரு தனியாயில்லை - கூடவே ஒரு அழகான பொண்ணு நின்னா. அவர் கைக்குள்ளே பம்மி நெஞ்சுல முகத்தைப் புதைச்சிருந்தாள். பிரிவுத் துன்பம் போல.. அவ கண்ணெல்லாம் கலங்கியிருக்க, இவர் ஏதேதோ ஆறுதலாய்ப் பேசிட்டிருந்தார். எனக்கும் அந்நேரம் ஆறுதல் தேவையாயிருந்தது, சாகரி - அத்தனைக்குக் கலங்கிட்டேன்... சந்துரு இனி திருந்திடுவார்னு நினைச்சேன்... ஆனா ஐம் ஸாரிம்மா... உங்கிட்ட உடனே சொல்லலைன்னா படுக்க முடியும்னு தோணலை - அதான் வெளி பூத்துக்கு வந்து ஃபோன் பண்றேன்..."

ரிசீவரைப் பற்றியிருந்த உள்ளங்கை வியர்த்தது... ஆனால் தைரியத்தை நழுவ விடாமல் பேசினாள் சாகரி.

"அவருக்கு நேற்றுச் சிறந்த ஏல உற்பத்திக்காய்ப் பரிசு கிடைச்சிருக்குது... அதுக்காக வெளியூர்..."

"ஓஹோ... அந்த உற்சாகத்திலேதான் ஜோடியோடு இழைஞ்சார் போல."

சந்தோஷத்தில் பலூனாய் விம்மி நின்ற மனதில் ஊசியைச் செருகினாள் வேணி.

"பொண்ணு பிரமாத அழகு, சாகரி - உங்க வீட்டு எங்க வீட்டு அழகில்லை... அதான் இத்தனை அவசரமாய்த் தகவல் சொல்றேன்... பொறுமை யாயிருக்கறது இந்த மாதிரி

விஷயங்களை ஆபத்து... பொறுத்தார் பூமியை வேணா ஆளலாம். புருஷனை ஆளக் கவனமாயிருக்கணும்... கொஞ்சம் கண்டிப்பாயும் இருக்கணும்."

ஃபோனை வைத்தவனின் எதிரே ஆடியது அந்த தங்கச் சங்கிலி. சன்னச் சங்கிலியில் கோக்கப்பட்ட இதய வடிவ வைரப் பதக்கம் மின்னலாய்த் தெரிந்தது.

"பிடிச்சிருக்குதா, சாகரி? உனக்கு மெல்லிக நகைங்கதானே பிடிக்கும்? அதான் திருவனந்தபுரத்துக்கே போய் இந்தக் கேரளா டைப் நகையை வாங்கினேன்... பிடிச்சிருக்குதா?"

மகுடிக்கு மயங்கும் சர்ப்பம் போல ஆடிய அச்சங்கிலியையே வெறித்தபடி நின்றாள் சாகரி!



## 10

குளித்து, முற்றும் துடைக்காத ஈரத்தில் அவன் உடம்பு பளபளத்தது. கைகளில் ஆடிய பொன்சரத்தின் மின்னலோடு அவன் சிரிப்பு போட்டியிட்டது.

"என்னடா இப்படி மலைச்சு நிக்கறே?"

நகையை அவள் கழுத்தில் இடச் சந்துரு முயல, அவனை நெட்டித் தள்ளினாள்.

"நேத்து திருவனந்தபுரம் போயிருந்தீங்களா?"

வெறுத்துச் சிறுத்திருந்த மனைவியின் முகத்தை விநோதமாய்ப் பார்த்தான்.



"ஆமா - இப்பத்தானே சொன்னேன்?"

"நீங்க சொல்றதுக்கு முன்னமே எனக்கு விஷயம் வந்திடுச்சு..."

"ஆ.. என்ன பெட்டியிலேருந்த நகை பில்லை எடுத்துப் பார்த்திருப்பே... விலை ஜாஸ்திதான்... ஆனா உனக்குப் பரிசாய்த் தர்ற முதல் நகையே வைரமாய் இருக்கணும்னு ஆசைப்பட்டேன்... அதான்."

"விலை விவரமில்லை... பொம்பளை விவரம்!"

அவன் முகம் மாறியது.

அதைக் கவனித்த சாகரியின் இதயம் குட்டிக் கரணமடித்தது.

"யார் ஃபோன் பண்ணினா.. ஹேமாவா?"

இவளுக்கு அடிவயிற்றில் கத்தி பாய்ந்த வேதனை.

"இல்லை... வேணிதான்."

அவன் முகம் மேலும் இறுகியது.

ஆக வேணி சொன்னது பொய்யில்லை. திருவனந்தபுரத்தில் இவன் சந்தித்த, சல்லாபித்த பெண்ணின் பெயர் ஹேமா!

"இதைப் பற்றி இப்போ பேச வேணாம், சாகரி... நாளைக்கு நிதானமாய்..." சமாதானப்படுத்தும் குரலோடு தன் கழுத்தில் கணவன் இட வந்த நகையைப் புறங்கையால் விலக்கினாள்.

"வேணாம், சந்துரு... எவளையோ பார்க்க வெளியூர் போயிட்டு என்னை ஏமாற்ற இதைப் பரிசாய்க் கொண்டு வந்திருக்கீங்க... மிட்டாய் தந்து அமைதிப்படுத்த நான் குழந்தையில்லை."

வார்த்தைகளை விட அவனது குரலும் அதன் வேகமும் காயப்படுத்தின. சந்தேகத்தால் காயமுற்ற வேதனையில் விளைந்த வார்த்தைகள் அவசரமாய் உருண்டன... அந்த வேகத்தில் கடுமையாய்த் தாக்க ஆரம்பித்தன.

அவன் கைகள் தாழ்ந்தன - மின்னிய நகையைக் கட்டிலில் போட்டான்.

"நீ என்னைச் சந்தேகப்படறியா, சாகரி?"

"யாரந்த ஹேமா? கட்டிப் பிடிக்க, கண்ணீரைத் துடைக்கறளவு சிநேகிதி உங்களுக்கு இருக்கறதாய் இதுவரை எங்கிட்ட சொன்னதில்லையே! எந்த ஊரிலே இருந்தீங்க என்றதைக் கூட இந்த நிமிஷம் வரை எங்கிட்ட மூச்சு விடலை. பெண்டாட்டிட்ட இத்தனை மூடுமந்திரம் செய்றவரை எப்படி நம்பறது?"

அவள் முகத்தில் கடும் வெறுப்பு.

அதைக் கனித்த அவன் கண்கள் இடுங்கின - சதா புன்னகைக்கும் உதடுகள் இறுகிக் கோடாகின.

"கண்டவங்க சொல்றதை வச்சு..."

"கண்ணால கண்டவதான் சொல்றா... அது பொய்யில்லைன்னும் இப்ப புரிஞ்சு போச்சு... முழுசாய்ச் சொல்லுங்க. யாரவ? எத்தனை நாளாய்ப் பழக்கம்?"

"பொறாமையும் சந்தேகமும் ஆரோக்கியமான விஷயங்களில்லை... தாம்பத்தியத்துக்கு அதுவே யமன்."

"சக்களத்தி அதை விடப் பெரிய யமன்! எது ஆரோக்கியங்கறீங்க? கட்டின எங்கிட்ட கூடச் சொல்லாம வேற்றூர் போய்க் கண்டவளைக் கட்டிட்டுக் குலாவறதா? நான்



இப்படி ரகசியமாய் ஊர் ஊராய் உலாத்தினா அப்படியான்னு ஏத்துக்குவீங்களா? உங்களை ஏதும் கேட்டுறக்கூடாது. ஐயா மூணு வாரம் உங்க இஷ்டத்துக்கு ரதி, ரம்பையோட இழைஞ்சுட்டு, பாக்கி ஒரு வாரம் இங்க என்னோட..."

"வாயை மூடு... பேசிட்டா பிறகு அள்ள முடியாது... அதுவும் வேணி கோள் மூட்டறதை வச்சு..."

"கோள் மூட்டினது வேணிதான் - சரி, நீங்க கட்டிப்பிடிச்ச அந்த ஹேமா யாரு?"

அவன் சில நொடிகள் கண் மூடி நின்றான்.

"என்ன பொய் சொல்லறது... அப்படிங்கற யோசனையா?"

திறந்த அவனது விழிகள் பழுக்கக் காய்ச்சிய இரும்பாய்ச் சிவந்து தகித்தன. குரலும் உறுமலாய் ஒலித்தது.

"ஆமா, அப்படித்தான்... நீயும் கொஞ்சம் யோசிச்சுப் பேசு... உளறாத..."

"சரி, சொல்லுங்க... கேட்போம்..."

எகத்தாளமாய் அனுமதி தந்தாள்.

"குடும்பத்துல சின்னக் குழப்பம்... அது சம்பந்தமாய்ப் போனேன்..."

"அப்படீன்னா இதைத் தவிர உங்களுக்கு இன்னுமொரு குடும்பம் இருக்குது?"

அவளது தோள்களை ஆத்திரத்துடன் அழுந்தப் பற்றினான்.

ஆனால் சாகரி அஞ்சவில்லை. கவ்விய நண்டை உதறுவது போல அவனை உதறித் தள்ளினாள்.

அவனிலும் ஆத்திரத்தின் தணல்..!

“உடம்பு, ஆரோக்கியம், படிப்பு, நமக்கிருக்கும் சொத்து இதுக்கெல்லாம் ஆதாரம் காட்டலாம். சாகரி... சான்றாகக் காகிதங்களைக் காட்டி நிரூபிக்கலாம்... ஆனால் குணத்துக்கு பண்புக்கும் சாட்சி ஏது? எப்படி உனக்குப் புரிய வைக்கிறது? கொஞ்சம் பொறுமையாய் இரு... கேளு - சொல்றேன்.”

அவளது உதடுகள் வெறுப்பாய் மடிந்தன.

“நல்ல குணத்துக்கு ஆதாரம் நம்ப நடத்தைதான் - பார்த்ததுமே புரிஞ்சு போகும்.”

“பார்க்கறது கேட்கறதெல்லாம் பொய்... நீர விசாரிக்கறதுதான் மெய்யுனு...”

“கேள்விப்பட்டிருக்கேன்... நீர விசாரிக்க ‘எம்புருஷன் சந்தேகத்துக்கு உரியவர்!’னு ஊருக்கெல்லாம் தண்டோரா போடணுமா? ஊரே சிரிக்கும்... இப்படி ஏமாந்துட்டாளேன்னு கைகொட்டும்... என் அப்பாவும் நொந்திடுவார்...”

“ஆக முடிவே பண்ணிட்டே...?”

“நீங்க அவளைப் பார்க்கத்தானே கேரளா போனீங்க?”

மெள்ளத் தலையசைத்தான். “ஆமா...”

“அப்ப என்னை வேறெந்த முடிவுக்கு வரச் சொல்றீங்க?”

“என்னை நம்பலை?”

“இல்லை இல்ல...” கத்தினாள் ஆக்ரோஷமாய். அவன் மறுவார்த்தையின்றி விலகினான்.

வரவேற்பறை போன்றிருந்த முன்புறப் பகுதிக்குப் போய் விட்டவனை சாகரி போய் எட்டியும் பார்க்கவில்லை.



உறக்கமின்றி இருவரும் இரவு முழுக்கக் கட்டிலில் உருண்டது! எழுந்து நடந்தது எல்லாம் மற்றவருக்குக் கேட்டது. ஆனால் இருவருமே மற்றவரைப் பார்க்க விரும்பவில்லை.

மறுநாள் காலை அழுது வீங்கிய தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தவளுக்குச் சுய பச்சாதாபம் பொங்கியது.

‘ஏமாந்துட்டியேடி...’ கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்திடம் புலம்பினாள். காலை முழுதுமாய்ப் புலரவில்லை. கிழக்கு சற்றுச் சிவந்து சோம்பல் முறித்துக் கொண்டிருந்தது.

மறு அறையில் அரவமேயில்லை.

காஃபி மேக்கரில் தனக்கு மட்டுமாய்க் காபி தயாரித்துப் பருகினாள்.

மனசு ஏதாவது செய்யேன் என்று பரபரத்தது.

அவனது பெட்டியைக் கட்டிலின் மீது வைத்து மெள்ளத் திறந்தாள்.

“நகைக்கான பில்லைப் பார்த்தாயா?” என்று கேட்டானே... அதோடு வேறு ஏதும் ஆதாரங்கள் சிக்குமா? போட்டுக் கழற்றிய உடைகள் கூடச் சீராக மடித்து அடுக்கப்பட்டிருந்தன. அதிகம் கலைக்காமல் தேடினாள்... ஒவ்வொரு பாக்கெட்டாகத் தட்டித் துழாவியவளின் கையில் அது சிக்கியது.

மிக மெல்லிய ரோஜா நிறக் காகிதத்தில் ஒரு கடிதம் - அதிலிருந்தது ஒரு பெண்ணின் கையெழுத்துதான். அதன் ஒயிலும் தெளிவுமே தெரிவித்தன.

*பிரியமுள்ள சந்துரு!*

*உன் உதவி எனக்கு உடனடியாய்த் தேவை.*

எதிர்பாராத (நீ எதிர்பார்த்த) இக்கட்டில் சிக்கிக் கொண்டிருக்கிறேன்! இந்நிலையில் உன்னை விட்டால் எனக்கு ஆதரவு... என் ஆறுதல் சொல்லக் கூட வேறு யாருண்டு?

இது அப்பா அம்மாவிடம் பேசிப் பிரிக்கக் கூடிய சிக்கலில்லையே...

'ஜாக்ரதை' என்று நீயும் என்னை எச்சரித்ததுண்டு... ஆனால் விஷயம் என் கைகளை மிஞ்சி விட்டது.

உடனே வா - உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்.

அவசரத்துடன், அன்புடன்,

உன் ஹேமா.

புதிதாய் ஆத்திரம் பொங்கியது!

இக்கடிதம் எழுதியவள் சந்துருவிற்கு மிக நெருங்கியவள் - பலகாலப் பரிச்சயம் என்பது புரிகிறது. சின்னக் கடிதம் என்பதால் அப்பெண்ணின் அவசரம் தெரிகிறது - ரோஜா நிறக் காகிதத்தின் மேல்புறம் திருவனந்தபுரம், தேதி என்ற எழுத்துக்கள் தங்க நிறத்தில் பளபளத்தன.

பெட்டியை மேலும் கிண்ட, சிறந்த ஏலக்காய் உற்பத்திக்கான சான்றிதழ் கிடைத்தது. விருது கோட்டயத்தில் தரப்பட்டிருந்தது.

ஆக, கோளத் தலைநகர் போனது ஹேமாவிற்காக!

அதென்ன அவனே எதிர்பார்க்காத ஆனால் இவள் எதிர்பார்த்த இக்கட்டு? யோசித்தவளுக்கு வயிற்றைப் புரட்டியது.

ஹேமா கர்ப்பமாய் இருக்கிறாளோ?



மனைவியான தனக்குத் தரப்படாத அந்த பாக்கியம் வேறு ஒருத்திக்கு...!

''எம்.ஏ. படிச்சு முடி. சாகரி - உன் திறமையை முதல்ல பாடத்துல காட்டு - பிறகு குழந்தை பிறப்பு வளர்ப்பு எல்லாம் தொடரும். என்ன?''

என்று கவனமாய் இருந்தவனுக்கு ஹேமாவிடம் என்ன கவனக் கேடு?

அத்தனைக்கு மோகம் மீறி விட்டதோ?

உடம்பு முழுக்க மிளகாயை அரைத்துத் தடவியது போலொரு காந்தல்! காதலனால் உருவாக்கப்பட்ட கர்ப்பம் பற்றித்தான் பெற்றவர்களிடம் கூற முடியாது..'உடனே வா!' என்றவள் ஆணையிட்டால் இவன் பறந்து போகிறான். அத்தனை ஜனம் புழங்கும் இடத்தில் அணைத்துக் கண்ணீர் துடைக்கிறான்...

அடிநாக்கு வரை கசக்க, அனைத்தையும் உள்ளே இட்டுப் பெட்டியை மூடப் போனவள், மூடியின் ரகசிய உள்ளறையையும் திறந்து துழாவினாள். விரலுக்குக் கிடைத்த வழுவழுப்பான புகைப்படத்தை எடுக்கும்போதே இருதயம் மத்தளமாய்க் கொட்டியது!

அதைப் பார்த்ததும் உலகமே ஸ்தம்பித்து நின்றது.

இது.. இதுதான் ஹேமாவா?

அல்லிக் குளத்தில் நீராடிய அப்பெண்ணிற்கு ஆடையில்லை... அல்லி மலர்களும் இலைகளுமே ஆங்காங்கே மறைப்பாய்... மறைத்தும் மறைக்காமல் மோகமூட்டியபடி...

தன் உத்தமத்திற்குச் சாட்சியில்லை என்றானே?

அயோக்கியத்தனத்திற்கான சாட்சி இதோ!

பெட்டியை மூடி எடுத்தபடியே வைத்தவள், ஒரு சிறு காகிதத்தில் எழுதலானாள்.

"நான் மறுபடி வீட்டுக்கு வரும்போது நீங்கள் இங்கே இருக்க வேண்டாம். உங்களை இனி நான் பார்க்க விரும்பவில்லை..."

மடித்து, காகிதம் பறந்து விடாதிருக்க, அவனது பரிசான சங்கிலியை வைத்தாள். சேலைக்கு மாறி வீட்டை விட்டு வெளியேறியதுதான்.

ஒரு சிநேகிதியின் வீட்டில் போய் இருந்துவிட்டு மாலை வீடு திரும்பியபோது வீடு வெறிச்சோடிக் கிடந்தது.

அவன் உடைமைகள் எதும் அங்கே இல்லை!

மூன்றாம் நாள் வேணி துக்கம் விசாரித்து வந்தாள்.

"உங்களுக்கிடையே மனஸ்தாபமாமே!"

"யார் சொன்னா, வேணி?"

"இது மாதிரியான விஷயத்தை மூடி வைக்கவே முடியாது - பாதி ஊருக்கு இந்நேரம் உங்க சண்டை, பிரிவு பற்றித் தெரிஞ்சிருக்கும்."

"என்ன சொல்லறே?"

"ஸாரி... என்னாலதானே உங்களுக்கிடையே... உனக்கு உதவணும்னுதான் அந்த ராத்திரி நேரம் ஃபோன் செய்தேன்."



"நாங்களும் எங்க உறவும் சரியாய் இருந்திருந்தால் வேற யாரும் அதைக் கெடுக்கவோ கலைக்கவோ முடியாது, வேணி."

"பார்க்க ஆள் அழகன்னு மயங்கிட்டே... சந்துரு அத்திப் பழம்டீ... பார்வைக்குப் பளிச... பழகினாதானே புழு தெரியும்..."

"இனி அவரைப் பற்றிப் பேச வேணாமே."

"அதுவும் சரிதான். அண்ணன் விக்ரம் கூட உன்னை ரொம்ப விசாரிச்சான், சாகரி. ஃபோன்ல பேசறப்போ பாதி நேரம் உன்னைப் பத்திதான்."

இது மேலும் வெறுப்பூட்ட, பேச்சை முடிந்தவரையில் நறுக்கி, வேணியை வழியனுப்பினாள். ஆனாலும் பிரிவு பற்றி விசாரித்த, அனுதாபப்பட்ட அனைவரையும் அவளால் தடுக்க முடியவில்லை.

"அவனுக்கு... அதான் ராஜாங்கத்தோட மருமகனுக்கு வேற பொண்ணுங்க தொடர்பாமே?"

"அதெல்லாமில்லை. கல்யாணத்துக்குப் பிறகும் பொண்ணு தகப்பன் வீடே கதின்னு கிடந்தா எப்படி... அதுலதான் தப்பு."

"கல்யாணத்துக்கப்புறமும் படிக்கணும்னால் தபால் மூலம் படிக்கறது..."

"படிப்புதாம்மா சாஸ்வதம் - இப்ப புருஷன் கைவிட்டுட்டாலும் படிப்பு விட்டுறாதில்ல?"

இப்படி ஊராரின் பேச்சு, ஏச்சிற்குத் தன்னை ஆளாக்கினவன் மேல் குரோதம் பெருகியது

இப்போதும் இந்தத் தரை துடைக்கும் பெண் தன்னைத்தானே குற்றவாளியாகக் கருதுகிறாள். நடிகன் போலத் தோற்றப் பொலிவோடு ஒவ்வொருவராய்ப் பார்த்துப் பிரியமாய்ப் புன்னகைப்பவனை எல்லாருக்கும் பிடிக்கிறது!

அப்பாவின் அறைக்குள் சற்றுத் தயக்கமாய்த்தான் நுழைந்தாள். சந்துரு இருக்கையில் அதில் நுழைய, இயல்பாய்ப் புழங்க முடியவில்லை.

ஆனால் ஒரு மகனைப் போலப் பிரியமாய் அப்பாவுடன் பேசி உதவும் அவனை வராதே எனவும் முடியாது.

குனிந்தவாறு ஆஸ்பத்திரி அறைக்குள் நுழைந்தவளை அங்கிருந்த அமைதி ஆச்சரியப்படுத்தியது - நிமிர்ந்தாள்.

அப்பா அன்றைய செய்தித்தாளில் 'கடக்கட'த் தரப்பட்ட ருசியில் மூழ்கியிருந்தார்.

பெரும்பாலான ஆண்களைப் போல் அப்பாவிற்குக் காலையில் செய்தித்தாள் மிக முக்கியம்.

இதற்காகவே சந்துரு அதைச் சீக்கிரமாய் அவர் கைக்குக் கிடைக்கச் செய்து விடுவான் - மற்றப்படி செய்திகள் இப்பகுதிக்கு வர மதியமாகிச் சூடாறிப் போகும். ஆனால் ஆளை எங்கே காணும்?

''என்னம்மா தேடறே? சந்துருவைத்தானே?''

''ம்ம்... இங்கதானே இருப்பார்...''

''அதான உத்தவலையை இங்கே ரெண்டு மணி நேரமாய்க் காணலை! சாப்பிட்டியேம்மா நீ இன்னும்? புட்டும் கண்டல்



குழம்பும் ரொம்ப நல்லாயிருக்குது - கேஸரோலில்தான் வச்சிருக்கான் - இன்னும் சூடு முழுக்க ஆறியிருக்காது - சாப்பிடேன்...''

அப்போதுதான் தன் காலி வயிறு சுருளுவதையும் உணர்ந்தாள்.

''அவர்.. சந்துரு...''

''இப்பதான் ஜூஸ் பிழிஞ்சான்... எடுத்து டம்ளர்ல ஊத்தறப்போ சட்டையிலே சிந்திடுச்சு... 'பிசுபிசுன்னு அலசிடறேன்னு' பாத்ரூம் போயிருக்கான்.''

''ஏம்ப்பா நான் வந்து பிழிவேன்ல?''

''அவனுக்கும் பொழுது போகலியேம்மா... அதான் உரிமையாய்ச் சென்று பிள்ளையைத் தடுக்கவும் மனசில்லை. அரசியல் - விளையாட்டுச் செய்திகளை அலசி முடிச்சாச்சு...''

புட்டு, குழம்பைப் பரிமாறிக் கொண்டு உட்கார்ந்த நொடியில் குளியலறையின் கதவு திறந்தது. சட்டையை உதறியபடி வந்தவனின் வெற்று மேலுடம்பில் கவனம் பதிவதை அவளால் தடுக்க முடியவில்லை.

மெலிந்திருந்தான் - ஆனால் உடம்பின் முறுக்கு தளரவில்லை.

சற்று வலப்புறமாய்த் திரும்பியபோது அவன் இடப்புற விலா எலும்புகளின் மேலாகப் பெரிய பூரானாகக் கீறி ஓடிய அத்தழும்பு தெரிந்தது.

இவள் கணவனான பிறகு ஏற்பட்ட காயம்... ஆறிய தழும்பு. ஆனால் மனைவிக்கு இது பற்றி மூணாம் மனுஷி சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கிறது!

ஒன்றும் பார்க்காதவள் போல வாயில் புட்டை வைத்தாள். ஆனால் விழுங்க முடியாமல் விக்கியது.



## 11

புடவை அலமாரியுள் குடைந்து கொண்டிருந்த வசந்தாவின் தோளைத் தட்டினார் பாலன்.

'ச்ச...' - பல்லி விழுந்தாற் போன்ற அருவருப்பில் தோளைக் குலுக்கினாள்.

"கோபமாக்கும்?"

குரலில் சிரிப்பு வழிந்தது.

"தெரிஞ்சதுதானே - பொம்பளைங்களைக் கண்டா வழிவீங்கன்னு தெரியுமே."

"அப்படியா?"

அப்பாவியாய்க் கேட்டார்!

வந்து போயிருந்த பீனா ஜார்ஜ் மிக அழகான மலையாளப் பெண்மணி. அவளிடமிருந்துதான் தற்போது எஸ்டேட் ஒன்றை வாங்கியிருந்தார் பாலன். கானடாவில் இருக்கும் பீனாவின் தந்தை இறந்த பிறகு வெளிநாட்டில் இருக்கு



தன்னால் தோட்டங்களை நிர்வகிக்க இயலாதென்று விற்று விட்டாள்.

விற்பனை சம்பந்தப்பட்ட சில டாக்குமெண்ட்டுகளை அவரிடம் ஒப்படைக்க வந்திருந்தாள்.

அவர்களிடையே நடந்த சம்பாஷணைதான் வசுவின் கோபத்திற்கான காரணம்.

''எடுத்ததுமே மெலிஞ்சிருக்கீங்களே பாலான்னு ஒரு வழிசல் வழிஞ்சாளே!''

''பீனா என்னைச் சிறு வயசிலேருந்து பார்த்திருக்காள்ல? சொன்னதும் உண்மைதான். நான் மூணு கிலோ குறைஞ்சிருக்கேன் - பாவம்! உன்னாலதான் அரைக் கிலோவைக் கூடக் கரைக்க முடியலை...''

மனைவியின் முகம் கோபத்தில் வீங்கியது.

''நீங்க சிரிச்சா சினி ஸ்டார் போலுண்டு பாலான்னு அவ சொன்னது அடுத்த பொய்.''

''அடடே... இத்தனை நாளாய் உனக்கது தெரியலியா, வசு? நிறையப் பேர் சொல்லியிருக்காங்களே... என் சிரிப்பு ஜெய், அதான் நம்ப ஜெய்ஷங்கரின் ஸ்டைல்ல இருக்குதுன்னு...''

''ஜெய்யா? வாய் ஒரு பக்கமாய்க் கோணுறதால ஜனகராஜ் ஸ்டைல்னு வேணும்னால் நினைச்சிருக்கேன்... ஆனா சொன்னதில்லை...''

பாலன் சிரிப்பைச் சிரமத்துடன் மென்று அடக்கினார்.

''வேறென்ன சொன்னா... அவ்வளவுதானா?''

''உங்களை மாதிரி ஒரு நல்லவர்ட்ட தன் எஸ்டேட் போய்ச் சேருறது தன் பாக்யம்ன்னா...''

"அடடே... நீ இவ்வளவு கோர்வையாய்ச் சொல்லும் போதுதான் தெரியுது. நான் பார்வைக்கு மட்டுமில்லை, பழகறதுக்கும் இனிமையானவன்னு... அப்புறம் வசு, நீ செய்திருந்த சீடை பீனாவுக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது... கொஞ்சம் கொடுத்து விட்டிருந்திருக்கலாம்..."

என்றவர் மனைவியின் உக்கிரப் பார்வையிலிருந்து தப்ப அவசரமாய் வெளியேறினார்.

"இப்படி வீட்டுக்குள்ளே மனைவி எதிர்க்கே மற்றவளோட குலவறதை முதல்ல நிறுத்துங்க... இல்லை, நீங்களும் நானும் வெவ்வேற எஸ்டேட்டுல தனித்தனியா... நிம்மதியா வாழ வேண்டியதிருக்கும்."

வசுவின் குரல் உயர்ந்து அவரைத் துரத்தியது. முன் அறையில் நின்ற சந்திரகாந்தனைக் கண்டு சற்றே அசடு வழிந்தார்.

"ஹிஹி... வீட்டுக்கு வீடு உள்ள வாசப்படிதாம்ப்பா..."

அவன் பதில் ஏதும் சொல்லவில்லை.

"அழகாய் ஒரு பொண்ணு நம்மகூட சகஜமாய்ப் பேசிக்கூடாது. நம்ப பத்தினிகளுக்குக் கோபம் பத்திக்கும். ஏதோ நாம கண்டதும் காதல் கொள்ற மாதிரி அல்லது அந்தப் பொண்ணுகளுக்கும் வேற வேலை இல்லாதது மாதிரி..."

பதிலுக்குச் சந்துரு சிரிக்கவில்லை.

மாறாக அவன் முகம் கறுத்து இறுகியிருந்தது.

சட்டென்று பேச்சை மாற்றியவன் தனக்கு வேண்டிய விவரங்களைக் கேட்டுத் தெரிந்தவுடன் கிளம்பி விட்டான்.



'விர்'ரென்று பாய்ந்து மறைந்த அவன் ஜீப்பை யோசனையாய்ப் பார்த்திருந்தார், பாலன். தான் தவறு செய்யாதிருக்க, ஆண்கள் பெண்ணின் சந்தேகத்தை... செல்ல ஊடலை இயல்பாய் - ஏன், இன்பமாய்க் கூட எடுத்துக் கொள்ளலாமே?

சந்துருவிற்கு ஏனிந்தக் குமைச்சல் - கவலையுடன் யோசித்தார்.

"ஐயோ... எம்மவனே ராசா... என்னைய விட்டுட்டுப் போயிறாதப்பா - எனக்குக் கொள்ளி வைக்க வேண்டிய நீ பூம்பல்லக்கு ஏறிக் கிளம்பிறாதப்பா... அம்மையால தாங்க முடியாது..."

இந்தப் புலம்பலைக் கேட்ட சாகரி விதிர்த்தாள் - பல வருடங்களுக்கு முன்னே தாயின் மரணத்தின் போது இதைப் போன்ற பல புலம்பல்கள். அழுகைகள்...

தலைமுடியைக் கொண்டையாக முடிச்சிட்டபடி அவசரமாய் அறையை விட்டு வெளியே வந்தாள்.

அப்பாவின் மதியத் தூக்கம் கலையவில்லை - கவனமாய் அறைக் கதவைச் சாத்தியவள் மருத்துவ மனையின் மறுபக்கத்திற்கு ஓடினாள்.

"ஷ்ஷ்... இங்கே இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணக் கூடாதும்மா. மற்ற பேஷன்ட்ஸ் இருக்காங்கல்லியா?"

நர்ஸ் அப் பெண்ணை அமைதிப்படுத்த முயன்றது எடுபடவில்லை.

அந்த ஏழைத்தாய் நர்ஸின் தோளைப் பற்றிக் கொண்டே புலம்பினாள்.

''யம்மா.. நான் தவமிருந்து பெத்த புள்ளை, தாயீ - இவனுக்கு முந்திப் பெத்த நாலும் தங்காம இவந்தான் எங்கவீ தீர்த்தவன்.''

''சரிம்மா - ஆனா டாக்டர்ஸுக்கு நீங்க இத்தனை சத்தம் போட்டா தொந்தரவாயிருக்குமில்லியா?''

சாகரி தாதியின் உதவிக்குப் போனாள்.

''வாங்கம்மா... இப்படி வந்து உட்காருங்க - நாம அமைதியா இருந்தாத்தானே வைத்தியருங்களும் நிம்மதியாய் யோசிப்பாங்க? காபி ஏதும் வாங்கித் தரட்டா?''

மறுப்பாய்ச் சேலைத் தலைப்பால் முகம் துடைத்து மூக்கைச் சிந்தினாள் அத்தாய்.

''என்னாச்சம்மா...''

''மாடு முட்டிருச்க...''

அழுகை வெடிக்காமலிருக்கச் சேலையால் வாயைப் பொத்தினாள்.

''அடடே..''

''காட்டு மாடும்மா. என்ன எப்படின்னு தெரியலை. இவன் வழக்கமா நல்வா, நெல்லியெல்லாம் பறிக்க மரமேறுவான். தோப்புன்னு மரத்திலேருந்து குதிக்கறச்ச மாடு மிரண்டு முட்டிருச்சங்கறான். கூட நின்ன பையன் குடலே வெளிய வந்திருச்சேம்மா...''

''மறுபடி உள்ள வச்சு தச்சிடலாம்மா... இதெல்லாம் இப்ப சகஜம். நாலாம் நாளே எழுந்து நடமாடுவாம் பாருங்க...''

''அப்படியே ஆவட்டும்மா - அது பலிச்சா உன் வாய்க்கு சக்கர தாரேன்.''



வெண்முயல் போலப் பரபரப்பாய் இவர்களது பக்கம் வந்த நர்ஸ் அழைத்தாள் -

''உங்களை டாக்டர் வரச் சொல்றார்...''

அவசரமாய் எழுந்தாள் அத்தாய்.

''நீங்கல்லம்மா... அவங்க, சாகரி மேடம்.''

''என்னையா, ஸிஸ்டர் - எதுக்கு?''

''ஒரு பிரச்சினை... அதான்.''

''அப்பா.... அப்பாவுக்கு என்ன? நான் வரும்போது தூங்கிட்டுதான இருந்தார்?''

மற்றவளை அமைதிப் படுத்திய சாகரி இப்போது பதறினாள்.

''இது வேற விஷயம் மேடம், வாங்க.''

முழுக்கக் குளிர்பதனம் செய்தாற் போலிருந்த அம்மனைப் பிரதேசத்திலும் சாகரிக்குக் 'குப்'பென வியர்த்தது. தலைமை மருத்துவரின் அறைக்குள் நுழைந்தவளது கால்கள் நடுங்கின.

ஒரு எக்ஸ்-ரேயை ஆராய்ந்து கொண்டிருந்தவர் இவளைப் பார்த்ததும் புன்னகைத்தார். முதுமையையும் மீறிக் கண்கள் உருண்டு ஆரோக்கியமாய்ப் பளபளத்தன.

''வாம்மா - உட்கார்.. கூப்பிட்ட ரெண்டாம் நிமிஷமே வந்துட்டியே!''

''இங்கதான் இருந்தாங்க - இப்ப மாடு முட்டி அட்மிட் ஆன வேலுமணியின் அம்மாவைச் சமாதானப்படுத்திட்டிருந்தாங்க உடனே அழைச்சிட்டு வந்தேன் டாக்டர்...'' நர்ஸ் விளக்கினாள்.

"குட்..." எக்ஸ்-ரேயைக் கவனமாய் அதன் கவரினுள் இட்டவர் சற்று தயக்கத்துடன் பெரும்பாலும் நரைத்திருந்த தன் தலைமுடியைக் கோதியபடி விவரம் சொன்னார்.

"அந்த பேஷன்ட்டுக்கு உன்னால இன்னுமொரு உதவி ஆகணும்மா."

"சொல்லுங்க டாக்டர் - ரத்தம் ஏதும் தேவைப்படுதுன்னா தரேன் - என் க்ரூப் ஏ பாஸிடிவ்."

துடிப்பாய்ச் சொன்னாள்.

தன் தந்தைக்கு எந்த ஆபத்துமில்லை என்பதில் ஏக நிம்மதி.

"அதில்லம்மா - இந்த ஹாஸ்பிடல்ல மொத்தம் இருபது படுக்கைங்கதான். நூறு அறைங்க ரெட்டைப் படுக்கைக் கொண்ட ஸ்பெஷல் ரூம்ஸ் - மற்றது ஜெனரல் வார்ட் அதாவது ஒரே பொது அறை."

"சரி, டாக்டர்..."

"தற்சமயம் எல்லாப் படுக்கைகளிலேயும் நோயாளிங்க உண்டும்மா... உங்கப்பா அறையிலே உள்ள அடுத்த படுக்கையிலே அவருக்குத் துணையாய்... நீ இருக்கறே..."

சாகிக்குப் புரிந்தது. அறுவைச் சிகிச்சை தரப்படப் போகிறது. சிகிச்சை முடிந்ததும் அவனைப் படுக்க வைக்க ஒரு படுக்கை தேவை.

"கவலைப் படாதேம்மா. வேலுமணியை உங்கப்பா அறையிலே தங்க வைக்கப் போறதில்லை. அவர் பேஷண்ட்டாய் ஒரு ப்ரொபஸர் இருக்கார். அவரை உங்கப்பா அறைக்கு மாத்திட்டு வேற அறையிலேதான் வேலுவை



வைப்போம். இல்லைன்னா உங்கப்பா வேலுவுடைய அம்மா ஒப்பாரியிலே அரண்டுடுவார்..."

இவள் என்ன சொல்வதென்று புரியாமல் நின்றாள்.

"மிஸ்டர் பாலன் வீட்டுல நீ தங்கிக்கலாம்... நாங்கெல்லாம் இருக்கறது ஒண்டுக் குடித்தனம் போன்ற விடுதியிலே... ஆர்... நான் கேள்விப்பட்டது. சரின்னா... சந்துரு... மிஸ்டர் சந்திரகாந்தன்... உன்..."

"ஆமாம், டாக்டர் - அவர் என் கணவர்."

"பின்னே என்னம்மா? சின்னச் சண்டைகள் குடும்பங்கள்ல சகஜம். சண்டை போட்டது போதும்ப்பான்னு நீ அவரோட போய்த் தங்கிக்கலாமே!"

"அவர் வீடும் பக்கத்திலே இல்லியே?"

"உண்மைதான். ஆனா தினம் வந்து போறாரே? வசந்தராம்மா கூட ஒரு பெண் துணையாய் நீ போய் இருந்தால் சந்தோஷப்படுவாங்க. அஞ்சலி கூட சதா வசந்தரா வீட்டிலேதான் இருப்பா. அந்த சமயம்தான் உடம்பு தேறச் சந்துருவும் பாலன் வீட்டிலே இருந்தது. உரியவள் நீ இல்லாததாலதான் மத்தவங்க உரிமை எடுத்துக்கிட்டது. நீ சந்துருவோட போய் இரம்மா... எல்லாம் சரியாய் வரும்."

ஒரு தந்தையின் பரிவுடன் ஆலோசனை சொன்னார் மருத்துவர்.

"ஆனால், அப்பா இங்கே தனியாய்..."

"அவர் காலை ஸன்றி நடந்து ஸ்ட்ரெயின் பண்ணிக்கக் கூடாதே தவிர, வேற எந்தப் பிரச்சினையுமில்லையே.

அவருக்கான சிகிச்சையை செய்ய இங்கே ஆளுண்டு - பிறகு என்னம்மா?"

"சரி, டாக்டர்."

"ரொம்ப நன்றிம்மா - காட் பிளஸ் யூ!"

வாழ்த்துடன் அவர் எழ, இவள் வெளியேறினாள்.

அதற்கு மேல் அவருடைய நேரத்தை இவள் பிடுங்குவது நியாயமில்லை. அப்பாவின் அறைக்குப் போனாள். அவர் உறக்கம் தொடர்ந்திருந்தது.

இவளுக்குத்தான் மனம் ஒரு நிலையில் இல்லை.

நான் சந்துருவுடன் போய்த் தங்குவதாவது...?

ஊசி போடுவதைப் போல இரண்டு நிமிட வேதனையாய் எண்ணி விஷயத்தைச் சொல்லி விட்டார் மருத்துவர்.

இதையே யார் சந்துருவிடம் சொல்லுவது?

சொன்னாலும் தன்னை வெகு அலட்சியமாய்ப் பார்த்து ஆங்காரமாய் நடந்து கொள்பவன், 'சரி, டாக்டர் - அப்படியே ஆகட்டும்' என்று தன்னைப் போலவா தலையாட்டுவார்?

ஆக வசந்தா, அதாவது பாலன் ஸார் வீட்டில்தான் தங்க வேணும்.

ஒரு வாரமேனும் அப்பாவிற்கு ஓய்வு தேவை என்றிருக்கிறார்கள். இது மூன்றாம் நாள் என்றால் இன்னும் நான்கு நாட்களேனும் மற்றொருவரின் வீட்டில் கழிக்க வேண்டிய நிர்பந்தம்.

மருத்துவர், அஞ்சலி என்ற பெண்ணைக் குறிப்பிட்டு எச்சரித்தாரே!



ஆக, சந்துருவின் கவர்ச்சி வலையில் சிக்கின பெண்களின் பட்டியலில் ஒரு அஞ்சலியும் உண்டு போல.

வசந்தராம்மாவிற்குத் தன் மீது நல்ல அபிப்பிராயமில்லை என்பதையும் சாகரி புரிந்திருந்தாள் - காயம் பட்டு வேதனையில் வாடிய புருஷனைப் பார்க்கவும் வராத புண்ணியவதி என்ற அபிப்பிராயம்.

அவர்களுக்குத் தெரியாதே, தப்பும் செய்து விட்டு விரைத்துக் கொண்டு புறப்பட்ட புருஷனை மன்னித்துத் தான் கடிதம் எழுதிய விபரம்.

'கடிதம் கிடைத்தது' என்பதைக் கூட எத்தனை இளக்காரமாய்ச் சொன்னான். தன் ஆதங்கம் புரிந்து அனுசரணை காட்டிய ஒரே ஜீவன் வேணிதான்.

"நீ எழுதியுமா மசியலை, சந்துரு? நாலு பேரோடு நானும் ஒருத்தியாய் உங்க அந்தப்புரத்திலே இருக்கறேன்னு எழுதினால் சரிம்பாராய் இருக்கும்."

"ச்சே... அப்படியொரு வாழ்க்கைக்கு நான் தயாரில்ல, வேணி."

"அப்ப ஒரே வழிதான் உண்டு."

"என்ன, சொல்லு."

"விவாகரத்துதான்."

"ஐயோ... என்ன நீ? அது எதுக்கு?"

"இன்னுமா சந்துருவை நம்பறே? தன் சாயம் வெளுத்துப் போனதும் ஐயா ஓடிப் போயிட்டாரே!"

''ஆனா எனக்கு... வேற ஒரு... மறு கல்யாண எண்ண மில்லைங்கறப்போ விவாகரத்துக்கு என்ன அவசியம்?''

''இப்படி ஒரு ஸ்திரீலோலனோட கட்டுப்பட்டிருக்கப் போறியா? விடுதலை வாங்கித் தர்றதுதானே அந்த ரத்து?''

''ப்ளீஸ், வேணி - இனி இந்த மாதிரிப் பேச்சு வேணாம்.''

இப்போது அதையெல்லாம் யோசிக்கையில் கூடத் தலை தெறிக்கிறது.

''அம்மா...''

யாரோ அழைக்கும் குரல் கேட்டு வெளியே பார்த்தாள்.

கடிதம் ஒன்றை நீட்டியபடி நின்றார் ஒரு பணியாள்.

''என்ன... யார் தந்தா?''

''சந்திரகாந்தன் சார் கொடுத்தனுப்பினாரம்மா... இன்னைக்கு அவரு இங்க வர முடியாதுங்கறது பத்தின விவர மிருக்குது...''

''சரிங்க - நன்றி.''

வாங்கிக் கொண்டாலும் தலை சுற்றியது.

தன் புருஷனாகப் பட்டவனுக்கு அப்படி என்ன எதிர்பாராத வேலை?

அஞ்சலியோடு கொஞ்சலோ?

பிடிக்காவிட்டாலும் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள்.

வேலை நிமித்தம் வர முடியவில்லை என்று தெரிவித்து என்ன வேலை என்றும் விவரிக்கப்பட்டிருந்தது.



அப்படியானால் வசுந்தராம்மா வீட்டில்தான் தஞ்சம் புக வேண்டுமா?

குழம்பிய வேளையில் ஆர்ப்பாட்டமாய் அந்த லான்சர் மருத்துவமனை வளாகத்துக்குள் நுழைந்தது.

அதிலிருந்து இறங்கியவர் அதைவிட ஆர்ப்பாட்டமாய் இருந்தார்.

கட்டியிருந்த பட்டு வேட்டி, ஜிப்பாவைப் போலவே மினுமினுப்பான மேனி. சுற்றிலுமிருந்த சிப்பந்திகள் பணிவாக வணங்க, கம்பீரமாய்த் தலையசைத்து அதை ஏற்றபடி நடந்து வந்தார்.

அவர் நெருங்க, உயர்ரக செண்ட்டின் மணம் கமழ்ந்தது.

கன்னத்துச் சதையும் கண்ணோரச் சுருக்கங்களும் அவர் இளைஞனல்ல என்றன.

சாகரியை நெருங்கியதும் விரிவாய்ச் சிரித்தவர்,

''என்னம்மா சாகரி, எப்படியிருக்கே. அப்பாவுக்கு இப்ப தேவலையா?'' என்று உரிமையோடு கேட்க, மலைத்து நின்றாள் அவள்.



## 12

''என்னம்மா, மிரண்டு நிக்கறே? யாரோ புது ஆள் சரியாய் நம்ப முன்னால நின்னு பேரையும் சொல்லி அழைக்க, அப்பாவின் சௌக்கியத்தை விசாரிக்கறாரேன்னுதானே?''

பார்வைக்குச் சந்தன நிறச் சருமத்தோடு மலையாளி போலிருந்தாலும் அவரின் தமிழ் சுத்தமாய் ஒலித்தது.

"நீங்க... யாருன்னு..."

"நான் அன்பரசு.. கழுதை கெட்டாக் குட்டிச்சுவர்ங்கறது போல, இந்தப் பக்கம் வசதியானவங்க எல்லாரும் எஸ்டேட் ஓனர்தான். தேயிலைதான் பிரதானம். ஏலம், பழத் தோட்டமும் உண்டு. கணக்காய் ஒரு பொண்ணு - பையனும் உண்டு. பையன் ஹார்வர்டிலே படிக்கறான் - பொண்ணு காலேஜ் படிப்பை முடிச்சிட்டா - பேரு அஞ்சலி."

"ஓ..? வாங்க. அப்பா தூங்கிட்டிருந்தார்."

"நல்லது. நல்ல தூக்கம், சத்தான ஆகாரம் ரெண்டும்தான் இப்போ அவருக்குத் தேவை. இந்த ஹாஸ்பிடல் சின்னதானாலும் சிறப்பானது. அனுபவ மிக்க டாக்டர், பயிற்சியுள்ள நர்ஸ்மார்."

"ஆமா... எங்களுக்கும் திருப்திதான்."

"பெரிய, பிரபல நர்ஸிங் ஹோமிலே கூட ரத்தம் எடுக்கணும், சலைன் ஏத்தணும்னா நர்ஸுங்க நம்மைக் குத்திக் குத்திச் சல்லடையாக்கிடறாங்களே..."

சங்கடமாய்ச் சிரித்தாள்.

"இன்னும் நான் யாருன்னு உனக்குத் தெளிவாகலை. இல்லியாம்மா? நான் வசந்தராவுடைய அண்ணன்."

"ஓஹோ... சந்தோஷம்."

"எம் மக அஞ்சலி சதா அவ அத்தை வீட்டிலேதான். அவளைச் சொல்லியும் குற்றமில்லை. தாயில்லாத பொண்ணு



அம்மா மாதிரியான பாசம் கிடைக்கற இடத்திலே ஒட்டிக்கறது இயற்கைதானே."

முகமறியாத அந்த அஞ்சலிக்காய் ஒரு கணம் மனம் இளகினாலும், இங்கு வந்த முதல் நாள் அப்பெயர் வசந்தரா, சந்துருவின் இடையே புழங்குவதைக் கவனித்திருந்தவளுக்கு நெருடவும் செய்தது. டாக்டர் அஞ்சலியைப் பற்றி இப்போது தெரிவித்ததும் கூட உயர்வான கருத்தில்லையே.

"டேய்..."

முகம் திருப்பி, அன்பரசு ஒரு சிங்கம் போல உறுமினார்.

"என்ன வேடிக்கை பார்த்திட்டிருக்கே? கேரியரை எடுத்து வா."

இந்த உறுமல், உத்தரவிற்காகவே காத்திருந்தாற் போல, சிப்பந்தி ஒரு பெரிய சாப்பாட்டுக் கேரியரைத் தூக்கி வந்தான்.

விரலைச் சுட்டிக் காட்டியபடி மறுபடி உறும, சிப்பந்தி மேசையில் - சுமந்ததை - பவ்யமாய் வைத்தான்.

பணம் பலருக்கு இது மாதிரியான பழக்கங்களைக் கற்றுத் தந்து விடுகிறது. வேலைக்காரர்களை அமைதியாய்ப் பேர் சொல்லி அழைத்து, வேலை செய்யச் சொல்ல முடியாத தனிவிற்கான ஆணவம்!

"என்னது இது?"

"வசந்தராவுடைய சிநேகிதி மகளுக்கு இன்னைக்கு வளைகாப்பாம். இம்மாதிரி விசேஷங்களைப் பொண்ணுங்க தவற விடுவாங்களா? கிளம்பிட்டா. விசேஷம் தேனி பக்கங்கறதால மாப்பிள்ளை பாலனும் கூடப் போக வேண்டியதாயிடுச்சு... ஒத்தாசைக்கு வேலைக்காரங்க

உண்டுன்னாலும் சமையல் எப்பவும் வசுதான். அதான் எனக்கு ஃபோன் செய்து உதவக் கேட்டா. நல்ல மனுஷங்களுக்கு உதவற சந்தர்ப்பத்தை நான் நழுவ விடுவேனா? என்வீட்டுலே சம்சாரம் இல்லைன்னாலும் சமையல்காரி உண்டு... அதான் உங்களுக்குச் சாப்பாடு எடுத்துட்டு வந்தேன்..."

"அனுப்பியிருந்தாக்கூட போதுமே, ஸர்.. உங்களுக்குச் சிரமம்."

"இந்தப் பக்கம் அடிக்கடி ஃபோன் ஊமையாயிடும்... அதான் பாவனால் உனக்கு விவரம் சொல்ல முடியலை."

அதனால்தான் சந்துருவும் ஆள் மூலம் தகவல் தெரிவித்திருந்தாரோ?

"என்னம்மா கலக்கமாய்த் தெரியறே?"

"ஒன்றுமில்லை. உள்ளே வந்து உட்காருங்க - காபியா இல்லை, ஜூஸ்... பிழியட்டுமா?"

"அதையே சதா செய்து நீயே சக்கையாய்த் தெரியறேம்மா."

அரவம் கேட்டு அப்பா கண் விழித்தார்.

"அப்பா, இவர் மிஸ்டர் அன்பரசு. வசந்தராம்மாவுடைய அண்ணன். அவங்க வெளியூர் போக நேர்ந்ததால் நமக்குச் சாப்பாடு எடுத்துட்டு வந்திருக்கார்."

"என்னால் நிறையப் பேருக்குச் சிரமம்."

எழுந்து உட்கார முயன்றார் ராஜாங்கம்.

"சிரமமா? இங்கே புது முகங்களைப் பார்க்கறது அபூர்வம்ங்க. அந்தச் சந்தோஷம் கிடைக்கதேன்னு வந்தேன். பேசாமப் படுங்க. நான் இப்படி உட்கார்றேன்."



சற்று நேரம் பரஸ்பரம் தொழில், உடல்நலம் பற்றிப் பேசிய பின் ராஜாங்கம் மகளைப் பார்த்தார்.

"என்னப்பா?"

"பாத்ரூம் போகணும்மா..."

"இதோ எம்.என்.ஓ.வை வரச் சொல்றேன்."

"அதென்ன?"

"மேல் - அதாவது ஆண் நர்ஸ். நம்மைக் கவனிக்க ஆம்பளைங்க இருக்கறது வசதி."

"அது வாஸ்தவம்."

உதவி வர, இருவரும் வெளியேறினர்.

"ஏம்மா, இது இங்கே மூணாவது நாளா?"

"ஆமா."

"மற்ற இடங்களை மாதிரி பினாயில் நாத்தமும் அலறலும் கிடையாதுன்னாலும் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரிதானேம்மா. அதாம் முகம் களையில்லாம தெரியுது. ஆளும் துவண்டிருக்கே... வாயேன். ரெண்டு நாள் எங்க வீட்டிலே இருக்கலாம்... அப்பா டிஸ்சார்ஜ் ஆக நாலு நாளாவது ஆகுமில்லையா?"

சாகரி சற்று ஆச்சரியத்துடன் நிமிர்ந்தாள்.

'ஆக தன் பிரச்சினைக்கு வழி கிடைத்து விட்டதா?' என்பது போல. வசந்தராவும் ஊரில் இல்லையே!

நர்ஸுகளிடம் அவர்கள் அறையில் ஒண்டிக் கொள்ளலாம். அல்லது இந்த வராண்டாவின் பெஞ்ச் கூடப் போதுமே! எதற்கு அந்நியர்களின் வீட்டிற்கு...?

''என்னம்மா யோசிக்கறே. உனக்காக மட்டும் நானிதைச் சொல்லலை - என் சுயநலமும் இதிலே இருக்குது. அஞ்சலி போன வருஷமே பட்டப் படிப்பை முடிச்சுட்டா. கல்யாணத்துக்கு ரெண்டு, மூணு இடங்கள்ல கேட்டு வந்ததால மேற்கொண்டு படிக்க விடலை. இவளானா கல்யாணம் வேண்டாம்ன்றா...''

''ஏனாம்?''

''சுதந்திரம் போயிடுமாம். அவளுக்குப் பிடிச்சவரை அவளே தேர்ந்தெடுக்கணுமாம். இப்படி ஏதேதோ...''

''அதுவும் ஒரு விதத்திலே சரிதானே, ஸர்.''

ஏதோ சொல்ல வேண்டும் என்று சொன்னாள்.

''பெரியவங்களுக்குத் தெரியாததாம்மா? கண்ணுக்கு நிறைவாய் இருந்தாப் போதும். சின்னதுங்க மதிமயங்கிடும் - நாங்க நாலு கணிப்போமில்ல?''

''அதுவும் உண்மைதான்.''

இதைச் சாகரி முழு மனதோடுதான் சொன்னாள்.

தான் சந்துருவைப் பற்றி 'ஆஹா ஓஹோ' என்றிராவிட்டால் அப்பாவிற்கு அவனைப் பற்றி எதும் தெரியாது - அவரும் மகள் பேச்சில் ஏமாந்து போய்விட்டார். இல்லாவிட்டால் குலம், குடும்பம், குணம் என்று நீர விசாரித்து நல்லவனாய்த் தேர்ந்தெடுத்து...

அவளது மறுபக்க இதயம் 'சுரீர்' எனச் சுட்டது.

எத்தனை நல்லவன் என்றாலும் வேறு எவருக்கும் என்னிலே இடமில்லை என்று முரண்டியது.



பிற பெண்களுடன் தொடர்புள்ளவன் எனத் தெரிந்த பிறகும் கூட அவளால் சந்துருவை முழுக்க வெறுக்க முடியவில்லை.

காதல், கல்யாணம் இரண்டுமே ஆன பின், பெண் மனம் வரித்தவனை விட்டு விடுவதில்லையே.

அன்பரசு சொன்னது போலச் சந்துருவின் கண்ணுக்கு நிறைவான தோற்றம் மட்டுமா அவளை ஈர்த்தது - இல்லையே.

ஆனால் இப்போதும் அவனைக் கண்டதும் பல பெண் முகங்கள் பூவாய் மலருகின்றனவே.

தானும் பார்வைக்கு ரம்மியம் என்றாலும், ஆளைக் கவிழ்க்கும் கவர்ச்சிக் காரிகை அல்ல.

அதனால்தானோ அவன் பேரழகி ஒருத்தியைத் தேடி ஓடியது?

அல்லிக் குளத்தில், மலர்களையும் இலைகளையும் மட்டும் ஆடையாய்க் கொண்டிருந்த புகைப்படத்திலிருந்த அப்பெண் அதி ரூபவதி - சந்தேகமேயில்லை.

அதே சமயம் வெட்கம் கெட்டவள் - காசுக்காக மானத்தை இழக்கத் துணிந்தவள். அவளிடம் சண்டை போட்டுத்தான் தன் புருஷனை மீட்க வேண்டுமென்றால்...

முடியாது... தன் சுய கௌரவம் அதற்கு இடம் தராது.

''சாகரி...''

''இதோ வர்ரேம்ப்பா...''

''சார் சொன்னதைக் கேட்டியாம்மா?''

தன் யோசனைகளில் கட்டுண்டிருந்தவளுக்குப் புரியவில்லை.

"என்னப்பா?"

"ரெண்டு நாள் அவர் வீட்டுக்குப் போய் இரேம்மா. புதுசாய்க் கட்டினதாம். ஆர்க்கிடெக்ட் ரவி ராபர்ட் வச்சு கட்டினாராம்."

"யார்? சமீபமாய் தேசிய விருது வென்ற ஆர்க்கிடெக்டா?"

"அவரேதாம்மா - போய்ப் பேசப் பழக அண்டை அயலார் கிடையாது. கடை கண்ணின்னும் சுத்த முடியாது. பாடாவதிப் படம்னாலும் போய் ஒரு சாயங்காலப் பொழுதைக் கழிச்சோங்கறதுக்கு தியேட்டரும் இல்லை. இப்படிப்பட்ட இடத்துல சொகுசாய் வீட்டைக் கட்டிக்கறதுதான் புத்திசாலித்தனம்... பாத்ரூமிலே ஜக்கூஸி உண்டு..."

"உடம்பு வலிக்குச் சுகமாயிருக்குமாமே?"

"ஆமா சார் - உடம்பை நாலா பக்கமிருந்து பாயற தண்ணி அமுக்கிப் பிடிச்சு விடும். நீங்க டிஸ்சார்ஜ் ஆனதும் நம்ப வீட்டுலே ரெண்டு நாள் தங்கிட்டுப் போகணும்..."

"வரலாம்... பிடிச்சிருந்தால் நம்ப வீட்டிலேயும் ஜக்கூஸி போட்டுரலாம்மா, சாகரி."

"அப்போ கிளம்பும்மா!" - என்றார் அன்பரசு.

அறைக்குள் நுழைந்த நர்ஸின் முகம் விரிந்தது.

"அடே... அன்பரசு ஸார் கூட போகுன்னதோ மோள்? சந்துரு ஸாரை இன்னும் கண்டில்லா.... எந்து செய்யும்னு நிறைய சமயம் சஞ்சீவியாய் தன்னே நிங்கள் வந்து..."

"என்ன சொல்றீங்க சிஸ்டர்?"

நர்ஸ், வேணுமணி விவரத்தைச் சொல்ல, ராஜாங்கம் கவலையானார்.



அன்பரசு மேலும் உற்சாகமானார்.

"பார்த்தியாம்மா? எதும் தெரியாமதான் உன்னை வீட்டுக்கு அழைச்சேன். நிர்பந்தமில்லாமல் வந்த அழைப்பு - தயங்காமக் கிளம்பம்மா."

"இல்லை... வந்து இன்னைக்கு மட்டும் சாகரி இங்கயே அட்ஜஸ்ட் செய்துக்கட்டும் - சிஸ்டர் அறையிலே கூட தங்கிக்கலாம்... சந்துரு வரவும் கேட்டு முடிவெடுக்கட்டும்."

"என்ன திடீர்னு மாத்திப் பேசறீங்க ராஜாங்கம் ஸார்?"

"இல்லை... சும்மா போயிட்டு வர்றது வேற... நிர்பந்தம் ஏற்பட்டிருக்க இத்தனை ஏற்பாட்டையும் செய்த மாப்பிள்ளைட்ட ஒரு வார்த்தை கேட்காம செய்றது முறையில்லை... அதான்."

இப்போதுதான் சாகரியின் புத்தி வீம்பு கொண்டது!

"இல்லப்பா, நான் கிளம்பறேன் - ஆனா ஸர், அப்பாகூட சாயங்காலம் வரை இருந்துட்டு நான் கிளம்பலாமா?"

"இனி இந்தச் சின்ன அறையிலே இன்னொரு அந்நியரும் படுத்திருப்பார். உனக்கே சங்கடமாய்ப் படும்."

"அப்பா நான் முழுக்கத் தனியாய் இருக்கணுமே."

"அதான் பேச்சுத் துணைக்கு ஒரு கிழவர் வரப்போறாரே. பிறகென்ன?"

பிறகும் சாகரி தயங்குவதைக் கண்ட அன்பரசு,

"குழந்தை வேணுமட்டும் உங்களோட இருக்கட்டும். சாயங்காலமாய் வந்து கூட்டிட்டுப் போறேன்."

"எனக்காக நீங்க அலைய வேண்டாம். நானே..."

"பஸ், ஆட்டோல்லாம் இங்க கிடையாதம்மா - டாக்ஸிங்க கூட தேக்கடியிலேதான். நம்ப வீட்டுக்குப் போக அரைமணி நேரமாகும். காடு மாதிரியான இடத்தினூடே போற பாதை. நல்ல கார் வாங்கற ஆசையிலே நானே என்செலவுல கொஞ்சம் ரோடைச் சீர் பண்ணேன். இல்லைன்னா ஜீப் மட்டும்தான் போகும். அதுவும் நிமிஷத்துக்கொரு தரம் ஊறுகாய் ஜாடி மாதிரிக் குலுங்கும்."

"சிரமந்தான்."

"ஆனாலும் அஞ்சலி தினம் அவங்கத்தை வீட்டுக்கு ஓடுறவா - அதுவும் அங்கே சந்துரு இருந்தப்ப கேட்கவே வேணாம் - அவளை மறுபடி வீட்டிற்குக் கூட்டி வர நான் இப்படித்தான் எம் மகளைக் கெஞ்சணும்."

"நீங்க செய்ற உதவிக்கு நாங்கதான் நிறைய நன்றி சொல்லணும்."

"அஞ்சலிக்கு நல்ல துணையாய் இருப்பேம்மா... அதான் இத்தனை ஆசையாய்க் கூப்பிடறேன்."

கல்லூரிப் படிப்பை முடித்த மகள் இருப்பதான தோற்றமே இல்லை அன்பரசுக்கு.

உருவிவிட்ட உடல்வாகு, சாபத்தின் தயவோ என்னவோ, கருகருவென்ற தலைமுடி.

மீசையிலும் கூட ஒரு வெள்ளி இழையைக் காணோம்.

அவர் வீட்டில் மகள் அஞ்சலி இல்லையெனில், இவருடன் கிளம்புவதைப்பற்றி யோசிக்கவும் கூட மாட்டாள்.



பெண் துணைக்காக ஏங்கிக் கிடக்கும் அஞ்சலியுடன் பேசிச் சந்துருவைப் பற்றி விபரங்களை அறியலாம்.

ஹூம்.. கட்டிய மனைவி யாரோ ஒருத்தி மூலம் புருஷனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை!

அன்பரசு கிளம்பவும், இப்படிப்பட்ட பொருமலும் பெருமூச்சுகளுமாய்த் தன் ஆடைகளைப் பெட்டிக்குள் அடுக்கலானாள்.

சொகுசான காரில்தான் சவாரி என்றாலும் கூட அப் பயணத்தைச் சாகரி ரசிக்கவில்லை. கட்டடங்கள், இரைச்சல் என்று பழக்கப்பட்டிருந்த அவளது புலன்கள் இந்தக் காட்டின் அமைதியில் மிரண்டிருந்தன.

ஏதோவொரு ஆபத்தை நோக்கிப் போவதான பிரமை!

சில்வண்டுகள் இரைய ஆரம்பித்திருந்தன.

ஆழச் சுவாசித்ததால் நுரையீரலை மணமாய் நிரப்பியது தூய காற்று.

பார்த்த இடமெல்லாம் பசுமை - ரசிக்கும் மனநிலைதான் இல்லை.

சாரதியும் அமைதியானவனாய் இருந்ததால் இவள் பேச்செடுக்கவில்லை.

உன்னிப்பாய்க் கவனித்தும் கூட மறுபடி இதே பாதையில் தன்னால் தனியே திரும்ப முடியாதென்பது புரிந்தது.

இடையிடையே பாதை பாம்பின் நாக்காய்ப் பிளந்தது. சின்ன மரப் பலகைகளில் அந்தந்த எஸ்டேட்டின் பெயர் இருந்தாலும் சற்று நேரத்தில் அத்தனையும் புத்தியில் குழம்பிப் போயின.

பயண முடிவில் போய் இறங்கிய வீடு வெகு ஆர்ப்பாட்டம்தான். வாசலிலேயே வரவேற்க நின்றார் அன்பரசு இளமஞ்சள் நிறப் பட்டு ஆடைகளில். முன்னைவிட அதிக சென்ட் மணத்துடன்!

"இத்தனை சின்ன வயசுப் பெண்டாட்டிங்கறதாலதான் சந்திரகாந்தன் உன்னை யாருக்கும் காட்டாம ஒளிச்சு வச்சுட்டான் போலேம்மா..."

என்றபடி அவளது தோள்களைப் பற்றினார்.

இவளுக்குக் கூசியது - சென்ட்டின் அதீத வாசனை திணறச் செய்தது.

விலகி ஒதுங்கினாள்.

"ரொம்ப காலமாப் புருஷனோட கையும் கூடப் படாம இருந்தாக்க இல்லியா, அதான் கூச்சம்... ம்ம்?"

சிரித்தவரின் முகத்தில் கள்ளமும் கபடமும் கலந்திருந்த தாய்த் தோன்றியது. சாகி பயந்தாள்!



## 13

பங்களாவின் விஸ்தீரணமான வரவேற்பறையில் மட்டுமே ஒரு மத்திய வர்க்கக் குடும்பம் சௌகர்யமாய்க் குடித்தனம் பண்ணியிருக்கும்.

"அத்துவானக் காட்டில் யாரம்மா எங்களைத் தேடி வாரா?" என்று அங்கலாய்த்திருந்த அன்பரசு ஐந்து பேராவது வசதியாய்



அமர்ந்து காலாட்டும் அளவில் நான்கு சோபாக்களைப் போட்டிருந்தார். அது போகச் சிம்மாசன டைப் நாற்காலிகள் வேறு!

வெல்வெட் ரகத் திரைச்சீலைகளும், கம்பளங்களும் வீட்டிற்கு நிறமேற்றின.

"என்னம்மா, வீடு பிடிச்சிருக்குதா?"

"ம்ம்."

வீடு என்பது செங்கலும் சாந்தும் அலங்காரமும் மட்டுமா? அதில் வசிக்கும் மனிதர்களின் அன்பும் பண்பும்தானே?

"என்னதான் சுற்றிலும் ஏலமும் தேயிலையுமாய் மணத்தாலும், வீட்டுக்குள்ளே பெண் வாசனை இருக்கணும். அப்பத்தான் அது வீடு."

இது அன்பரசுவின் சித்தாந்தம் போல என்று நினைத்தவள் புன்னகைக்க முயன்றாள். அவரிடமிருந்து விலகியே நின்றாள், நடந்தாள்.

ஆரம்பத்தில் தோன்றிய பயம் சற்றுக் குறைந்திருந்தது.

ஏனெனில் வீடு முழுக்க வேலையாட்களின் நடமாட்டம்.

இத்தனை பேரையும் மீறி அன்பரசு தன்னிடம் தப்பாய் நடந்து விட முடியாது என்ற ஆசுவாசம்.

"அஞ்சலி... உங்க பொண்ணைக் காணோமே?"

"டேபிள் டென்னிஸ் விளையாடிட்டிருப்பா இந்நேரம்."

"ஓ... யார்... யாரோட?"

"மானேஜரோட பயல் ஒருத்தன் ஸ்கூல் படிக்கறான். ஓரளவு ஆடுவான்."

"சரி - வரச் சொல்லுங்களேன்."

ஏறக்குறையக் கெஞ்சினாள்.

"சொல்லி விடறேம்மா. நீ முதல்ல நம்ப தோட்டத்துத் தேயிலையை ருசிக்கணும்."

"டேய்..."

அவரது உறுமலுக்கான அர்த்தங்கள் வேலையாட்களுக்கு அத்துப்படி போல. பச்சையும் பழுப்புமான சீருடையில் ட்ராலியைத் தள்ளியபடி வந்த சிப்பந்தி, இவளின் விருப்பம் கேட்டு, அதன்படி தேநீர் கலந்தான்.

"பாக்கியத்தை மாதுளை, மாம்பழமெல்லாம் வெட்டச் சொன்னியா?"

"தயாராகிட்டிருக்குங்க, ஐயா."

வாசற்புறம் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு, எழுந்தார்.

"நம்ப தோட்டத்திலே ஏற்றுமதி ரகத் தேயிலையைப் பார்வையிடப் போனவங்க வந்தாச்சு. விலையைப் பேசி முடிக்கணும்மா. இதோ பத்து நிமிஷத்துல வந்துடறேன்."

நிம்மதியாய்ச் சாய்ந்தமர்ந்து தேநீரைப் பருகினாள்.

அபாரமான சுவை, மணம்.

பாக்கெட்டுகளில் அடைபட்ட பின் இதில் பாதியளவு கூட இருக்கவில்லை.



"டீ நல்லாயிருக்காம்மா?"

பழத்தட்டுடன் வந்தப் பெண் விசாரித்தாள்.

"ரொம்ப - இங்கேருந்து டீ ஃபாக்டரி எவ்வளவு தூரம்?"

"அதாவும் ஒரு மணி நேரம்... தேக்கடிக்குப் பக்கத்துலங்க... அம்மா அங்க போயிருக்கீங்கல்ல?"

"ம்ம்... சின்ன ஊருன்னாலும் நிறைய டூரிஸ்ட்டுகளும் நட்சத்திர ஹோட்டல்களுமாய்ப் பிரமாதமாயிருந்தது."

கருப்பும் களையுமாயிருந்த பாக்கியத்தின் முகம் மலர்ந்தது.

"நான் வளர்ந்த ஊருங்கம்மா அது."

நன்கு பருத்த பெண் என்றாலும் நறுவிசாய் உடுத்தி வழவழவென்று சீவி முடித்திருந்தாள். அவ்வப்போது ஜாக்ரதையாய் வாசலைப் பார்த்த திணுசிலிருந்து எஜமான் முன் இப்படிப் பேச மாட்டாள் என்பது தெரிந்தது.

"அப்பாடின்னா இங்கேருந்து டவுனுக்கு நடந்துட முடியாது?"

"கஷ்டம்மா. வழியிலே பூச்சி பொட்டு நடமாட்டம் வேற. நினைச்சாப்பல போய் ஒரு சின்னச் சாமானை வாங்கிற முடியாது. அம்மியில மசாலையைக் கூட்டிட்டு ரெண்டு கிராம்பு தேவையேன்னு பக்கத்துக் கடைக்கு ஓடற கதையெல்லாம் ஏலாது. இது வேற மாதிரி வாழ்க்கைம்மா - பழகணும்..."

இதையேதான் சந்துரு சொன்னான்.

"உனக்கந்த வாழ்வு சிறை போலத் தோணும் - கஷ்டப்படாதே" என்று. தன் இஷ்டப்படி வாழ அது ஒரு சாக்கு என்பது இப்போதுதானே புரிகின்றது.

"திரை போலன்னு..."

"ஆமாம்மா - ஜெயிலு மாதிரி தோணும்."

"எப்படி, எப்போ சாமானெல்லாம் வாங்குவீங்க?"

"தினசரி காலைல ஜீப்பு டவுனுக்குப் போகும்மா - காய், கறி, அன்னைய சமையலுக்கு வேண்டியது, பேப்பரு எல்லாம் வந்துரும். இல்லாம முடியாது."

"காலையிலேன்னா... எப்போ?"

வெறுமே பேச்சை வளர்க்கத்தான் கேட்டாள் சாகரி. அஞ்சலியைப் பார்க்க வந்து இந்த 'பாக்கியம்' தான் வந்தாள் என்பதில் உள்ளூரச் சற்று எரிச்சல்தான்.

"வெள்ளனவேம்மா - அஞ்சரைக்கெல்லாம். ராத்திரியே சாமானு லிஸ்டை டைவரு கையில கொடுத்திரணும். ஐயாக்கு காலை உபோட நியூஸ் பேப்பரு வேணுமே. ஏம்மா உங்களுக்கு ஏதாச்சும் தேவையா?"

"உங்க எஜமானியம்மாதான் இப்போதைக்குத் தேவை. அவங்களைப் பார்க்கலாம்னுதான் வந்தேன்."

"ஐயோ... விளையாடி முடிஞ்சதும் அம்மாக்கு ஜுரமாகிடும்..."

பாக்கியம் ஓடிவிட, எழுந்த சாகரி ஜன்னல் வழியே பார்த்தாள். இதுவும் அந்திப் பொழுதுதான் - கீழ்வானம் சிவந்திருந்தது. ஆனால் கானகம் போலிருந்ததால் இருட்டும் அதிகம்தான். இது போன்ற இடத்தில் சந்துரு உடல் காயத்துடன் மனச் சலிப்புடன் பல வாரங்கள் தனித்திருந்ததை நினைக்கும்போதே உள்ளம் வலித்தது. அந்தத்



துன்பத்திலும் கூடத் தனக்கு ஒரு வார்த்தை சொல்லி விடவில்லையே என்பதும் நினைவு வர, வலியை மீறியது கசப்பு.

சற்று நேரத்தில் திரும்பிய அன்பரசு, 'வீட்டைப் பாரேம்மா' என்று சுற்றிக் காட்டினார். முன்மேல் நடப்பதான அவஸ்தையுடன் அவருடன் போனாள்.

எத்தனை தரம்தான் உம்மகளைக் கண்ணில் காட்டுமய்யா என்று கும்பிடுவது?

இனி அந்தப் பேச்சே எடுப்பதில்லை என்ற முடிவிலிருந்தாள்.

"பசிக்குதாம்மா... சாப்பிடலாமா?"

அன்பொழுகக் கேட்டவர் அவளைச் சாப்பாட்டு அறைக்கு இட்டுச் சென்றார்.

"ம்ம்..."

துளியும் பசியில்லை. ஆனாலும் சாப்பிட்டு விட்டாள்.

"கொஞ்சம் அசதியாய் தோணுது. படுக்கறேன்!" என்று தன் அறைக்கு நழுவி விடலாமே.

இவளுக்கான அறையையும் காட்டியிருந்தார்.

அமுல் வெண்ணெய் மஞ்சள் நிறத்திலிருந்தது. தங்க நிறத் திரைச்சீலைகளும் படுக்கை விரிப்புகளும் அதை அரண்மனை போலாக்கியிருந்தன.

"கெஸ்ட் ரூமிலே ஜக்கூஸி உண்டும்மா... அலுப்புத் தீரக் குளிச்சா உடம்பு கலகலப்பாயிருக்கும்."

விருந்தினரின் வசதிக்காக வெளிப்புறமிருந்து அறைக்குப் போக, வரத் தனி வழியிருந்ததைச் சற்றுத் திருப்தியுடன் கவனித்திருந்தாள்.

சாப்பாட்டு அறையும் பிரமாதம்தான்.

தேக்கத்தி மேசையின் மினுமினுப்பில் முகம் பார்க்கலாம். 12 பேர் அமர்ந்து சாப்பிடக் கூடிய மேசையில் மூன்று வெள்ளித் தட்டுகள் இடப்பட்டிருந்தன.

ஒரு வழியாய் அஞ்சலியைச் சந்திக்கலாம் போல என்று நிமிர்ந்தாள்.

"அம்மா இன்னுமா குளிச்சு முடிக்கலை?"

"ஆச்சுங்கய்யா - ரோகிணி தலை சீவி விட்டிட்டிருக்கா!" என்றாள் பாக்கியம் - பதார்த்தங்களை மேசையில் அடுக்கியபடி.

"அதென்னமோ முடியை நூறு தரம் அழுந்த பிரஷ் செய்துகிட்ட பட்டு போல பளபளங்குமாமே... அதான்... ஹிஹி."

கடந்த பல மாதங்களாய்ச் சாகரி தன் தோற்றத்தில் அக்கறை எடுத்துக் கொள்வதேயில்லை. கூந்தல் மிகக் கழிந்திருந்தது.

சரும நிறமும் மங்கியிருந்தது.

கண்களின் இழந்த ஒளியைத் தூண்ட, தனி மைகூடப் தீட்டவில்லை.

புன்னகையும் பூக்க மறந்து வரண்ட உதடுகள்...

"வாம்மா, அஞ்சலி."



உற்சாகமானார் அன்பரசு.

ஆவலுடன் திரும்பினாள், சாகரி.

வருவது வன தேவதையா?

அத்தனைக்கான இயற்கை எழில் இல்லை. ஆனால் நிச்சயம். ஃபாஷன் டி.வி.யில் இப்பெண் நடந்து வரலாம். அதற்கான தகுதி இருந்தது.

ஒடிசலான தங்க மேனி.

பல ஆண்களுக்குச் சவால் விடும் உயரம்.

பட்டுத் துணியாய் விரிந்த கூந்தல்... அதில் ஆங்காங்கே சிவப்பும் பொன்னுமாய்ச் சாயத் தீற்றல்கள்.

திருத்தமான ஆனால் சற்றுக் கடினமான முகம்.

"ஹலோ.."

தேன் தடவிய குரலும் கூட.

"இதாம்மா நம்ப விருந்தாளி - சாகரி. ரொம்ப நேரம் இவங்களை நீ காக்க வக்கட்டே..."

"ஸாரி - ஆனா நான் இதே ருடீனுக்குப் பழகிட்டேன். மாத்திக்க முடியலை."

"பரவாயில்லை."

அஞ்சலி தனிமையில் வாடுபவளாகவோ அல்லது நட்புக்கு ஏங்கும் ரகமாகவோ தோன்றவில்லை.

இம்மாளிகைக்கு ஏற்ற இளவரசியாய் வாழ்க்கையை ரசித்துக் கொண்டிருக்கிறாள் என்று பட்டது.

பாக்கியம் பரிமாற, ஏதேனும் பேச வேண்டுமே என்ற நிர்பந்தத்தில் சாகரிதான் பேச்சை ஆரம்பித்தாள்.

"உங்களுக்கு நான் நன்றி சொல்லணும், அஞ்சலி. நீங்க வசந்தராம்மா வீட்டில சந்துரு உடம்பு நலமில்லாமல் இருந்தப்போ ரொம்ப உதவியாய் இருந்தீங்கன்னு நினைக்கறேன்."

அதுவரை ஒரு அலட்சிய அரைச் சிரிப்புடனிருந்த அஞ்சலியின் முகம் மாறியது.

"சந்துருவை உங்களுக்குத் தெரியுமா?"

"என்னம்மா இப்படிக் கேட்டுட்டே? சாகரி அளவுக்குச் சந்துருவை நெருக்கமாய் அறிஞ்சவங்க வேற யாருமில்லை!" என்ற அன்பரசுவின் முகத்தில் மறுபடி அதே கபடம் நிழலாடியது.

"அப்படீன்னா சந்துரு..?"

"அவர் என் கணவர்."

அடிபட்ட பறவை போலத் தன் தகப்பனைப் பார்த்தாள், அஞ்சலி.

அவர் முகத்தில் தெளிந்ததென்ன... ஏளனப் புன்னகையா?

"நானும் இவங்க முழுப் பெயரையும் சொல்லி அறிமுகப் படுத்தியிருக்கணும்மா - திருமதி சாகரி சந்திரகாந்தன்னு."

பட்டென்று எழுந்தாள் அஞ்சலி.

அந்த வேகத்தில் அவளது இடது கைப் பக்கமிருந்த சிற பீங்கான் தட்டு விழுந்து நொறுங்கியது.



சாகரி விக்கித்திருக்க, மாய மோகினி போல அங்கிருந்து ஓடி மறைந்தாள் அஞ்சலி!

"உங்களை அப்பாவி, பழுதோன்னு நான் அப்பப்ப நினைக்கிறதுண்டு. ஆனா அப்படியில்லை நீங்க. பாம்பு ஜாதிதாங்கறது இப்ப முழுக்கப் புரிஞ்சு போச்சு."

சிநேகிதி வீட்டு வளைகாப்பு வைபவம் முடிந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த வசந்தரா பொரிந்தாள்.

பாம்பு எனப்பட்ட புருஷனான பாலன் சீறவில்லை... பரிதாபமாய்ப் பார்த்ததோடு சரி!

"அழுத்தம். வாயைத் திறந்து என்ன ஏதுன்னு கேட்கறதில்லை."

"கேட்டா, அதுக்குத் தனியா நாலு திட்டு விழும்."

"நானும் புஷ்பாவும் எத்தனை காலமாய்ச் சிநேகம்?"

"அதுனாலதான் அவங்க வீட்டு விசேஷத்துக்கு ட்ரைவர் வேலை பார்த்து உன்னை அழைச்சுட்டுப் போனேன்."

"பிறரும் ட்ரைவர் மாதிரி ஓரமாய் ஒதுங்கி நிக்கணுமாக்கும்? அங்கயிருந்தவங்ககிட்ட பிரியமாய் நாலு வார்த்தை பேசினீங்களா? நல்லது பொல்லது பற்றி ஒரு விசாரிப்பில்லை. இதுவே உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணுன்னா நாங்க ஓடி ஓடிச் செய்யணும்.

"இன்னைக்கு ஒரு நாளைக்கு என்னால சமைக்க அனுப்ப முடியாது. சமாளிக்கச் சொல்லிடுங்க சாகரிட்டேன்னதுக்கு முடியாதுன்னாச்சு. கடைசியிலே நான் அன்புண்ணா மூலம் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செஞ்சேன்."

"உடம்பு சரியில்லாத தகப்பன்... பரிச்சயமில்லாத ஊர்... அதான் நாம..."

"அழுத்தம் மட்டுமில்லை. பொய்யும் சரளமாய் வருது."

மனைவி இடைவெட்ட, பாலன் விழித்தார்.

"என்ன பொய்?"

"உண்மையை மறைக்கறதும் பொய்தானே? ஏதும் சொல்லாமத்தானே காயம் ஆறாமல் கட்டிலோட கிடந்தவனை நம்ப வீட்டில் வந்து விட்டீங்க? 'இவன் கல்யாணமானவன் - ஆனா பெண்டாட்டி இவனைத் திரும்பியும் பார்க்கலை!'ன்னு சொல்லாம மறைச்சுட்டீங்கல்ல?"

"அவன் புண்ணு ஆறுறதுக்கும் இதுக்கும் என்ன வக சம்பந்தம்?"

"உரியவள் இருக்க, யாருமில்லாத அநாதை மாதிரி நம்ப பொறுப்பிலே கிடந்தால்... நமக்கு மட்டும் என்ன சம்பந்தம்?"

"பக்கத்து எஸ்டேட்டை வாங்கியிருந்த பையன். ருத்தருக்கொருத்தர்தானே நாம் ஆதரவுங்கற வகையிலே சய்த உதவி - அவனைப் பற்றி எனக்குமே அதிகம் தெரியாது. லவன், கடுமையான உழைப்பாளிங்கறதைத் தவிர..."

"அதெல்லாம் சரி. ஆனா உங்க பொய்யால பிரச்சினை ய திசை மாறியிருக்குதே."

"இப்படிப் புதிர் போடாதேயேன், வக."

கையெடுத்துக் கும்பிடாத குறையாய்க் கெஞ்சினார்.



"சந்துரு உடம்பு தேற நம்ப வீட்டிலே இருந்தப்போ, அஞ்சலியும் சதா நம்ப வீட்டிலேதான்."

"இது அடுத்த புதிர்!" - பெருமூச்செறிந்தார்.

"எல்லாம் 'பிட்டுப் பிட்டு' வைக்கணுமா? அந்தப் 'பழுது' வேஷமெல்லாம் வெளுத்தாச்சு!"

'பாம்பு' மீண்டும் சோகமாய்ப் பெருமூச்செறிந்தது! "பண்றதெல்லாம் பண்ணிட்டு 'புஸ்புஸ்'ங்காதீங்க. பெண் பாவம் பொல்லாதது."

"பெண் பொல்லாததுங்கறது தெரியும்!"

"குசும்புப் பேச்செல்லாம் வேண்டாம். சந்துரு கல்யாணமாகாதவன்னு நம்பித்தானே நம்ப அஞ்சலி அவங்கிட்ட அத்தனை நெருங்கிப் பழகினா?"

"இதை நீ உன் அண்ணன் பொண்ணுட்ட கேட்கணும்."

"உங்க தப்பை இப்படி மூடி மறைக்கப் பார்க்காதீங்க. அவனுக்கு நேரா நேரத்துக்கு மருந்து தந்து, ஆதரவாய்ப் பேசி... கூடவேயிருந்து..."

இப்போது பாலனுக்குச் சந்துருவின் மீதுதான் கோபமாய் வந்தது.

இந்தப் பயல் ஏன் ஒரு கன்னிப் பெண் தன் முதுகைத் தடவ விட்டுட்டுக் கவிழ்ந்து கிடந்தான்? தான் சாகரியைப் பற்றிச் சொல்லலைன்னால்.., அவளைப் பற்றி எனக்கே நாலு நாளாய்த்தான் தெரியும். சரி, அந்தப் பயலுக்கு என்ன கேடு? முதுகிலே அவ களிம்பைத் தடவினால் இவன் வாயுமா ஒட்டிக்கும்? சொல்ல வேணாமா? - 'அம்மாடி! எனக்கு ஊசிலே

பெண்டாட்டி இருக்கா'ன்னு. இவன் சம்சாரிங்கறதை நான் தெரிஞ்ச வககிட்டே சொல்லியிருந்தாலும்.

'அப்படீன்னா இவன் சம்சாரம் வந்து சிகருளை செய்யட்டுமே!' என்றிருக்கக் கூடும். அத்தனை பரிதாபத்துடன் சந்துருவைப் பராமரித்திருக்க மாட்டாள்.

"அஞ்சலி சந்துரு மேல கொள்ளைப் பிரியம் வச்சுட்டா - நானும் இதுங்க நல்ல ஜோடிதான்னு நினைச்சு குறுக்கே நிற்கலை. திடீர்னு இப்போ இவர்தான் சந்துருவோட மாமனார் - இவ அவம் பத்தினிங்கறீங்க - முன்னமே விசாரிச்சுத் தொலைக்கறதுக்கென்ன?"

வளைகாப்பு வைபவத்தின் பெருவாரியான பெண் கூட்டத்தில் அந்நியக் கிரகவாசி போலத் தான் விழித்ததை மனைவி நப்பர்த்தம் செய்து கொண்டிருக்கிறாள். மனைவி பக்கத்தும் சிநேகிதத்துடன் என்ன இழையல் என்ற அலட்சியம் என்று. விளைவு இப்போது கிழிபடுகிறோம் என்பது புரிந்தது.

மனைவியிடம் எகிற முடியாத பாலன் மனதுக்குள் சந்துருவைத் தொடர்ந்து திட்டினார்.

சந்துரு ஏன் சொல்லவில்லை?

அளவுக்கு மீறித் தன்னிடம் ஒரு கன்னிப் பெண் இழைய,

'நான் திருமணமானவன்!' என்று ஏன் அவளை சரிக்கவில்லை? இங்கு பாசமாய்ப் பழகிய வசந்தராவிடம் இல்லவா விவரம் சொல்லாமல் மறைத்திருக்கிறான்...?

வக சொல்வதுபோலச் சந்துரு பாம்புதானோ? தான்தான் ந்து என ஏமாந்து விட்டோமா? இல்லாவிட்டால் பாவம்



அந்தப் பெண் சாகரியை ஏன் தவிக்க விட்டுவிட்டு இவனிங்கு தனியே கிடக்க வேணும்?

வெவ்வேறு மலர்கள் தேடும் வண்டுதானோ சந்துரு?



## 14

புருஷனிடம் பொருமித் தீர்த்து விட்டாளே ஒழிய, வசந்தராவிற்கு இளகிய மனம்தான்.

யோசிக்க யோசிக்க அவளுக்குள் சாகரியின் மீது பரிவு சுரந்தது.

பாவம், நம் அஞ்சலியைப் போல அதும் தாயில்லாத பெண். புருஷனை விட்டு விலகின சோகம் முகத்திலே அப்பட்டமாய்த் தெரிகிறதே.

குறை சொல்ல வேண்டுமானால் அது சந்துருவைத்தான் -

'சென்னையில் என் மனைவி இருக்கிறாள்!' என்ற வார்த்தையை விடவேயில்லையே அவன்... இளசுகளுக் குள்ளே என்ன சண்டையோ, இத்தனை வீம்பு பண்ணு கிறார்கள்.

அவளது தாய் அவளுக்கு உபதேசமென்று திருமணச் சமயம் சொன்னது ஒன்றேதான் -

"புருஷன் பொண்டாட்டியாச்சு நீங்க - இனி நாம ஒருத்தர்ங்கற எண்ணந்தாம்மா உங்களுக்கு இருக்கணுமே

ஒழிய, ரெண்டு பேர்ல யாரு பெரியவங்கன்ற வறுக்கன்னை வந்துட்டா வாழ்க்கை நரகமாயிடும். ஜாக்ரதை.''

உண்மையான உபதேசம்.

'சந்துருவின் மனைவி' என்று அறிமுகப்படுத்தப்பட்ட அதிர்ச்சியில், பாவம் அந்த சாகரியிடம் முகம் கொடுத்துப் பேச முடியவில்லை. அவன் கண்களைக் கூடப் பார்ப்பதைத் தவிர்த்தாயிற்று. கடந்த நான்கு நாட்களாய்ச் சாப்பாடு அனுப்பினானே ஒழிய, போய் ஆறுதலாய்ப் பேசி, அனுசரணையாய்ப் பரிமாறிச் சாப்பிட வைத்ததில்லை.

குற்ற உணர்வுடன் வீடு வந்ததும் முதல் வேலையாய் மருத்துவ மனைக்கு ஃபோன் செய்து பார்த்தான்.

தொடர்பு கிடைக்கவில்லை. இன்னும் பழுது நீக்கப்படவில்லை போலும்.

அடுத்ததாய்ப் 'பேசி'யின் மூலம் தன் அன்னையை அழைத்தான்.

கருவியும் மணியடித்து அழைத்தது.

எடுத்தது அன்பரசேதான்.

''என்னம்மா, எப்படியிருந்தது வளைகாப்பு?''

''நல்லா நடந்துக்கண்ணா - நான் கேட்டதுபோல சாகரிக்கும் ல அப்பாவுக்கும் சாப்பாடு...?''

''நானே எடுத்துட்டுப் போனேன் - இப்ப சாகரி இங்கதான் ருக்கறா.''

''எங்க... உன் வீட்டுலயா?''



''பின்னே? அந்தப் பொண்ணுக்கும் ஒரு இடமாற்றம். நம்ப வீட்டுப் பொண்ணுக்கும் நல்ல மாற்றம் வரும்னு தோணுச்சு - எப்படி? நல்ல திட்டம்தானே!''

அவர்கள் பேசி முடித்தபோது வசுந்தராவின் மனம் தெளிந்திருந்தது. சம்பந்தப்பட்ட இரு பெண்களும் சேர்ந்து பேசிவிட்டால் தொல்லையில்லை.

இன்னொருத்தியின் கணவன் சந்துரு - அவனுக்குத் தான் ஆசைப்படக் கூடாது என்பது அஞ்சலிக்குப் புரிந்து போகும். அதே சமயம் சந்துருவை மணந்தவள் அப்படியொன்றும் ஆனந்தமாய் வாழ்ந்து விடவில்லை என்பதும் தெரிய, அவன் மீதிருந்த ஈர்ப்பு வெகுவாய்க் குறைந்து... ஏன், மறைந்தே கூடப் போகலாம்!

இப்படி வசுந்தரா திருப்திப் பட்டுக் கொண்டிருந்த அதே சமயம் ராஜாங்கத்தின் மனதில் அதிருப்தியை, அச்சத்தை விளைவித்திருந்தார் அவரது புது அறைத் தோழர்!

''இந்தாங்க, பேப்பர் வாசிக்கறீங்களா ப்ரொஃபஸர்?''

''தாங்க்ஸ் ஸார் - நேத்து ராத்திரி நல்லாத் தூங்கினேன் ஸார் - உங்ககிட்டகூட அதிகம் பேச முடியலை. ஜெனரல் வார்டுலே பத்துப் படுக்கைங்க. ராத்திரி முழுக்க யாரேனும் இருமறதும், பேசறதும் நடக்கறதுமாய்... தூக்கம் கலைஞ்சிடும். இங்கே திருப்தியான தூக்கம். தாங்க்ஸ்... தவிர இது மாதிரி லக்ஸரி வேற...''

''பேப்பர் ஒரு லக்ஸரியா?''

''அத்துவானத்துல கடக்கட செய்தி வாசிக்கக் கிடைக்கறதும் கொடுப்பினைதான். உங்க மாப்பிள்ளை புண்ணியத்துல நானும் அனுபவிக்கறேன்.''

வந்த நர்ஸிடம் இருவரும் மாறு முட்டித் தள்ளிய வேலுமணியை பற்றி விசாரித்துக் கொண்டனர்.

மருத்துவமனையில் தங்க நேர்கையில் சக நோயாளிகள் அனைவரிடமும் ஒரு புதுப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது.

''நல்ல ஸ்டெடி இம்ப்ருவ்மென்ட் - வேலு அம்மா இப்பத்தான் மனசு ஆறிச் சாப்பிட்டாங்க.''

''குட்.''

நர்ஸ் பணிவிடைகளை முடித்துக் கிளம்ப, இருவரும் சாப்பிட்டபடி பேச்சைத் தொடர்ந்தனர். ப்ரொஃபஸருக்கு அல்சர் தவிர மற்றப்படி ஆரோக்கியக் குறைவு இல்லை என்பதால் ராஜாங்கத்திற்கு ஒத்தாசையாகவே இருந்தார்.

''வேலுமணியால எனக்கு வசதின்னாலும், பாவம்! உங்க மகளுக்கு இடைஞ்சல்... மாப்பிள்ளையும் இங்கே இல்லாததால வேற யாரோ புது நண்பர் வீட்டுக்குப் போக ...ந்ததாய்ச் சொன்னீங்க.''

குடிக்கத் தண்ணீரும் துடைக்கத் துவாலையும் எடுத்துத் ...டி வினவினார்.

''ஆபத்துக்குப் பாவமில்லை. எங்களுக்குச் சாப்பாடு ...ட்டு வந்த அன்பரசு ரொம்பப் பிரியமாய் அழைச்சார். ... சமயம் இங்கேயும் இடத்துக்கான நெருக்கடி.''

''...ர்... யாருன்னு சொன்னீங்க?''

...ராசிரியர் நெற்றி சுருக்கினார்.



''அன்பரசன்னு எஸ்டேட் ஓனர். மிஸஸ் பாலனோட அண்ணனாம்.''

''அவர் வீட்டுக்கா உங்கள் மகள் போயிருக்காங்க?''

''ஏன்... என்ன?''

தகப்பனது பதட்டத்தைப் பார்த்த பேராசிரியர் சுதாரித்தாலும் முழுக்க மறைக்கவும் விரும்பவில்லை.

''ஊரிலே அவருக்கு அத்தனை நல்ல பெயரில்லை. ஆனாலும் தங்கைக்குத் தெரிஞ்ச குடும்பம்... பெரிய இடத்திலே குழப்பம் செய்யவும் துணிய மாட்டார். கவலைப் படாதீங்க.''

''நல்ல பேரில்லைன்னா... என்ன மாதிரி?''

''பெண் விஷயத்தில் ஆள் கொஞ்சம் சபலிஸ்ட்டுன்னு கேள்வி. அவர் எஸ்டேட்டில வேலை பார்த்த ரெண்டு இளம் பெண்களைக் காணும்... கண்டு பிடிக்க முடியலைன்னு பேசிக்கறாங்க...''

''கடவுளே! கடவுள்தான் எம்மகளைக் காப்பாத்தணும்.''

சாகரி அப்பொழுது அன்பரசு வீட்டில் இல்லை என்பது அறியாமல் வேண்டிக் கொண்டிருந்தார் ராஜாங்கம்!

பீங்கான் தட்டைத் தட்டி விட்டு ஓடிய அஞ்சலியைப் பிரமிப்புடன் பார்த்தாள் சாகரி.

இதென்ன தர்ம சங்கடமான நிலைமை?

''ஒண்ணுமில்லம்மா - ஒரு பத்து நிமிஷம் கொடு அவளுக்கு... மறுபடி வந்திடுவா.''

"ஏன் - என்னாச்சு?"

"அவ கண்ணீரை நீ பார்க்க வேண்டாமேன்னு போயிட்டா - தன்னைப் பலவீனமானவளாய்க் காட்ட அஞ்சு விரும்பறதில்லை. மனசைத் தேத்திட்டு வருவா."

"ஏன் அழணும்?"

கேட்டுத் தெளிவு பெறாவிட்டால் தன் தலை வெடித்துவிடும் போன்ற நிலையிலிருந்தாள் சாகரி.

"அஞ்சலி தன்னைச் சந்துருவுடைய காதலியாய், வருங்கால மனைவியாய்க் கற்பனை செய்திருந்தாள். நீதான் அவன் மனைவிங்கறதுன்னு தெரிஞ்ச அதிர்ச்சி."

அதிகம் சுற்றி வளைக்காமல் விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டார் மனிதர்!

"என்ன சொல்றீங்க? அஞ்சலியும் சந்துருவும்... ஆக அதான் என்னை இங்கே அழைச்சுட்டு வந்தீங்களா?"

"ஒரு மாதிரி அப்படித்தான்னு வையேன்மா - முதல்ல நான் ட்டிய மாப்பிள்ளைகளை வேண்டாம்னு ஒட்டு மொத்தமாய் க்கைக் கழிச்சா... சரி - அம்மணி மனசுல வேற ஆள் ருக்காங்கறதை யூகிச்சுட்டேன்... ஆனா 'யாரு அவன்'னு டக்கக் கேட்கலை. இவ தாயில்லாத குழந்தை. தகப்பன் ஒரு லை வரைக்குந்தானே போக முடியும்? ஆனா இவ ந்தா வீட்டுக்கு ஓடி ஓடிப்போனதை வச்சுக் கணக்குப் ட்டேன். இப்ப அது சரிதான்னு புரிஞ்சிடுச்சு."

வெற்றியோடு புன்னகைத்தார்.

கரிக்குத் துக்கம் தொண்டையை இறுக்கியது.



ஆக - அவரவர்க்குத் தன் தன் பிரச்சினை. இடையில் கரும்பாய்ச் சிக்கிப் பிழியப்படும் தன்னைப் பற்றி யாருக்கும் அக்கறையில்லை.

"இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் வந்திருக்க மாட்டேன்."

நினைத்தளவு காட்டமாய் வெளிவரவில்லை குரல்!

"அடடே... அப்படி நினைக்கக் கூடாதம்மா நீ. உன்னை ஆஸ்பத்திரியிலே பார்த்த நிமிஷமே உம்மேல இனம் தெரியாத அன்பு, அனுதாபம் ஏற்பட்டிருச்சு - அதுனாலதான் அழைச்சேன்... இங்கே நீ எங்க விருந்தாளியாய் ரெண்டு நாளேனும் தங்கணும்மா. அதுதான் எங்களுக்குக் கௌரவம்... இந்த ரெண்டு நாளும் நீ அஞ்சலிக்குப் புத்தி சொல்லணும். அவளை விட ஓரிரு வயசுக்கு நீ மூத்தவளாய் இருப்பே - ஒரு அக்காளைப் போல எடுத்துச் சொல்லம்மா."

சாகரி நீர் முத்துக்களால் வெள்ளித் தட்டில் கோலமிட்டிருந்தபடி உள்ளே கொதித்திருந்தாள்.

"நீ சந்துருவோட வாழ்ந்தவ - அவரோட சேர்ந்து வாழ முடியாமத்தானே பிரிஞ்சு கவலையாய்க் கிடக்கறே? உங்க பிரிவு ஏன்... எப்படிங்கறதை விவரமாய்ச் சொல்லு. அந்த முட்டாள் பொண்ணுக்குப் புரியட்டும்."

சாகரியின் விழிகள் சிவப்பதைப் பார்த்ததும் தன் பேச்சின் கருதியைக் குறைத்தார்.

"இந்தத் திட்டத்திலே ரெண்டு மாங்காய் விழுமேம்மா. உனக்கு உம்புருஷன் கிடைப்பார். அஞ்சலியும் வேற ஒருத்தர் மனைவியாகலாம்ல... ரெண்டு பேருக்குமே வாழ்வு அமையும்."

கண்களை மூடி யோசித்தாள்.

சற்று அமைதியாய்ச் சிந்திக்க வேண்டிய நேரமிது. ஆனால் குழப்பம் அதிகமிருந்தது.

"அஞ்சலிக்குப் பெரிய இடத்து மாப்பிள்ளை பார்த்திருக்கேம்மா. சொத்து, சம்பாத்தியம், அழகு எல்லாம் நம்பர் ஒன். முக்கியமாய் அஞ்சலி அவருக்கு நம்பர் ஒன்னாய்... அதாவது முறையான மனைவியாய் இருக்கலாம்..."

சாகரி எழுந்தாள்.

"என்னம்மா, அஞ்சலி போல நீயும் கிளம்பிடாதே - வயிறு நிறைஞ்சாத்தான் புத்தி யோசிக்கும்!" என்றார் அவர் - கோழி ரோஸ்ட்டைச் சுவைத்தபடி.

"வயிறு பாதி நிரம்பியிருந்தாத்தான் தெளிவாய் யோசிக்கலாம்."

"வாம்மா - அஞ்சலி, சாப்பிடு."

ஆக, அன்பரசு சொன்னதுபோல மகள் திரும்பி விட்டாள். அவள் விழிகளும் சிவந்திருந்தன.

"இப்பத்தான் சாகரிட்ட சொல்லிட்டிருந்தேன். அஞ்சு பேபி - நீங்க ரெண்டு பேருமே தைரியமாய் வயிறாரச் சாப்பிடலாம்... ஏன்னா இன்னும் சிற்றிடைச் சிங்காரிகளாய்த்தான் இருக்கீங்க!"

வேறு வழியின்றி மறுபடி அமர்ந்த சாகரி பெயருக்கு ஏதோ கொறித்தாள். அன்பரசுவின் அசட்டுச் சிரிப்புகளைப் பெண்கள் இருவருமே காதில் வாங்கினதாய்த் தோன்றவில்லை.

சன்னமான விரோதத்துடன் மௌனம் காத்தனர்.

"டீயைப் பால்கனியில் போய்க் குடிக்கலாமே!"



இரு பெண்களும் இயந்திரமாய் அன்பரசுவைத் தொடர்ந்தனர்.

கண்ணாடிக் கதவைத் திறந்து பால்கனியில் கால் வைத்தவர்களை வாசனையான குளிர்காற்று ஆவேசமாய்த் தடவித் தழுவியது.

வேலைக்காரர்கள் அங்கிருந்த வேலைப்பாடு மிக்க 'ராட் இரும்பு' நாற்காலிகளில் குஷன்களை வைக்க, அமர்ந்தனர்.

வானத்தில் நிலவு ஆரஞ்சுச் சுளைபோலக் கிடந்தது. அதன் சன்ன ஒளியில் சல்லாத் துணி போர்த்திய உலகம் அலாதிக் கவர்ச்சியுடனிருந்தது. அங்கும் இங்குமாய் நட்சத்திரங்கள் மின்ன ஆரம்பித்திருந்தன.

"ரொம்ப அழகாயிருக்குது."

தன்னை மீறிப் பாராட்டினாள் சாகரி.

தேநீர் ட்ரே வந்தது. இரு கோப்பைகளுடன் மட்டும். அப்போதுதான் அன்பரசு தங்களுடன் இல்லாததைச் சாகரி உணர்ந்தாள்.

"உங்கப்பா...?"

"அவர் போயாச்சு - நாம ரெண்டு பேரும் தனியாய்ப் பேசிக்கணுங்கறதுதான அவர் திட்டம்?"

பால்கனியின் மின்விளக்குகள் மங்கல்தான். அதிலும் அஞ்சலியின் அழகு மங்காமல் பிரகாசித்தது.

"டீ எடுத்துக்கோங்க."

தேநீரைக் கலந்து உபசரித்தாள் அஞ்சலி.

சில்வண்டின் விநோத சீங்காரப் பின்னணியுடன் இத்தனை ரம்மியமான இடத்தில் சுவையான தேநீர் பருகுவது மனோகரமான விஷயம். ஆனால் அதை அனுபவிக்கும் மனோநிலை இரு பெண்களுக்குமே இல்லை. ஒருவரை ஒருவர் சற்றுச் சந்தேகத்துடன், சஞ்சலத்துடன் பார்த்துக் கொண்டனர். தேநீர்க் கோப்பையை மறைவாகப் பயன்படுத்தி மற்றவரை ஆராய்ந்தனர்.

"எங்கப்பா நான் உங்ககிட்டபேசணும்னு என்னை இங்கே அனுப்பின விஷயம் என்னன்னு உங்களால் யூகிக்க முடியுதா, சாகரி?"

காலித் தேநீர்க்கோப்பையை ட்ரேயில் வைத்த அஞ்சலி பேச்சை ஆரம்பித்தாள்.

இதென்ன புதுக்கதை?

'சந்துருவை மறக்குமளவு... ஏன், வெறுக்கும் அளவு நீ அஞ்சலியிடம் பேசி அவள் மனதை மாற்ற வேண்டுமம்மா' என்று தன்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்த அன்பரசு அப்படியொரு வேலையை மகளுக்கும் தந்திருந்தாரா?

அஞ்சலியின் கண்கள் அதீதமாய் மின்னின-

படமெடுக்கும் பாம்பின் எதிரே அமர்ந்தாற்போலச் சாகரி தவித்தாள்.

"என்ன... என்ன விஷயம்?"

"எங்கப்பாவைப் பற்றிய உங்ககணிப்பு என்ன?"

"அவரிடம் அதிகம் பழகலையே... திறமையான முதலாளி, வியாபாரியாய் இருக்கணும் - பாசமான அப்பா..."



"ஒரு மனிதராய்... ஆணாய்...?"

"சொன்னேனே... அதிகம் பழகலைன்னு."

"நீங்க புத்திசாலின்னு கணிச்சேன், சாகரி. 'டக்'குனு உரிமையோட எனக்குச் சந்துருவின் சார்பிலே நன்றி சொன்னீங்களே... நாசூக்கான ஆனா பலமான உரிமை கொண்டாடல் அது."

"நான் தற்செயலாத்தான் அப்படிப் பேச்சைத் தொடங்கினேன்."

"அப்ப அது உங்க புத்திசாலித்தனமெல்லாம் இல்லை?"

சற்றே கேலியாய்ச் சிரித்தாள்.

அப்பாவிற்கு ஏற்றபெண்தான் என்று மனதுக்குள்ளே சான்றிதழ் தந்துவிட்டு அலுப்புடன் கேட்டாள்.

"விஷயத்தைச் சொல்லுங்க, அஞ்சலி."

"அப்பாவுக்கு உங்ககிட்டே நேராய்க் கேட்கப் பயம், வெட்கம்... அதான் என்னை மறைமுகமாய்த் தூது அனுப்பியிருக்கார் - இல்லைன்னா ஏன் திடீர்னு மறையணும் அவர்... நாம மனம் விட்டுப் பேசட்டுங்கற எண்ணம்."

"ம்ம்."

"அப்பாவுக்குக் கொஞ்சம் சபலம் அதிகம்..."

கண் சிமிட்டியபடி சொன்னாள். இவளுக்கு அப்பேச்சும் செய்கையும் அருவருப்பாய்ப் பட்டன - அந்நேரம் ஏனோ அஞ்சலி அழகாய்க் கூடத் தோன்றவில்லை!

"அம்மா இறந்த பிறகு அவர் மறு கல்யாணம் செய்துக்கலையே தவிர, பெண் துணை, அவள் தர்ற சுகம் இல்லாம

வாழலை... அவரால் அது முடியவும் முடியாது. ஆசைநாயகி போல யாரையாவது வச்சப்பார்... எங்க பழைய வீட்டின் அவுட் ஹவுஸிலே வச்ச ராணியாவே நடத்துவார்."

'ம்' கூடக் கொட்டாமல் தொலைவில் தெரிந்த நட்சத்திரங்களில் பார்வை பதித்திருந்தாள் சாகரி.

"அதுதான் அவருக்கு வசதி. ஏன்னா அடிக்கடி இந்த ஆசை நாயகிகள் மாறிடுவாங்க... முன்னைக்கு இப்போது உள் எவள் இளமையாய், அழகாய்... அப்பா அதிலெல்லாம் கில்லாடி!"

"இதெல்லாம் எங்கிட்டே ஏன் சொல்லணும், அஞ்சலி? இப்படி இவ கிட்டே நம்ப அப்பாவை விட்டுக் கொடுத்துப் பேசிட்டமேன்னு நீ பின்னாடி... ஸாரி நீங்க..."

"நீன்னே என்னை அழைக்கலாம்."

"நீ வருந்தக் கூடாதில்லையா?"

"அப்பாவே, 'மகளே! நீ இதையெல்லாம் எடுத்துச் சொல்லுங்கறப்ப நான் சொல்லாம இருக்க முடியுமா, சாகரி...?"

இம்முறை அஞ்சலியும் வேறெங்கோ பார்த்தபடிதான் பேசினாள்.

"அவர் சமத்தைச் சொல்லச் சொன்னாரா?"

"பின்னே - இப்ப அவர் ஆசை உங்கமேல விழுந்திடுச்சே ...ன்னுச் சொல்லக் கூச்சம். வாழாவெட்டியாய்... இப்படி ...ன வெற்றிலைக் கொடியாய்க் கிடக்கறதை விடச் சாகரி ...டு வாழட்டும்... ராணி மாதிரியே தாங்கறேன்ங்கறார்..."

சாகரிக்கு நம்பத்தான் முடியவில்லை.



வாய் உலர்ந்து வார்த்தைகள் மறந்து போயின! 'என் தந்தைக்கு ஆசைநாயகியாய் இரு!' என்று மகளே தூது வருவது...?

எஸ்டேட் வாழ்வு வித்தியாசம் விநோதம் என்பார்களே... இதுவும் அவற்றில் ஒன்றோ?

"ஒரு வருஷம் தம்பதி பிரிஞ்சு வாழ்ந்தாச்சுன்னா விவாகரத்து சுலபம். ம்யூச்சுவல் கன்ஸென்ட்- பரஸ்பர சம்மதத்தின் பேரில் ரத்து கிடைச்சிடும். அது சம்பந்தமாப் பேச இங்கே வந்தீங்களா?"

மரத்திருந்த புத்தியை உலுக்கிப் பதில் தரச் சாகரிக்குச் சற்று நேரம் பிடித்தது.

"அப்பாவுக்கு ஆக்ஸிடென்ட்... அதுதான் எங்களை எதிர்பாராமல் இங்கே தங்க வச்சிடுச்சு..."

"ஓ... அப்ப சந்துருவோட மறுபடி சேர்ந்து வாழவும் நீங்க வரலை?" அஞ்சலியின் குரலில் நிம்மதியின் தொனி.

"இல்லை. ஆனா உங்கப்பாவுக்கு ஆசை நாயகியாய் இருக்கவும் இங்க வரலை..."

அஞ்சலியின் புருவங்கள் கேலியுடன் உயர்ந்தன.

காற்று இருவர் மேலாடைகளையும் கூந்தலையும் கலைத்து விளையாடியும் இரு பெண்களும் அசையாது சிலையாய் இருந்தனர்.

"அப்படின்னா நீங்க இத்தனை ஒதுக்கமாய் இருக்கற எங்க எஸ்டேட்டுக்கு வரக் காரணம்? யாரையும் தெரியாத இந்த அத்துவானக் காட்டுக்கு எந்த நினைப்பிலே வந்தீங்க?"

''எதையும் நீர் யோசிக்காத என் முட்டாள் தனத்தால்தான் வந்தேன்!'' என்று கத்த வேண்டும் போன்ற ஆத்திரம் பெருகியது சாகரிக்குள்.

ஆனால், ''உனக்காகத்தான் வந்தேன். அஞ்சலி!'' என்றாள் மெள்ள...!



## 15

நன்கு இருட்டிவிட்டதால் கருத்த வானத்தில் நட்சத்திரங்களின் ஜொலிப்பு கூடியிருந்தது.

காற்றில் நறுமணமும் குளுமையும் ஏறியிருந்தன.

ஆனால் அது தடவியும் கூட இரு பெண்களின் உள் உஷ்ணம் தணியவில்லை.

அவர்களிடையே மௌனம் கெட்டித்துக் கசந்தது. ஆனால் அஞ்சலி சுதாரித்துப் பேசினாள் -

''நான் சமீபமாய் வாசித்த ஒரு கவிதை இந்தச் சூழலுக்குப் பொருத்தம் -

'இரவு குளிர் காற்று மூன்றும் தனித்தனிதானா? யாரேனும் பிசைந்து பதார்த்தமாக்கி விட்டனரா?

எப்படியோ

ருசியாகிவிட்டது!' - இது ருசியான பொழுதுதான் இல்லியா?''



சாகரியும் ஆழ மூச்செடுத்துத் தன்னைத் தளர்த்திக் கொண்டாள் - கவிதை அவர்களிடையே நின்ற விரோதத்தைச் சற்றுத் தளர்த்தியிருந்தது.

ஆனாலும் அஞ்சலியின் பேச்சு நெஞ்சை ஆழக் கீறி விட்டிருந்ததே.

''ருசியான பொழுதுதான்- காரம்தான் ஜாஸ்தி.''

''ஸாரி - நீங்க இப்படி அறிமுகமில்லாத மனுஷருடைய அழைப்புக்கு உடனே இசைஞ்சு வந்ததால் உங்களைத் தப்பாய்க் கணிக்க நேர்ந்திடுச்சு. அதுவும் இங்கே ரெண்டு நாள் தங்க நீங்க ஒத்துக்கிட்டது...''

தோளைக் குலுக்கினாள்.

''எஸ்டேட் ரொம்பத் தள்ளியிருக்கறதாச் சொன்னார். தவிர அவர் மகள் இங்கே இருக்கும் துணிச்சலில் கிளம்பினேன்... அப்புறம் வசந்தராம்மாவைத் தெரியும் - மூணுநாளாய் எங்களுக்குச் சாப்பாடு அனுப்பறாங்க - அவங்களுடைய அன்னான்னதாலே...''

''அத்தையும் அப்பாவும் இரு வேறு துருவங்கள்... குணத்துல மட்டுமில்லை. தோற்றத்திலேயும்... வசு அத்தை பார்க்க இத்தனை கவர்ச்சியானவங்க இல்லை. நீங்களும் கூட அப்பாவுடைய கவர்ச்சியிலே மயங்கியிருக்கலாம்னு...''

வேதாளம் மறுபடி முருங்கை மரம் ஏற, இம்முறை சாகரிக்குத் தன் எரிச்சலை மறைக்க முடியவில்லை. தலைக்குச் சாயமடித்து முகத்திற்கு க்ரீம் பூசிய தன் தகப்பனை - மன்மதன் என்கிறாளா இந்தப் பெண்?

''சாத்தியமேயில்லை...'' அழுந்தச் சொன்னாள்.

''என் கேட்டேன்னா முதலாளி தன்னைப் பார்க்கமாட்டாரா, ஒரு ராத்திரிக்கேனும் அழைக்கமாட்டாரான்னு இங்குள்ள பல பொண்ணுங்க ஏங்கறது எனக்குத் தெரியும்...''

''இந்த... இந்தப் பேச்சு ஆபாசமாய் இருக்குது, அஞ்சலி.''

''அப்பா பேச்சிலேயும் கெட்டி! இனிப்பாய்ப் பேசுவார்... ஆங்... மாளிகை மாதிரி வீடு... வகைக்கொரு கார்னு ரொம்ப வசதியானவர் வேற...''

சாகரி எழுந்தாள்.

''எங்களுக்கும் எஸ்டேட்டும் கார்களும் உண்டு, அஞ்சலி... நான் அதுக்காக ஏங்கி அலைபாய வேண்டிய அவசியத்திலே இல்லை.''

''செக்ஸ்?''

விக்கித்துப் போனாள் சாகரி.

''சந்துருவைக் கல்யாணம் பண்ணிப் பல மாதங்கள் வாழ்ந்து இப்ப பல மாதங்களாய்ப் பிரிஞ்சும் இருக்கீங்க. உடல் தேவைகளை நாம புறக்கணிக்க முடியாதே. சந்துருவுடைய முதுகுக் காயத்தைத் துடைக்க மருந்திடும் போதே கூட... ளர்ச்சியாய் உணர்ந்திருக்கேன்... அவரை முழுக்க னுபவிச்ச நீங்க...?''

ஆத்திர மிகுதியால் பேச முடியாது நின்றிருந்தாள் சாகரி.

''சந்துருவும் கூட நான் அவரைத் தொடுவதை ரசிப்பார். 'நீ ந்து போடறப்ப வேதனையே இல்லை... பூவிதழ் றாப்போல இருக்கும்'பார் - அவர் இப்போ நேசிக்கறது னைத்தான், சாகரி... துன்பத்திலே துணையாயிருந்த னைத்தான்.''



சாகரி விழிகளை மூட, அவற்றிலிருந்து சூடான நீர் கொப்பளித்து வழிந்தது.

''ஆங்... இதையும் சொல்லிடறேன் - தன் எஸ்டேட் மையத்திலே சந்துரு வீடு கட்டிட்டிருக்கார்... சீக்கிரம் பூர்த்தியாயிடும் -எங்க வாழ்வு தொடங்கப்போவது அதிலே தான்...''

மறுபுறம் திரும்பி மாளிகையைக் கைகாட்டிப் பார்த்தாள் அஞ்சலி.

''இது அப்பாவோட வீடு. வெளிநாட்டிலே படிக்கற மகனும் அவருக்கு உண்டு. அவனைத் தன்னிஷ்டத்துக்குப் பகடைக் காயாய் அப்பா நகர்த்திக்கட்டும்... என் வாழ்வு என்னிஷ்டத் துக்குத்தான்.''

அஞ்சலி சவாலாய்ச் சொல்லி முடிக்க, சாகரியும் அமைதியாய் ஆனால் அழுந்தச் சொன்னாள்.

''நான் இன்னும் சந்துருவுடைய மனைவி - எப்போதும் அப்படியேதான்.''

''இன்டியன் சென்டிமென்ட்ஸ் அபத்தம், சாகரி - தாலி கட்டிகிட்டா பெண்டாட்டி!'' இதைச் சினிமா வசனம் போலச் சொல்லிவிட்டு வாய் விட்டுச் சிரித்தாள்.

''நம்ப சினிமா மக்களின் மூளையை ரொம்ப மழுங்கடிச்சிருக்க. ஒருத்தன்... ஒரு குட் ஃபார் நத்திங் ஃபெல்லோ இவளுக்கு வலுக்கட்டாயமாய்த் தாலி கட்டிட்டாலும் நாயகி அதைப் பிடிச்சுட்டுக் கண்ணீர்விடுவா, பக்கம் பக்கமாய் டயலாக் அடிப்பா - ஆனா கழட்டமாட்டா! முறையாய் மனசுக்குப் பிடிச்சவன் கட்டினால்தான் அதுக்கான மதிப்புங்கறதைக்கூட யோசிக்க முடியாத மக்கள்.''

"இந்தத் தாலி அப்படிப் பிரியமும் மதிப்புமாய் எங்கழுத்திலே ஏறுனதுதான்..."

"மே பி. எனக்குத் தாலி கூட முக்கியமில்லை... ஆனா சந்துரு முக்கியம்! அவரோடு கடைசி வரைக்கும் இந்த ஆசை குறையாமல் வாழ முடியும்ங்கற நம்பிக்கை இருக்குது. ஆக நீங்க விவாகரத்து தாணும்னு கூட நான் எதிர்பார்க்கலை."

சாகரிக்குச் 'சுருக்'கென்றது.

இவள் தன்னை விட இளையவள்.

திமிர் அதிகமிருந்தாலும் கூடவே புத்தியும் இருக்கிறது. தாலியை விடச் சந்துரு முக்கியம் என்பதைப் புரிந்து கொள்ளும் புத்தி.

நிஜம்தானே...? மனைவி என்ற வெற்றுப் பட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு கட்டினவனை விட்டு விட்ட தான் முட்டாள் என்பது புரிந்தது.

"கொக்கு அன்னப்பறவையின் கதை தெரியுமா, சாகரி? நத்தைக்காகக் குளத்தில் கலங்கிய நீரை அலகால் துழா விட்டிருந்ததாம் கொக்கு. சொர்க்கத்திலேருந்து வந்த அன்னப் பறவை தன்னைப் பற்றியும் மோட்சம் பற்றியும் பிரமாதமாய் விவரித்ததாம்..."

அங்கிருந்து விலகி ஓட முடியாமல் கட்டுண்டவன் போலச் சாகரி கதையைக் கேட்டபடி நின்றாள்.

"சொர்க்கத்திலே நத்தை இருக்குமான்னு விசாரித்ததாம் கொக்கு. 'இல்லை'ங்கற பதில் வந்ததும் அலட்சியமாய்,

'அப்ப எனக்கு மோட்சம் எதுக்கு?'ன்னு தன் துழாவலைத் தொடர்ந்ததாம் கொக்கு! - உங்களுக்குப்



பரிசுத்தமான மனைவிங்கற அந்தஸ்து சொர்க்கமாய் இருக்குது. ஆனால் எனக்கு அதைவிடச் சுவையான நத்தை, அதாவது என் சந்துரு முக்கியம்... நாங்க புது வாழ்வுக்காய் ஆர்வமாய்க் காத்திருக்கிறோம்..."

"போதும், அஞ்சலி... இனி உம் பேச்சை... இதுமாதிரியான அபத்தத்தைக் கேட்கிறதாய் இல்லை."

"பேச்சுவார்த்தையின் முதல் கட்டத்திலேயே மிரண்டால் எப்படி, சாகரி? நீங்க இங்கு இருக்கப் போற ரெண்டு நாளும் நான் பேசிப்பேசி உங்க மனசை மாத்த முயற்சிக்கணும் - இது என் அப்பாவோட உத்தரவு!"

"ஸாரி... நான் நாளை காலையே கிளம்பறேன் - உங்கப்பா காலை ஃபாக்டரி போறப்போ நானும்..."

"அத்தனை சீக்கிரம் அப்பா கிளம்ப விட மாட்டாரே! 'வேண்டாமா, விருப்பமில்லையா - சரிம்மா! போயிட்டு வா!'ன்னு கையசைத்து விடை தர்ர ரகமில்லை அப்பா. யாரையும் தன் வழிக்கு மடக்க அவருக்குத் தெரியும். மடங்காத சில பொண்ணுங்களை இப்போ எங்கேன்னு யாருக்குமே தெரியலை. மாயமாய் மறைஞ்சுட்டாங்க."

"ச்சே...உன்னைப் பெற்றவர் பற்றியும் மாற்றான் மனைவியைப் பற்றியும் இத்தனை கேவலமாய்ப் பேச உனக்குக் கூசலியா?"

"என்னை எம்போக்கிலே விட்டாப்போதும் - அப்பா வுடைய வாழ்க்கை முறை பற்றி விமர்சிக்க மாட்டேன்."

"அதுக்காக இப்படியொரு தூது... வேலை..."

"சொக்கையாய்ச் சொன்னா மாமா வேலை...!" வறட்சியாய்ச் சிரித்தாள் அஞ்சலி - "விரும்பறீங்களோ இல்லையோ... வ

ரெண்டு நாள் முழுக்க நீங்க இங்கேதான் எங்களோடதான் தங்கியாகணும். சாகரி. டிரைவரிட்டே இந்நேரம் உத்தரவு போயிருக்கும் - உங்களை முதலாளி அனுமதியில்லாமல் எங்கேயும் ஏற்றிட்டுப் போகக் கூடாதுன்னு!''

சாகரியின் முக அதிர்வுகளை ரசித்தபடி பேச்சைத் தொடர்ந்தாள். ''சரி... நடந்தோ ஓடியோ போயிடலாம்னு நினைச்சால் இந்தக்காட்டிலே நீங்க வழி தப்பித் தொலைந்து போகவும் வாய்ப்புண்டு... ஆகப் பொறுமையாய் இருங்க... காது கொடுத்துக் கேளுங்க - ரெண்டாம் நாளின் முடிவிலே நீங்க எனக்குச் சித்தியாகச் சம்மதிச்சாலும் ஆச்சரியப்பட மாட்டேன்!''

பெரிய கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள் அஞ்சலி.

ஆத்திரத்தில் முஷ்டியை மடக்கிப் பல்லைக் கடித்தாலும் அச்சத்தினால் தன் உடம்பு நடுங்குவது சாகரிக்குப் புரிந்தது.

சற்று நேரங்கழித்துத் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்தவளுக்குத் தன் அறைக்குப் போகும் வழி எது என்பது கூடத் தெரியவில்லை. அத்தனை அறைகளிலும் இதமான விடி விளக்கின் ஒளி - ஆங்காங்கே சுவர்களில் தொங்கின மான் தலையும் எருமைத் தலையும் மிரட்டின.

''பாக்கியம்...''

மெல்லத்தான் அழைத்தாள் என்றாலும், அது பாக்கியத்தின் காதை எட்டி விட்டது.

''அடடே... என்னம்மா ரூம்மைத் தேடறீங்களா - இப்படி வாங்க...''



''நல்ல வேளை, முழிச்சிட்டிருந்தே, பாக்கியம்.''

''நாளைக்கான சாமானுக லிஸ்டை இப்பதாம்மா எழுதி முடிச்சோம் - இப்பவே டைவருட்ட கொடுத்திரணும் - கொடுத்திட்டா நானும் படுத்திருவேன் - உங்களுக்குப் பாலு, டீ, ஏதேனும்...?''

''ஒன்னும் வேண்டாம்...'' திடீரெனப் புத்தியில் ஒரு திட்டம் மின்னலிடக் கேட்டாள் - ''லிஸ்டைக் கொடுத்தாச்சா?''

''இதோ - தரத்தாம் போயிட்டிருந்தேன்.''

''நானும் வரேனே...?''

பாக்கியம் இவளைச் சற்று விநோதமாய்ப் பார்த்தாலும் மறுக்கவில்லை. அகன்ட நீண்ட தாழ்வாரம் வழியே வீட்டின் பின்புறத்தை அடைந்தனர். காட்டுப்பூச்சிகளின் கச்சேரி அங்கு உச்சஸ்தாயியில் கேட்டது. சரிவாய்க் கூரையிட்ட நீள்சதுரக் கட்டிடத்தைக் காட்டினாள்.

''அதுதாம்மா காரு காராஜு... அதை ஒட்டின அறையிலதான் டைவரு இருப்பாரு - தந்துட்டு வந்துர்றேன்...''

''அங்க நிக்கற ஜீப்புதானே நாளை டவுனுக்குப் போகும்?''

''ஆமாம்மா - அதான் வீட்டு உபயோகத்துக்கான ஜீப்பு... நாங்கெல்லாம் எப்பவேனும் சினிமா பாக்கணும்னா அதுலதான் டவுனுக்குக் கிளம்பறது.''

பாக்கியம் பட்டியலைக் கொடுத்து வருவதற்குள் சாகரி குறுக்கும் நெடுக்குமாய் நடந்து அப்பகுதியைப் பரிச்சயப் படுத்திக் கொண்டாள். சற்று முன் முழுக்க இருண்டு, மிரண்டிருந்த புத்தியின் ஓரத்தில் விடி வெளிச்சம் தற்போது...!

இத்திட்டம் நிறைவேறுமா?

கவனமாய் திட்டமிட்டுத் தைரியமாய்ச் செயல்படுத்தினால் சாத்தியம்தான். இல்லாவிட்டால் இந்த வீட்டில் என்ன நடக்குமென்பது தெரியாது. அஞ்சலி சொன்னதெல்லாம் நினைவிற்கு வர, நம்பத்தான் முடியவில்லை.

இப்படியொரு தகப்பனும் மகனுமா?

வெட்கம் விவஸ்தையின்றி! அப்படியே தன் திட்டம் நிறைவேறாவிட்டாலும், நடந்தேனும் இந்த இடத்தை விட்டுக் கிளம்பி விட வேணும்.

சொல்லிக் கொள்ளாமலா...?

இதுவரை மரியாதையாகவும் முறையாகவுமே வாழ்ந்து பழகிய மனது கேள்வி கேட்டது.

பின்னே...? 'ஆசை நாயகியாய் வருகிறாயா?' என்று இளிப்பவனிடம் 'போயிட்டு வரட்டுமா?' என்று கைகுவித்தால் விட்டு விடுவான் என்பது என்ன நிச்சயம்?

கைப்பிடித்து இழுத்தால் இங்கு கேட்பாரில்லையே...!

'உம்' என்று அன்பரக உறுமி விட்டால் அத்தனை வேலைக்காரர்களும் பம்மி மறைவார்கள் - மகனும் இதில் தந்தைக்குக் கூட்டு!

"ரொம்ப நேரம் வெளியே நிக்காதீங்கம்மா - குளிரு காத்து உடம்புக்குச் சேராது."

இந்த உடலை வேறு விதத் துன்பத்திலிருந்து காப்பாற்ற, அவசியம் உடனே கிளம்பி விட வேண்டும்...

பாக்கியத்தைத் தொடர்ந்தபடி திட்டமிட்டாள் சாதனா.

"காலை அஞ்சரைக்கெல்லாம் நீங்க கிளம்பிடுவோமா?"



"ஆமாங்கம்மா."

"இந்தப் பக்கம் வரக் கதவு ஏதுமுண்டா - அது பூட்டியிருக்குமா?"

"விருந்தாளி இஷ்டம்போல போக, வரன்னு இருக்கத்தான் இந்த அறையை ஐயா கட்டியிருக்காரு. சில வெள்ளைக்காரங்க தங்கினதுண்டு... நடுராத்திரி ஒநாய்ச் சத்தம் கேட்டா காமிராவோட கிளம்பிருவாங்க. பூட்டுன்னா அது உங்க அறைக்கு மட்டுந்தான்."

"ஓஹோ... நாய் ஏதும்..."

"ஐயாவுக்குப் பிடிக்காதும்மா - காவலுக்கு ஒன்னுக்கு ரெண்டா கூர்க்காதான் போட்டிருக்காரு - ஏம்மா?"

"இல்ல... காலைல கொஞ்சம் காலார நடக்கணும் எனக்கு - அதான் கேட்டேன்."

"நல்லாவும் சாப்பிடுங்கம்மா - மெலிஞ்சு தெரியறீங்க..."

"அது படிப்பு, பரீட்சைன்னு இருக்கறதால... தாங்க்ஸ் பாக்கியம்..." தன் அறையின் வாசலில் பாக்கியத்திற்கு விடை தந்தாள்.

"குட் - நைட்டுங்கம்மா..."

வேலைக்காரி தன்னைச் சற்று இரக்கத்துடன் பார்த்தாற் போலிருந்தது. கசாப்புக் கடைக்கு ஓட்டப்படும் நோஞ்சான் மாட்டைப் பார்க்கும் பார்வை!

"குட் - நைட்"

அறைக்குள் நுழைந்து கதவைக் கவனமாய்ப் பூட்டினாள். அவளது பெட்டி, திறக்க வாகாய், ஒரு மேசையின் மீது

வைக்கப்பட்டிருந்தது. ஓரிரு நாட்களின் தேவைக்கு அது சற்றுப் பெரியதுதான். ஆனால் பயணத்திற்குக் கொண்டு வந்திருந்தது அது ஒன்றே என்பதால் அதையே எடுத்து வந்திருந்தாள். அதிகாலையில் நிச்சயம் இதைத் தூக்கிக் கொண்டு தப்பி ஓட முடியாது - வெறும் கைப்பையுடன்தான் கிளம்பவேண்டும்.

வெறுமே ஒரு பட்டனை மட்டுமே அழுத்த வேண்டிய நவீனப் பூட்டுதான் அறைக் கதவிற்கு. வேறு நாதாங்கிகள் இல்லை. இக்கதவின் பின்னே பாதுகாப்பாய் உணருவது சந்தேகம்தான்.

சிறுமியாயிருக்கையில் கிராமத்து உறவு வீடுகளுக்குச் சாகரி சென்றதுண்டு. கதவின் ஓரத்தில் நீண்டுதொங்கும் இரும்புப் பட்டையை அவள் ஆச்சரியமாய் பார்த்திருக்கிறாள். இரவுகளில் வேலைக்காரப் பெண் அதைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொக்கியில் மாட்டி, இரும்பு நாக்கைத் திருக, கதவு 'கிச்'சென்சாத்தி நிற்கும்.

அப்படியில்லாவிட்டாலும் ஒரு அலுமினிய நாதாங்கியாவது இருந்திருக்கலாம் - ராத்திரி முழுக்கத் தான் உறங்கப் போவதில்லையே... பிறகென்ன? ஆனால யாரேனும்... அதாவது அன்பரசு அறைக்குள்ளே நுழைந்துவிட்டால்... தன்னைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி?

பெட்டியிருந்த மேஜையை இழுத்தாள். நல்ல கனம். அது அசையவில்லை.

பெட்டியை அதிலிருந்து இறக்கி வைத்தவள், சிறிது சிறிதாக மேசையை நகர்த்திக் கதவிற்குப் பின்னால் வைத்தாள். பெட்டியை மறுபடி மேலேற்றியதும் சற்று நிம்மதியானது. மாற்றுச் சாவி இட்டாலும் கதவு இப்போது உடனே விரியத் திறந்து விடாது.



படுக்கையில் சாய்ந்தாள் - கடிகாரம் அது நடுநிசி என்றது...

தொலைவில் ஏதேதோ ஊளை... உறுமல்கள்...! இன்னும் ஐந்து மணி நேரத்தில் இங்கிருந்து நழுவி யார் கண்ணிலும் படாமல், டவுனிற்குப் போகவிருக்கும் ஜீப்பின் பின்புறம் ஏறிவிட வேண்டியது - அப்படி முடியாத பட்சத்தில் நடக்க ஆரம்பிக்க வேண்டியதுதான்... பாம்பும் பூச்சிகளுமாய் வெளியே நடமாடுமாமே?

அவளது மெல்லிய தேகம் சிலிர்த்தது. அன்பரசு தொட்டால் விட்டுவிட வேண்டும் போலிருக்கும் இவ்வுயிர் அவற்றின் விஷம் ஏறித்தான் போகட்டுமே!

அத்தனை படட்டு இருந்த அவ்வறையில் ஒரு புத்தகம் கூட இல்லாததால் கொட்டக் கொட்ட விழித்திருந்தவளது தலை ஒரு மணி நேரம் கழித்துத் தூக்கத்தில் தொய்ந்து சரிந்தது...!



## 16

"டாக்டர், எனக்கு எப்படியாவது எம்மருமகன் சந்துருவோடு பேசியாகணுமே!" - பரிதவித்தார் ராஜாங்கம்.

"என்ன விஷயம்... என்ன தேவைன்னு எங்ககிட்ட சொன்னால்?"

"இல்லை, டாக்டர் - இது கொஞ்சம் பர்ஸனல் விஷயம்..."

"எதையும் யோசிக்க நீங்க எக்ஸைட் ஆகக்கூடாதுங்க..."

"சந்துரு வந்தால் பிரச்சனையை அவன் கையிலே தந்துட்டு இருப்பேன் - அவன் நேற்றும் வரலை - நியூஸ்பேப்பரை மட்டும் தந்து விட்டிருந்தான்... ட்ரைவரிடம் மறுபடி எப்போ வருவேங்கறதைச் சொல்லி விடலை."

"...போன் இன்னைக்கு உயிர்பெற்றிடும்னு நம்பறோம்."

"அதுக்குள்ளே வேற எப்படியாவது சந்துருவுக்குத் தகவல் அனுப்ப முடியாதா?"

"தொடர்பு கொள்ள முயற்சிக்கறோம் மிஸ்டர் -ராஜாங்கம்.. காம் டௌன்."

டாக்டர் கருணைப் புன்னகையுடன் நகர்ந்தார்.

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்து காட்சியளித்தது போல பத்தாம் நிமிடம் சந்துருவே வர, ராஜாங்கம் அலறலாய் வரவேற்றார்.

"வாப்பா - எங்கே இன்னைக்கும் வராம இருந்திடுவி யோன்னு பயந்துட்டேன். என்ன செய்திருப்பேன்னு தெரியலை..."

பக்கத்துக் கட்டிலில் இருந்த புது நபரை வியப்புடன் கவனித்த சந்துரு, சற்றுக் கவலையுடன் தன் மாமனாரை நெருங்கி விசாரித்தான்.

"சாகரி எங்கே?"

"அதுதான் விஷயம் - உக்காரப்பா."

"இருக்கறேன் - சொல்லுங்க."

அன்பரசு உணவுடன் வந்ததையும், மாடு முட்டிய வேலுமணியின் சிகிச்சைக்காய் ஒரு படுக்கை தேவைப்பட்டதையும் முடிந்தவரை கோர்வையாய்ச் சொன்னார் ராஜாங்கம்.



பேராசிரியர் அன்பரசு பந்தி எச்சரித்ததைத்தான் சற்று மென்று முழுங்கிச் சொல்ல வேண்டியிருந்தது. பேராசிரியரும் அதே அறையில் இருந்ததே தயக்கம் தந்தது. கூடவே மகளுக்கு என்ன ஆனதோ என்ற பதட்டம்.

சந்துருவின் முகத்தில் கோபச் சாயல் படர்ந்தது.

"சாகரி இங்கேயே நர்ஸ்களோட ஒரு ராத்திரி கழிச்சிருக்கலாமே... நான் இன்னைக்கு வந்திருப்பேன்ல...?"

"முதலில் நானும் சாகரிக்கு மாற்றம் தேவை - போகட்டுன்னுதாம்ப்பா நினைச்சேன் - அவர் பொண்ணு தனியாய் இருக்கறதாவும்... போரடிச்சுப் போயிருக்கற அவளுக்கு இவ போனா... துணையாய் இருக்கும்னு..."

அவன் தாடை இறுகியது.

"அஞ்சலிக்குத் தன் நாட்களைச் சுவையாக்கிக்கத் தெரியும்... சாகரியின் துணை தேவையும் படாது."

ராஜாங்கம் மேலும் குழம்பித் தனக்குள்ளாகவே பேசினார் -

"இப்படி ஒரு மனுஷனைப் பற்றி நினைக்கறது தப்பாய் இருக்கலாம் -ஆனா போயிருக்கறது நம்ப வீட்டுப் பெண்ணாச்சே..."

"எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போக அந்தப் பொண்ணுக்கு இப்பவும் தோணலியே..."

கசந்து வந்தன வார்த்தைகள்.

அவன் முதன் முறை சாகரி தன்னை விட்டு விலகின சம்பவத்தைக் குறிப்பிடுகிறான் என்பது மாமனுக்குப் புரிந்தது.

"அப்படியில்லைப்பா... இது இக்கட்டிலே எடுத்த முடிவு... புரிஞ்சுக்கணும் நீ."

"இப்பத்தான் அவளுக்குத் தலைவலியும் காய்ச்சலும் வந்திருக்குது - இனியாவது புரியாதான்னு பார்க்கலாம்..." என்று மருமகன் சொன்னது ராஜாங்கத்திற்குக் கொஞ்சமும் புரியத்தானில்லை.

அந்த சத்தத்தில் புரண்டு படுத்தாள் சாகரி. என்ன சத்தம் என்பதைக் கவனிக்கத் திரும்பியவள், தொடர்ந்து கதவு கொஞ்சம் கொஞ்சமாய்த் திறப்பதைப் பார்த்தாள்!

'ஐயோ... அன்பரசு தன் அறைக்குள் நுழைந்தாயிற்றா?' நடுங்கி எழ முயன்றவளின் உடம்பு சடலம் போலக் கிடந்தது. அன்பரசு வாய்திறந்த வாசலின் வழியே பெரிய முதலை போல நுழைந்தார்.

அவர் பற்களும் விழிகளும் வெகு விகாரமாய் மின்னின. காமம் மனுஷனை இத்தனை கோரமாக்கி விடுமா என்ன?

"வேணாம்... பக்கத்திலே வராதீங்க... நா... நான் பாக்கியத்தைக் கூப்பிடுவேன்." இது சொல்ல நினைத்த வார்த்தைகள்... ஆனால் அவை தொண்டைக் குழிக்குள் சிக்கி சமாதியாயின. எச்சில் வடிய அவரது கோர முகம் இவளை நோக்கிக் குனிய... துடித்தபடி விழித்தாள்...

அறை இருட்டாய், அமைதியாய் இருந்தது! இவளைத் தவிர அங்கு வேறு யாருமில்லை - மேசை, கதவை ஒட்டியபடியே, பெட்டியுடன் நின்றது.

கடவுளே...கனவுதானா...? கனவே இத்தனை பயங்கரமாயிருந்தால் நிஜத்தைத் தாங்கக் கூடிய தைரியம், எதிர்த்து நிற்கக் கூடிய துணிவு தனக்கு இருக்குமா?

ஆண்டவன் நாமத்தை ஜெபித்தவள், சற்று உடம்பின் நடுக்கம் தளர்ந்ததும் போய்க் குளிர் நீரில் முகம் கழுவினாள்.



துவாலை ஒன்றை நீரில் நனைத்து அருகே வைத்தவள், பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை அதைக் கொண்டு முகம் துடைத்தாள்.

இனி அசந்து விடக் கூடாது...

உறங்கி அதிகாலை கிளம்பும் வாகனத்தை விட்டுவிடக் கூடாது.

அப்படி மட்டும் ஆனால், நான் உன்னை மன்னிக்கவே மாட்டேன். இப்படித் தனக்கே கடுமையாய் உத்தரவிட்டவள் ஐந்து மணிக்காய்க் காத்திருக்கலானாள்... கடிகாரத்தின் விநாடி முள் நொடித்து நொடித்து முன்னேறியது...

மறுபடி மேசையை அங்குலம் அங்குலமாய்க் கதவை விட்டு விலக்கியவள், கதவைத் திறந்து ஆமை போலத் தலை நீட்டினாள். வீடு அயர்ந்து கிடந்தது.

இன்னும் சில நிமிடங்கள் கழியட்டும் என்று பம்மினாள். ஆனால் ஐந்தாம் நிமிடம் நிலை கொள்ளவில்லை - ஆட்கள் எழும் முன், போய் ஜீப்பில் பதுங்கிக் கொள்வதுதான் பாதுகாப்பு.

நுனிக்காலில் விரைந்தவளுக்கு கார் காராஜை நெருங்கியதும் அதிர்ச்சி காத்திருந்தது - காராஜின் இரும்பு ஷட்டர் இறக்கிப் பூட்டப்பட்டிருந்தது!

நேற்றுத் தான் கேட்ட அந்தக் கேள்விகள் தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டனவோ?

எச்சரிக்கையாகி விட்டார்களோ?

அல்லது ஜீப் ஏற்கெனவே கிளம்பிப் போய் விட்டதா? எண்ணங்களின் வெப்பத்தில் வியர்த்து முதுகு நனைந்து குளிர்ந்தது.

அடர்ந்த மரங்களிடையே மறைந்து நின்றாள். முதுகில் ஏதோ வழுவழுவென்று பட, அலறிய வாயைத் தானே பொத்தினாள்! உடம்பை உதறிவிட்டுக் காத்திருந்தாள்.

பத்தாம் நிமிடம் வீட்டுப் பின்கட்டின் விளக்குகள் கண் திறந்தன. சன்னமாய் நடமாட்டங்கள் கேட்டன. மப்ளரால் முண்டாசு கட்டிய ஒருவன் காராஜைத் திறந்து உயர்த்தினான்.

அவன்தான் ஓட்டுனர் போலும் - வேறு யாரும் உடன் இல்லை. தினம் தினம் செய்யும் வேலை என்பதால் அதி விரைவாய் ஜீப்பில் ஏறி அமர்ந்தவன் உடனே என்ஜினை உறும விட... சாகரி பதறினாள்!

இன்னும் இருட்டு விலகவில்லை.

உடனே ஓடிப்போய் ஏறிக் கொள்ள வேண்டியதுதான். குனிந்து ஓடியவள் முடிந்தவரை சத்தமின்றி ஜீப்பின் பின்புறம் ஏறினாள் - ஏறும்போதே வாகனம் பின்புறமாய் உருள கால்களைச் சிராய்த்தபடி உள்ளே விழுந்தாள் - என்ஜின் உறுமலும் பின்புறம் பனிக்குப் போட்டியாகக் கிளம்பிய புகையும் அவளுக்குத் துணை நின்றன.

இதயம் படக்கத் துடிக்க பல்லி போல வாகனத்தின் தரையில் ஒட்டிக் கிடந்தாள்.

தன் மூச்சிரைப்பை வாய் திறந்து ஆனால் சத்தமின்றி வெளியேற்ற முயன்றாள்.

ஜீப் வேகமெடுத்தது - இரக்கமின்றி அவளது மெலிந்த உடலைப் பந்தாடியது. ஆனால் நத்தையாய் ஒடுங்கிக் கிடந்தாள் சாகரி.



ஒரு மணி நேரங்கழித்து ஜீப் நின்ற போது அவளுக்குத் தன் கை,கால்களை அசைக்க முடியுமென்றே தோணவில்லை. சுருண்டு கிடந்ததில் ரத்த ஓட்டம் தடைப்பட்டு உடம்பெல்லாம் இழுத்தது. தவிர தட்டுத் தடுமாறி எழுந்து வெளியேறும் போது ஓட்டுனரோ பிறரோ தன்னைப் பார்த்து விட்டால்...?

'சரி... இப்படியே யோசிக்கட்டு உள்ளேகிட. மறுபடி உன்னை அன்பரசுவின் எஸ்டேட்டுக்குப் போய்ச் சேர்த்திடுவான்.'

என்று புத்தி இடிக்க, பாம்பு போல ஊர்ந்து நழுவி இறங்கினாள் - நல்ல நேரம்தான் போலும் -யார் பார்வையும் அவளில் படவில்லை - தவிர மூடுபனியும் இன்னும் முழுக்க விலகவில்லை.

டிரைவர் கண்ணில் படாமல் இருப்பது ஒன்றே குறியாக ஏதோ ஒரு திசையில் முடிந்த வரை வேகமாய் நடக்க ஆரம்பித்தாள்.

ஹோட்டெலின் கொல்லைப் புறத்தில் பெரிய அண்டாக்களில் நீர் சூடாகிக் கொண்டிருந்தது. ஊழியர்கள் ஆளுக்கு ஒரு வாளியோடு வந்து அண்டாவிலிருந்து வெந்நீரை எடுத்துக் கொண்டு குளியலறை போனார்கள்.

கேரள உணவகங்களில் குளிக்காமல் யாரும் அடுப்புப் பக்கம் போவதில்லை - அடுப்பை அணைத்த பிறகும் ஒரு குளியல் உண்டு.

அம்பி முதல் ஆளாய்க் குளித்து விடுவான். துவைத்த துணிகளை ஒட்டப் பிழிந்து காயப்போட்டுக் கொண்டிருந்த நேரம்தான் பல் விளக்கியபடி வந்தான் நாயர் -

"போய், எனிக்கும் சேர்த்து துவைக்கத் தராமல்லோ?" நாயருக்கு அம்பியைச் சீண்டாமல் பொழுது கழியாது.

"ம்ம்... உங்களுக்கும் சேர்த்துச் சாப்பிடறேனா நாயரே?"

"வெந்நீராவது மொண்டு தாடோ..."

"துணி மாத்திட்டேண்ணே... நனைஞ்சிரும்."

"போடா சோம்பேறி." வாயில் பல்பொடியுடன் குழறிய நாயருக்கு வாய் கொப்பளிக்க நீர் எடுத்து வார்த்தான். இதுவும் செய்யவில்லை என்றால் அன்று முழுக்க நாயர் அப்பளத்தை, நேத்திரங்காயை வறுப்பது போலத் தன்னையும் வறுத்தெடுத்து விடுவான் என்ற அச்சம்!

"நேத்துப் பார்த்த படம் எப்படி நாயரே?"

"அத்தர சுகமில்லடா அம்பி... ஒரே கரைச்சல்."

"அழுகைப் படமா? ஒரேயடியாய் ஆபாசப் படமே பார்த்தாலும் போர் அடிச்சிடும்ண்ணே - அப்பப்போ அழுது கண்ணையும் சுத்தப்படுத்திக்கலாம்ல?"

"புரியாத பயலேல்லோ! புகையில அவிஞ்ச கண்ணைக் குளிர்விக்கானானு படத்துல குட்டிகளைக் காணான் போகுன்னது?"

வெந்நீர் சேந்திக் கொண்டு குளியலறைப் பக்கமாய்ப் போனவன் இரண்டாம் நிமிடமே திரும்ப வந்தான்.

"எடே... நம்மோட சோக சுந்தரி வந்து..."

"அதுக்குள்ள படம் மாத்திட்டானா, நாயரே?"



"ஐயோடா... நம்ப ஹோட்டல்ல கடந்த வாரம் தங்கின பெண்குட்டி... ஆக்ட்ரஸ் கௌசல்யையின் ஜாடையில் உண்டுன்னு நான் பரஞ்சதே?"

"ஆமாமா, பறந்தீங்க!" என்று வாய்க்குள் முனகிய அம்பி "அந்தம்மா இந்தப் பின்பக்கமாய் ஏண்ணே வரணும்? ரூம்பு வேணும்னா ரிசப்ஷனுக்கில்ல போகணும்?" என்றவன், மறுபடி குரலைத் தாழ்த்தி, தனக்குள்ளாக,

"பாவம்! நாயகருக்கு நேத்து ரொம்ப கரைஞ்சதுல கண்ணு கலங்கிடுச்சு போல!" என்று சொல்லி முடித்தான்.

"வந்து பாரு டோய்... இப்போள் சுந்தரி வல்லிய சோகமாயிட்டு உண்டு." நாயர் சுட்டிய இடத்தில் போய்ப் பார்த்த அம்பியின் முகத்தில் ஏராளமாய் ஆச்சரியம்.

"அம்மா... அம்மா... நீங்க எங்கே இப்படி?"

துரத்தப்பட்ட மான் போலத் திரும்பிய சாகரியின் முகம் சற்று நிம்மதியானது.

"அம்பி... நீ எங்கே... இங்கே?"

"இதாம்மா நம்ப ஹோட்டலோட பின்பக்கம். இப்படியே போய்த் திரும்பினாக்க முன்வாசல்... நீங்க ஏதும்மா... இந்த வேளையில?"

"அம்பி, கடவுளுடைய கருணைதான் இப்ப உன்னைப் பார்த்தது... எனக்கொரு உதவி செய்யணுமே நீ?"

"தோ வந்துட்டேம்மா."

ஹோட்டெல் அறையுள் நுழைந்து கட்டிலில் அமர்ந்தவளுக்கு இன்னும் கனவு தொடருவதான பிரமை.

பெரிய கண்டத்திலிருந்துதான் தப்பித்திருக்கிறோம் என்ற பதட்டம் இன்னும் மிச்சமிருந்தது.

"அவரு... உங்க வீட்டுக்காரரு எங்கம்மா?"

"அதெல்லாம் பிறகு சொல்றேன். முதல்ல அவருடைய ஃபோன் நம்பரைக் கண்டு பிடிக்கணுமே!"

"பேரு சந்திரகாந்தன் தானம்மா?"

"அபார ஞாபகம்ப்பா உனக்கு!"

"அவரு என்னாவாயிருக்காரு?"

"எஸ்டேட் ஓனர்."

"அப்ப சுளுவாய்க் கண்டுபிடிச்சரலாமே! புது டைரக்டரி கீழே உண்டு. எடுத்துட்டு வரேன் - கூடவே காபி கொண்டு வரட்டுமாம்மா..."

"சரிப்பா... தாங்க்ஸ்."

ஹோட்டெல் வரவேற்பாளரும் இவளை நினைவு வைத்திருந்ததால் கையில் லக்கேஜ் ஏதும் இல்லாதிருந்தும் சாகரிக்கு உடனே அறை ஒதுக்கப்பட்டது.

"அப்பா எப்படி இருக்கார், மேடம்?"

"சீக்கிரம் 'டிஸ்சார்ஜ்' ஆயிடுவாங்க. அங்க ஹாஸ்பிடல் ஃபுல்.. அதான் நான் வந்து..."

"ரூமுக்குப் போய் ரெஸ்ட் எடுங்கம்மா."

குறுக்கே பேசி அம்பி காப்பாற்றினான்.

முகம் கழுவி இரண்டு வாய் காபி உள்ளிறங்கியதும் சற்று உயிர் மீண்டது.



அதற்குள் கண்களை இடுக்கித் தொலைபேசி எண்ணைத் தேடிப் பிடித்த அம்பி உற்சாகமானான்.

"இதோ இருக்கேம்மா - சந்திரகாந்தன் - சாகரி எஸ்டேட்ஸ்." உதட்டில் பதித்த கோப்பையை உறிஞ்ச மறந்து சிலையானாள்.

"என்ன எஸ்டேட்ஸ்?"

"உங்க பேரும்மா - சாகரிதானா?"

"ஆனா... எப்படி...?"

"நம்பர் 30321 - கீழேதான் போய்ப் பேசணும்மா."

"அம்பி... நீயே அவருக்கு ஃபோன் செய்து தகவல் தந்துட்டாப் போதும்...என்னால நடக்க, நிற்கக் கூட முடியலை."

"தெரியுதேம்மா - கண்ணு ரெண்டும் வெத்தலை போட்டுக் கிட்டது போல சிவந்திருக்குது. பாருங்க, நான் சாருக்கு விவரம் சொல்லிடறேன்..."

தாயின் கர்ப்பத்திலிருக்கும் கருபோலச் சுருண்டு படுத்த பிறகும் அவளுக்கு உடம்பு உதறியது.

சந்துருவின் தோட்டத்திற்குத் தன் பெயரா? பழையதின் பெயர் 'நறுமணம்' - தன் கல்யாணத்திற்குப் பிறகு விலை பேசிய இதற்கு மனைவியின் பெயரைச் சூட்டியிருக்கிறானா?

கேளாமலேயே கண்ணீர் வழிந்தது. புதுச் சொத்தை நல்லபடி உருவாக்கிய பின் தன்னை அழைத்துப் போவதாய்ச் சொன்னவன் இந்தப் பெயர் விவரத்தைச் சொல்லவில்லையே?

தோட்டத்தின் நடுவே வீடு கட்டுவதாய் அஞ்சலி சொன்னாள்... அவனோடு சந்துரு வாழுவதற்கான வீடு...! இனி சீக்கிரம் எஸ்டேட்டின் பெயரும் மாறிவிடும்.

'அஞ்சலி எஸ்டேட்ஸ்!' தாள முடியாமல் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.



## 17

விழிப்பு வந்தபோது வெளிச்சம் முகத்தைச் சுட்டுக் கொண்டிருந்தது - முனகலுடன் திரும்பினாள்.

உடல் ரணமாய் வலித்தது -திறக்க முயன்ற கண்களில் நிறைய எரிச்சல். சில விநாடிகள் ஆனது - எங்கே, ஏன், எந்த சூழ்நிலையில் இருக்கின்றோம் என்பதை உணர.

சுருண்டு படுத்திருந்த உடல் மரத்துக் கனத்தது. ஒரு கிழவியைப் போல மெல்லக் கையூன்றி அமர்ந்து திரும்பியவள் வேறு அசைவின்றி உறைந்தாள்.

"நீங்க... எப்போ... எப்படி?"

"நீதானே வரவழைச்சே, சாகரி?"

"ஆமா... இல்லை... வந்து... நான் அவர் வீட்டிலேருந்து ஓடி வந்துட்டேன்."

குழறினாள்.

சந்துருவின் முறைப்பில் அவள் மூளை மங்கிக் கலங்கியிருந்தது



அங்கே போனதும் மனைவி தப்பி வந்திருக்கிறாள் என்பதை உணராமல் குற்றம் சாட்டுகிறானே?

மௌனமாய் எழுந்து குளியலறைக்குப் போனாள். தோற்றத்தைச் சீர் செய்து சற்றுத் தெளிவாய் வந்த போது கணவன் வந்து விட்டான் என்ற நிம்மதியை விட, அவன் பேச்சு சரியில்லை என்ற எரிச்சல் அதிகமிருந்தது. உணர்ச்சியற்ற குரலில் விளக்கினாள்.

"உங்களைத் தொந்தரவு படுத்தியதுக்கு மன்னிக்கணும். அப்பா ஆஸ்பத்திரியிலே இருக்கறதால வேற யாரை அணுகறதுன்னு தெரியாம உங்களுக்கு..."

"பரவால்ல. உனக்கு இட்லி, வடை ஆர்டர் பண்ணியிருக்கேன் - சரிதானே?"

"நீங்க செய்றதெல்லாம் சரிதான் - நான் செய்றதுதான் சரியில்லை."

ஒரு கணம் யோசித்தவன் வாய்விட்டுச் சிரித்தான்.

எத்தனை காலமாயிற்று இவன் இப்படிப் பல் தெரியச் சிரித்து... தான் அதைப்பார்த்து...

"அது உன் சித்தாந்தம், சாகரி. நீ என்னை நம்ப முடியாது - ஆனா நான் உன்னை நம்பணும்னு எதிர்பார்க்கிறாய்."

"என்ன எதிர்பார்த்தேன்?"

"ஏதோ அன்பரசு வீட்டிலேருந்து தப்பி, ஓடி வந்தது போலச் சொல்றியே - அதைச் சொல்றேன். அதை நான் நம்பணும்? ம்ம்...?"

எரிச்சல் மேலும் தலைக்கேற அவனை வெறித்தாள்.

"அது உண்மைதான்."

"அன்பரசு சுற்றுவட்டார மன்மதப் புயல்... பெண்களை ரொம்பச் சுலபமாய்த் தன் வலையிலே விழ வைக்கத் தெரிஞ்சவர்...விழற வரைக்கும் விடாத வெறி கூட உண்டு... நீயும் ஆசையாய் அவருடைய மாளிகை, ஜக்கூஸி எனும் ஜலக்கிரீடை விநோதங்களை எல்லாம் பார்க்கப் போயிருக்கேன்னு கேள்விப்பட்டேன்."

"எந்த அர்த்தத்திலே சொல்றீங்கன்னு புரியலை."

"ஏன் சாகரி -நீ மட்டும்தான் என்னைச் சந்தேகப்படலாமா? எனக்கந்த உரிமை இல்லையா?"

புருவம் உயர்த்திக் கேட்டான்.

வார்த்தைகளில்தான் எத்தனை நையாண்டித்தனம்!

ஆனால் இழந்து கொண்டிருந்த பொறுமையை இழுத்துப் பிடித்தான். அழைத்ததும் உதவிக்கு வந்தவனுக்கு விளக்கம் தருவது தன் கடமை என்றும் தோன்றியது.

"அவர் மகள் அஞ்சலி வீட்டிலே இருக்கறதாய் அவர் சொன்னதாலே போனேன். தவிர அன்பரசு வசந்தராம்மாவோட அண்ணன்... ஆஸ்பத்திரியிலே எனக்கு இடமில்லைன்னு சொன்ன சமயம் வந்த அழைப்பு..."

"அதனால முன்ன பின்னே பார்த்திராத 'செண்ட்' நடவினவனோடு போயிடறதா? அதிலும் நீ பலமாசங்களாய் வாழாவெட்டியாய் இருந்தவள் சாகரி... ஊர் உன்னை ரொம்ப கூர்மையாய்க் கவனிச்சிட்டிருந்தது. அன்பரசுவின் பின்னால் நீ போனதும் இப்ப விதவிதமாய்ச் சரடு திரிக்க ஆரம்பிச்சிருக்குது."

"நீங்க ஏன்... இப்படிப் பேசறீங்க?"



"இது மனசுக்குச் சங்கடமாய் இருக்குதா, சாகரி?"

எழுந்தவன், நாற்காலியின் முதுகில் கைகளை ஊன்றிக் குனிந்து நின்றான்.

"பின்னே...? நான் ராத் தூக்கமில்லாம... பயந்து நடுங்கி... ஏதோ திரில்லர் சினிமாவில் வர்றதுபோல ஜீப்பில மறைஞ்சு ஓடி வந்திருக்கேன்..."

"ஆனா ஒரு ராத்திரி நீ அங்கேதானே இருந்தே?"

அலட்சியமாய்த் தோள் குலுக்கினான்.

"நடக்கறது எப்ப வேணுமானாலும் நடக்கும் - ராத்திரியென்ன பகலென்ன? எதுக்கும் நான் இடம் தரலை."

"நீ சொல்ற... ஆனா ஊர் நம்பணுமே...?"

அனுதாபத்துடன் இழுத்தான்.

"போதும்!" இரு கைகளாலும் தன் தலையைப் பற்றியபடி கத்தினாள்.

"எனக்கும் இதே போலத்தான் இருந்தது, சாகரி!" என்றான் வெகு அமைதியாக.

அவன் சொன்னது புரிய அவளுக்குச் சற்று நேரமானது.

"ஓஹோ... நான் உங்களைச் சந்தேகப்பட்டது தப்புங்கறீங்க! இப்ப நான் நடந்ததைச் சொன்னது போல ஹேமா பற்றி நீங்கள் விளக்கியிருக்க முடியுமா?"

அதே அமைதியில் பதில் வந்தது

"முடியும்."

"அவ உங்களை உடனே கிளம்பி வரச் சொல்லி, உங்களுக்கு எழுதியிருந்த கடிதத்தை வாசிச்சேன். அப்புறம் அந்த ஃபோட்டோஸ்... அல்லிக் குளத்திலே நிர்வாணமாய்க் குளித்த பொண்ணுதானே ஹேமா...?"

முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள் - சந்துருவின் முகமும் சிவந்து போவது புரிந்தது.

"ஆக, அதையெல்லாம் பார்த்துதான் நீ வீட்டை விட்டுக் கிளம்பிட்டியா?" அவன் குரலில் தொனித்தது என்ன - நிம்மதியா? துளி மகிழ்வா? புரியாமல் நிமிர்ந்தாள்.

"அப்ப வேணி பேச்சை மட்டும் நம்பி நீ என்னை விட்டு விலகலை?"

"இல்லை. உங்க நடத்தைக்கான மோசமான ஆதாரங்களைப் பார்த்துட்டுதான் அந்த முடிவை எடுத்தேன்."

"ஆதாரங்களை மீறிய சில விஷயங்கள் உறவுக்கு அவசியம்."

"அதுங்களை அலட்சியப்படுத்தற அளவுக்கு... அழுத்தமான..."

"உனக்குப் பக்குவமில்லை!" முடித்தான். "உன் புத்தக ஷெல்ஃபிலுள்ள வைரமுத்து கவிதைப் புத்தகத்தில் வாசித்த ஒரு வரி இன்னும் மறக்கலை.

'முளைப்பதற்கு எந்தப் பாறையிலும்
இடமிருக்கிறது
மனிதனுக்குத்தான்
வேர்களில்லை.'

நிதானம், நம்பிக்கை, தெளிவுன்னு நம்ப வேர்கள் வலிமையாய், ஆழ இருந்தால்தான் முளைத்த உறவுச் செடி [illegible]ரும்... வளரும்."



"இல்லைதான் - இதையெல்லாம் ஜீரணிக்கற, என்ன சொன்னீங்க...பக்குவம் எனக்குப் போதாதுதான். இப்ப இனி எதுக்கு அதெல்லாம்?"

கசப்புடன் வெடித்தாள்.

"காதலோ, ஈர்ப்போ நமக்கிடையே ஏன் தோன்றியதுன்னு தெரியலை. அதை ரொம்ப ஆராயாமல் சந்தோஷமாய்ச் சேர்ந்துட்டோம். ஆனால் தம்பதியாய் வாழ்ந்த பிறகு பிரியறது ஏன்ங்கறதிலே தெளிவு வேணும். பிரிய வலுவான காரணம் இருக்கணுமே - அதான்."

என்ன சொல்ல வருகிறான் - தங்களது விவாகரத்திற்கான காரணத்தையா? வாடிச் சருகாய்க் கிடந்த நெஞ்சுக்குள் தீக்கங்கையும் அள்ளி வீசுகிறானே...!

மறுபடி அதே பாதையில், அதே ஜீப்பில் அவனோடு பயணம். போன முறை அப்பாவிற்கு என்ன ஆனதோ என்று கலங்கிய மனம் இப்போது தனக்காகக் கலங்கியது.

பல மாதங்களுக்குப் பின் புருஷனைப் பார்த்த முதன்முறை ஒரு சிலிர்ப்பு உள்ளோடியது...இப்போது எல்லாம் அடங்கி வெற்று வெறுமை!

'பிரிவிற்கான காரணம் அறிந்து கொள், பெண்ணே!' என்கிறான். அஞ்சலியோ, 'சந்துரு எனக்குத்தான்!' என்று சவால்விடுகிறாள். இனிச் சந்துரு தனக்கில்லை என்பது மட்டும் நிச்சயம்.

இதயத்தில் ரத்தம் கசியும் வேதனை.

ஒழுக்கமில்லாத கணவன் போனால் போகட்டும் என்று ஏன் நிம்மதிப்பட முடியவில்லை?

இருவருமாய்ச் சேர்ந்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுதானோ? இப்போது தீரப் பேசவில்லை என்றால் தனியே மறுபடி இப்படிச் சந்தர்ப்பம் வாய்க்காது.

மெள்ளப் பேச்செடுத்தாள் :

''நாம பிரிஞ்சதுக்கான காரணம்னு ஏதோ சொல்ல ஆரம்பிச்சீங்க?''

''ஆனால் அதை உனக்குச் சொல்றதிலே பயன் இருக்குமான்னு தெரியலை - அதுதான் தயங்கறேன்.''

அச்சத்தை மீறி அவளுக்குள் அலுப்பேறியது. ''நம்பறேனோ இல்லையோ, காரணத்தைத் தெரிஞ்சுக்க விரும்பறேன்.''

''ம்ம்- உன்னைப் பத்தின என் கணிப்பு சரிதான் - நம்ப முடியாதுங்கற எதிர்ப்பு, வீம்பு உனக்குள்ளே உண்டு நல்லது பொல்லாதது பற்றி அதி தீவிரமான கணிப்புகள் உனக்கு... எனக்கு இன்னும் அந்த ராதா சம்பவம் மறக்கலை, சாகரி.''

''யார்.. உங்க எஸ்டேட்ல வேலை பார்த்த பொண்ணா? உங்களுக்குச் சமைத்து வச்சுட்டுப் போவாளே...''

''நீ எங்கூட எஸ்டேட்ல இருந்த ஒரு வாரத்துல அவ சம்பந்தமாய் நடந்த சம்பவம் உனக்கும் மறந்திருக்காது...''

கொஞ்சம் அழுத்தி யோசிக்க, அவன் குறிப்பிட்ட அச்சம்பவம் அவளுக்குள் வெகு தெளிவாகவே ஓடியது...

புதுப்பெண் சாகரி 'இது தனக்கே தனக்கான வீடு!' என்ற பெருமையுடன் அச்சிறிய வீட்டைத் துடைத்துத் துடைத்து அலங்கரித்தாள். பெருவாரியான சமையல் ராதாதான். - தாபாவம்!



அதுதவிர பேச்சுத் துணைக்கும் அவள்தான்.

சாகரி அன்று இரு நாற்காலிகளுக்கு நடுவே ஒரு பளிங்குச் சிற்பத்தை ஃபர்ன் செடிகளூடே அமைத்து அழகு பார்த்திருந்தாள் -

'யம்மா... இத்தினி நாளாய் நானுந்தான் துடைச்சேன் - அடுக்கினேன்... ஆனா வீடு இத்தினி அம்சமாய் இருக்கலீங்களே...?' என்றாள் ராதா, வியந்து.

''சுத்தமாய் வச்சிருந்தியே. இப்போ எங்க கல்யாணத்துக்கு வந்த பரிசுகளையும் பிரித்துப் பார்வையாய் வச்சிருக்கறதால 'பளிச்'சுனு படுது... எங்கே கிளம்பிட்டே, ராதா?''

தோட்டத்து வேலையாட்கள் சால்வையை எடுத்துத் தலையோடு போர்த்திக் கொண்டால் அவர்கள் வெளியே போவதாய் அர்த்தம்.

'ஒரு எட்டு வீடுவரை போயிட்டு வந்துர்றேம்மா. தம்பிக்கும் தகப்பனுக்கும் கஞ்சியோட ஒரு வெஞ்சினமும் வேணும் -வேலை முடிச்சுப் பசிக்க வருவாங்கல்ல? ரெண்டு நாளாய் எங்க பக்கத்து வீட்டு ஆயா சமைச்சது... இன்னைக்கு அதுக்கும் முடியலை.'

'சரி, ராதா - போயிட்டு வா.'

'ஒரு மணி நேரத்துக்குள்ளார வந்திருவேம்மா.'

''சமையல்தான் ஆச்சே- சூடு பண்ணிப் பரிமாறுற வேலை தானே -நானே பார்த்துக்கறேன். நாளைக்கு வா, போதும்.''

''பத்து நிமுச நடைதாங்கம்மா - வந்து பாத்திரங்களைக் கழுவிக் கமுத்திட்டுப் போறேன்.''

சிட்டாய்க் கிளம்பிவிட்டாள். நல்ல உயரமும் வாளிப்புமான பெண் - முகத்துச் சிரிப்பு மாறவே மாறாது. கதவைத் தாழிட்டு விட்டு ஒரு புத்தகத்துடன் அமர்ந்தவளை 15-ஆம் நிமிடமே அந்த அழைப்பு எழுப்பி விட்டது.

'ராதா போறதைப் பார்த்துட்டு இவர்தான் வந்துட்டாரோ?' நாணச்சிரிப்புடன் கதவைத் திறந்தவள் எதிர்பார்த்தது போல அது சந்துரு அல்ல -நறுங்கிய கறுத்த ஆண் ஒருவன்.

முட்டை முட்டையான கண்கள் சிவந்து கிடந்தன. முகத்துக்கு மீறின மீசை.

''அவளை... அதான்... ராதாவை வரச் சொல்லுங்க...'' அவன் வாயைத் திறக்கக் கள் நெடி வீசியது.

''அவ இங்கே இல்லை... வீட்டுக்குப் போயாச்சு- யாரு நீ...?''

''அவ புருஷன்.''

பேசும்போது அவன் பார்வை தன் மீது படர்ந்த விதத்தைச் சாரி கவனித்து அருவருத்தாள்.

ஆனால் பேச்சைத் தொடராமல் கிளம்பி விட்டான்.

சற்று நேரத்தில் வீடு வந்த சந்துருவிடம் ராதாவின் புருஷனைப் பற்றிக் கூறினாள்.

''அடடே... வந்துட்டானா அவன்?''

''ஏன்... எங்கே போயிருந்தான்?''

''இன்னொருத்தியோடு தேனிலவு!''

''சரியாய்ச் சொல்லுங்க. ராதா கழுத்திலே மஞ்சக் கயிறு தொங்குது... ஆனா ரொம்ப இளம் பொண்ணாய்த்



தெரியறாளே... அவளுக்கு இப்படியொரு பொருத்தமில்லாத புருஷனா?''

''ஆள் அழகன் இல்லைதான்.''

''அழகைச் சொல்லலை... குணமில்லைங்கறேன் - கள்ள முழி!''

''அடடே, ஒரே பார்வையிலே கணிச்சுட்டியா... என்னை ராஜ பார்வைன்னு சரியாய்க் கணிச்ச மாதிரி!''

''ஆமாம் மிஸ்டர் தற்பெருமை அவர்களே! அதென்ன அவனுடைய தேனிலவு சங்கதி?''

''நமக்கும் இது தேனிலவுதான் - நமக்குக் கல்யாணமாகி அரை மாசந்தான் ஆகுது.''

அவளை இறுக்கி முத்தமிட்டான்.

'விஷயத்தைச் சொல்லுங்கன்னா... வாயை வச்சவேண்டாத வேலை பார்க்கறீங்க.'

''மை காட்- இதுவா வேண்டாத வேலை?''

புத்தகத்தை மீண்டும் எடுத்து அவள் வாசிக்க ஆரம்பித்தாள். ''சரி சரி, சொல்றேன் - இன்னொருத்தியோட போயிட்டான். மூணு மாசமாய் ஆளையே காணலை. அந்தப் பொண்ணு இதுக்குப் பேர் போனவ - இவன் பணத்தை உறிஞ்சிட்டுத் துப்பியிருப்பா - பயல் பெண்டாட்டியத் தேடிட்டு வந்தாச்சு.''

''அதாவது இன்னொருத்தியோட தேனிலவு முடிஞ்சு போனதும் ராதாவோடு தாம்பத்யம் பண்ண வந்தாச்சா!''

''ரைட்.''

''ரொம்பத் தப்பு... ராதா இவனைத் திரும்பக்கூடப் பார்க்கக் கூடாது.''

"புருஷன் எப்ப திரும்பி வருவான்னு அவ... பாவம்... காத்திட்டிருக்கா."

"பாவம்தான் - இப்படி ஒழுக்கம் கெட்டவனைச் சேர்த்துக்கிட்டா அவ நிலை ரொம்பப் பரிதாபம்!"

"இந்த மட்டத்து மக்கள் மத்தியிலே இது சகஜம், சாகரி - அடிப்பாங்க, மறு நிமிஷம் அணைப்பாங்க - நாம கண்டுக்கக் கூடாது."

"நாம எடுத்துச் சொல்லலைன்னா எப்படீங்க?"

"பாதிக்கப்பட்டவ ராதா - அவளுக்குத் தெரியாதா? அவனுக்குப் பட்டுப் புத்தி தெளிஞ்சிருக்கலாம். இவ இப்ப கொஞ்சம் அனுசரணையாய் இருந்தா முழுக்க மாறிடுவான்."

"இது மாதிரியான பொறுக்கிங்க மாறவே மாட்டாங்க. குடும்பம், தன்னைச் சுற்றிலும் இருக்கற சமுதாயம் பத்தின கவலையே இல்லாம இஷ்டத்துக்கு மேயறவங்களைச் செருப்பால அடிச்சு விரட்டணும்."

"ஷ்ஷ்... ஏன் இத்தனை எமோஷனாகறே, சாரு? தப்புச் செய்றதும், அதை உணர்ந்து திருந்தறதும்னு ரெண்டும் கலந்தவன்தானே மனுஷன்."

"அவன் செய்ற தப்பையெல்லாம் மனுஷி தாங்கிக்கணும்? அவனைத் தலைமேல தாங்கிக் கொண்டாடணும்! அப்படியா?"

"இன்னொரு சந்தர்ப்பம் தரலாங்கறேன்."

"நோ - இவனை இப்போ ராதா ஏற்றுக்கிட்டா ரெண்டே மாசத்துல அவன் மறுபடி வேற ஒருத்தியோட ஓடிப் போவான்



- மறுபடி இவ ஏக்கமாய் வாசலைப் பார்க்க வேண்டியதுதான் - ராதா புத்திசாலின்னா இப்பவே அவனைத் தூரத்திடணும் - அவ்வளவுதான்...!"

"ஒருத்தர் பலவீனத்தை அடுத்தவர் தன் பலத்தால் தாங்கறதும் தாம்பத்தியத்தின் ஒரு அங்கம், சாகரி. தான் பரிசுத்தமானவள்ன்ற கர்வம் கொண்ட பெண்ணின் புருஷன், ஒரு வேளை அந்த விஷயத்துல பலவீனமாய் இருந்தா?"

"ஒத்தே வராது... ஒத்துப் போகணுங்கற எதிர்பார்ப்பே தப்பு. ராதாவுடைய புருஷனுக்குத் தேவை மன்னிப்பு இல்லை, சந்துரு - தண்டனை! இனி ராதாவின் முகத்தையே பார்க்க முடியாதுங்கற முடிவான தண்டனை!"



## 18

லேசாய்த் தூற ஆரம்பித்திருந்தது வானம். ஜீப்பின் முன்புறக் கண்ணாடியில் ஊசியால் தொட்டு வைத்தாற் போல ஆயிரக் கணக்கான நீர்த் துளிகள் சூரிய ஒளிபட்டு ஜ்வலித்தன.

சற்றுச் சாய்வாய் விழுந்த பூஞ்சாறல் இருவர் மீதும் பன்னீராய்ப் பட்டது.

"அன்னைக்கு நீ படபடன்னு பொரிஞ்சு தள்ளிட்டே. பிறகு நடந்தது உனக்குத் தெரியாது, சாகரி."

'என்ன?' என்பதாய் அவன் புறம் திரும்பினான்.

இத்தனை அருகில் உரிமையாய்க் கணவனுடன் அமருவது இதுதான் கடைசி முறையோ என்ற எண்ணம் மறுபடி அவன் உள்ளத்தை மிதித்தெடுத்தது.

"நீ...அதாவது நாம பேசினது அத்தனையையும் ராதா கேட்டுட்டா."

"ஓ...? அவ மறுபடி நம்ப வீட்டிற்கு வந்தாளா என்ன?"

அதிர்ச்சியில் அவன் குரல் தணிந்திருந்தது. "நீ எஸ்டேட் வந்த முகூர்த்தம்தான் தன் வாழ்வு துளிர்த்ததுன்னு உங்கிட்டே சொல்லி சந்தோஷப்பட வந்தவளை உன் ஆக்ரோஷமான பேச்சு குழப்பிடுச்சு."

"ஓ? அதான் நான் அதன்பிறகு ராதாவைப் பார்க்கலியா? நான் அங்கிருந்து கிளம்பறப்போ அவளைப் பற்றி கேட்டப்ப யாரும் சரியாய்ப் பதில் சொல்லலை..."

'வீட்டு வேலைக்கு வேறொரு பெண்ணை அனுப்பச் சொன்னேன்.'

"ம்ம்... சரி. புருஷன் திரும்பிய குதூகலத்தில் இருக்காள்னு விட்டுட்டேன்."

"இல்லை - ராதா விஷம் குடிச்சிருந்தா."

முன்பு நடந்த சம்பவம் என்றாலும் செய்தி புதிதென்பதால் அதிர்ச்சியாகவே இருந்தது.

"ஏன்... எதுக்கு... நான் சொன்னதைக் கேட்டதாலா?"

"உன் பேச்சு அறியாத அவளைக் குழப்பிடுச்சு..."

"அதாவது சிந்திக்க ஆரம்பிக்கறதுங்கறதுக்கு உங்க அகராதியிலே குழப்பம்னு அர்த்தமா? ஓடிப்போன



அந்தப் பொறுக்கிப் புருஷனுக்குப் பதிலாய் என்னைக் குற்றம் சாட்டறீங்க?"

'நோ, சாகரி - அவன் செய்தது தப்புதான். ஆனா ராதா அவனை ஆசைப்பட்டுக் கல்யாணம் செய்துகிட்டவ... புருஷன் திரும்பணுமேன்னு தினமும் கடவுளை வேண்டிக்கிட்டவ."

"அத்தனை ஆசையும் எம் பேச்சைக் கேட்டதுல நொறுங்கிடுச்சா? அவ ஒட்டுக் கேட்டது எனக்கெப்படித் தெரியும், சந்துரு?"

படபடப்பாய்ப் பேசியதில் அவன் பெயரை முன்புபோல உரிமையாய் உபயோகப்படுத்தினாள்.

"உண்மை. ஆனால் மனுஷ மனசு ரொம்ப விசித்திரமானது இல்லியா? ஏன் எனும் காரணமின்றிச் சில நேரம் சிலரைக் கொண்டாடும். இல்லைன்னா சிலரைத் திண்டாட விடும். புரிஞ்சுக்கப் பொறுமை வேணும்... நீ எங்கிட்டே உன் எண்ணத்தைச் சொன்னே. ஆனா அது ராதாவைக் குழப்பிடுச்சு. தன் புருஷனை வெறுக்கவோ மறக்கவோ முடியும்னு தோணாததால அவ தற்கொலைக்கு முயற்சி செய்துட்டா."

"இப்போ ராதா?"

"நல்லா இருக்கறா - இது அவளுக்கு ஆறாம் மாசம்னு நினைக்கறேன்."

"கர்ப்பமாய் இருக்காளா?"

"ம்ம்... பிச்சமணி - அதான் அவ புருஷன் - இப்போ அவளைத் தலை மேல வச்சுத் தாங்கறான் - வேலைக்குக்கூட அனுப்பறதில்லை."

''அவன் முழி... பார்வையே சரியில்லை... நிலைச்சு வாழ்வாங்கற நம்பிக்கை எனக்கில்லை.''

சந்துரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''இதைத்தான் உன் பிரச்சனைன்னு சொல்றேன். நல்லதையே நம்புவோமே! சறுக்கின மனுஷன் மறுபடி எழுந்து நிற்க, நல்லா நடக்கவே முடியாதுன்னு ஏன் நினைக்கணும்? அது கொஞ்சம் கர்வக்காரச் சிந்தனை இல்லியா?

''காதல் என்பது சாதல்

நான் என்பது சாக வேண்டும்' - இதைப் படிச்சிருப்பே...''

''தெரியும். அதைச் சொன்னவர் ராஜாஜி.''

''தற்பெருமை, தன்னலம் அழிந்தால்தான் காதல் பூரணமாகும்.''

என்ன சொல்ல வருகிறான்? நான் இப்படிக் கோகுல கிருஷ்ணனாகவே இருக்கிறேன். நீ உன் சுயம், கௌரவம் எல்லாம் துறந்து ஐந்தோடு ஆறாவது கோபிகையாக என்னைச் சுற்றி ஆடிக் கொண்டிரு என்றா?

நம் பிரிவிற்கான காரணம் என்றானே...?

'உனக்குப் பெருந்தன்மை இல்லை. என் குற்றங்களைப் பார்க்காதிருக்கும் பக்குவம் இல்லை... ஆக, பிரிவு ஒன்றே வழி!' - என்று சொல்ல வருகிறானா?

ஐந்து நாட்களாய் அறைக்குள்ளேயே இருந்த அப்பாவின் முகம் நிறம் கூடியிருந்தது. மகள் பத்திரமாய்த் திரும்பி வந்த மகிழ்வும் சேர்ந்து அதில் அலாதி தேஜஸ் - அதுவும் மகளும் மருமகனும் இணைந்து வந்தது. நின்றதைப் பார்க்க, வாயெல்லாம் பல்!



''என்னம்மா, சினிமாக் கதை போலச் சொல்றே?''

வேறொரு அறையில் படுக்கை ஒன்று காலியானதால் பேராசிரியர் அங்கு போய் விட, மறுபடி ராஜாங்கத்திற்குத் தனியறை வாய்த்திருந்தது. ஆக, சாகரி தயக்கமின்றித் தன் கதையைத் தகப்பனிடம் கொட்டிக் கவிழ்த்து விட்டாள்.

'அடே அயோக்கியப் பயல்.'

'இவனெல்லாம் ஒரு பொண்ணா...பாம்புக்குப் பிறந்த தேள் குட்டி.'

'ஆண்டவன்தாம்மா உனக்குப் புத்தியை, பலத்தைத் தந்து காப்பாற்றிக் கூட்டி வந்தது...' என்று இடையிடையே சொன்னபடி 'கதை' கேட்டார் அப்பா.

பாசமுள்ளவர்கள் இப்படித்தானே பதறிப் போவார்கள். சந்துருவும் இருந்தானே... நக்கலாய் நக்கலாய்ப் பேசி பின்... எந்த சம்பந்தமும் இல்லாமல் ராதாவின் கதையைச் சொல்லி...

''குளிக்கணும்ப்பா. தேக்கடியிலே நாமிருந்த அதே ஹோட்டல்ல ரூம் எடுத்தேன். அசதியிலே தூங்கி எழுந்தப்போ இவர் வந்துட்டார் - நீங்க பதறுவீங்கன்னு தெரியும் -அதான் அப்படியே கிளம்பிட்டேன்... சுசுகன்னுது...''

''மாற்றுத் துணிகூட இருக்காதேம்மா- உன்பெட்டியை அங்கயே விட்டுட்டதாய்ச் சொன்னியே?''

''இவர்... சந்துரு தேக்கடியிலேயே போகலையாய் ஒருசெட் துணி வாங்கிக்கச் சொன்னார்.''

ராஜாங்கம் ஆதங்கத்துடன் திசைக்கொரு பக்கமாய்த் திரும்பி நின்ற அந்த விநோதத் தம்பதியைப் பார்த்தார்.

துணி, துவாலையுடன் குளியலறைக்குள் புகுந்தாள், சாகரி.

அவள் வெளியே வந்த போது மாமனும் மருமகனும் தீவிரப் பேச்சுவார்த்தையில் இருந்தனர். இவளைக் கண்டதும் சம்பாஷணை அடங்கியது. ஷாம்பூ தேய்த்து அலசிய கூந்தலைக் காயவிட வெயிலுக்குப் போனாள். மிக மிருதுவான தலைமுடி என்பதால் பத்தாம் நிமிடம் உலர்ந்த பட்டாய்ப் பறந்தது - உடலைத் தழுவியிருந்த புதுச்சேலையும் கூடச் சுகமாய் வழுவழுத்தது.

கண்ணை உறுத்தாத ஊதா நிறத்தில் பொடிப் பூக்களிட்ட சேலை. அதேவர்ணத்தில் வெல்வெட் ரவிக்கை.அடிக்கடி இந்த ரக ஆயத்தரவிக்கை ஒன்றை வாங்க நினைத்ததுண்டு. ஆனால் சென்னையின் வெயில் வீச்சிற்கு அஞ்சித் தவிர்த்ததும் உண்டு.

இன்று அவசரத்திற்கு வாங்கிய ரவிக்கை, தேக்கடியின் சாரலுக்கும் குளிர் காற்றிற்கும் தோதாகவே இருந்தது. கணவன் வாங்கித் தந்தது என்பது ஒரு புறம் துள்ளலாகவும், இந்நிலையில் தான் சிக்கி, இத்தனை பேச்சுக் கேட்க நேர்ந்தது துன்பமாயும் இருந்தது.

''யம்மாடி...உன்னை எங்கேயெல்லாம் தேடினோம்... உங்கப்பாட்ட விஷயத்தைச் சொல்றது எப்படின்னு நடுங்கிட்டு வந்தால்... நீ இங்கேயிருக்கே...!''

இப்படி உரத்த புலம்பலும் ஆச்சரியமுமாய் இவளை நோக்கி வந்து கொண்டிருந்தார் அன்பரசு!

இவள் முகம் வெளுத்தது.

''என்னாச்சம்மா, சாகரி? இப்படிச் சொல்லிக்காமல் கிளம்பிட்டே? இங்கே எப்படி எப்போ வந்தே?''



மழிக்காத முகமும் படியாத தலையுமாய்ச் சற்றுப் பரிதாபமாய்த்தான் தெரிந்தார் மனுஷன் -

இது நடிப்பா? இல்லை - நிஜந்தானா?

''அப்பாகிட்டே உன்னைக் காணலைங்கற விவரத்தைச் சொல்லிட்டு அவர் அனுமதியோட போலீஸுக்குப் போறதாய் இருந்தேன். ஏற்கெனவே எம் மேல அபாண்டமான பழி இருக்கம்மா -ரெண்டு எஸ்டேட் பொண்ணுங்க சினிமா சான்ஸுக்காய்ப் பட்டணம் போய் விட, பழி எந்தலையிலே... இப்ப நீன்னவும் நடுங்கிட்டேன்.''

'சென்ட்' தடவ மறந்திருந்ததிலேயே அவர் சொல்வது பொய்யுமில்லை என்பதை யூகிக்க முடிந்தது!

''ஏன் ஸர்? அஞ்சலி உங்ககிட்டே ஏதும் சொல்லலியா?''

''அவகிட்டே சொல்லிட்டுதான் கிளம்பனியா? பாக்கியம், காலம்பரமே குய்யோ முறையோன்னு கத்தி வீட்டைக் கடைஞ்சிட்டா - உன்னை வீடெங்கும் காணோம்னு. காலையிலே நடப்பேன்னியாமே... ஆகவேலையாட்கள் சுத்து வட்டாரமெல்லாம் அலசித் தேடினாங்க. ஒன்பது மணி வரை தேடியும் உன் தடயமே இல்லைன்னதும்தான் பயம் பிடிச்சிருக்க...''

''அஞ்சலி ஏதும்...?''

''நீ அந்த விஷயத்தை அஞ்சலிட்ட பேசினியாம்மா? அவ ஏதும் வீம்பாய்ப் பதில் சொல்ல நீ கோவிச்சுட்டு கிளம்பிட்டியோ?''

''என் மானத்தைக் காப்பாத்திக்கறதுக்காய்க் கிளம்பினேன் - அதுவும் உங்க வீட்டு ஜீப்பிலே டிரைவருக்கே தெரியாம ஏறித்தான்...''

அன்பரசு பரிதாபமாய் விழித்தார்.

அந்நேரம் அவர் வயது அப்பட்டமாய்த் தெரிந்தது!

"அந்தச் சோதா டிரைவர் பயல்... இது ஏதோ மோகினி வேலை- அதான் உன்னை இழுத்திட்டுப் போயிருக்கன்னு உளறிட்டிருக்கான்..."

சுருதி மிக இறங்கி முணுமுணுத்தார்.

"மற்றவங்களைத் திட்டிப் பிரயோஜமில்லை, ஸர்- உங்களுக்கே தெரியும், நான் இப்படிக் கிளம்பக் காரணம் நீங்கதான்னு!"

மேலும் கண்ணாமூச்சி ஆட விரும்பாமல் கட்டை அவிழ்த்து விட்டாள்.

"நிஜமாவே புரியலைம்மா..."

சாகரி விவரத்தை முடிந்தவரை நாசுக்காய்ச் சொல்லச் சொல்ல... அவர் முகம் கறுத்தது.

"நான் எட்டடின்னா பதினாறடி பாயறாளா அவ?" கறுவினார்.

"டிரைவர்ட்ட நான் கேட்டுட்டாலும் ஏத்திட்டுப் போகக் கூடாதுன்னு நீங்க எச்சரிக்க வைத்திருந்ததாய் அஞ்சலி சொன்னா... அதான் இப்படி..."

"உன்னை உடனே வீட்டிலேருந்து கிளப்பறதுக்காய் அந்தக் கழுதை... அஞ்சலி போட்ட திட்டம்மா இது. நீ சந்துருவுடைய மனைவிங்கறது அவளுக்குப் பெரிய அதிர்ச்சி. மேலும் நீ ஏதும் பேசி சந்துருவிற்கு எதிராய்த் தன் மனசை மாற்றப் பார்ப்பியோங்கற எண்ணம்... அந்த முன் எச்சரிக்கையிலே உன்னைப் பயமுறுத்தி வாயடைக்கட்டா. மறுநாளே உன்னைக்



கிளம்ப வைக்கிறதுக்காய் இப்படியொரு அபாண்டத்தை எம் மேல சுமத்தி..."

அழுவது போல அன்பரசு முகத்தை வைத்திருந்தாலும், சாகரி அப்படியே ஒன்றும் உருகிப் போய் விடவில்லை.

"ஏதோ பொண்ணுங்க கிட்ட கொஞ்சம் இளிக்கப் பேசுவேனே தவிர... ச்சே... மகளே அபாண்டம் சொன்னா, நம்பின உன்னை நான் நோக முடியுமா?"

தலையாட்டினாள்.

"அப்பாவைப் பார்க்கலியா, ஸர் - சந்துருவும் அங்கேதான் இருக்கார்."

தளர்ந்த நடையில் ஆஸ்பத்திரி அறையை நோக்கிப் போனார் அன்பரசு. ஆக அஞ்சலி சொன்னது பொய்தான்...! ஆனாலும் எத்தனை கூர்மையான கயமை இருந்தால் இப்படித் திறமையாய்ச் சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வாள் ஒரு பெண்? அன்பரசுவின் நடத்தையும் அப்படியொன்றும் கண்ணியமாய் இல்லையே... தான் தப்பியது ஒரு கண்டத்தில் இருந்துதான் என்ற எண்ணத்துடன் கூந்தலைக் கோதிக் கோடலி முடிச்சிட்டவளை, இழுத்து அணைத்துக் கொண்டது ஒரு பெண் கரம்!

வசந்தரா பாலனின் வீட்டைமெல்லச் சுற்றிப் பார்த்து விட்டு அமர்ந்தாள் சாகரி. இது அன்பரசுவின் மாளிகையைப் போல ஆர்ப்பாட்டம் காட்டா விட்டாலும் மிகுந்த களையுடன் இருந்தது. வீடு முழுக்கப் பசும் செடி வகைகளும் மலர்க் கொத்துக்களுமாய் ஒரு குளிர்ச்சியான அமைப்பு. வீட்டில் நாய்களும் பூனைகளும் சுதந்திரமாய் நடமாடின. சுற்றி வந்தது அவற்றுக்கே அலுத்த வேளையில், 'தொப்'பென்று அறையின்

ஓரமாய் விரிக்கப்பட்டிருந்த கம்பளங்களில் படுத்துக் கண் மூடிக் கொண்டன.

திடீரெனத் தன்னை அணைத்துக் கொண்டு, 'எல்லாம் என்னாலதானேம்மா... ரொம்பப் பயந்துட்டியாடா?' என்று பாசமாய் வசந்தரா கொஞ்ச, சாகரி திகைத்துத்தான் போனாள்.

''என்ன மேடம் சொல்றீங்க - அதெல்லாமில்லை.''

''அவரைச் சித்தப்பான்னு உரிமையாய்க் கூப்பிட்டியாமே - அப்போ நான் சித்திதானே? என்ன... நான் அந்த வளை காப்புக்குப் போயிருக்கலைன்னா இத்தனை வம்பும் வந்திருக்காது - இல்ல... உன்னையாவது கூடவே அழைச் சிட்டுப் போயிருக்கணும். அண்ணனை நம்பி... நான்... தப்புதான்...''

''ஏன் அதையே பத்திப் பேசணும்... சித்தி...''

வசந்தரா புன்னகைத்தாள் -அதன் ஓரமாய்ச் சற்று வருத்தமும் இருந்தது. ''உன்னை அன்பண்ணே அவன் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போனது தப்பான திட்டத்தோடுதான் - உன்னைப் பேச விட்டு அஞ்சலியோட மனசைக் கலைக்க வைக்கறது யோக்கியமான திட்டமா என்ன? ஆயிரம் மனஸ்தாபம் இருந்தாலும் நீ சந்துருவுடைய மனைவி - உன்னைக் காட்டிச் சந்துரு மேல் தன் மகளான அஞ்சலிக்கு வெறுப்பு வரச் செய்றது முறையா? நீ தப்பிக்க வந்துட்டே...''

அன்பரசுவிடம் சிலிர்த்த முள்ளம்பன்றி போல விரைப்பாய் நின்ற சாகரி, அவர் தங்கையிடம் முயல்குட்டியாய் நின்றாள்.

''காலையிலேயே எனக்கு ஃபோன் பண்ணி, 'வசு, சாகரியைக் காணோம்'ன, நானும் இவருமாய் அங்கே ஓடினோம். அண்ணன் சொன்னதிலேயும் அஞ்சலியோட



வாயைப் பிடுங்கினதிலேயும் இருந்து ஓரளவு விஷயம் இன்னதுன்னு யூகிக்க முடிஞ்சது... ச்சே... என்ன மனுஷன். தன் மகளை ஒத்த ஒரு பொண்ணு புருஷனைப் பிரிஞ்சு தவிக்கறாளேங்கற இரக்கமில்லாம, அதைத் தனக்கு, தம் மகளுக்கு எப்படி சாதகமாக்கிக்கலாம்ன்ற குயுக்தி! மன்னிச்சிடும்மா, சாகரி...''

அன்று மதிய உணவை ராஜாங்கத்திற்கும் இவளுக்குமாய்ப் பரிமாறிய வசந்தரா, ''பாருங்க ஸார்... அண்ணா, நாளைக்கே கூட உங்களை டிஸ்சார்ஜ் செய்திடலாம்னு அபிப்ராயப்பட்டார் டாக்டர்... நாளை இந்நேரம் நீங்க கிளம்பிடுவீங்க... அதுக்கு முன்னே சாகரி எங்க வீட்டுக்குக் கொஞ்ச நேரம் வந்து போக அனுமதிக்கணும். நீங்க... மகள் மீண்டு முழுசாய் வந்த நிம்மதியிலே இருக்கற உங்ககிட்டேருந்து அவளை மறுபடி பிடுங்கறதா நினைக்கக் கூடாது...''

''என்ன சித்தி- வரேன் நான்...'' உடனே சம்மதம் சொன்னாள் சாகரி. முதலில் தன்னை வசந்தரா கண்டு கொள்ளாமல் இருந்தாலும் அவர் நல்ல மனதுள்ளவர் என்ற அபிப்ராயம் சாகரிக்குள் விழுந்திருந்தது.

சற்று முன்பு அத்தனை வாஞ்சையும் வாய்மையுமாய்ப் பேசக் கேட்டபின் மேலும் பிடித்துப் போனது.

வசந்தராவின் வீட்டிற்கு வந்து மறுபடி ஒரு தூக்கம் போட்டு எழுந்த சாகரியின் முகம் தெளிவாகியிருந்தது.

''உங்க பசங்க ஸ்கூல் விடுமுறைசமயம் நீங்க எல்லாருமாய் எங்க வீட்டுக்கு வரணும், சித்தி...''

''கண்டிப்பாய் வருவோம் - இந்தா, இதைச் சாப்பிட்டபடி இப்படி உட்காரு - சிக்கெடுத்துத் தலைவாரி விடறேன்.''

சின்ன முக்காலியில் வைக்கப்பட்ட பீங்கான் தட்டில் நெய்ப் போளியும் சீடையும் மணத்தன.

"பரவால்ல, சித்தி... நானே..."

"பொன்னணில்லாத குறைடி எனக்கு... கொஞ்சம் உன் மூலம் தீர்த்துக்கறேனே!"

பெரியவள் அதட்ட, புன்னகையுடன் சோபாவில் அமர்ந்தாள்.

"இப்படி ஆசையாய்த் தான் அஞ்சலியையும் வச்சிருந்தேன் - இப்பத்தான புரியுது-அவ வந்தது இந்த அசட்டு அத்தையோட அன்புக்காய் இல்லை... சந்துருவுக்காய்னு..." பேசியபடி பின்னலிட்டு அதில் மணமாய்ச் சாமந்தி மலரைச் சூட்டியவள், இளையவளின் முகம் திருப்பி உச்சியினை முகர, சாகரிக்குப் பல வருடங்களாய் இழந்த தன் தாயைத் தொட்ட பரவசம்...



## 19

"பிடிச்சிருக்குதா?"

அந்தக் கரும் பச்சைப் புடவையை நுனிவிரலால் நீவினாள், சாகரி.

"ரொம்ப அழகாயிருக்குது, சித்தி. சரிகைத் தாழம்பூ கரையும் பச்சையுமாய் அபூர்வமான புடவை."

"நல்லது."



மஞ்சள் துண்டு புஷ்பத்துடனிருந்த தட்டில் புடவையை வைத்து நீட்டினாள், வசு.

"இதென்ன... எனக்கா?"

"பின்னே... வாங்கிக்கோம்மா..."

"வித்தியாசமாய், விலையுயர்ந்ததாய்த் தெரியுதே - எங்கே வாங்கனீங்க?"

"காஞ்சிபுரத்திலே ஆர்டர் தந்து வாங்கினேன்."

"உங்களுக்குன்னு வாங்கினதை..."

"முழு மனசோடதான்டி தரேன். உனக்கு இன்னும் பொருத்தமாய் இருக்கும்."

வேணி பரிசளித்த புடவையும் நினைவிற்கு வந்து முள்ளாய்த் தைத்தது. வசுந்தராவுடன் மனம் விட்டுப் பேசியதில் சாகரிக்குப் பல விஷயங்கள் புரிந்திருந்தன.

"அஞ்சலிக்குச் சந்துரு ஏத்தவன்னு நானாய் நினைச்சது தப்பாய்ப் போச்சுங்கற ஏமாத்தத்தில் உங்கிட்ட மூஞ்சைக் காட்டினது முறையில்லம்மா - அவன் கல்யாணம் ஆனவனா ஆகாதவனான்னு கூடத் தெரியாம ஜோடி சேர்த்தேனே புத்திசாலி... மறைச்சவனை விட்டுட்டு அப்பாவி உன்னை முறைச்சேனே."

"இனி ஏன் சித்தி, அதெல்லாம் -மறந்துடுங்க."

"சிலவற்றை மறக்கக் கூடாதேம்மா, சாகரி..." வசுந்தராவின் குரல் மிருதுவானது. "அதாவது சில உறவுகள் பவித்ராமாய்ப் பாதுகாக்கப்படணும்... கொஞ்சம் பவித்ரி பண்ணினால் சுலபமாய் உறவுகளோடு வாழ்க்கையை ஓட்டிடலாம்..."

தன் தாயே வந்து ஆலோசனை சொல்வதாய் ஆவலுடன் கவனித்தாள் சாகரி...

"ஒரு கைனடிக் ஹோண்டா நூறு கிலோ எடையிருக்கும். ஆனா சென்னையிலே எத்தனை டீன்-ஏஜ் பொண்ணுங்க அதை லாவகமாய் ஓட்டிப் போறாங்க..."

"எல்லா ஊரிலேயும் இது சகஜமான காட்சிதானே, சித்தி."

"ம்ம்... ஆனா இதே ஹோண்டாவைத் தலைக்கு மேலே தூக்கிட்டுத்தான் போவேன்னா அது ஆகற காரியமா? தாம்பத்தியமும் அது போலத்தான்டா - ஒரு சைக்கிள் ஓட்டறதுக்குக்கூடப் பயிற்சி எடுத்துக்கற நாம வாழ்க்கையை நல்லா நடத்தன்னு எந்தப் பயிற்சி... ஏன், முயற்சி கூட எடுத்துக்கறதில்லை..."

"தாம்பத்தியத்திலே ரெண்டு பேருடைய முயற்சியும் அவசியமே..."

"பின்னே? முதல்ல பொம்பளைங்க ஆரம்பிப்பமே... இப்போ எதிலேயும் நாமதானே முதலிடத்தில் நிக்கறோம்!

"புதுமையான பெண் உரிமைக் குரல் இது. பொறுமையிலேயே முதல் முயற்சி நம்மதாய் இருக்கட்டுமேங்கறது..."

"என்னம்மா, வக - கிளம்பலாமா... இருட்டிடும்..."

"இதோ வரோம்..." குரல் தந்த வசந்தரா, சாகரியிடம் சொன்னாள் - "போகிற வழியே உனக்கு ஒரு இடத்தைக் காட்டணும்மா."

"எங்கே?"

"கேள்வியெல்லாம் கேட்கக்கூடாது நீ."

"சரி. கிளம்பலாம்... எங்கேன்னாலும்."



உற்சாகமாய் மூத்தவளைப் பின்தொடர்ந்தாள் இளையவள். ஆனாலும் கார் வளைந்து நெளிந்து போன போது அறியும் ஆவல் அதிகமானது.

"எங்கே சித்தப்பா போறோம்? நீங்களாவது சொல்லுங்களேன்."

"இன்னும் ரெண்டே நிமிஷத்திலே உனக்குப் புரிஞ்சிடும்மா."

சொன்னது போல கார் மறு திருப்பத்தில் வளைய, இவளுக்குப் புரிந்தது - கருநீல வர்ணமடித்த மரப்பலகையில் மஞ்சள் எழுத்துக்கள் அந்திச் சூரியனில் பொன்னாய் மின்னின.

'சாகரி எஸ்டேட்ஸ்.'

கார் அயராமல் முன்னேறியது.

"இங்க... எதுக்கு சித்தி?"

"இது உம் பேரிலே உள்ள தோட்டம் - வாங்கின ஒன்னரை வருஷத்திலே எத்தனையோ இம்ப்ரூவ் பண்ணிட்டார் சந்துரு. வீடும் கூட ஏறக்குறையப் பூர்த்தியாகற கட்டம்தான். சும்மா பாரேன்...."

இனியும் மறுக்க மனமில்லை. இனி இவற்றைப் பார்க்க வாய்க்குமோ இல்லையோ - இன்னும் சில நாட்களில் எஸ்டேட்டின் பெயர்கூட மாறிவிடும்.

அதற்குள் ஒருமுறை கண்ணாரக் காண்பதில் தவறென்ன? இனி ஹேமா, அஞ்சலி என்று பல கோபிகைகள் வளைய வரும் பிருந்தாவனமாய் இருக்கப்போகும் இடத்தை முதலும் கடைசியுமாய்... மனம் நீருக்குத் தவிக்கும் மீனாய்த் துடித்தது.

பசும் மரங்களூடே வெளேரென்று தனியாய்த் தெரிந்தது வீடு.

சரிவான கூரையில் சிவப்பு ஓடுகளைச் சீராய் அடுக்கிக் கொண்டிருந்தனர். ஆங்காங்கே பருமனான தூண்கள் தாங்கி நிற்க, சுற்றிலும் தாழ்வாரம் ஓடியது.

"பழங்கால பிரிட்டிஷ் மோஸ்தரில் இருக்குது - அழகான வீடு..." பழைய ஆங்கிலேய பாணி கட்டடங்களில் தனக்கு மோகமுண்டு என்பதைச் சந்துருவிடம் சமயங்களில் சொன்ன நினைப்பிருந்தது.

தனக்குப் பிடித்த பாணியில் உருவாகும் வீடு... ஆனால் அதில் தான் இருக்கப் போவதில்லை! மேஸ்திரி, பாலனைக் கண்டதும், தனியே போய்த் தீவிரமாய் விலை, வேலை விவரங்களைப் பேசினார்கள்.

"பிரைமர் காஞ்சிருக்க போலயே - நாளைக்கே பெயின்ட் வேலையை ஆரம்பிச்சிடுறீங்கல்ல... சீக்கிரம் குடிவரணும்."

"பின்னே - பொழுது சாயவும் வேலை தொடருது. பார்த்தீங்கல்ல?"

"நல்லது. அவசரத்தைப் புரிஞ்சுகிட்டீங்க." வசுந்தரா தோட்டக்காரரிடம் தோட்டத்தைப் பற்றிக் குறிப்புகள் தந்தபடி நிற்க, சாகரி வீட்டிற்குள் நுழைந்தாள் -

உடல் சிலிர்த்தது.

குழந்தையின் ஆர்வத்துடன் ஒவ்வொரு அறையாய்ப் போய் பார்த்தாள். சுவர்களைத் தொட்டுத் தடவினாள்.

விஸ்தீரணமான அறைகள். தாழ்ந்த கூரை, தேக்கு மரத் தாலான தரை -சமையலறை கூட வெகு நவீனமாய்...

இதில் தான் சமைத்து... சந்துருவிற்குப் பரிமாறினால்? சிலநேரங்களில் அவனும் எதையேனும் கிளறித் தனக்கு ஊட்டி விட்ட ஞாபகங்கள் இன்னும் பசுமையாகவே இருந்தன.



குழாய் ஒன்றைத் திருகினாள்... அது வெறுமே முனகியதோடு சரி. "தண்ணீர் கனெக்ஷன் இனிமேல்தான்." வந்த பதிலில் விருட்டெனத் திரும்பினாள்.

"நீங்க எப்படி இங்கே...?"

"இது என் வீடுதானே, சாகரி?"

சற்று அலட்சியமாய் வந்தது விளக்கம். "ஆமா -ஸாரி. நான்... நான் வசுந்தரா சித்தியோட வந்தேன்."

"தெரியும் -ஆனா இன்னும் நம்மிடையே சில விஷயங்கள் தெரியாமல், தெளியாமல் இருக்கில்லையா?"

"ம்ம்."

"உதாரணத்துக்கு யாரந்த ஹேமா?"

"ஆமா..." சற்று முன்திறந்த குழாயைப்போல சன்னமாய் முனக மட்டுமே அவளால் முடிந்தது.

"இன்னைக்கு ஹேமாவுடைய நிச்சயதார்த்தம் ரொம்ப எளிமையாய் முடிஞ்சிருக்கும்."

குழப்பமாய் நிமிர்ந்தாள்.

"அவள் என் அத்தைப் பொண்ணு. கேரளாவிலேயே வளர்ந்தவள். நாலு வருஷங்களுக்கு முன் மிஸ் கேரளாவாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவள் வாழ்க்கை திசை திரும்பிடுக்க... பிரபல மாடலாயிட்டா..."

உடம்பெல்லாம் செவியாக அவன் சொல்வதைக் கவனிக்கலானாள்.

"அத்தைக்கும் மாமாவுக்கும் ஆசாரம் ஜாஸ்தி. மூத்த பொண்ணான ஹேமா ஷோ பிஸினெஸ்ல புகுந்தது

அவங்களுக்குப் பிடிக்கலை... அதிர்ச்சின்னு கூடச் சொல்ல லாம்."

"கல்யாணதப்ப வந்த மாமா?"

"அவர் என் அம்மாவோட கூடப் பிறந்தவர்- இது அப்பாவழி உறவு... ஹேமாவை 'ஊர் உலகம் மாறுது... நீயும் வேகம் போ'ன்னு ஊக்கப்படுத்தினேன் நான் -அதனால அத்தைக்கு எம் மேல் கோபம் -'இவளைக் கல்யாணம் பண்ணிக்கிறியா? சொல்லு - இல்லை, கல்யாணமே கட்டிக்கோ - பிறகு ஊர் ஊராய்ப் போய் இவ அரைகுறையாய் நடக்கட்டும், ஆடட்டுங்கறது...' அவங்க கட்சி. ஆனா குழந்தைப் பருவத்திலிருந்தே எங்களிடையே இருந்தது குஷியான நட்பு மட்டும்தான்..."

இங்கே அவன் சற்று நிறுத்த, சாகரி மென்று விழுங்கினாள்.

"ஹேமா ஒரு நடன அமைப்பாளன் மேல விருப்பப்பட்டா. அவனைப் பற்றி எனக்கு எழுதினாள். அவன் ஃபோட்டோ வோடு போய் விதுபாலனைச் சந்திச்சேன். ஆனா எனக்கு அவன் மேல நல்ல அபிப்ராயம் விழலை... ராதாவோட புருஷனை நீ சந்தேகப்பட்டியே... அதேபோல ஒரு நமைச்சல் -ஹேமாவை எச்சரிச்சேன்.

"ஆள் சரியாய்த் தெரியலை... பார்த்துப் பழகு!'ன்னு. அவனுக்கு வேற்று ஜாதி, மொழி, கலாச்சாரம் - வளையல் போட்டு, சடை கூடப் பின்னியிருந்தான் - நான் அதைத்தான் குறிப்பிடறேன்னு நினைக்க ஹேமா சிரிச்சாள் -

"அப்பா அம்மாவைப் போல நீயும் கர்நாடக மாயிட்டியா!'ன்னு."

இப்போது சாகரிக்கு ஹேமாவின் கடிதம் புரிபட்டது. ஆக இதைத்தான், 'நீ ஜாக்ரதையாய் இருக்கச் சொன்னாய் - நீ பயந்த



மாதிரியே நடந்து விட்டது!' என்றிருக்கிறாளே ஒழிய, தான் யூகித்தது போலில்லை.

"விதுபாலனை கொரியோகிராபர்னுவாங்க. ஒவ்வொரு பேஷன் ஷோவுக்கான நடைகளை, நடன அசைவுகளை அமைப்பவன்- அரங்க அமைப்பிலும் கூடத் தேர்ந்தவன். அவன் நடத்தற அத்தனை ஷோவிலேயும் நட்சத்திரம் ஹேமாதான். அவளை வச்சுதான் பெரிய அளவிலே விளம்பரம் பண்ணப்பட்டது."

சாகரி கால் மாற்றி மாற்றி நிற்பது கண்டவன் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டுவிட்டுப் பேச்சைத் தொடர்ந்தான்.

"ஒரு தடவை திருவனந்தபுரத்திலே அவளைக் கொஞ்சம் ஆபாசமாய் சித்தரித்துப் போஸ்டர்கள் ஒட்டப்பட, அத்தை மாமாவுக்கு ரொம்ப அவமானம். முன்னமே, 'நேரங்கெட்ட நேரத்திலே வரேன். அதனால்உங்களுக்குச் சிரமம்'னு ஹேமா தனியே ஒரு ஃப்ளாட் பார்த்துப்போயிட்டா - 'இப்போ இதெல்லாம் சகஜம்'னு நானும் சிலசமயம் சொன்னோம். ஆனா பெரியவங்களுக்குப் பொறுமலதான். இந்த 'போஸ்டர்' விவகாரத்துக்குப் பிறகு அவங்க ஹேமாவுடைய தங்கையின் படிப்பை நிறுத்தி, கல்யாணம் பண்ணி வச்சட்டு, பிஸினஸையும் மூடிட்டு கல்லிடைக்குறிச்சி- அதான் மாமாவோட பூர்வீகம் - போயாச்சு..."

அதிக ஏற்ற இறக்கங்கள் இன்றி ஒரு கடின முகபாவனையுடனேயே சொல்லிக் கொண்டு போனான்.

'இதுதான் நடந்தது, என் சாகரி - புரிந்து கொள்!' என்ற பாவனையை விட, 'என் கடமை - விளக்கிவிட்டேன். ஆளை விடு!' என்ற தொனி!

ஹேமா ஏன் அத்தனை பதட்டமாய் எழுதியிருந்தா?''

''நீ பார்த்த ஃபோட்டோஸ்தான் காரணம் -இவளை வச்சு இன்ட்டர் நெட்டிற்காய் ஒரு ஆல்பம் தயாரிக்க விதுபாலன், கம்ப்யூட்டர் உதவியிலே அவளை உரிச்சுட்டான்... அதாவது...''

''புரியுது... உடையை மட்டும் விலக்கி... நிர்வாணமாய் இருக்கறதுபோல...'' முகம் சிவக்கச் சொன்னாள்.

''முன்னே திருவனந்தபுரத்திலே ஒட்டின போஸ்டர்ஸ் ஆபாசமில்லை - ஹேமா ஒரு பெரியபட்டாம்பூச்சியாய்ப் பறக்க, சுற்றிலும் ஆண்கள் பூக்கள் போலச் சித்தரிக்கப் பட்டிருந்தது. அதையே தாங்க முடியாத அவளைப் பெத்தவங்க இதைப் பார்க்க, கேள்விப்பட நேர்ந்தாலும் கூடப் போச்சு. தவிர ஹேமாவுக்குத் தான் அப்படி போஸ் கொடுக்காதப்ப தன்னை ஏமாற்றிக் கீழ்த்தரமாய்ப் பயன்படுத்தி விட்டானேன்னு பயங்கரக் கோபம். தானே மோதிப் பார்த்திருக்கிறாள் - அதிலதான் விதுபாலனோட சுயரூபம் புரிஞ்சுகிட்டா -அடியாள், அடிதடி, மிரட்டல்னு பக்காக்கேடி அவன் - அந்த பயங்கரத்திலே அரண்டுதான் என் உதவியைக் கேட்டிருந்தா. அடிக்கடி ஃபோன் தகராறு பண்ணுங்கறதால முதல்ல லெட்டர் எழுதிட்டு, பிறகு பேசவும் செய்தா.

''எம்மேலிருந்த கோபத்துல அத்தை மாமா நம்ப கல்யாணத் துக்கு வரலை - 'பெரியவங்க போகட்டும், ஆசீர்வாதம் பண்ண'ன்னு ஹேமாவும் வரலை. ஆக உனக்கு அவளை அடையாளம் தெரியலை...''

''உறவுக்காரங்க கல்யாணதப்போ வர்றது இதுக்காகத்தான் தம்பதிங்க பரஸ்பரம் மத்தவங்க குடும்பத்தை



அறிமுகப்படுத்திக்க - ஆனா வராதவங்களைப் பற்றி வாயே திறக்கக் கூடாதுன்னு ஏதும் சட்டம் இருக்கா...?''

சிறிதேனும் சிரிப்பான் என்று சாகரி எதிர்பார்க்க, அவன் வேறெங்கோ பார்த்தபடி பேசினான்-

''இதைத்தான் இன்னைக்குக் காலையில் சொல்ல முயன்றேன் - அதாவது உனக்கு மனுஷங்க கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் பொறுக்காது- தான் நேராய் இருக்கிறாத் போல எல்லாரும் இருந்தாலென்னங்கற எண்ணம் - ஒரு திணுசான கர்வம்...''

''எனக்குப் புரியலை -எதுக்கு இப்ப என் குணாதிசயத்தை அலசணும்?''

''ஹேமா குடும்பத்திலே கசமுசா, அதிலும் பல பேர் வாயிலே விழுந்து பெத்தவங்களால ஒதுக்கி வைக்கப்பட்ட வளைப் பத்தி உன்னிடம் ஏன் வீணாய் விவரிக்கணும்னு விட்டுட்டேன். பிறகு ராதா விஷயத்துல உன் காட்டமான விமர்சனத்தைக் கேட்டதும் ஹேமா பேச்சே வேண்டாம்னு முடிவு பண்ணிட்டேன். ஆனா ஹேமாவை அவசரமாய்ப் போய்ப் பார்த்த பிறகு உங்கிட்ட எல்லாம் சொல்லிடணும்னு தான் நினைச்சேன். அந்த சமயம்தான் வேணி வந்து குழப்பிட்டா... நான் பழகினவரை வேணி நல்ல பெண் இல்லை... சந்தர்ப்பவாதி... எங்கிட்டே அதிகமாய் நெருங்கிப் பழக முயற்சித்து...பிறகு...''

சந்துரு தடுமாறினான் -

''அவளின் அண்ணாவும் நீங்களும் நண்பர்கள்னா...''

''ஒரே காலேஜுங்கற பழக்கம்... ஹாக்கி டோர்ன மென்ட்டுக்கு எங்களோட வேணியும் வருவா... பெத்தவங்

களை இழந்த சின்னப் பெண்ணுனு நான் பரிவு காட்டினது தப்பாயிடுச்ச. 'விக்ரமைப் போல நானும் உனக்கு ஒரு அண்ணன்'னதை அவ விரும்பலை. நான் ஏமாத்திட்டதாய்ப் பேச்ச பரப்பினா - ஆக ஒதுக்கிட்டேன்."

"இதை முதல்லியே சொல்லியிருந்தால்..."

"ஒரேயடியாய் உன்பழைய சிநேகிதியைப் பிரிச்ச பாவம் எனக்கெதுக்குன்னு நினைத்தேன் -ஆனா அது எனக்கே வினையாயிடுச்ச."

தலை சுற்றுவது போலிருந்தது. சாகரிக்கு...

"ஆனா நம்ப உறவு சரியாயிருந்தால் வேற யாரும் அதைக் சேதப்படுத்தியிருக்க முடியாது. அடிப்படையில் நீ என்னை நம்பலை, சாகரி. அதான் ஹேமாவும் வேணியும் உன்னைக் குழப்ப முடிஞ்சது... இப்போ அஞ்சலி கூட உன்னை ஏமாத்திட்டா... இல்லையா?"

"அவ அப்பா எங்கிட்டே முறை தவறப் போறதாய்ச் சொன்னது என்னைக் குழப்பத்தான்... ஆனா அவளுக்காய் நீங்க இந்த வீட்டைக் கட்டறது பொய்யில்லையே... அவ மருந்து தடவினப்போ நீங்க சுகமாய் அனுபவிச்சதெல்லாம் நிஜம்தானே?"

அவன் முகம் சிவந்தது.

"அது எங்களுக்கிடையிலான விஷயம்..."

வாயடைத்து அழுகையை விழுங்கினாள் -

பேச்சை மாற்றுவதற்காய்க் கேட்டாள்.

"ஹேமாவுக்கு நிச்சயதார்த்தம்னீங்க... யார் மாப்பிள்ளை?"



"தனக்குப் புருஷனைத் தேர்ந்தெடுக்கற ஞானம், பொறுமை எல்லாம் தன் பெத்தவங்களுக்குத்தான் இருக்குதுன்ற முடிவுக்கு வந்துட்டா. நான் எனக்குவேண்டிய போலீஸ் அதிகாரிமூலம் விதுபாலனை மடக்கி ஹேமாவுடைய ஆல்பம் வெளிவராமல் தடுத்துட்டேன்.

"இந்தப்புகழ், சாதனைல்லாம் போதும்னு சலிச்சிட்டா. பெரியவங்க தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை - மிலிட்டரியிலே மேஜர்."

"கெட்டிக்காரி- சுதாரிச்சுட்டா. பெரியவங்க தேர்வுதான் சரிங்கறதைப் புரிஞ்சுகிட்டா..."

"துணையைத்தானே தேர்ந்தெடுக்கறது தப்பில்லை - அதே வேகம் துணையை விடாமலிருக்கறதிலே இருக்கணும்..."

அவளும் விடவில்லை.

"தப்பாய்த் தேர்ந்தெடுத்தவனைப் பிடித்துத் தொங்க வேற வேணுமா?"

ஆத்திரத்தில் பதிலடித்தாள்.



## 20

"ஊசி இடம் தராம நூல் நுழைய முடியாதும்மா - கண்டவங்களும் நம்ப வாழ்க்கையில நுழைஞ்சு இடைஞ்சல் பண்றாங்கன்னா அது நாம இடந்தர்றதால்தானே?"

அப்பா சொல்வதைப் பதிலே தராமல் கேட்டபடி சாமான்களை மூட்டை கட்டி முடித்தாள்.

சந்துரு என்ற ஊசிக்கு மேனியெல்லாம் கண்கள்தான் -இவன் ஒரு பக்கம் காபந்து பண்ணுவதற்குள் மற்றொரு கண்ணில் நூல் நுழைந்து விடுகிறதே!

கடைசியாய்ச் சின்ன ஷெல்ப், குளியலறை, கட்டிலுக்கு அடியில், கதவிற்குப் பின்னால் என்று அச்சிறிய ஆஸ்பத்திரி அறையை நோட்டம் விட்ட பின் பெட்டிகளை மூடினாள்.

கட்டின புருஷனை எளிதாய் விட்டுவிட்டு, சோப்பு,சீப்பை விடாமலிருக்கும் தன் புத்திசாலித்தனத்தின் மீது அவளுக்கே எரிச்சல் மிகுந்தது.

ஆஸ்பத்திரியின் ஊழியர்கள், மருத்துவர்கள், சக நோயாளிகள் என்று அனைவரிடமும் சொல்லியாயிற்று - பாலன் மூலம் இனிப்புகள் வாங்கியும் விநியோகித்திருந்தான்.

டாக்டரும் பாலனும் அதிரடியாய்ச் சிரித்தபடி அறைக்குள் நுழைந்தனர்.

"என்ன ஜோக்?"

அப்பாவும் சிரிக்க ஆயத்தமாய் அப்படிக் கேட்டது சாகரிக்கு ஆச்சரியமாயும் சற்று ஆதங்கமாயும் இருந்தது.

ஏன் யாருக்கும் இவளுடைய வருத்தம் புரியவில்லை?

தன் வாழ்வைத் தானேதான் பத்திரப்படுத்திக் கொள்ள வேணும் போல... நேற்றுச் சந்துரு பேசியதும்... அவன் கால்களைக் கட்டி...வேண்டாம்... அவன் மார்பிலேனும் சாய்ந்து, 'என்னை மன்னிச்சிடுங்க... தப்பாய்ப் புரிஞ்சுகிட்டேன்' என்று கதறியிருக்கலாம். எது தன்னைத் தடுத்தது?

சுயகௌரவமா... வெற்றுக்கர்வமா? அவனும் இத்தனை மாதங்கள் மௌனச் சாமியாராய் இருந்ததை எதில் சேர்க்க? காரணம்- தன்னுடைய பரிசுத்தமான குணநலமாம்!



ஹா! இதற்குமா பழி போடுவார்கள்?

தன்னை இளக விடாமல் தடுத்தது அஞ்சலி, தான் சந்துருவைக் காதலிப்பதாய்ச் சொன்னதோ? அவனும் அவளோடு தன் எதிர்காலத்தைத் திட்டமிடுவதாய்ச் சொன்னதா? பெருமூச்செறிந்தாள் - நடுநெஞ்சே கிழிந்து விடுமாற் போன்ற நெடுமூச்சு.

"டாக்டர் ஒரு மலையாள ஜோக் சொன்னார் - அதைத் தனியே பிறகு சொல்றேன் - பதிலுக்கு நான் ஒரு தமிழ் ஜோக் சொன்னேன் -அதான் இந்தச் சிரிப்பு."

"சொல்லிட்டுச் சிரிக்கறது."

"மனைவிட்ட அடி வாங்கிட்டு வீட்டை விட்டுவெளியே ஓடியாறான் ஒரு புருஷங்காரன்... ஏன்டா இப்படித் தலைதெறிக்க ஓடியாறேன்னு கேட்டவங்ககிட்ட சப்பைக்கட்டு கட்டறாம் பாருங்க...

'என் மறத்தமிழ் மனைவி என்னைப் புலி என நினைத்து, பயப்படுகிறாள்'ன்னு! அதாவது, ஐயா முறத்தால் அடி வாங்கியிருக்கான்."

'பரவால்ல, டாக்டருக்குத் தமிழ் இலக்கியப் பரிச்சயம் இருக்குது போல!"

மௌனமாய் வெளியேறினாள் சாகரி.

நெஞ்சினுள் அஞ்சலியே சுழன்றாள் - 'எனக்கு மனைவியாள உம் சம்மதமோ, தாலியோ முக்கியமில்லை - ஜஸ்ட் சந்துரு. ஐ லவ் ஹிம்...'

எத்தனை ஆவேசமான அன்பு!

சந்துரு அஞ்சலிக்குத்தான் உரியவனோ? சாமான்கள் வந்து நின்ற வேனில் ஏற்றப்பட்டன. பின்புற இருக்கைகள் அகற்றப் பட்டுப் படுக்க வசதியாய் மெத்தை விரிக்கப்பட்டிருந்தது.

'எல்லாம் சந்துரு ஏற்பாடுதான் - அசங்காமல் போயிடலாம்னான்.''

''மதுரை வரைக்கும்தானே - பிறகு ∴ப்ளைட்தானே?''

''ஏர்-போர்ட்டிலேயும் தன் சிநேகிதனுக்குச் சொல்லி வச்சிருக்கானாம். அங்கு வீல்-சேர் காத்திருக்கும்...''

''நன்றி, சித்தப்பா...''

''எனக்கெதுக்கம்மா? எல்லாம் சந்துரு செயல்.''

''அவர்... எங்கே?''

தாளாமல் கேட்டு விட்டாள்.

''வீடு கட்டறதுன்னா லேசாம்மா? நூறு வேலைவரும்.''

''சித்தி?''

''கட்லெட் பொரிச்சிட்டிருக்கறா - பர்க்கராய் செய்து டுத்துட்டுவர்றேன்னா - ∴ப்ளைட்டிலே சாப்பாடு தருவாங் ன்னா, 'மதுரை வரை பசிதாங்கணுமே'ங்கறா...''

''இத்தனை அன்புக்கு நாங்க...''

''சந்துருவுக்கு வேண்டியவங்களுக்காய் இதுகூடச் செய்ய ட்டமா?''

கருக்கென்றது.

ஆக இத்தனை உபசரணையும் அவனுக்காக... ஆனால் ர்களெல்லாம் வழியனுப்புவதற்காய் இத்தனை பிரியமும் னகையுமாய் நிற்க, சந்துரு மட்டும் ஏன் வரவில்லை?



''மாப்பிள்ளைட்டேயும் சொல்லிடுங்க பாலன் -வரட்டுமா? வர்ற மாசம் உங்களைச் சென்னையிலே பார்க்கறேன். அப்ப... ம்ம்?''

அப்பா காலை நீட்டி வேனுக்குள் வாகாய்ச் சாய்ந்து கொண்டார்.,

அவர் கையில் சந்துரு அனுப்பிய அன்றைய செய்தித்தாள். அவன் மறந்த ஒரு வேலையும் இல்லை... இத்தனை கெட்டிக்காரனுக்கு மனைவியிடம் சொல்லிக் கொள்ள மட்டும் தெரியாதா?

அலட்சியம்தான் - அல்லது எதற்கு மேலும் பரஸ்பரம் புண்ணில் வேலைச் செருக என்ற எச்சரிக்கை விலகலா?

அனைவரும் கை அசைத்தபடி விடைபெற்றவளது கண்கள் உடைப்பெடுத்தாற்போல வழிந்தன.

மதுரை விமான நிலையத்தில் ஜான் ∴பிரான்சிஸ் இவர்களுக்காய்த் தயாராய் நின்றான் - பளபளவென்ற நவீன சக்கர நாற்காலியில் ராஜாங்கத்தை அமர்த்தி அலுங்காமல் விமானத்தில் ஏற்றினான்.

சென்னையில் கோதண்டம் புன்னகையுடன்.

'பயணம் சௌகர்யமாயிருந்ததா?' என்ற விசாரிப்புடன் அங்கும் ஒரு நாற்காலியுடன் காத்திருந்தார்.

இனி நான் கொஞ்சமேனும் நடக்கணும் மிஸ்டர் கோதண்டம். நாற்காலி தேவையில்லை.''

''இப்ப அலட்டிக்காதேயுங்கோ. வீட்டுல உங்களுக்காய் 'வாக்கர்' உண்டு- அதைப் பிடிச்சுண்டு தாராளமாய் நடக்கலாம்...''

கனவு போலிருந்தது -அப்பயணம். கச்சிதமான கலக்கமில்லாத கனவு! உணர்வுகள் சந்துருவுடனேயே தங்கிவிட்டனவோ?

சொன்னாற்போல வீட்டு வராந்தாவில் கால்களுக்கு அதிக அழுத்தம் தராமல் நடக்க உதவும் கருவி இருந்தது.

அத்தைவாயில் சிரிப்பும் கண்களில் நீருமாய் வரவேற்றாள். வேலைக்காரர்கள் பரபரப்பும், பாசமான விசாரிப்புமாய் வளைய வந்தனர்.

"சின்னையா விபத்து விவரத்தை ஃபோனிலசொன்னதும் பதைச்சுட்டோம்மா... நம்ப ஆசீர் உடனே தேக்கடிக்குக் கிளம்பறேன்னு நின்னான்... ஆனா சின்னையா யாரும் வர அவசியமேயில்லை - நான் இருக்கேனில்லனுட்டு ஒரே அதட்டல்தான்."

முகம் பெருமையில் விரியப் பேசினார்கள். வீட்டு மனிதர்களுக்கு விவரம் சொல்ல வேண்டுமென்பது தனக்கே கூடத் தோன்றவில்லை. எத்தனை யோசித்துச் செயல்பட்டிருக்கிறான்...

மனைவியைத் தவிர...! சாகரிக்குத் தன்னையே புரியவில்லை.

அன்று காலைதான் அத்தனைக்கும் சந்துருவைக் கொண்டாடும் அஞ்சலியே அவனை வைத்துக் கொள்ளட்டும் என்று பெருந்தன்மையாய், பொம்மையைத் தூக்கித் தரும் சிறுமி போல நினைத்தவள் மனதில் மறுபடி ஏன் இந்த ஏக்கம்?

அந்திப் பொழுதின் மாயமோ இது? அறையின் ஜன்னல் வழியே செவ்வானத்தைப் பார்த்தாள் -விஸ்தாரமான வானத் திரையில் அரிய ஓவியமாய்... அந்திப் பொழுது...!



"குளிக்கறீங்களாம்மா?"

"இல்லை...ஆமா..."

"குளிச்சுட்டு கீழே வாங்க... பெரிய்யாக்குப் பசிக்குதாம்..."

"இதோ..."

அவசரமாய்க் குளித்து உடைமாற்றி கீழே வந்தாள்.

"பிரயாண அசதியிலே பசிக்குதும்மா, சாகரி-தோசை வார்க்கச் சொல்லியிருக்கேன்... ரொம்ப நாளைக்கப்புறம் வீட்டுத் தோசை... வெங்காயச் சட்னி."

சாகரி அதிகம் பேசவில்லை - அதிகம் சாப்பிடவுமில்லை.

"என்னடி கொறிக்கறே -இந்தப் பாலையேனும் குடி."

அத்தையின் அதட்டலுக்குப் பணிந்தாள்.

"கிளம்பணும்மா -வீட்டில பேரக்குழந்தை தேடுவா."

அத்தை கிளம்பி விட்டாள்.

"அப்பா ரூமிலே வந்து டிவி பாரேம்மா."

"ம்ம்..."

ஆனால் அறைக்குள் நுழைந்தவள் தகப்பன் மடிமீது தலை வைத்துக் குமுறினாள்.

"ஏம்ப்பா...ஏன் இப்படி இருக்கார்?"

அப்பாவின் கைகள் அவள் தலையை நீவின.

"போகும்போது சொல்லிக்கவாவது வந்திருக்கலாமில்ல... எல்லாரும் என்ன நினைச்சிருப்பாங்க?"

"நீ என்னடா நினைச்சே...?"

''எனக்குப் புரியலைப்பா... குழப்பமாயிருக்குது.''

''தம்பதிங்க பேசிகிட்டீங்க போல! பாலன் சொன்னார்.''

''காரணமில்லாமச் சேர்ந்தோமாம். காரணம் புரிஞ்சு பிரியலாம்னு ஏதேதோ பேசினார்.''

''உங்களுக்கிடையே சண்டை நேர்ந்த அன்னைக்கு நீ ஒரு சீட்டை மட்டும் எழுதி வச்சுட்டுக் கிளம்பினது சந்துருவுக்குப் பெரிய அதிர்ச்சிம்மா.''

''ஏம் போனேன்னு...''

''உங்கிட்ட எத்தனையோ தரம் கேட்டும் நீ சொல்லலை -அப்போ ஓரளவும் இப்ப முழுசாவும் சந்துருதான் சொன்னான்.''

''எனக்கு அந்த லெட்டரும், ஆபாச போட்டோவும் பெரிய அதிர்ச்சிப்பா...''

''வாழ்க்கையிலே பொறுமையும் நம்பிக்கையும் துடிப்புங் கம்மா - அதைக் கொண்டுதான் கரை சேரணும். சரி - சின்ன பய... புரியாம சண்டை போட்டாச்சு- பிறகாவது...''

''அவருக்கு லெட்டர் எழுதினேன்ப்பா.''

''ஒரு ஹெட்-மிஸ்ட்ரஸ் அஞ்சாம் வகுப்பு சுட்டிப் பயலுக்கு முதினது போல எழுதியிருந்தியாம். 'உன்னை மன்னிச் டறேன் - இனியேனும் ஒழுங்காய் இரு!'ங்கறாப்பல ட்டியிருந்தியாம்.''

''அவர் சொன்னாராக்கும்?''

''அவனுக்கு உன் அன்பும் நம்பிக்கையும்தான் தேவையே பிர மன்னிப்பு இல்லை... ஏன்னா சந்துரு அப்ப தப்பும் ப்பலை.''



சாகரி கடைக் கண்ணால் தகப்பனைப் பார்த்தாள். இத்தனையையும் மனம் திறந்து பகிர்ந்தாற் போல அஞ்சலி விஷயத்தையும் சொல்லியிருப்பானோ?

''அழுத்தம் ஜாஸ்திப்பா -அடிபட்டு அத்தனை அவஸ்தையிலிருக்கும் போதும் நமக்குத் தெரியப் படுத்தலியேப்பா?''

''எழுதினதுக்குப் பதிலாய் நீ ஓடிப்போய்ச் சந்துருவை நேராய்ப் பார்த்திருந்தால் பிரச்சனை வளர்ந்திருக்காது - நான் அதைச் சொன்னபோது ரொம்பக் கோபப்பட்டே... அழுதே. விட்டுட்டேன். அதே மாதிரியான ஆங்காரம்தான் அவனுக்கும். வரலை... ஆனா அடிபட்டுக் கிடக்கையில் உனக்குத் தெரியப் படுத்தாததுக்குக் காரணம் அப்போ உனக்குப் பரீட்சை சமயம்ன்னான். கேட்டேனே... சமாளிச்சுடலாம்னு நினைச்சிருக்கான். புண்ணு புரையோடிப் பிரச்சனையாயிடுச்சு...''

ஆக கணவனின் செயல்களுக்கெல்லாம் காரணம் இருக்கின்றன... ஆனால் தான் எதிர்பார்ப்பது காதலை அல்லவா?

மகளின் சிந்தனையோட்டம் புரிந்தவர் போலப் பேசினார் ராஜாங்கம்.

''ஆண்கள் தங்களுடைய பிரியத்தை வெளிப்படுத்தும் வழிகள் வித்தியாசமானவை சாகரி. 'அவனை ஏன் தொந்தரவு செய்யணும் -நிம்மதியாய் படிக்கட்டுமே'ங்கறது ஒரு விதமான அன்பு பாராட்டல்தான். எத்தனை பேரால் அது முடியும்? தனக்குச் சுண்டு விரல்ல வலின்னாலும் வீட்டை ஆடிக் களைக்கணும்னு ஆர்ப்பாட்டம் பண்ற ஆம்பளைங்க அதிகம். உனக்கு அதெல்லாம் தெரியலை. தாங்கற அப்பா-அதே போலொரு புருஷன்...''

''அவர் ஒருத்திக்குப் புருஷங்கறதைக் கூட மறைச்சிட்டாரே...?''

''சொன்னால், 'அவனை உடனே வரவழை... உன்னைக் கவனிச்சுக்கறதை விட வேற அவளுக்கென்ன வேலை'ங்கற பேச்சுக் கிளம்பும்...''

அப்பாவின் கதர் வேட்டியிலே தன் ஈரக் கன்னங்களைத் துடைத்துக் கொண்டாள். அதன் மொரமொரப்புங்கூட அந்நேரம் வெகு இதமாயிருந்தது.

''ஒத்தைப் பிள்ளைகளாய் வளர்ந்த ரெண்டு பேருக்குமே ஈகோ இருந்ததையும் நான் மறுக்கலை. விட்டுக் கொடுக்கறதுக்கும் வளைந்து போறதுக்குமான பயிற்சி உங்களுக்குக் கிடைக்கலை... உங்க காதலும் கல்யாணமும் ரொம்பச் சுளுவாய் நிறைவேறிடுச்சு... அதான் கொஞ்சம் அலட்சியமாய் இருந்துட்டீங்க... இந்த அனுபவத்துல எதிர்காலத்தில் கொஞ்சம் ஜாக்ரதையாயும் இருக்கப் படிச்சிருப்பீங்க...''

''இனிமேல் ஜாக்ரதையாய் இருந்து பிரயோஜனமென்னப்பா?'' எழுந்தவள் தண்ணீருடன் அவருக்கான மாத்திரைகளை எடுத்து நீட்டினாள்.

''இந்தச் சின்னதிலே நீயும் ஒன்னைப் போட்டுக்கடா... நிம்மதியாய்த் தூக்கம் வரும்.''

''இங்கேயே படுத்துக்கறேனேப்பா?''

''இல்லடா - மாணிக்கத்தை என்னோட படுக்கச் சொல்லிட்டேன் -நீ மேலே போ...''

அப்பாவின் மடியில் படுத்து அழுததோ, அல்லது மாத்திரையின் தயவோ, பயணக் களைப்போ- படுத்ததும் உறங்கிப் போனாள்.



காலை ஐந்தரைக்கெல்லாம் எழுந்து கழிப்பறை போய்த் திரும்பியவள் அலறினாள்...

''யாரது?''

யாரோ மாடியின் வாசற் கதவைத் திறந்து மூடும் சத்தம் தெளிவாய்க் கேட்டது. காலடிகள் இவளை மெள்ள நெருங்கின.

''நிஜமாகவே நீ என்னை எதிர்பார்க்கலையா, சாகி?''

அதிகாலையின் மசமசப்பிலும் அவன் சிரிப்பு பிரகாசமாய் விரிந்தது.

''சந்துரு.... சந்துரு...''

அதிர்ச்சி விலகி ஆனந்தம் சேர, ஓடிப்போய்க் கட்டிக் கொண்டாள். இது கனவோ என்று ஒரு பக்கம் மயக்கமிருந்தாலும் கேட்டாள்.

''ஏன்... எப்படி... இப்போ?''

''சாவி எப்பவும் எங்கிட்டதானே இருந்தது...''

அவன் குரல் சீண்டியது.

''அதில்லை... ஏன் நேத்து எங்களைப் பார்க்க வரலை?''

''விடை தந்தவங்க நின்னு கையாட்டினாங்க... நாந்தான் இதோ வந்தாச்சே. நின்னு கைகாட்டற தெம்பெல்லாம் எனக்கில்லை...''

''இனி இங்கேயேவா...?''

குப்பென்று பெருகிய நிம்மதியில் அவன் நெஞ்சில் சாய்ந்து சட்டையில் முத்தமிட்டாள்.

சட்டைப் பித்தான்களை அவிழ்த்து மார்பைக் காட்டினான்.

''என் முரட்டுச் சட்டைக்கு இத்தனை சொகுசு தேவையில்லை, சாகரி...'' வெட்கத்துடன் அவன் முடி அடர்ந்த மார்பை முத்தமிட்டாள்.

''நாம இனி சேர்ந்தேதான் - அது இங்கேயோ அல்லது எஸ்டேட்டின் 'சாகரி இல்லத்'திலேயோ... இந்தப் பிரிவு நமக்கு ரொம்பக் கடினமான பாடங்களைச் சொல்லித் தந்திருக்கு இல்லியா...''

''அப்ப... அப்படீன்னா அஞ்சலி?''

''அவளுக்கென்ன? நினைச்ச பொய்யையெல்லாம் நினைச்சபடி சொல்வா -அதை நீயும் அப்படியே நம்பிடறே... அவ சதா வசும்மா வீட்டிலே வந்திருந்தது உண்மைதான்... ஆனா அங்கே பழியாய்க் கிடந்தது என்னாலேங்கறது எனக்கு உறைக்கலை... என்னிலே சலனம் ஏற்படாதது போல அவள் மனசும் நிர்மலமாய் இருக்கும்னு நினைச்சிட்டேன். நான் கல்யாணமானவன்னு சொல்லியிருக்கணும்... ம்ப்ச்... முன்னே பின்னே தெரியாத அவளை நம்பறே... என்னை நம்புடா, சாகரி...''

மனைவியின் முதுகை நீவியபடி கெஞ்சினான்.

அவளது உடலெங்கும் அலை அலையாய் இன்பம் பரண்டது.

இரத்தம் வெப்பமேறி உடலைக் குழைத்தது...

''உங்க மேல எத்தனை வெறித்தனமான அன்பிருந்தால் அப்படியெல்லாம் பேசியிருப்பா... தாலிகட்டாமக்கூட உங்களோட வாழறேன்னு...''

''தாலிகட்டின நீ இருக்கும்போது அதெல்லாம் எதுக்கடா?''



அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

கலக்கங்கள் கரைந்தன.

''சந்துரு...''- விம்மியபடி அவனை மேலும் இறுக்கினாள். ''ஐம் ஸாரி.''

''ரெண்டு பேருமே நிறையத் தப்புசெய்திருக்கோம் செல்லம் - ஒரு நாள் நான் பாலன் ஸர் வீட்டிலே அவரும் வசும்மாவும் போட்ட செல்லச் சண்டையை ஒட்டுக் கேட்க நேர்ந்தது - பெண்டாட்டியோட பொறாமையை மனுஷர் என்னமாய் ரசிச்சார் தெரியுமா? தம்பதிகளுக்கிடையே அன்பு மிகுதியிலே நேருற சறுக்கல், சின்ன உரசல் அதுங்கறதைப் புரியற பக்குவமில்லாம நானும் உங்கிட்ட ரொம்ப முறைச்சிட்டேன். நம்மை இவ நம்பலையேன்ற கோபம்... கொஞ்ச நாள் நானில்லாம அவதிப் படட்டுங்கற ஆங்காரம்... ஸாரிடா... ஆனா சீக்கிரம் புத்தி தெளிஞ்சிடுச்சு... ஆனாலும் பிரச்சனைக்குத் தீர்வு காணாம சமரசம் செய்துக்கறது புத்திசாலித் தனமில்லன்னும் தோணினதால...''

''என்னை இப்படியே அழ வச்சீங்களாக்கும்...''

''நோ செல்லம்-அவசர அவசரமாய் வீட்டைக்கட்டினேன் - புது எஸ்டேட்டின் பக்கத்திலே பாலன் ஸர் வசும்மா போல நல்ல மனுஷங்க இருந்ததால அங்கேயே உனக்குப் பிடிச்ச தினுசிலே வீட்டைக் கட்டினேன்...''

''ஒரு வார்த்தை சொல்லிட்டு...''

''இத்தனை குளறுபடி இடையே வரும்ங்கறதை நான் எதிர்பார்க்கலை சாகரி - அப்பாட்ட கொஞ்சம் கோடி காட்டினேன்... ஏன்னா, வயசான காலத்திலே அவர் பதறுறது

நல்லதில்லை... உனக்கு ஒரு ஆனந்த அதிர்ச்சி தரணும்னு நினைச்சதுலே... எனக்கே பல அதிர்ச்சிகள்..."

"இனி....இனிமே..."

"இனி ஒழுங்காய், உத்தமமாய், சர்க்கரையாய், வெல்லமாய், தேனாய்..." அவன் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு முத்தமாய் இட்டுக் கொண்டே வர,

"சரி, சந்துரு! சரி..." குழறினாள் அவள், உன்மத்தத்தில்!

காலைக் கதிரவன் மயக்கச் சிவப்பைக் கரைத்து விட்டுப் பிரகாசமாகிக் கொண்டே மேலேறினான்.